In Public domain. Digitization Muthulakshmi Research Academy

SRI MAHA KUMBHABHISHEKA MEMORIAL EDITION 1944

॥ श्रीः ॥

॥ श्रीमूकपञ्चशती ॥

ஸ்ரீ மூக பஞ்ச சதீ

தேவநாகிரி மூலமும் தமிழ் அனுவாதமும்



श्रीकाञ्ची कामकोटिपीठाधिप श्रीजगद्गुरु
श्रीमच्चन्द्रशेखरेन्द्रसरस्वती श्रीपादानां नित्यपूजा ।

श्रीकामकोटि कोशस्थानेन प्रकाशिता
५७, पश्चिम डभीर वीथी, कुम्भघोणम्

Research Academy

Re. 1/8

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

CSS

२.

सु· सीताराम ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

श्रीकामकोटिग्रन्थावलिः ११

॥ श्रीः ॥

॥ श्रीचन्द्रमौलीश्वराय नमः ॥

श्रीमूकमहाकविप्रणीता

॥ श्रीमूकपञ्चशती ॥

श्रीमत्परमहंसपरिव्राजकाचार्यवर्य श्रीकामकोटिपीठाधीश्वर-
जगद्गुरु श्रीमच्चन्द्रशेखरेन्द्रसरस्वती श्रीपादानां
श्रीमुखेन समुद्भासिता

श्रीकामकोटिर्विजयते

श्रीकामकोटि कोशस्थानेन प्रकाशिता
५७, पश्चिम डबीर् वीथी, कुम्भघोणम्.

मूल्यम् सार्धरूप्यम्] 1944 [स्वाम्यं कोशस्थानस्यैव

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ மூக மஹாகவி

இயற்றிய

ஸ்ரீ மூக பஞ்சசதீ

நாகரி லிபியில் மூலமும் தமிழ் அனுவாதமும்

சென்னை அட்வோகேட் தர்மரக்ஷாமணி

ஸ்ரீ. கி. பாலஸுப்ரஹ்மண்ய அய்யர் அவர்கள்

எழுதிய முன்னுரையுடனும்

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீ ஜகத்குரு

ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

அருளிய ஸ்ரீமுகத்துடனும்

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்

57, மேல டபீர் தெரு, கும்பகோணம்

பதிப்புரிமை] 1944 [விலை ரூ. 1—8—0

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் கோவில் — பெரிய கோபுரம் — காஞ்சிபுரம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி அம்மன் கோயிலிலுள்ள கம்பாஸரஸ்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

॥ श्रीकारणपरचिद्रूपायै नमः ॥

इदमभिज्ञानं
श्रीकाञ्चीकामकोटिपीठाधिष्ठात्रीकुम्भाभिषेकशुभमुहूर्ते
जगन्मातुः श्रीकामाक्षीपरदेवतायाः पादारविन्दयोः
भक्तिभरेण समर्पितम् ॥

आर्यामेव विभावयन्मनसि यः पादारविन्दं पुरः
पश्यन्नारभते स्तुतिं स नियतं लब्ध्वा कटाक्षच्छविम् ।
कामाक्ष्या मृदुलस्मितांशुलहरीज्योत्स्नावयस्यान्विता-
मारोहत्यपवर्गसौधवलभीमानन्दवीचीमयीम् ॥

[मन्दस्मित. १०१.]

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

॥ श्रीः ॥

॥ श्रीचन्द्रमौलीश्वर ॥

मुद्रा

स्वस्ति श्रीमदखिलभूमण्डलालंकारत्रयस्त्रिंशत्कोटिदेवतासेवित - श्रीकामाक्षीदेवीसनाथ - श्रीमदेकाम्रनाथ - श्रीमहादेवीसनाथ - श्रीहस्तिगिरिनाथ - साक्षात्कारपरमाधिष्ठानसत्यव्रतनामाङ्कित - काञ्चीदिव्यक्षेत्रे शारदामठसुस्थितानाम्, अतुलितसुधारसमाधुर्यकमलासनकामिनीधम्मिल्लसंफुल्लमल्लिका - मालिकानिष्यन्दमकरन्दझरीसौवस्तिकवाङ्निगुम्भविजृंभणा - नन्दतुन्दिलितमनीषिमण्डलानाम्, अनवरताद्वैतविद्याविनोदरसिकानाम्, निरन्तरालंकृतीकृतशान्तिदान्तिभूम्नाम्, सकलभुवनचक्रप्रतिष्ठापकश्रीचक्रप्रतिष्ठा-विख्यातयशोऽलंकृतानाम्, निखिलपाषण्डषण्डकण्टकोद्घाटनेन विशदीकृतवेदवेदान्तमार्गषण्मतप्रतिष्ठापकाचार्याणाम्, श्रीमत्परमहंसपरिव्राजकाचार्यवर्य-श्रीजगद्गुरु श्रीमच्छंकरभगवत्पादाचार्याणाम् अधिष्ठाने सिंहासनाभिषिक्त श्रीमन्महादेवेन्द्रसरस्वतीसंयमीन्द्राणाम्, अन्तेवासिवर्य श्रीमच्चन्द्रशेखरेन्द्रसरस्वती श्रीपादैः

क्रियते नारायणस्मृतिः ।

तत्रभवान् मूक इति सुप्रसिद्धः महाकविशिरोमणिः श्रीकामाक्षीदेवीकरुणाकटाक्षतरङ्गितपुण्यकवितारसपूरः 'मूकपञ्चशती' इति कर्तृनाम्ना प्रसिद्धमिमं लोकोत्तरं ग्रन्थं प्रणीय भूमण्डलेऽनुत्तमं पुण्ययशोविशेषं शाश्वतीं परानन्दानुभूतिं च लब्धवानिति सुविदितमेव। स्तोत्ररत्ने चास्मिन् काञ्चीमध्यगतकामकोटिपीठाधिष्ठात्रीमिन्दुमौलेरैश्वर्यरूपां श्रीकामाक्षीं परदेवताम्, आरूढयौवनारोपा, तरुणिमसर्वस्वं, नित्यतरुणी,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

लावण्यामृततरङ्गमाला, विभ्रमसमवायसारसन्नाहा, शृङ्गाराद्वैततन्त्रसिद्धान्तं, मीनध्वजतन्त्रपरमतात्पर्यं, कन्दर्पसूतिकापाङ्गी, मनसिजसाम्राज्यगर्वबीजं, पुष्पायुधवीर्यसरसपरिपाटी, मदनागमसमयदीक्षितकटाक्षा, कुसुमशरगर्वसंपत्कोशगृहम्, आनङ्गब्रह्मतत्त्वबोधसिरा, पञ्चशरशास्त्रबोधनपरमाचार्यदृष्टिपाता इत्यादिरूपेण वर्णयन् पुनः लावण्यामृतपरकाष्ठाभूतां तामेव परदेवतां, कारणपरचिद्रूपा, कैवल्यानन्दकन्दः, आम्नायरहस्यम्, उपनिषदरविन्दकुहरमधुधारा, वाङ्मनोऽतीता, आनन्दाद्वैतकन्दली, मुक्तिबीजम्, आगमसल्लापसारयाथार्थ्यं, बोधामृतवीची, अभिदाकृतिः, ऐकात्म्यप्रकृतिः, निगमवचस्सिद्धान्तः, गुरुमूर्तिः इत्येवंरूपेण साक्षात्कुर्वन् यौवनशृङ्गारादिविषयरसानुभवसामग्रीं ज्ञानवैराग्यादिब्रह्मानन्दानुभवसामग्रीत्वेन संपादयन्—

"शिव शिव पश्यन्ति समं श्रीकामाक्षीकटाक्षिताः पुरुषाः ।
विपिनं भवनममित्रं मित्रं लोष्टं च युवतिबिम्बोष्ठम् ॥"

इति परदेवतानुग्रहफलीभूतां परवैराग्यकाष्ठां प्रकटयति ।

पद्यपञ्चशतकात्मकेऽत्र ग्रन्थे शतकानां या आनुपूर्वी तस्यामयं विशेषो दृश्यते । यथा कश्चन शिशुः चक्षुरादीन्द्रियप्रागल्भ्याविर्भावात्पूर्वं मनोवृत्तिमात्रेण कलयति स्वेप्सितम्; एवमार्याशतके भक्तशिशोः मनःप्रवृत्तिम् अम्बिकायाः स्वरूपानुसन्धानपटीयसीं संपादयति कविपुङ्गवः; अयमाशयः

"अन्तरपि बहिरपि त्वं जन्तुततेरन्तकान्तकृदहन्ते ।
चिन्तितसन्तानवतां सन्ततमपि तन्तनीषि महिमानम् ॥"
[आर्या. ९८.]

इति श्लोकेन सूचितः ॥

द्वितीयशतके तावत् यथा किञ्चित्प्रवृद्धग्रहणशक्तिः बालकः स्वान्तिके विद्यमानस्य वस्तुनः दर्शनस्पर्शनादिभिः आह्लादमधिगच्छति, तद्वत् भक्तबालकः अत्यन्तमधोभागे

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

विद्यमानस्य स्वस्यान्तिकत्वेनैव जगन्मातुः निरन्तरध्यानफलीभूतपादारविन्ददर्शनानन्दमनुभवतीत्ययमाशयः—

“मरालीनां यानाभ्यसनकलनामूलगुरवे
दरिद्राणां त्राणव्यतिकरसुरोद्यानतरवे ।
तमस्काण्डप्रौढिप्रकटनतिरस्कारपटवे
जनोऽयं कामाक्ष्याश्चरणनलिनाय स्पृहयते ॥”

[पादारविन्द. ३.]

इति श्लोकेन सूचितः ॥

यथा मनसः ज्ञानेन्द्रियाणां च स्फूर्त्यनन्तरमेव वाक् प्रसरति, तथैव आर्यापादारविन्दशतकयोरनन्तरं स्वप्रेमास्पदं वस्तु निरर्गलं स्तोतुमारभते—

“पाण्डित्यं परमेश्वरि स्तुतिविधौ नैवाश्रयन्ते गिरां
वैरिञ्चान्यपि गुम्फनानि विगलद्गर्वाणि शर्वाणि ते ।
स्तोतुं त्वां परिफुल्लनीलनलिनश्यामाक्षि कामाक्षि मां
वाचालीकुरुते तथाऽपि नितरां त्वत्पादसेवादरः ॥”

[स्तुति. १.]

इत्यादिना स्तुतिशतकेन ॥

लौकिकविद्यादिषु कुशलः कश्चन युवा यथा लौकिकसंपदः प्राप्तुमर्हो भवति तद्वत् पूर्वकृतस्तुतिफलत्वेन भक्तः अम्बिकायाः कटाक्षविशेषमधिगम्य परसंविदनुभूत्युचिततेजःपुष्ट्यादिपात्रं भवतीत्ययमाशयः—

“अस्तं क्षणान्नयतु मे परितापसूर्य-
मानन्दचन्द्रमसमानयतां प्रकाशम् ।
कालान्धकारसुषमां कलयन् दिगन्ते
कामाक्षि कोमलकटाक्षनिशागमस्ते ॥”

[कटाक्ष. ६.]

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

इत्यादिभिर्वर्णनैः कटाक्षशतके सूचितः ॥

यथा लौकिकसंपत्संपूर्णः कश्चन समग्रयौवनः लौकिकशृङ्गारसुखानुभवाय पात्रं भवति, तद्वत् देव्याः परमानुग्रहपात्रीभूतः तदीयमन्दस्मितचन्द्रिकासनाथः आनन्दचन्द्र इव अलौकिकनिरतिशयानन्दानुभवात्मकः प्रकाशत इति अमूमेव भावप्रणाळिकां महाकविः स्वयमेव पञ्चशतीपूर्तिपद्येन आविष्करोति । यथा—

" आर्यामेव विभावयन्मनसि यः पादारविन्दं पुरः
पश्यन्नारभते स्तुतिं स नियतं लब्ध्वा कटाक्षच्छविम् ।
कामाक्ष्या मृदुलस्मितांशुलहरीज्योत्स्नावयस्यान्विता-
मारोहत्यपवर्गसौधवलभीमानन्दवीचीमयीम् ॥" इति ।

[मन्दस्मित. १०१.]

अस्या लोकोत्तरायाः स्तुतेः पठनमात्रेण तत्क्षणे महाकविनाऽमुना अन्ततः परदेवतयैव वा ऐकात्म्यमनुभवतीव साधकः ॥

तदिदं ग्रन्थरत्नं द्राविडभाषामयार्थानुवादसहितमचिरादेव महता परिश्रमेण भक्तिभरेण मुद्राप्य श्रीकामाक्षीदेवीकुम्भाभिषेकशुभमुहूर्त एव उपहारीकृतवते, मुद्रापणादिविषये परमं साहाय्यमाचरितवद्भ्यः, तद्ग्रन्थपठितृभ्यश्च भक्तपुङ्गवेभ्यः श्रीकामाक्षीकटाक्षाः समुल्लसन्त्वित्याशास्महे ॥

प्रकृतनिवासस्थानम्
श्रीकाञ्चीक्षेत्रम्
श्रीशा० शके १८६६ सुभानु सं०
माघशुक्लसप्तम्यां सोमवासरे

नारायणस्मृतिः

॥ ஸ்ரீ: ॥

॥ ஸ்ரீ சந்த்ரமௌளீஶ்வர ॥

முத்ரை

ஸ்வஸ்திஸ்ரீ அகில பூமண்டலங்களுக்கும் அலங்காரமாய், முப்பத்து முக்கோடி தேவதைகளாலும் ஸேவிக்கப் பெற்று, ஸ்ரீகாமாக்ஷிதேவியோடு விளங்கும் ஸ்ரீமத்ஏகாம்ரநாதருடையவும், ஸ்ரீ மஹாதேவியோடு விளங்கும் ஸ்ரீ ஹஸ்திகிரி நாதருடையவும் ஸான்னித்யத்தோடுகூடிய க்ஷேத்ரமான ஸத்யவ்ரதம் என்ற பெயர் கொண்ட காஞ்சீ திவ்ய க்ஷேத்திரத்திலே சாரதாமடத்தில் வீற்றிருப்பவர்களாகவும் ஒப்புமையில்லாத அமிர்தரஸ மாதுர்யத்தை யுடையதாய் கமலாஸனருடைய தேவியின் திருமுடியில் அலர்ந்த மல்லிகை மாலையினின்று பெருகும் மகரந்த அருவிபோன்ற சொல்மாலைகளாலே விளங்குகின்ற ஆனந்தத்தால் நிறைந்த புத்திமான்களாலே சூழப்பெற்றவர்களாகவும், அனவரதம் அத்வைத வித்யையிலேயே பொழுது போக்கி இன்புறுவோர்களாகவும், இடைவிடாது அலங்கரித்துக் கொண்டிருக்கும் சமதமங்களாலே பெரியோர்களாய் விளங்குவோர்களாகவும், எல்லா புவன சக்ரங்களுக்கும் ப்ரதிஷ்டையளிப்பதான ஸ்ரீசக்ர ப்ரதிஷ்டாபனத்தாலே ப்ரஸித்தமான புகழால் அலங்கரிக்கப் பெற்றவர்களாகவும், பாஷண்ட ஸமூஹங்களாகிய ஸகல கண்டகங்களையும் எடுத்தெறிவதாலே செம்மையாக்கப் பெற்றவையான வேதவேதாந்த மார்க்கங்களாகிய ஷண்மதங்களையும் ப்ரதிஷ்டித்த ஆசார்யர்களாகவும் விளங்கும் ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யர்களான ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீமத் ஶங்கர பகவத் பாதாசார்யர்களின் அதிஷ்டானத்திலே ஸிம்ஹாஸனத்தில் அபிஷிக்தர்களான ஸ்ரீமத் மஹாதேவேந்த்ர ஸரஸ்வதீ ஸம்யமீந்த்ரர்களுடைய அந்தேவாஸிவர்யர்களான ஸ்ரீமத் சந்த்ரசேக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ரேந்த்ர ஸரஸ்வதீ ஸ்ரீ பாதர்களால் நாராயண ஸ்மரணம் செய்யப்படுகின்றது.

மஹா கவிகளுக்குச் சிரோமணியாகி அதிக ப்ரஸித்தி பெற்று விளங்கிய மூகர் என்னும் பெரியார் ஸ்ரீ காமாக்ஷி தேவியின் கருணை ததும்புகின்ற கடாக்ஷ தரங்கங்களை யுடைய புண்ணியமயமான கவிதையமுதத்தால் நிறைந்தவராய், மூகபஞ்ச சதீ என்று இயற்றியவர் பெயரால் ப்ரஸித்தமானதும், உலகிலேயே மிகச் சிறந்ததுமான இந்த நூலை இயற்றி, பூமண்டலத்திலே இதனினும் மேலானதொன்றுமில்லை என்னும்படியான புண்ணிய கீர்த்தியையும், சாசுவதமான பரமானந்த அனுபவத்தையும் அடைந்தார் என்பது நன்கு தெரிந்த விஷயமே. இந்த ஸ்தோத்ர ரத்னத்திலே காஞ்சீபுரியின் மத்தியிலேயுள்ள காமகோடி பீடத்திலே வீற்றிருப்பவளும், இந்துமௌலியான பரமசிவனுடைய செல்வமே வடிவுகொண்டதாக விளங்குபவளுமான பரதேவதை ஸ்ரீ காமாக்ஷியை, நன்றாக வேரூன்றி வளர்ந்த யௌவனத்தையுடையவளாயும், இளமையின் செல்வமெல்லாம் ஒருங்கே அமைந்ததாக விளங்குபவளாயும், எப்பொழுதும் அமைந்த இளமையை யுடையவளாயும், லாவண்யமாகிய அமுதத்தாலான அலைகளின் மாலையாக விளங்குபவளாயும், அழகைத் திரட்டி வடித்தெடுத்த ஸாரமாயும், சிருங்காரமாகிய அத்வைத சாஸ்திரத்தின் முடிந்த பொருளாயும், மீனக்கொடியோனுடைய சாஸ்திரத்தின் சிறந்த உட்பொருளாயும், காமனைப் பிறப்பிக்கும் கடைக்கண்களையுடையவளாயும், மனதிலே பிறந்தவனான மன்மதனுடைய ஸாம்ராஜ்யத்தின் செருக்கிற்கு விதையாகின்றவளாயும், பூக்களை ஆயுதங்களாகவுடைய மன்மதனுடைய வீரத்தின் இனிய பெருக்கமாகவும், காமசாஸ்திரக் கொள்கையிலே தீக்ஷைகொண்ட கடாக்ஷங்களையுடையவளாயும், பூக்களை அம்பாகக்கொண்ட மன்மதனுடைய செருக்காகிய செல்வத்திற்குப் பொக்கிஷ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாய் விளங்குபவளாயும், சிருங்காரப் பிரஹ்ம தத்துவபோதம் பாயும் நாடியாயும், ஐங்கணையோனுன காமனுடைய சாஸ்திரத்தைக் கற்பிப்பதிலே சிறந்த ஆசார்யனுன கண்ணேக்கத்தையுடையவளாயும் விளங்குகின்றுள் என்று இவை முதலான வடிவங்களையுடையவளாக வர்ணித்து, மீண்டும் இலாவண்யமயமான அமுதப்பெருக்கின் பேரெல்லையாக விளங்கும் அந்தப் பரதேவதையையே, காரணங்கள் அனைத்திற்கும் அதீதமான சித்ரூபிணியாயும், கைவல்யமாகிய மோக்ஷ ஆனந்தத்திற்கு மூலமானவளாயும், வேதங்களில் உள்ளுறை மறைபொருளாயும், உபநிடதங்களாகிய தாமரை மலர்களின் உட்புறத்தினின்று பெருகுந் தேனுயும், வாக்கிற்கும் மனதிற்கும் எட்டாதவளாயும், ஆனந்தமாகிய தனிப்பொருளாகிய (கந்தழி) முளையாயும், மோக்ஷத்திற்குக் காரணமாகிய விதையாயும், ஆகமங்களின் மனோஹரமான மஹா வாக்கியங்களின் லக்ஷ்யார்த்த வடிவமாயும், ஆத்மபோதமாகிய அமுத அலைகளையுடைய கடலாயும், அழிவற்ற நிர்விகார ஸ்வரூபிணியாயும், ப்ரஹ்மத்தோடு அபேதமாக விளங்கும் ப்ரக்ருதியாயும், வேத வசனங்களின் முடிந்த பொருளாயும், குருவடிவமாயும் விளங்குவதாலே ஸாக்ஷாத்கரித்து, இளமை சிருங்காரம் முதலிய விஷயங்களிலேயுள்ள இன்பங்களையெல்லாம் ஞானம் வைராக்யம் முதலிய பிரும்மானந்த அனுபவங்களால் நிரம்பியதாகச் செய்துகொண்டு,

"ஶிவ ஶிவ பஶ்யந்தி ஸமம் ஶ்ரீ காமாக்ஷீ கடாக்ஷிதா: புருஷா: |
விபினம் ஹவனமமித்ரம்மித்ரம்லோஷ்டம் சயுவதிபிம்போஷ்஠ம்" ||

என்று பரதேவதையின் அனுக்ரஹத்தின் பயனுக விளைந்த வைராக்கியத்தின் மேலான எல்லையிலே தாம் நிலையுற்றிருப்பதை விளக்குகிருர்.

ஆர்யா சதகத்தில் தேவியை வர்ணிக்கும் பதங்களை முறையாக உபயோகித்திருப்பது கவனிக்கத்தக்கது. அம் முறையாவது, 9, 23, 15, 38, 31, 10, 19, 11, 17, 21, 39, 65, 54, 5, 1, 2, 13, 27, 20, 9, 73, 36, 41, 47, 7, 55, 46, 48.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஐந்நூறு பாடல்களைக் கொண்டதான இந்த நூலிலே, சதகங்களின் தொடர்ச்சியிலே இந்தச் சிறப்பு ஒன்று காணப்படுகின்றது ; அதாவது, ஒரு பச்சைக் குழந்தை கண் முதலிய இந்திரியுங்களுக்குப் பலமேற்படுவதற்கு முன்பு, மனோவிருத்தியினாலே மட்டும் தன் விருப்பத்தை வெளியிடுகின்றது ; இவ்வாறே, கவிச்சிரேஷ்டரும் பக்தனாகிய சிசுவின் மனப் பிரவிருத்தியை அம்பிகையின் ஸ்வரூபத்தை இடையறாது நினைப்பதிலே திறமையாகச் செலுத்துகின்றார் ; இக் கருத்து "அந்தரபி வஹிரபி த்வம்" என்னும் சுலோகத்தாலே குறிப்பிடப்பட்டது.

இரண்டாவது சதகத்திலோ, (ஐம்பொறிகளால்) கிரஹிக்கும் திறமை சிறிது விருத்தியடைந்த பாலகன் தன்னருகிலே காணப்படும் பொருளைக் காண்பது, தொடுவது முதலியவற்றால் களிப்படைகின்றதைப்போல பக்தனாகிய பாலகனும் மிகவும் தாழ்ந்த இடத்திலே, தன் அருகிலே யிருப்பதாலே காணப்படுகின்றதும் இடையறாத தியானத்தின் பயனாகப் பெற்றதுமான ஜகன்மாதாவின் பாதாரவிந்தங்களைக் காண்பதாகிய அமிர்தத்தைப் பெறுகிறான் என்னும் இந்தக் கருத்து 'மராளீனாம்" என்னும் சுலோகத்தால் குறிப்பிடப்பெற்றது.

எவ்வாறு மனதும் ஞானேந்திரியங்களும் புஷ்டியடைந்த பிறகே வாக்கு வெளிக்கிளம்புகின்றதோ, அதுபோலவே, ஆர்யா சதகமும், பாதாரவிந்த சதகமும் ஆனபிறகு, தன்னுடைய பிரேமைக்கு உரியதான பொருளைத் தடங்கலின்றிப் புகழ்ந்து பேசத் தொடங்குகிறார், "பாண்டித்யம் பரமேஸ்வரி" என்று தொடங்கும் ஸ்துதி சதகத்தாலே.

லௌகிக ஞானம் முதலியவற்றிலே தேர்ச்சியடைந்த இளைஞன் எவ்வாறு லௌகிகச் செல்வங்களைப் பெறுவதற்கு உரியவனாகின்றானோ, அதுபோலவே முன்னாலே செய்த ஸ்துதியின் பயனாக பக்தன் அம்பிகையின் சிறந்த கடாக்ஷத்தைப் பெற்று மிகச்சிறந்த ஸம்வித்ஞானானுபவத்திற்கு ஏற்ற

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வையான தேஜஸின் புஷ்டி முதலியவற்றிற்குப் பாத்திரனு கின்ருன் என்னும் இக் கருத்து "அஸ்தம் க்ஷணன்நயது மே பரிதாப ஸூர்யம்" என்பது முதலான வருணனைகளாலே கடாக்ஷ சதகத்திலே குறிப்பிடப் பெற்றது.

எவ்வாறு லௌகிக ஸம்பத்தால் நிறைந்து முழு யௌ வனத்தையும் உடையவனுனவன் லௌகிக சிருங்காரமாகிய இன்பத்தை அனுபவிப்பதற்கு உரியவனுகின்ருனே, அதே போல், தேவியின் பரம அனுக்ரஹத்திற்குப் பாத்திரனுன வன் அவளுடைய புன்முறுவலாகிய நிலாவோடு விளங்கும் ஆனந்தமாகிய சந்திரனைப்போல, அலௌகிகமானதும் (பார மார்த்திகமானதும்) அளவு கடந்ததுமான ஆனந்தத்தை அனுபவிப்பவனுய் விளங்குகிருன் என்னும் இந்தக் கருத் தின் ரீதியையே மஹாகவியானவர் தாமே பஞ்சதியைப் பூர்த்தி செய்யும் பாடலிலே விளங்கவைக்கிருர், "ஆர்யா மேவ விஹாவயன்" என்று.

உலகத்திலேயே மிகச் சிறந்ததாக விளங்கும் இந்த ஸ்துதி நூலைப் படிப்பதால் மட்டுமே, அந்த க்ஷணத்தி லேயே இந்த மஹாகவியோடும், இறுதியிலே பரதேவதை யோடுமே ஒன்ருகும் நிலையை ஸாதகன் அடைகின்ருன்.

ஆதலின், தமிழ்மொழியிலே அமைந்த அனுவாதத் தோடு, பக்தி மிகுதியால் அதிசீக்கிரத்திலே மிகுந்த பிரயா சைப்பட்டு அச்சிடப்பெற்று, ஸ்ரீ காமாக்ஷீ தேவிக்கு கும்பாபி ஷேகசுபமுஹூர்த்தம் நடைபெறும் பொழுதிலேயே ரத்னம் போன்ற இந்நூலை ஸமர்ப்பிக்கின்றவர்க்கும் அச்சிடும் விஷ யத்திலே அதிகம் உதவிபுரிந்தவர்களுக்கும் இந்நூலைப் படிக் கும் பக்த சிரேஷ்டர்களுக்கும் ஸ்ரீ காமாக்ஷியின் கடாக்ஷங் கள் ஒளிபெற அமைவனவாகுக என்று ஆசீர்வதிக்கின்ருேம்.

முகாம் : ஸ்ரீ காஞ்சீக்ஷேத்ரம்.
ஸ்ரீ ஶாலிஶகம் 1865 ஸுபானுஸம்வ
மாக ஶுக்ல ஸப்தமீ (31—1—44)

நாராயணஸ்ம்ருதி:

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சென்னை அட்வோகேட் தர்மரக்ஷாமணி

ஸ்ரீ. கி. பாலஸுப்ரஹ்மண்ய ஐயரவர்கள் எழுதிய

முகவுரை

ஸ்ரீ மூக கவி அருளிச்செய்த "ஸ்ரீமூக பஞ்சசதீ" என்னும் இவ்வுயர்ந்த நூல் (தேவநாகரி மூலம்) தமிழ்மொழி பெயர்ப்புடன் ஸ்ரீ காமகோடி கோசஸ்தானத்தின் பதினேராவது புத்தகமாக அச்சிடப்பட்டு வெளிவந்திருப்பது நம் எல்லோருக்கும் மன மகிழ்ச்சியை உண்டாக்குகிறது.

உலகத்தைப் படைத்து அளித்துவரும் கடவுளைத் தாயாகப் பாவித்து அன்பினால் நைந்து உருகுவது மனித வர்க்கத்திற்கு இயல்பேயாகும். பிறந்தது முதல் குழந்தைப் பருவம் முழுவதும் தாயைப் பரிந்துக் கிடக்கும் மனித வாழ்க்கைக்கு தாயைக் கடவுளாகப் பாவிப்பது இயற்கையான அன்பின் வழியே. ஆதலால் கடவுளைத் தாயாக பாவிக்கும் முறை உண்மையான நன்மை பயக்கும் அன்பின் நோக்கமேயாகும். எனவே, நம் பாரத நாட்டில் தொன்றுதொட்டு தந்தையும் தாயுமாய்த் தாங்குகின்ற கடவுளை அகமமர்ந்த அன்புடன் வழிபாடு செய்யும்முறை பக்தர்களின் மனதைக் கவர்ந்திழுக்கிறது. இம்முறை ஓர் சமயநெறியாகவே நம் நாட்டில் நன்கு வளர்ந்திருக்கிறது.

கடவுளும் பக்தர்களுடைய அன்புக்கு இரங்கி தாயுருவங்கொண்டு குழந்தைகளைக் காப்பாற்ற கருணைகூர்ந்து இப் பாரத நாட்டில் முக்கியமான புண்ணிய ஸ்தலங்களில் ஆவிர்ப்பவித்துள்ளார். இப்பாரத நாட்டுக்கு நாபீஸ்தானமாயுள்ள காஞ்சிமாநகர் என்ற புண்ணிய க்ஷேத்திரத்தில் காமகோடிபீடத்தில் ஸ்ரீ காமாக்ஷியாக ஆவிர்ப்பவித்து அழகு வடிவமாக உலகம் ஈன்ற அன்னை பிரகாசிக்கின்றனள். ஸ்ரீ காமாக்ஷிதேவியின் பக்தியால் உள்ளம் கரைந்து, உருகி, ஊறி, உணர்ந்து, உட்கசிவுடன் அவளருளால் ஸ்ரீமூக கவியானவர் இப்புத்தகத்திலடங்கிய ஐந்நூறு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்லோகங்களால் தேவியை வழிபாடு செய்தனர். "மூகன்" என்றால் ஊமை என்று அர்த்தம். ஊமையாயிருந்த இவருக்கு காமாக்ஷிதேவியின் அருளால் வாய்ப்பூட்டுத் தெறித்து நாக்கினின்றும் தேன்வெள்ளமாகப் பெருகும் கவி பாடும் திறமை உண்டாயிற்று என்றதினால் இக் கவிஞர் "மூககவி" என்றே புகழடைந்தார். இவர் ஊமை நிலைமையை ஒருவாறு சுட்டிக்காட்டும் சுலோகங்கள் இந்த பஞ்சசதியில் அங்கங்கே காணப்படுகின்றன. முக்கியமாக, ஆர்யா சதகத்தில் 57-வது ச்லோகத்தில், மூகனாயிருப்பினும் ஒருகணம் உன்னை நினைக்கின்றவன் உலகத்தில் உயர்ந்த கீர்த்தி உள்ளவனாக ஆகமுடியும் என்று மார்தட்டி கூறுகிறது போலே தோன்றுகிறது. ஸ்துதி சதகத்தில் பதினோராவது ச்லோகத்தில் ஊமைகளுக்குங்கூட தேவநதியான கங்கைக்குச் சமானமான வாக்கின் பெருக்கை உண்டுபண்ணக்கூடியவள் என்று துதித்து தனக்குக் கிடைத்த அம்பிகையின் அருளைப் பாராட்டுகிறார்போலும். வாக்ஸ்வரூபிணியாய் உள்ளவளும் தேவியே. இதயத்துள்ளிருந்து சொன்மயமாக வாக்கினின்று வெளிவந்து ஒளி தருவதும் தேவியின் சக்தியே. எல்லையில்லாத கவிச்சுவையை முகில்போல் பொழிவதும் காமாக்ஷியின் அருளே. சித்சக்தியாக இதயத்தில் அவள் பிரதிபலிக்காமல் இருந்தால் மனிதர்கள் ஊமைகளே; அவள் அருளின்றி எழுதிக்காட்டொணாத தன்மையான தேவியின் முன்னிலையில், வாயுள்ளவர்கள் அனைவரும் ஊமைகளே; இவர் வரகவி யென்பதில் ஐயமில்லை. இவர் கவிச்சுவை எல்லோருடைய மனதையும் கவரும் திறமை வாய்ந்தது. சொல்லுக்குடைய சக்தியின் முழு எல்லையையும் கண்டறிந்தவர். விசேஷமாக ஸம்ஸ்கிருத பதங்களின் பூர்ண சக்தியைக் கையாண்டு அனுபவிக்கிறவர். எனவே, இவர் கவிகளில் ஒவ்வொன்றும் அம்பிகையின் அழகு வடிவத்தில் நினைந்து, ஒருவாறு தோன்றும் மனதிற்கும் வாக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குக்கும் எட்டாத பரம்பொருளின் உண்மையைச் சித்தம் அறியும்படி பக்தர்களுக்கு அறிவை ஊட்டுகிறது; தேனெழுகும் சொற்களை இன்னிசையில் அமைத்து, அனுப்ராஸம் முதலியவற்றால் ஸஹ்ருதயர்களுக்கு ஆனந்தத்தைக் கொடுக்கும் சப்தாலங்காரங்களால் அழகுபெற்று பக்திரஸம் பொங்கித் ததும்பும் பாவங்களையுடைய இந்த ஐந்நூறு ஸ்லோகங்களினால் இவர் ஸ்ரீ காமாக்ஷி தேவியிடம் ஈடுபட்டு, மன முருகி வாயார வாழ்த்தி ஏத்துகின்றனர். இவர் காவியம், சப்தமும் அர்த்தமும் ஒன்று சேர்ந்து அர்த்தநாரீச்வரரின் சொரூபத்தை ஒத்து, ஆனந்தமயமான காவ்ய ரஸத்தை வாரி இறைக்கின்றது. பெரியோர்கள் கண்டுபிடித்த தேவீ வழிபாட்டின் முறையில் உள்ள பல உண்மைகளையும் பின் பற்றி இந்நூல் அமைக்கப்பட்டுள்ளது. மந்த்ரசாஸ்திரம், அஷ்டாங்கயோகம், குண்டலிப்ரபோதம், அத்வைதானுபவம் இவைகளின் தத்துவங்களை காவ்ய நடையில் கலந்து ரஸமாக உபதேசிக்கிறார். இதில் இவர் அநுபவித்த உயர்ந்த வழியை பக்தர்களுக்குக் காண்பிக்கின்றனர். தேவீ ஸமயத்தை நன்கு அறிந்தவர்களே இக்கவிகளின் முழுப் பொருள்களையும் அறியவும், மனிதர்களுக்கு உணர்த்தவும் முடியும். சொல் நயம், தேன்மொழி, உயர்ந்த பாவம், மகிழ்ச்சிதரும் கவிச்சுவை, நவரஸங்களின் பெருக்கு, இவையெல்லாம் திரட்டி பக்திரஸத்தில் ஊறிக் கலந்திருக்கும் இந்த ஸ்தோத்திரங்களைப் பன்முறை வாசித்துக் களித்துப் பாடி ஆடி ஆனந்திப்பது நமது பாக்யமேயாகும். இந்த ஸ்தோத்திரங்களைப் படித்து அன்பினால் உருகிக் கண்பனித் தாரையைக் காட்டும் பக்தர்கள் ஸ்ரீ காமாக்ஷி தேவியின் கடாக்ஷத்திற்கு பாத்திரர்களாக ஆவார்களென்பதில் ஐயமில்லை. ஒரு தரம் படித்தாலும் இக் கவிகளில் மனம் பதிந்து கிடக்கும் என்பது அறிஞர்களின் அநுபவம். எனவே, பக்தர்களனைவரும் இந்நூலில் ஈடுபடுமாறு வேண்டுகிறேன். இது

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

போன்ற நூல்கள் கிடைப்பது அரிதென்றே சொல்லவேணும். தமிழில் இந்நூலை மொழி பெயர்ப்பது கடினமான வேலை தான். திருப்தியைக் கொடுக்கக்கூடியமுறையில் மொழி பெயர்த்து நமக்கு உதவிசெய்த நண்பர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்க நாம் கடமைப்பட்டுள்ளோம்.

காமாக்ஷியும் குருமூர்த்தியும் வேறல்லர், ஒன்றே என்ற உண்மையை நன்கு அநுபவித்து ஆர்யா சதகத்தில் 46-வது ஶ்லோகத்தில் தேவியை குமாரி என்றும், சண்டி என்றும், குருமூர்த்தி என்றும் அழைத்த இம் மூக கவியினது நூலை ஜகத்குருவால் ஏற்படுத்தப்பட்ட காமகோடி கோசஸ்தானத்தின் பதினோராவது வெளியீடாக அமைத்தது பெரும் பொருத்தமேயாகும். அகண்டாகாரமாய், ஞான உருவாய், வாக்ஸ்வரூபிணியாய் பூரணமாய்க் கிடக்கும் பரம்பொருளின் இன்பத்தை அநுபவித்து ஆனந்தமடைந்த இம் மூக கவி கலந்து இன்புற்றிட வாருமென்று நம்மை அழைக்கும் பொழுது நாம் ஈடுபடவேண்டுமல்லவா?

இந்த அநுபவத்தை அடைவதற்கு சாஸ்த்ரஸித்தமான ராஜமார்க்கத்தை ப்ருஹதாரண்யகத்தில் உபதேசித்த नेति नेति नह्येतस्मात् इति नेत्यन्यत् परं अस्ति अथ नामधेयं सत्यस्य सत्यम् என்ற ச்ருதி வாக்யத்தின் பிரமாணத்தின் பலத்தால், பக்தர்களுக்கு பாதாரவிந்த சதகம் 24-ம் ச்லோகத்தில் வெகு அழகாக உணர்த்துகிறார். ஒன்றைப் பரித்யாகம் பண்ணுவதும், மற்றொன்றைத் தேடுவதுமான இரண்டு கார்யம் அடங்கியதாக நிற்கிறது; इदं जगत् என்பதை விவேகத்தினால் தள்ளி அதில் அதிஷ்டானமாகவுள்ள பரத்தை தேடவேணும். அதுதான் வேதங்களின் உட்பொருளான காமாக்ஷி தேவீ. இதற்கு அதிகாரம் பெற்றவர்கள் ஸாதன சதுஷ்டய ஸம்பத்துடன் கூடி மஹாவாக்ய விசாரம் பண்ணுகிற யதிகள்தான் என்பது இந்த ச்லோகத்தின் கருத்து. இது தான் வேதாகமத்தின் ராஜ மார்க்கம்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

जगन्नेदं नेदं परमिति परित्यज्य यतिभिः
कुशाग्रीयस्वान्तैः कुशलधिषणैः शास्त्रसरणौ ।
गवेष्यं कामाक्षि ध्रुवमकृतकानां गिरिसुते
गिरामैदंपर्यं तव चरणमाहात्म्यगरिमा ॥ [पादा. २४.]

இந்த மார்க்கத்திலே செல்ல பக்தர்களுக்கு ஏழ்மைத் தனத்தைத் தொலைத்து மேனி அழகையும் கவித்திறனையும் அளித்து தென்பைக் கொடுத்து ஸம்ஸாரமென்னும் இருளகற்றி அருளுகின்றனள் ஸ்ரீ காமாக்ஷி தேவி.

तापिञ्छस्तबकत्विषे तनुभृतां दारिद्र्यमुद्राद्विषे
संसाराख्यतमोमुषे पुररिपोर्वामाङ्कसीमाजुषे ।
कंपातीरमुपेयुषे कवयतां जिह्वाकुटीं जग्मुषे
विश्वत्राणपुषे नमोऽस्तु सततं तस्मै परंज्योतिषे ॥ [स्तुति. २.]

ஆர்யா சதகத்தில் தேவீபக்தன் இடைவிடாது எப்பொழுதும் சிவப்பு ஒளிப் புஞ்சத்தின் மத்தியத்தில் தேவியின் வடிவத்தை தியானம் செய்ய வேணுமென்றும், அதன் பிறகு ஆதரவுடன் தேவியின் பாதசேவை செய்ய வேணுமென்று பாதாரவிந்த சதகத்திலும், இதனால் தூண்டப்பட்டு தேவியை வாயாரப்பன்னி வாழ்த்தி ஏத்தி வழிபட வேணுமென்று ஸ்துதிசதகத்திலும், இந்த ஸ்துதியின் பலனாக பக்திரஸத்தில் மூழ்கி விவேகமடைந்து சாஸ்திரங்களைக் கற்று கர்வத்தை ஒழித்து உண்மை அறிவைக் கடைபிடித்து தேவியின் கடாக்ஷத்திற்குப் பாத்திரனாக வேணுமென்று கடாக்ஷசதகத்திலும், அந்த தேவியாகிய குருமூர்த்தியின் கருணை நோக்கால் அவள் முகோல்லாஸத்தில் விளைந்த புன்முறுவலான ஆனந்தக் கடலில் கலந்து பேரின்பவீடு அடையலாம் என்று மந்தஸ்மித சதகத்திலும் உபதேசித்த இவ்வரிசையின் உட்கருத்தை நன்கு புலப்படுத்துகிற நம் ஜகத்குருவின் ஸ்ரீமுகத்தை கவனித்துப் படிக்குமாறு அனைவரையும் வேண்டுகிறேன்.

'ஆச்ரம', மைலாப்பூர்
2—2—44.

கி. பாலசுப்ரமணிய ஐயர்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

॥ ஸ்ரீ: ॥

ஸ்ரீ காமாக்ஷ்யை நம: | ஸ்ரீ குருப்யோ நம: ॥

जय जय जगदम्ब शिवे जय जय कामाक्षि जय जयाद्रिसुते ।
जय जय महेशदयिते जय जय चिद्गगनकौमुदीधारे ॥

ஸ்ரீ பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யவர்யர்களாய் ஸ்ரீ காமகோடி பீடத்திலே தேஜோமயமாய் விளங்குகின்ற ஸ்ரீஜகத்குரு ஆசார்ய ஸ்வாமிகளாலே, ஆஸ்திகர்களுக்குள்ள பக்திசிரத்தைகளை அதிகரிக்கச் செய்வதற்காக ஸ்ரீ காமகோடி கோசஸ்தானமானது தொடங்கப் பெற்றபோது, ஸ்ரீ மூகபஞ்சசதீ முதலிய நூல்கள் தமிழ் அனுவாதங் களுடன் கோசஸ்தானப் பதிப்புகளாக வெளிவரவேண்டு மென்று இட்ட ஆஜ்ஞை நிறைவேறுவதற்கு ஸ்ரீ காஞ்சீ காமாக்ஷியம்மன் கோயில் கும்பாபிஷேக மஹோத்ஸவ ஸமயமே பொருத்தமான ஸந் தர்ப்பமாக அம்பாளுடைய கருணையினால் ஏற்பட்டது போலும்!

இப் பதிப்பிலே ஆர்யா சதகத்திற்குத் தமிழுரையை சென்னை ஸ்ரீ குஹானந்த மண்டலியின் ஸ்தாபகரான பிரும்மஸ்ரீ அருட்கவி என். ஸுப்ரஹ்மண்ய ஐயரவர்களும், மந்தஸ்மித சதகத்திற்கு மயிலாப்பூர் ஸம்ஸ்க்ருத கலாசாலை ஆசிரியரான வேதாந்த விசாரத, வேதாந்த ஸாஹித்ய சிரோமணி பிரும்மஸ்ரீ வி. எச். ஸுப்ரஹ்மண்ய சாஸ்திரியவர்களும் உதவினார்கள். பாதாரவிந்த சதகம், ஸ்துதி சதகம கடாக்ஷசதகம் ஆகியவற்றிற்கு உரையெழுதியும் நூல் முழுவதையும் அச்சுத் திருத்தியும் உதவியவர் இதுகாறும் கோசஸ்தானத்தில் வெளி வந்த புத்தகங்களின் வெளியீடுகளுக்கு உதவிசெய்துவரும் சென்னை அட்வோகேட் ஸ்ரீ வே. நாராயண ஐயர்; இம் மூவருக்கும், முகவுரை எழுதியுதவிய சென்னை அட்வொகேட் தர்மரக்ஷாமணி ஸ்ரீ. கே. பாலஸுப்ரஹ்மண்ய ஐயரவர்களுக்கும் ஸ்ரீ அம்பாள் ஆசார் யாளின் மூவர்ணப் படங்களுக்கு ப்ளாக்குகளை உதவிய ஸ்ரீ. டி. வி. ஈசுவர சாஸ்திரிகளுக்கும் கோசஸ்தானத்தின் நன்றி உரியதாகும்; இவர்களுக்கும், இந்நூலைப் படிக்கும் அனைவர்க்கும் ஸ்ரீ காமகோடி ஸ்ரீ காமாக்ஷியம்பாளின் பூர்ணகடாக்ஷமும் மந்தஸ்மிதமும் எந்நாளும் அமைந்திருப்பதாக.

7—2—44. ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

THE HISTORIC KAMAKSHI TEMPLE OF SRI ADI SANKARA

AT CONJEEVARAM

Kanchipura is the Seat of the Sri Kamakoti Pitha—one of the 50 Pithasthanas of the Sri Devi. Sri Sankaracharya built the temple of Sri Kamakshi in the form of a Sri *Chakra Yantra* in the closing days of His *Digvijaya*. The City of Kanchi was remodelled by Him and a Sri Chakra was established in front of Sri Devi. All other Saivite and Vaishnavite temples in the City, about a hundred in number, are so arranged as to face the Kamakoti Pitha, and all the *Devatamurthies* of the above Temples circumambulate the Pitha during their respective festivals.

Literally, the word Kanchi means 'the naval cord'. Ancient literature take the word to mean the naval position of the world itself. Bhudevi (भूदेवि), has taken more than once the form of a cow, according to our puranic literature.

Thus Sri Sankaracharya selected Kanchi as the Pithasthan for the welfare of the whole world, just as the naval cord nourishes the child in the mother's womb.

Successors of Sri Adi Sankara have been renovating and consecrating the Temple of Sri

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

Kamakshi whenever necessary during all these centuries.

One hundred and four years ago Sri Chandrasekharendra Saraswati Swamigal, the then Jagadguru of the Sri Kamakoti Pitha and the Parapara Guru of the present Acharya, who also bears the same *sannyasa name*, consecrated the Temple by Kumbhabhishekam after renovating it in 1840. The present Acharya began the renovation of the Temple before his pilgrimage to Benares; and this day, the 7th of February, 1944, the Maha Kumbhabhishekam of the Temple is being celebrated.

In the wall of the Garbhagraha (Sanctum Sanctorum) of Sri Kamakshi Ambal, Sri Chora Maha Vishnu resides in a small niche (koshta) along with Rupa-Lakshmi. This miniature Temple is one of the one hundred and eight Vaishnavite shrines canonised by the Alwar Saints. The prathishta of Rupa Lakshmi and Maha Vishnu also takes place on this day. The prathishta of Maha Shasta, the guardian deity of the Temple, referred to in ancient Tamil Literature in relation to Karikala Chola, the earliest known Chola Emperor, whose campaigns extended up to the Himalayas, also takes place this day.

7th February, 1944.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

n Public domain. Digitization Muthulakshmi Research Academy



ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி அம்பாள்

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

॥ श्रीः ॥

॥ श्रीमूकपञ्चशती ॥

आर्याशतकम्

ஸ்ரீ மூக பஞ்சசதீ

ஆர்யா சதகம்

कारणपरचिद्रूपा काञ्चीपुरसीम्नि कामपीठगता ।
काचन विहरति करुणा काश्मीरस्तबककोमलाङ्गलता ॥ १ ॥

1. ஸர்வ காரணங்களுக்கும் அதீதமான சித்ரூபமானதும் குங்குமப்பூவின் கொத்துப்போல் மிருதுவாயும் கொடி போன்றுமுள்ள திருமேனியையுடையதுமான ஏதோ ஒரு கருணை வடிவம் காஞ்சீநகரப் பிரதேசத்தில் காமபீடத்தில் விளங்கிக்கொண்டு திருவிளையாடல் புரிகின்றது.

कंचन काञ्चीनिलयं करधृतकोदण्डबाणसृणिपाशम् ।
कठिनस्तनभरनम्रं कैवल्यानन्दकन्दमवलम्बे ॥ २ ॥

2. ஸ்ரீ காஞ்சீபுரத்தை இருப்பிடமாக்கிக் கொண்டு, தனது திருக்கைகளில் வில்லையும், அம்புகளையும், அங்குசத்தையும், பாசத்தையும் தரித்து, கடினமான ஸ்தன பாரத்தால் (சிறிது) சாய்ந்த திருமேனியுடன் மோக்ஷமென்னும் ஆனந்தத்திற்கு மூலமாய் நிற்கும் எண்ணுதற்கரிய ஒரு பொருளை (உள்ளத்தால்) பற்றிக்கொள்கிறேன்.

चिन्तितफलपरिपोषण-चिन्तामणिरेव काञ्चिनिलया मे ।
चिरतरसुचरितसुलभा चित्तं शिशिरयतु चित्सुखाधारा ॥ ३ ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3. (நான்) நினைத்த பலன்களை நிறைவிப்பதில் எனக்கு காஞ்சியை இருப்பிடமாகக்கொண்ட தேவி சிந்தாமணி ரத்னமேயாவள். வெகுகால புண்ய வசத்தாலே சுலபமான அகண்ட ஞானானந்த ரூபிணியாய் ஸமஸ்த ஜகத்துக்கும் ஆதாரமான அவள் என் மனதைக் குளிரச் செய்யட்டும்.

कुटिलकचं कठिनकुचं कुन्दस्मितकान्ति कुङ्कुमच्छायम् ।
कुरुते विहृतिं काञ्च्यां कुलपर्वतसार्वभौमसर्वस्वम् ॥ ४ ॥

4. குலாசலங்களுக்கெல்லாம் சக்கிரவர்த்தியாய் விளங்கும் ஹிமவானுடைய ஸகல ஸௌபாக்கிய வடிவமான ஒரு மூர்த்தியானது, சுருண்ட கூந்தலோடும், கடினமான குசங்களோடும், முல்லைப் புஷ்பத்தைப்போன்ற காந்தியையுடைய புன்சிரிப்போடும், குங்குமம்போற் சிவந்த மேனியோடும் காஞ்சீ நகரத்தில் லீலை புரிந்துகொண்டிருக்கின்றது.

पञ्चशरशास्त्रबोधन-परमाचार्येण दृष्टिपातेन ।
काञ्चीसीम्नि कुमारी काचन मोहयति कामजेतारम् ॥ ५ ॥

5. பஞ்சபாணனாகிய மன்மதனது ச்ருங்கார சாஸ்திரத்தைப் போதிப்பதில் சிறந்த ஆசாரியனாய் விளங்கும் (தனது) கண்ணோக்கத்தினால் ஸ்ரீ காஞ்சீபுரத்தில் ஓராணொரு குமாரியானவள் காமனை வென்று நீருக்கிய பரமேஸ்வரனை மோஹமடையும்படி செய்கின்றனள்.

परया काञ्चीपुरया पर्वतपर्यायपीनकुचभरया ।
परतन्त्रा वयमनया पङ्कजसब्रह्मचारिलोचनया ॥ ६ ॥

6. ஸ்ரீ காஞ்சியில் விளங்குபவளும், தாமரை மலரோடு தோழமை கொள்ளும் கண்களுடையவளும், பர்வதங்களையொத்த பெருத்த ஸ்தனபார முடையவளுமான இந்த பரதேவதையால் யாம் பரவசமாய் விட்டோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ऐश्वर्यमिन्दुमौले-रैकात्म्यप्रकृति काञ्चिमध्यगतम् ।
ऐन्दवकिशोरशेखर-मैदंपर्यं चकास्ति निगमानाम् ॥ ७ ॥

7. பிரஹ்மத்தோடு அபேதமாய் விளங்கும் பிரகிருதி ரூபமானதும் காஞ்சீபுரத்தின் மத்தியஸ்தானத்தில் விளங்குவதும், (மூன்ளும்) பிறைச் சந்திரனைச் சிரோபூஷணமாக வுடையதும் ஆன சந்திரமௌளியாகிய பரமேஶ்வரனது ஐஶ்வரியமானது வேதங்களின் பரம தாத்பரியமாய் விளங்குகின்றது.

श्रितकम्पासीमानं शिथिलितपरमाशिवधैर्यमहिमानम् ।
कलये पाटलिमानं कंचन कञ्चुकितभुवनभूमानम् ॥ ८ ॥

8. கம்பாநதீ தீரத்தில் விளங்குவதும், பரம சிவனது மனவுறுதியைக் குலைத்த புகழுடன் கூடினதும், லௌகிக (விஷய) ஸுகத்தைக் கஞ்சுகமாய் உடைத்தானதுமான ஓராளுரு பாடலி நிறமுள்ள பொருளை நினைக்கின்றேன்.

आदृतकाञ्चीनिलया-माद्यामारूढयौवनाटोपाम् ।
आगमवतंसकलिका-मानन्दाद्वैतकन्दलीं वन्दे ॥ ९ ॥

9. ஸ்ரீ காஞ்சீ நகரத்தையே தனக்கு நிலயமாய் ஆதரிப்பதும், யௌவன கர்வங்கொண்டதும், ஆகமங்களுக்குத் தலையிலணியும் மொட்டாகவுள்ளதும், நித்தியானந்த ஸ்வரூப அத்வைதத் தளிராய் விளங்குவதுமாகிய ஆத்யா சக்தியை வணங்குகின்றேன்.

तुङ्गाभिरामकुचभर-शृङ्गारितमाश्रयामि काञ्चिगतम् ।
गङ्गाधरपरतन्त्रं शृङ्गाराद्वैततन्त्रसिद्धान्तम् ॥ १० ॥

10. காஞ்சீநகரத்தில் விளங்குவதும், உன்னதமாயும் அதிரமணீயமாயும் விளங்கும் ஸ்தனபாரத்தால் அலங்கரிக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கப்பட்டதும், கங்காதரரான பரமசிவனைப் பரவசப்படும்படி செய்வதுமான சிருங்கார அத்வைத சாஸ்திர ஸித்தாந்தத்தை ஆஶ்ரயிக்கின்றேன்.

काञ्चीरत्नविभूषां कामपि कन्दर्पसूतिकापाङ्गीम् ।
परमां कलामुपासे परशिववामाङ्कपीठिकासीनाम् ॥ ११ ॥

11. காஞ்சீ நகரத்திற்கோர் ரத்னாபரணமாயும், மன்மதனை உஜ்ஜீவனம் செய்யும் திறமையுடைய கடைக்கண் பார்வையுடையதாயும், பரமசிவனுடைய இடது மடியென்னும் பீடத்தில் வீற்றிருப்பதுமான சிறந்த சித்கலா ஸ்வரூபத்தை உபாஸிக்கிறேன்.

कम्पातीरचराणां करुणाकोरकितदृष्टिपातानाम् ।
केलीवनं मनो मे केषांचिद्भवतु चिद्विलासानाम् ॥ १२ ॥

12. கருணை ததும்பும் கடைக்கண் நோக்கத்தோடு கூடி கம்பா நதிக்கரையில் ஸஞ்சாரம் செய்யும் அவாங்மனஸ கோசரமான சித்விலாஸங்களுக்கு என் மனம் லீலாவனமாக ஆகட்டும்.

आम्रतरुमूलवसते-रादिमपुरुषस्य नयनपीयूषम् ।
आरब्धयौवनोत्सव-माम्नायरहस्यमन्तरवलम्बे ॥ १३ ॥

13. மாமரத்தின் மூலத்தில் வஸிக்கும் காரணேஶ்வரனது கண்களுக்கு அம்ருதஸ்வரூபமானதும், புதிய யௌவனாவஸ்தையின் ஸந்தோஷ ஸ்வரூபமானதும் ஆன ஸகல வேதங்களின் தத்துவ ஸ்வரூபத்தை அந்தரங்கத்தில் தியானஞ் செய்கின்றேன்.

अधिकाञ्चि परमयोगिभि-रादिमपरपीठसीम्नि दृश्येन ।
अनुबद्धं मम मानस-मरुणिमसर्वस्वसंप्रदायेन ॥ १४ ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

14. காஞ்சி நகரத்தின்கண் பிரதமமும் சிறந்ததுமான (காமகோடி) பீடத்தில் மஹாயோகிகளால் தரிசிக்கத்தக்க ஒழுங்கான சிறந்த சிவந்த வஸ்துவோடு (ஸ்ரீ காமாக்ஷியோடு) என் மனது தொடர்வு கொண்டுள்ளது.

अङ्कितशंकरदेहा-मङ्कुरितोरोजकङ्कणाश्लेषैः ।
अधिकाञ्चि नित्यतरुणी-मद्राक्षं कांचिदद्भुतां बालाम् ॥ १५ ॥

15. பூரித்தெழுந்த ஸ்தனங்களோடும் கைவளைகளோடும் ஆலிங்கனம் செய்த காரணத்தால் தன் பதியான சங்கரரது சரீரத்தில் அடையாளமுண்டாகச் செய்தவளும், நித்தியமான யௌவனத்தோடு கூடியவளுமான ஒராளெரு வியப்புறக் கூடிய பாலா ஸ்வரூபத்தை காஞ்சிபுரத்தில் தரிசித்தேன்.

मधुरधनुषा महीधर-जनुषा नन्दामि सुरभिबाणजुषा ।
चिद्वपुषा काञ्चिपुरे केलिजुषा बन्धुजीवकान्तिमुषा ॥ १६ ॥

16. இனிப்போடு கூடிய (கரும்பு) வில்லையுடையதும், பர்வதராஜனிடமிருந்து பிறப்பையுடையதும், நறுமலர்களை அம்பாகக்கொண்டதும், காஞ்சிபுரத்தில் விளையாடிக் கொண்டிருப்பதும், செம்பருத்தப்பூவின் சிவந்த காந்தியைக் கவர்கின்றதும் ஆன ஒரு சைதன்னிய மூர்த்தியால் நான் பரமானந்த மடைகின்றேன்.

मधुरस्मितेन रमते मांसलकुचभारमन्दगमनेन ।
मध्येकाञ्चि मनो मे मनसिजसाम्राज्यगर्वबीजेन ॥ १७ ॥

17. மனோஹரமான புன்முறுவலுடையதும், பெருத்த குசபாரத்தால் மெதுவான நடையையுள்ளதும், மன்மதனது ஏகாதிபத்ய கர்வத்திற்குக் காரணமானதும், காஞ்சியின் மத்தியில் விளங்குவதுமான (ஸ்ரீ காமாக்ஷியால்) ஒன்றால் என் மனம் களிக்கின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

धरणिमयीं तरणिमयीं पवनमयीं गगनदहनहोतृमयीम् ।
अम्बुमयीमिन्दुमयी-मम्बामनुकम्पमादिमामीक्षे ॥ १८ ॥

18. பிருதிவி, ஸூர்யன், காற்று, ஆகாசம், அக்கினி, யாகதீக்ஷை கொண்ட யஜமானன், ஜலம், சந்திரன் என்னும் அஷ்டமூர்த்திகளாக விளங்கும் முதல்வியாகிய தாயைக் கம்பாநதீதீரத்தில் தரிசிக்கின்றேன்.

लीनस्थिति मुनिहृदये ध्यानस्तिमितं तपस्यदुपकम्पम् ।
पीनस्तनभरमीडे मीनध्वजतन्त्रपरमतात्पर्यम् ॥ १९ ॥

19. யோகிகளின் ஹ்ருதய குஹையில் உள்ளதும், கம்பா தீரத்தில் அசஞ்சல தியானத்தோடு தவம்புரிந்து கொண்டிருப்பதும், பெருத்த ஸ்தன பாரமுடையதும், மன்மதனது (சிருங்கார) சாஸ்திரத்தின் பரமதாத்பர்யமுமான ஒன்றை ஸ்தோத்திரஞ் செய்கின்றேன்.

श्वेता मन्थरहसिते शाता मध्ये च वाङ्मनोऽतीता ।
शीता लोचनपाते स्फीता कुचसीम्नि शाश्वती माता ॥ २० ॥

20. எக்காலத்தும் விளங்குகின்ற லோகமாதாவானவள் மந்தஹாஸத்தில் வெண்மையாகவும், (கடீ) இடுப்புப்பாகத்தில் இளைத்தும், வாக்குக்கும் மனத்திற்கும் அதீதமாயும், கண்ணோக்கில் குளிர்ச்சியாயும், ஸ்தனப் பிரதேசத்தில் பெருத்தும் விளங்குகின்றனள்.

पुरतः कदा नु करवै पुरवैरिविमर्दपुलकिताङ्गलताम् ।
पुनतीं काञ्चीदेशं पुष्पायुधवीर्यसरसपरिपाटीम् ॥ २१ ॥

21. திரிபுர ஸம்ஹாரம் செய்த பரமசிவனுடைய காடாலிங்கனத்தினால் (மயிர்க்குச்செறிந்துள்ள) புளகிதமாயுள்ள சரீரத்தை யுடையவளும், காஞ்சீ நகரப் பிரதேசத்தைப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புனிதமாக்குபவளும், அனங்கனது வீரச்செய்கைக்கு ஸரஸமான மார்க்கமுமான ஸ்ரீ காமாக்ஷீ தேவியை என் முன்னர் எப்பொழுதுதான் காண்பேனோ?

पुण्या कापि पुरंध्री पुङ्खितकन्दर्पसंपदा वपुषा ।
पुलिनचरी कम्पायाः पुरमथनं पुलकनिचुलितं कुरुते ॥ २२ ॥

22. கம்பா தீரத்தின் மணல் திட்டுகளில் ஸஞ்சரிப்பவளும், மன்மதனது சிறப்பை வளர்க்கும் (சிருங்கார ரஸமே திரண்டு உருவெடுத்ததோ என்று கருதத் தக்க) சரீரத்தோடுள்ளவளும் ஆன ஒரானொரு அறமாது திரிபுரமொழித்த பரமேஸ்வரனை மயிர்க்கூச்சுறும்படி செய்கின்றனள்.

तनिमाद्वैतवलग्नं तरुणारुणसंप्रदायतनुलेखम् ।
तटसीमनि कम्पाया-स्तरुणिमसर्वस्वमाद्यमद्राक्षम् ॥ २३ ॥

23. மிகவும் நுண்ணிய இடுப்பையுடையதும், முதிர்ந்த நல்ல சிவப்பு நிறத்தையுடைய மெல்லிய சரீரத்தையுடையதும், யௌவன ஸம்பத்தோடு நிறைந்ததுமான பொருளொன்றைக் கம்பா நதிக்கரையில் கண்டேன்.

पौष्टिककर्मविपाकं पौष्पशरं सविधसीम्नि कम्पायाः ।
अद्राक्षमात्तयौवन-मभ्युदयं कंचिदर्धशशिमौलेः ॥ २४ ॥

24. புஷ்ப பாணனுகும் மன்மதனது அபிவ்ருத்திக்கு ஏற்பட்ட கர்மத்தின் பயனுயுள்ளதும், யௌவனத்தை அடைந்ததும், அர்த்த சந்திரனை (பாதிமதியை)ச் சிரஸில் தரித்த ஸ்ரீ ஏகாம்ரநாதரது சிறப்பிற்குக் காரணமானதுமான ஒரானொரு அநிர்வசனீய வஸ்துவை கம்பா நதிக்கருகில் கண்டேன்.

संश्रितकाञ्चीदेशे सरसिजदौर्भाग्यजाग्रदुत्तंसे ।
संविन्मये विलीये सारस्वतपुरुषकारसाम्राज्ये ॥ २५ ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

25. ஸ்ரீ காஞ்சி மா நகரத்தை யடைந்ததும், தாமரை மலர்களின் வாட்டத்திற்குக் காரணமான சந்திரனைச் சிரஸில் தரித்துள்ளதும், ஸாரஸ்வதமென்னும் ஸகல கலா விலாஸ ஸாம்ராஜ்யமானதுமான ஞானஸ்வரூபத்தில் நான் ஈடுபடுகிறேன் (இரண்டறக் கலந்துகொள்கிறேன்.)

मोदितमधुकरविशिखं स्वादिमसमुदायसारकोदण्डम् ।
आदृतकाञ्चीखेलन मादिममारुण्यभेदमाकलये ॥ २६ ॥

26. வண்டுகளுக்குக் களிப்பருளும் புஷ்பங்களைப் பாண மாகவுடையதும், மதுரரஸ ஸமஷ்டியின் ஸாரமான கரும்பை வில்லாயுடையதும், காஞ்சீபுரத்தில் திருவிளையாடல் புரி தலில் அன்பு கொண்டதும், எல்லாவற்றிற்கும் ஆதியாயிருப் பதுமான அருண நிறமுடைய ஸ்வரூபத்தைத் தியானிக்கின் றேன்.

उररीकृतकाञ्चिपुरी-मुपनिषदरविन्दकुहरमधुधाराम् ।
उन्नम्रस्तनकलशी-मुत्सवलहरीमुपास्महे शंभोः ॥ २७ ॥

27. ஸ்ரீ காஞ்சீபுரியை ஏற்றுக்கொண்டதும், உபநிஷத் துக்களென்னும் தாமரை மலர்களின் உள்ளே நடுக்கர்ணிகை யினின்று பெருகும் தேனின் பெருக்காய் விளங்குவதும், நிமிர்ந்தோளிரும் ஸ்தன கலசங்களையுடையதும், பரமசிவ னது பேரானந்தப் பெருக்காயுள்ளதுமான ஒன்றை உபாஸிக் கின்றோம்.

एणशिशुदीर्घलोचन-मेनःपरिपन्थि संततं भजताम् ।
एकाम्रनाथजीवित-मेवंपददूरमेकमवलम्बे ॥ २८ ॥

28. மான் குட்டிக்குள்ளவை போன்ற நீண்ட நயனங் களையுடையதும், இடைவிடாது பஜித்துவரும் பக்தர்களின் பாபங்களை எதிர்ப்பதும், ஸ்ரீ ஏகாம்ரநாதரது பிராண

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ரூபமாயுள்ளதும், இத்தகையதென்று குறிப்பிடுதற்கு முடியாததுமான ஒன்றைப் பற்றுகின்றேன்.

स्मयमानमुखं काञ्ची-मयमानं कमपि देवताभेदम् ।
दयमानं वीक्ष्य मुहु-र्वयमानन्दामृताम्बुधौ मग्नाः ॥ २९ ॥

29. சிரிப்பு முகமுடையதும், காஞ்சீநகரை யடைகின்றதும், கருணை ஸ்வரூபமாய் இலங்குவதுமான ஒரு தேவதா விசேஷத்தைப் பன்முறை தரிசித்து, யாம் ஆனந்தமென்னும் அமிருத ஸாகரத்தில் மூழ்கியிருக்கின்றோம்.

कुतुकजुषि काञ्चिदेशे कुमुदतपोराशिपाकशेखरिते ।
कुरुते मनोविहारं कुलगिरिपरिवृढकुलैकमणिदीपे ॥ ३० ॥

30. காஞ்சி க்ஷேத்திரத்தை மிகுந்த களிப்போடு நேசிப்பதும், செங்கழுநீர் புஷ்பங்களின் தவக்குவியலின் பயனாய் உள்ள சந்திரனைச் சிரஸில் தரித்துள்ளதும், குலாசலங்களின் தலைவனான ஹிமவானுடைய குலத்திற்கோர் ஒப்பற்ற திருவிளக்காயுள்ளதும் ஆன ஒரு ஸ்வரூபத்தில் இந்த ஜீவனுகும் அடியேன் மனத்தைச் செலுத்துகின்றேன் (என் மனம் விளையாடுகின்றது).

वीक्षेमहि काञ्चिपुरे विपुलस्तनकलशगरिमपरवशितम् ।
विद्रुमसहचरदेहं विभ्रमसमवायसारसंनाहम् ॥ ३१ ॥

31. பெருத்தவையான ஸ்தனங்களின் கனத்தால் வணங்கியுள்ளதும், பவழத்தை யொத்த செம்மை நிறமுள்ள சரீரத்தையுடையதும், (காமகேளீ விலாஸங்களின் ஸம்போக ஸாரமாகின்ற ஸந்நாஹ கோலத்தோடு கூடியதான) அழகின் சேர்க்கையின் சிறந்த தயாரிப்புமான ஒரு ஸ்வரூபத்தைக் காஞ்சியில் காண்கின்றோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

कुरुविन्दगोत्रगात्रं कूलचरं कमपि नौमि कम्पायाः ।
कूलंकषकुचकुम्भं कुसुमायुधवीर्यसारसंरम्भम् ॥ ३२ ॥

32. சிவப்புநிற மணிகளாலாய மலைபோன்ற சரீர காந்தியையுடையதும், கம்பா நதிக்கரையில் சஞ்சாரம் செய்வதும், ஒன்ருேடொன்று மோதும் ஸ்தனகலசங்களையுடையதும், புஷ்ப பாணனுடைய மன்மதனுடைய வல்லமையின் ஸாரத்தின் பரபரப்பாய் விளங்குவதும் ஆன அவாங் மனஸகோசரமான ஒராெனுரு பொருளை நமஸ்கரிக்கிறேன்.

कुड्मलितकुचकिशोरैः कुर्वाणैः काञ्चिदेशसौहार्दम् ।
कुङ्कुमशोणैर्निचितं कुशलपथं शंभुसुकृतसंभारैः ॥ ३३ ॥

33. மலர்ந்தும் மலராதுமுள்ள மொட்டுக்களைப் போன்ற இளங் (பால) குசங்களையுடையதும், ஸ்ரீ காஞ்சி க்ஷேத்திரத்தில் நட்பு கொண்டதும், குங்குமம்போன்ற சிவந்த திருமேனியுடையதும் ஆன பரமசிவனுடைய புண்ணிய ராசியின் கூட்டத்தினுல் முமுக்ஷுக்களின் சிரேயோமார்க்கமானது திறக்கப்பட்டு இருக்கின்றது.

अङ्कितकचेन केनचि-दन्धंकरणौषधेन कमलानाम् ।
अन्तःपुरेण शंभो-रलंक्रिया कापि कल्प्यते काञ्च्याम् ॥ ३४ ॥

34. கமலங்களின் ஸங்கோசத்திற்கு ஔஷதமாயிருக்கும் ஒரு பொருளால் (சந்திரனுல்) அலங்கரிக்கப்பட்ட கூந்தலையுடையதும், சங்கரருடைய அந்தர்ஹ்ருதயத்தில் பிரகாசிப்பதுமான ஒராெனுரு வஸ்துவால் காஞ்சீபுரம் அலங்கரிக்கப் பெற்றுள்ளது.

ऊरीकरोमि संतत-मूष्मलफालेन लालितं पुंसा ।
उपकम्पमुचितखेलन-मुर्वीधरवंशसंपदुन्मेषम् ॥ ३५ ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

35. அக்கினி நேத்திரமுடைமையால் உஷ்ணமான நெற்றியையுடைய புருஷரால் (சங்கரரால்) லாலனைசெய்யப்படுவதும், கம்பாநதீதீரத்தில் கேளீ விலாஸம் புரிவதுமான பர்வதவம்சத்தின் செல்வக்கொழுந்தை எப்பொழுதும் தியானஞ் செய்கின்றேன்.

अङ्कुरितस्तनकोरक-मङ्कालंकारमेकचूतपतेः ।
आलोकेमहि कोमल-मागमसंलापसारयाथार्थ्यम् ॥ ३६ ॥

36. வேதங்களின் மனோஹரமான மஹா வாக்கியங்களின் லக்ஷ்யார்த்த வடிவமாய் விளங்குவதும், ஸ்ரீ ஏகாம்ரநாதரது மடிக்கு (இடது தொடைக்கு) அலங்காரமாய் விளங்குவதும், மொட்டுப்போன்ற பாலகுசங்களையுடையதுமான ஸ்வரூபத்தை உள்நோக்காலே தரிசிக்கின்றோம்.

पुञ्जितकरुणमुदाञ्चित-शिञ्जितमणिकाञ्चि किमपि काञ्चिपुरे ।
मञ्जरितमृदुलहासं पिञ्जरतनुरुचि पिनाकिमूलधनम् ॥ ३७ ॥

37. கருணையே ஸ்வரூபமாய் விளங்குவதும், நன்கு சப்திக்கும் மணிச்சலங்கைகளோடு கூடிய ஒட்டியாணத்தையணிந்துள்ளதும், பூங்கொத்துப்போல் விளங்கும் குறுநகையோடு கூடியதும், தங்கம்போன்ற பசுமையையுடைய சரீரத்தோடு விளங்குவதும், பினாகியாகும் பரமசிவத்தின் மூலதனமாய் இலங்குவதுமான ஒன்று காஞ்சிமாநகரத்தில் (பிரகாசிக்கின்றது).

लोलहृदयोऽस्मि शंभो-र्लोचनयुगलेन लेह्यमानायाम् ।
ललितपरमशिवायां लावण्यामृततरङ्गमालायाम् ॥ ३८ ॥

38. பரசம்புவின் இரண்டு நேத்திரங்களால் ஆவலாய்ப் பருகப்படும் ஸௌந்தர்யாமிருத வடிவமானதும், பரமசிவத்தை கொஞ்சச் செய்வதுமான அழகென்னும் அப்தியின் அலைகளின் பரம்பரையில் பேரவாக் கொண்ட மனதுள்ளவனாய் இருக்கின்றேன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

मधुकरसहचरचिकुरै-र्मदनागमसमयदीक्षितकटाक्षैः ।
मण्डितकम्पातीरै-र्मङ्गलकन्दैर्ममास्तु सारूप्यम् ॥ ३९ ॥

39. கரியவண்டுகளை யொத்திலகும் கூந்தலையுடையதும் மதனுகமமாகும் சிருங்கார சாஸ்திரத் கொள்கையில் தீக்ஷை கொண்ட கடாக்ஷங்களை யுடையதும், கம்பாநதி தீரத்திற்கு ஓரலங்காரமாயிருப்பதும் ஆன ஸர்வமங்களமாகும் சிரேயஸ்ஸுக்குப் பரமகாரணமான வஸ்துவோடு (எனக்கு) ஸாரூப்பியம் உண்டாகுமாறு யான் வேண்டுகின்றேன்.

वदनारविन्दवक्षो-वामाङ्कतटीवशंवदीभूता ।
पुरुषत्रितये त्रेधा पुरंध्रिरूपा त्वमेव कामाक्षि ॥ ४० ॥

40. ஹே காமாக்ஷியே! த்ரிமூர்த்திகளாகும் ப்ரஹ்ம விஷ்ணு ருத்திரரென்னும் மூன்று மஹாபுருஷர்களின் முக கமலம், ஹ்ருதயம் (மார்பு), இடது தொடையென்னும் இடங்களில் விளங்கும் ஸரஸ்வதி லக்ஷ்மி கௌரிகளாக நீயே பிரகாசிக்கின்றனை.

बाधाकरीं भवाब्धे-राधाराद्यम्बुजेषु विचरन्तीम् ।
आधारीकृतकाञ्चीं बोधामृतवीचिमेव विमृशामः ॥ ४१ ॥

41. பிறவிக் கடலை யொழிப்பதும், மூலாதாரம் ஸ்வாதிஷ்டானம் முதலிய ஆதார கமலங்களில் ஸஞ்சாரம் செய்வதும், காஞ்சியைத் தன் விளக்கத்திற்கு ஓராதார க்ஷேத்திரமாயுடையதும் ஆன ஞானம்ருதப் பெருக்கையே ஆராய்கின்றோம்.

कलयाम्यन्तः शशधर-कलयाङ्कितमौलिममलचिद्वलयाम् ।
अलयामागमपीठी-निलयां वलयाङ्कसुन्दरीमम्बाम् ॥ ४२ ॥

42. சந்திர கலையால் அடையாள மிடப்பட்டுள்ள கிரீடமணிந்தவளும், மாயாரஹித சித்ஸ்வரூபத்தோடு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சேர்ந்தவளும் (சுத்தசித் மண்டல ரூபிணியும்), அழிவற்றுக் காலாதீதமாய் விளங்குபவளும், வேதங்களாகிற பீடத்தின் மேல் வஸிப்பவளும், வளைத்தழும்புடைய பரமசிவஸுந்தரியுமான அம்பாளை அந்தர்முக வ்ருத்தியால் அநுஸந்தானம் செய்கின்றேன்.

शर्वादिपरमसाधक-गुर्वानीताय कामपीठजुषे ।
सर्वाकृतये शोणिम-गर्वायास्मै समर्प्यते हृदयम् ॥ ४३ ॥

43. சிறந்த உபாஸகர்களால் மஹேச்வரன் முதல் குருபரம்பரையாக வரப்பெற்றதும், காமகோடி பீடத்தை யடைந்து விளங்குவதும், வடிவமுடைய எல்லாவற்றின் ஸ்வரூபமாயுமுள்ளதுமான செம்மை நிறமாம் விமர்ச ஸ்வரூபத்திற்கு என் மனத்தை அர்ப்பணம் செய்கின்றேன்.

*ஶோணிமா - செம்மை, விமர்சம்.

समया सांध्यमयूखैः समया बुद्ध्या सदैव शीलितया ।
उमया काञ्चीरतया न मया लभ्येत किं नु तादात्म्यम् ॥ ४४ ॥

44. ஸந்தியா காலத்தின் சிவந்த கிரணங்களுக்குச் சமானமான காந்தியுடையவளும், அபேததிருஷ்டியோடு இடைவிடாமல் எப்பொழுதும் தியானிக்கப்படுபவளும், காஞ்சீபுரத்தில் பற்றுடையவளுமான உமையோடு தாதாத்மிய வடிவ ஸாயுஜ்ய பதவியானது அடியேனால் அடைய முடியாததா?

जन्तोस्तव पदपूजन-संतोषतरङ्गितस्य कामाक्षि ।
बन्धो यदि भवति पुनः सिन्धोरम्भस्सु बम्भ्रमीति शिला ॥ ४५॥

45. ஹே காமாக்ஷி! உன்னுடைய பாதாரவிந்தங்களை (அனன்ய பக்தியோடு) பூஜிக்கும் ஸந்தோஷ தரங்கங்களில் திளைத்துப் பரவசப்படும் பக்தர்களுக்கு மறுபடியும் ஜனன மரணவடிவ ஸம்ஸாரபந்த முண்டாகுமென்று கூறின், ஜலத்தில் கற்பாறை மிதந்து சுழல்வது ஆச்சரியமாகாது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

कुण्डलि कुमारि कुटिले चण्डि चराचरसवित्रि चामुण्डे ।
गुणिनि गुहारिणि गुह्ये गुरुमूर्ते त्वां नमामि कामाक्षि ॥ ४६॥

46. காமாக்ஷியே! குண்டலங்களை யணிந்துள்ள (அமிருத கும்பத்தைக் கையில் கொண்ட) பாலா பரமேஸ்வரியாயும், குடிலையென்னும் குண்டலினீ ஸ்வரூபமாயும், மஹாகாளி மஹாலக்ஷ்மி மஹாஸரஸ்வதிகளின் ஸமஷ்டி வடிவமான ஸ்ரீசண்டிகாபரமேஸ்வரி ஸ்வரூபமாயும், சராசர வடிவமான ஸர்வப் பிரபஞ்ச ஸிருஷ்டிக்குக் காரணமான ஆத்யா சக்தி ஸ்வரூபமாயும், சாமுண்டேஸ்வரியாகவும், திரிகுணங்களின் ஸாம்ய வடிவ மாயா ஸ்வரூபமாயும் அஞ்ஞானத்தைப் போக்குகின்ற ஏகாந்த குருமூர்த்தியாயும், (गुहा-आरिणि) ஹிருதயகுஹாகமன சீலையாயும் விளங்கும் உன்னை வணங்குகின்றேன்.

अभिदाकृतिर्भिदाकृति-रचिदाकृतिरपि चिदाकृतिर्मातः ।
अनहंता त्वमहंता भ्रमयसि कामाक्षि शाश्वती विश्वम् ॥ ४७ ॥

47. ஜகன்மாதாவான ஓ காமாக்ஷி தேவியே! அழிவற்ற நிர்விகார ஸ்வரூபிணியாய் விளங்கும் நீ பேதமற்ற அகண்ட வடிவமாகவும், நானாரூப பேத வடிவமாகவும், சித்ரூபிணியாகவும், ஜடவடிவமாகவும், அபரிச்சின்ன பராஹந்தா ஸ்வரூபிணியாகவும், அஹங்கார வடிவினளாகவும் விளங்கி உலகத்தை மயக்குகின்றனை.

शिव शिव पश्यन्ति समं श्रीकामाक्षीकटाक्षिताः पुरुषाः ।
विपिनं भवनममित्रं मित्रं लोष्टं च युवतिबिम्बोष्ठम् ॥ ४८ ॥

48. ஸ்ரீ காமாக்ஷி தேவியின் கடாக்ஷத்தினால் அநுக்கிரஹிக்கப்பட்ட மஹாபுருஷர்கள் காட்டையும் அரண்மனையையும், சத்துருவையும் ஸ்நேஹிதனையும், ஓட்டின் சல்லிகளையும் நல்ல யுவதிகளின் கோவைக்கனி போன்ற உதடுகளையும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸமமாகப் பார்க்கின்றூர்கள். சிவ! சிவ!! என்ன ஆச்சரியம்! என்ன ஆச்சரியம்!!

कामपरिपन्थिकामिनि कामेश्वरि कामपीठमध्यगते ।
कामदुघा भव कमले कामकले कामकोटि कामाक्षि ॥ ४९ ॥

49. மன்மதனுக்கு விரோதியான பரமசிவத்தின் சக்தி யாயுள்ள ஸ்ரீ காமேஶ்வரியாயும், ஸ்ரீ காமகோடி பீடத்தின் மத்தியில் விளங்குபவளாயும், ஸஹஸ்ர தள கமலத்தில் விளங்கும் பராசக்தியாயும், காமகலா ஸ்வரூபிணியாயும், ஸகல காமனைகளின் எல்லையாயும் விளங்குகின்ற ஓ காமாக்ஷியே! என் ஸர்வாபீஷ்டங்களையும் நிறைவேற்றுகின்ற காமதேனுவாகப் பவிப்பாயாக.

मध्येहृदयं मध्येनिटिलं मध्येशिरोऽपि वास्तव्याम् ।
चण्डकरशक्रकार्मुकचन्द्रसमाभां नमामि कामाक्षीम् ॥ ५० ॥

50. மத்தியானத்திய தீவ்ர கிரண ஸூர்யகாந்தியை யுடையவளாய் ஹ்ருதய மத்தியத்திலும், இந்திர தனுஸ் ஸென்று கூறப்படும் வானவில்லைப் போன்ற நிறங்களை யுடையவளாய் நெற்றியின் நடுவிலும், சந்திரனுக்கு ஸமானமான நிறமுள்ளவளாய் சிரோமத்திய பாகத்திலும் வஸிக்கின்ற ஸ்ரீ காமாக்ஷியை நமஸ்கரிக்கின்றேன்.

अधिकाञ्चि केलिलोलै-रखिलागमयन्त्रमन्त्रतन्त्रमयैः ।
अतिशीतं मम मानस-मसमशरद्रोहिजीवनोपायैः ॥ ५१ ॥

51. ஸகல ஆகமங்களின் லக்ஷ்யார்த்த ஸ்வரூபமாயும், ஸப்தகோடி மஹாமந்த்ரங்களுடையவும் ஸகலவித யந்த்ரங் களினுடையவும் ஸர்வ தந்த்ரங்களினுடையவும் ஸ்வரூப மாயும், அதிஷ்டானமாயும், புஷ்ப பாணங்களையுடைய மன் மதனுக்கு விரோதியான பரமசிவனது ஜீவனோபாயமாயும் விளங்குபவளும், ஸ்ரீ காஞ்சீ க்ஷேத்திரத்தில் திருவிளையாடல்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

புரிவதில் மிகக் களிப்புள்ளவளுமாகிய பரதேவதையால் அடியேனது உள்ளம் குளிர்ந்து சாந்தியடைகின்றது.

नन्दति मम हृदि काचन मन्दिरयन्ती निरन्तरं काञ्चीम् ।
इन्दुरविमण्डलकुचा बिन्दुवियन्नादपरिणता तरुणी ॥ ५२ ॥

52. எப்பொழுதும் காஞ்சீ க்ஷேத்திரத்தையே வாஸஸ்தானமாகக் கொண்டவளும், சந்திர ஸூர்ய மண்டலங்களையே ஸ்தனங்களாகவுடையவளும், பிந்து, ஆகாச, நாதங்களாகப் பரிணமித்த யுவதியானவளுமாகிய பரதேவதை என் ஹ்ருதயத்தில் ஆனந்தித்திருக்கிறாள்.

शम्पालतासवर्णं संपादयितुं भवज्वरचिकित्साम् ।
लिम्पामि मनसि किंचन कम्पातटरोहि सिद्धभैषज्यम् ॥ ५३ ॥

53. மின்னற்கொடி போன்ற நிறமுள்ளதும், கம்பாநதிக்கரையில் முளைத்ததுமான ஓராணொரு ஸித்தௌஷதமான மூலிகையை, என் பிறவியாகும் பெருநோயைத் தீர்த்துக்கொள்ள என் மனத்தில் சிந்திக்கின்றேன்.

अनुमितकुचकाठिन्या-मधिवक्षःपीठमङ्गजन्मरिपोः ।
आनन्ददां भजे ता-मानङ्गब्रह्मतत्त्वबोधसिराम् ॥ ५४ ॥

54. மனஸிஜனை மன்மதனுக்கு விரோதியாகும் பரமசிவனுடைய மார்பாகும் பீடத்தின்கண் ஊஹித்துணரக் கூடிய ஸ்தனங்களின் காடின்யத்தையுடையதும், ஆனந்தத்தைத்தரு

---

* பிந்து என்பது அபரா என்னும் அசித்பிந்து. இது அவ்யக்தம், மஹத் தத்துவம், அஹங்காரம் இவைகளின் ஸமஷ்டி வடிவமானது. இதனின்று ஆகாசம் முதலிய பஞ்சபூத பீஜங்களும் அவற்றினின்று நாதமென்னும் சப்தகுணத்தோடு கூடிய ஆகாசமும், உபலக்ஷணமாய் வாயுவாதி பூதங்களும் உண்டாயின. ஸர்வப் பிரபஞ்ச காரணத்துவம் கூறப்பட்டமையின், பரதேவதையை யுவதியாகக் கூறப்பட்டுள்ளது அறியத் தக்கது.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

வதும் சிருங்காரப் பிரஹ்ம தத்துவ போத ப்ரவாஹ நாடியுமான அந்த வித்தியா ஸ்வரூபத்தை யான் பஜிக்கின்றேன்.

ऐक्षिषि पाशाङ्कुशधर-हस्तान्तं विस्मयार्हवृत्तान्तम् ।
अधिकाञ्चि निगमवाचां सिद्धान्तं शूलपाणिशुद्धान्तम् ॥५५॥

55. பாசத்தையும் அங்குசத்தையும் தரித்துள்ள கைகளையுடையவளும், ஆச்சரியப்படத்தக்க (மஹிமையோடு கூடிய) சரித்திரத்தை யுடையவளும், வேதங்களின் சிறந்த வாக்கியங்களாகிய மஹா வாக்கியங்களின் பரம ஸித்தாந்த ஸ்வரூபமாய் விளங்குபவளும், சூலபாணியான பரமேஸ்வரனது அந்தப்புரமுமான பரதேவதையைக் காஞ்சிபுரத்தில் கண்டேன்.

आहितविलासभङ्गी-माब्रह्मस्तम्बशिल्पकल्पनया ।
आश्रितकाञ्चीमतुला-माद्यां विस्फूर्तिमाद्रिये विद्याम् ॥ ५६ ॥

56. சதுர்முகப் பிரம்மா முதல் தம்பமென்னும் சிறு புழுவீறாகவுள்ள ஸகல பிராணிகளையும் சிருஷ்டிக்குங் காரணத்தினால் அழகிய திருவிளையாடல் புரிவதும், காஞ்சி புரத்தையடைந்தொளிர்வதும், ஒப்பற்றதும், சிருங்காரமுமான, (ரஸப்பூர்த்தியுமான) ஆதி ஒளியை ஆதரிக்கின்றேன்.

मूकोऽपि जटिलदुर्गति-शोकोऽपि स्मरति यः क्षणं भवतीम् ।
एको भवति स जन्तु-र्लोकोत्तरकीर्तिरेव कामाक्षि ॥ ५७ ॥

57. ஹே காமாக்ஷியே! எந்த பிராணி ஒரு க்ஷணம் உம்மை நினைக்கின்றதோ, அந்தப் பிராணியானது ஊமையாயிருப்பினும், அடர்ந்த அஞ்ஞானத்தினால் ஏற்பட்ட துர்க்கதியினால் சோகமுற்றதா யிருப்பினும், உலகத்தில் சிறந்த கீர்த்தியுள்ளதாயும் ஒப்பற்றதாயும் ஆகின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

पञ्चदशवर्णरूपं कंचन काञ्चीविहारधौरेयम् ।
पञ्चशरीयं शंभो-र्वञ्चनवैदग्ध्यमूलमवलम्बे ॥ ५८ ॥

58. மன்மத ஸம்பந்தமான ஸ்ரீ பஞ்சதசாக்ஷரீ (காதி) மஹாவித்தையையே தனக்குச் சரீரமாயுடையதும், காஞ்சீபுரத்தில் விஹரிக்கும் தேவதைகளிற் சிறந்ததும், பரமேஶ்வரனை மயக்கும் ஸாமர்த்தியத்திற்கு மூலமுமான ஒரு பரம்பொருளை ஆஶ்ரயிக்கின்றேன்.

परिणतिमतीं चतुर्धा पदवीं सुधियां समेत्य सौषुम्नीम् ।
पञ्चाशदर्णकल्पित-पदशिल्पां त्वां नमामि कामाक्षि ॥ ५९ ॥

59. ஹே காமாக்ஷியே! தியானவான்களின் ஸௌஷும்ன நாடியை யடைந்து, பரா, பஶ்யந்தீ, மத்தியமை, வைகரீ என்னும் நான்குவிதமான வாக் பேதங்களைப் பெற்றவளும், ஐம்பது எழுத்துக்களால் ஏற்பட்ட பத ரூபிணியுமான உம்மை வணங்குகின்றேன்.

आदिक्षन्मम गुरुरा-डादिक्षान्ताक्षरात्मिकां विद्याम् ।
स्वादिष्ठचापदण्डां नेदिष्ठामेव कामपीठगताम् ॥ ६० ॥

60. அகாரம் முதல் க்ஷகாரம் வரையிலுள்ள ஐம்பத்தொன்று அக்ஷரங்களின் வடிவமாயுள்ளவளும், அதிமதுரமான சுவையோடு கூடிய (கரும்பு) வில்லையுடையவளும், காமகோடி பீடத்தில் விளங்குபவளுமான ஸ்ரீவித்யா ஸ்வரூபிணியை, எனது (பரகுருவான) குருராஜர் அத்தியந்த ஸமீபத்தில் உள்ளதாகக் காட்டியுள்ளார்.

तुष्यामि हर्षितस्मर-शासनया काञ्चिपुरकृतासनया ।
स्वासनया सकलजग-द्भासनया कलितशम्बरासनया ॥ ६१ ॥

61. மதனனை சாஸித்த பரமேஶ்வரனைச் சந்தோஷிக்கச் செய்வதும், காஞ்சீபுரத்தையே தனக்கு வாஸஸ்தானமாகக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொண்டதும், தன்னிடத்தில் நிலைத்திருப்பதும், தனது வியாபகத்தால் ஸகல ஜகத்தையும் பிரகாசிக்கச் செய்வதும், மன்மதனை உஜ்ஜீவிக்கச் செய்ததுமான ஒரு பொருளால் யான் ஆனந்தமடைகின்றேன்.

प्रेमवती कम्पायां स्थेमवती यतिमनस्सु भूमवती ।
सामवती नित्यगिरा सोमवती शिरसि भाति हैमवती ॥ ६२ ॥

62. பர்வதகுமாரியான ஹைமவதியானவள், கம்பா நதியிடத்தில் மிக்க ஆர்வமுள்ளவளாயும், ஆத்மஞானத்தையடைய முயலும் யதிகளின் தூய மனங்களில் இருப்புடையவளாயும், அண்ட பிண்ட சராசரங்களில் வியாபகமாய் விளங்குபவளாயும், அழிவற்ற நித்திய வாக்குகள் என்னும் வேதங்களால் புகழப்பட்டவளாயும், சந்திரகலையைச் சிரஸில் அணிந்தவளாயும் விளங்குகின்றனள்.

कौतुकिना कम्पायां कौसुमचापेन कीलितेनान्तः ।
कुलदैवतेन महता कुड्मलमुद्रां धुनोतु नःप्रतिभा ॥ ६३ ॥

63. கம்பாநதியின்மேல் பிரேமையுள்ளதும், புஷ்ப பாணங்களையுடைய வில்லைத் தரித்துள்ளதும், எனது உள்ளத்தில் அதிஷ்டான கூடஸ்த ரூபமாயுள்ளதுமான ஒரு பெரிய குலதேவதையால் நம்முடைய ஞானமானது அரும்பின் நிலைமைமாறி மலர்ந்து புஷ்பத்தின் நிலைமையை அடையட்டும்.

यूना केनापि मिल-द्देहा स्वाहासहायतिलकेन ।
सहकारमूलदेशे संविद्रूपा कुटुम्बिनी रमते ॥ ६४ ॥

64. ஞானஸ்வரூபிணியாயுள்ள ஒரு குடும்பினியானவள் ஸ்வாஹா தேவியின் பதியான அக்கினி பகவானைத் தனது லலாடத்தில் திலகமாயணிந்துள்ள ஒராளொரு யௌவன புருஷனோடு (பரசிவத்தோடு) கலந்த சரீரமுள்ளவளாக ஒட்டுமா மரத்தடியில் ஸுகித்துக்கொண்டிருக்கின்றனள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

कुसुमशरगर्वसंप-त्कोशगृहं भाति काञ्चिदेशगतम् ।
स्थापितमस्मिन्कथमपि गोपितमन्तर्मया मनोरत्नम् ॥ ६५ ॥

65. புஷ்பபாணனுன மன்மதனது கர்வ ஸம்பத்திற்குப் பொக்கிஷமாயுள்ளது காஞ்சீபுரப் பிரதேசத்தில் விளங்கிக் கொண்டிருக்கின்றது. அந்தப் பொக்கிஷத்திற்குள் என் மனம் என்னும் ரத்தினமானது எப்படியோ வைக்கப்பட்டு பத்திரப்படுத்தப்பட்டிருக்கின்றது.

दग्धषडध्वारण्यं दरदलितकुसुम्भसंभृतारुण्यम् ।
कलये नवतारुण्यं कम्पातटसीम्नि किमपि कारुण्यम् ॥ ६६ ॥

66. வர்ணம், மந்த்ரம், பதம், கலை, தத்துவம், புவனம் என்னும் ஷட் அத்வாக்களுக்கு அதீதமாய் விளங்குவதும், சற்று மலர்ந்த குஸும்ப புஷ்பத்தைப் போன்ற செம்மை நிறமுடையதும், நூதன யௌவனத்தோடு கூடினதும், கம்பா நதிக் கரையில் விளங்கிக்கொண்டிருப்பதுமான ஓராளெரு கருணாமூர்த்தியை யான் தியானிக்கிறேன்.

अधिकाञ्चि वर्धमाना-मतुलां करवाणि पारणामक्ष्णोः ।
आनन्दपाकभेदा-मरुणिमपरिणामगर्वपल्लविताम् ॥ ६७ ॥

67. பிரியம், மோதம், பிரமோதம் என்பவைகளின் பரிபாகமான விஷயானந்தத்தைக் காட்டிலும் பின்னமானதும், (ஆத்மகோசர வ்ருத்தி ஸ்வரூப விமர்சமென்னும்) செம்மை நிறத்தின் பரிபக்குவ நிலைமையால் ஏற்பட்ட இறுமாப்பினுல் தளிர்த்ததும், காஞ்சிமா நகரத்தில் ஓங்கி வளர்ந்து கொண்டிருப்பதுமான ஓராளெரு ஒப்பற்ற பொருளை எனது கண்களுக்குச் சிறந்த உணவாக்கிக் கொள்ள (பிரத்தியக்ஷமாக்கிக் கொள்ள) வேண்டுகிறேன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

बाणसृणिपाशकार्मुक-पाणिममुं कमपि कामपीठगतम् ।
एणधरकोणचूडं शोणिमपरिपाकभेदमाकलये ॥ ६८ ॥

68. (புஷ்ப) பாணம், அங்குசம், பாசம், வில் என்னும் இவற்றைக் கைகளில் தரித்ததும், சந்திரகலையைச் சிரஸில் அணிந்ததும், ஸ்ரீ காமகோடி பீடத்தின்கண் அமர்ந்துள்ளதுமான ஓராளொரு செந்நிற பரிணும பேதத்தைத் தியானிக்கின்றேன்.

ஶோணிம பரிபாகபேதம்-விமர்சத்தின் சரமவ்ருத்திக்கு விஷயமான ஒரு பொருள், அதாவது, ஆத்மாபின்ன பிரஹ்ம ஸ்வரூபம்.

किं वा फलति ममान्यै-र्बिम्बाधरचुम्बिमन्दहासमुखी ।
संबाधकरी तमसा-मम्बा जागर्ति मनसि कामाक्षी ॥ ६९ ॥

69. கோவைக் கனிபோன்று சிவந்த நிறமுடைய உதடுகளில் பரவும் புன்சிரிப்போடு கூடிய முகத்தினையுடைய ஸ்ரீ காமாக்ஷியம்பாள் என் மனத்திலுள்ள அக்ஞானாந்தகாரத்தை யழிப்பவளாக விளங்கிக்கொண்டிருக்கும் பொழுது, அன்னியர்களால் எனக்கு ஆகவேண்டிய காரியமென்ன இருக்கின்றது? (ஒன்றுமில்லை யென்பது கருத்து.)

मञ्चे सदाशिवमये परशिवमयललितपौष्पपर्यङ्के ।
अधिचक्रमध्यमास्ते कामाक्षी नाम किमपि मम भाग्यम् ॥७०॥

70. ஸதாசிவ ஸ்வரூபமாகும் மஞ்சத்தின்மேல் பரசிவ ஸ்வரூப புஷ்ப பர்யங்கத்தில் (படுக்கையில்) ஸ்ரீசக்கிரத்தின் மத்தியாகும் பிந்துஸ்தானத்தில் காமாக்ஷியென்னும் திருநாமமுடைய எனது ஓராளொரு அத்விதீய பாக்கியமானது வீற்றிருக்கின்றது.

रक्ष्योऽस्मि कामपीठी-लासिकया घनकृपाम्बुराशिकया ।
श्रुतियुवतिकुन्तलीमणि-मालिकया तुहिनशैलबालिकया ॥ ७१ ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

71. காமபீட மென்னும் நாடகசாலையில் நர்த்தனம் செய்பவளும், நிறைந்த கருணைசமுத்திரமாய் விளங்குபவளும், வேதயுவதியின் கூந்தலுக்கு அலங்காரமாய் விளங்கும் மணி மாலையாயுள்ளவளும், (அதாவது, வேதாந்தத்தின் பரமதாத் பரியமாய் விளங்குபவளும்) ஆன ஹியவானது புத்திரியால் யான் ரக்ஷிக்கத் தக்கவனாய் இருக்கின்றேன்.

लीये पुरहरजाये माये तव तरुणपल्लवच्छाये ।
चरणे चन्द्राभरणे काञ्चीशरणे नतार्तिसंहरणे ॥ ७२ ॥

72. காஞ்சியில் விளங்குபவளும், சந்திரனை ஆபரண மாய் அணிந்துள்ளவளும், முப்புரங்களை யெரித்த பரமசிவ னது பத்தினியாய் விளங்குபவளும், மாயா ஸ்வரூபிணியு மான பரதேவதையே! வணங்கினவரின் கஷ்டங்களைப் போக்குகின்றதும், இளந்தளிரைப் போன்ற நிறமும் எழிலு முடையதுமான உமது சரணத்தில் ஐக்கியமடைகின்றேன்.

मूर्तिमति मुक्तिबीजे मूर्ध्नि स्तबकितचकोरसाम्राज्ये ।
मोदितकम्पाकूले मुहुर्मुहुर्मनसि मुमुदिषास्माकम् ॥ ७३ ॥

73. கம்பாதீரத்திலுள்ளவர்களைக் களிப்பிக்கின்றதும், சகோரபக்ஷிகளின் ஸாம்ராஜ்யமாகும் சந்திரனைச் சிரஸில் அணிந்துள்ள உருவத்தை வஹித்துள்ள மோக்ஷஸ்வரூபத் தின் பரமகாரணமுமான வித்தியாஸ்வரூபத்தில் அடிக்கடி மனதைக் செலுத்தி ஆனந்தமடைய நமக்கு விருப்பம்.

वेदमयीं नादमयीं बिन्दुमयीं परपदोद्यदिन्दुमयीम् ।
मन्त्रमयीं तन्त्रमयीं प्रकृतिमयीं नौमि विश्वविकृतिमयीम् ॥ ७४ ॥

74. வேதமயமாயும், நாதமயமாயும், பிந்துமயமாயும், பரபதமென்னும் ஜ்யோத்ஸ்ன லோகத்தில் விளங்கும் சித் சந்த்ர மயமாயும், ஸர்வமந்த்ர ஸ்வரூபிணியாயும், ஸர்வ தந்த்ர ஸ்வரூபிணியாயும், ப்ரக்ருதி மயமாயும், பிரபஞ்ச

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மென்னும் கார்யரூப விக்ருதிமயமாயும் விளங்கும் பர தேவதையைத் துதிக்கின்றேன்.

पुरमथनपुण्यकोटी पुञ्जितकविलोकसूक्तिरसधाटी ।
मनसि मम कामकोटी विहरतु करुणाविपाकपरिपाटी ॥ ७५ ॥

75. புராரியாகும் பரமேச்வரனது புண்ணியத்தின் எல்லையாயும், சிறந்த மஹாகவிகளுடைய வாக்குகளின் ரஸப் பெருக்காகும் முதிர்ந்த கருணையுமான காமகோடியானவள் எனது அந்தக்கரணத்தில் திருவிளையாடல் புரியட்டும்.

कुटिलं चटुलं पृथुलं मृदुलं कचनयनजघनचरणेषु ।
अवलोकितमवलम्बित-मधिकम्पातटमसेयमस्माभिः ॥ ७६ ॥

76. கூந்தலில் சுருண்டதும், கண்களில் மிளிர்ந்ததும், ஜகனத்தில் பெருத்ததும், சரணங்களில் மிருதுத்தன்மையுடையதும், பிரமாணங்கட்கு அதீதமானதும் ஆன ஒரு பொருள் கம்பாநதீ தீரத்தில் நம்மால் காணப்பெற்று அடைக்கலமாகக் கைப்பற்றப் பெற்றது.

प्रत्युङ्मुख्या दृष्ट्या प्रसाददीपाङ्कुरेण कामाक्ष्याः ।
पश्यामि निस्तुलमहो पचेलिमं कमपि परशिवोल्लासम् ॥ ७७ ॥

77. ஸ்ரீ காமாக்ஷி தேவியின் அநுக்கிரஹமென்னும் தீபப் பிரகாசத்தினால் ஏற்பட்ட அந்தர்முக ஆத்மகோசர வ்ருத்தியைக் கொண்டு நான், இணையற்றதாயும், நன்றாய்ப் பழுத்ததாயுமுள்ள ஓரானொரு பர சிவோல்லாஸ வடிவத்தை (மோக்ஷானந்தத்தை)ப் பார்க்கின்றேன்.

विद्ये विधातृविषये कात्यायनि कालि कामकोटिकले ।
भारति भैरवि भद्रे शाकिनि शांभवि शिवे स्तुवे भवतीम् ॥ ७८ ॥

78. சதுர்முகப் பிரஹ்மாவின் சிருஷ்டிக்கு அதீதமான வித்தியா ஸ்வரூபிணியே, காத்தியாயனியே, மஹாகாளியே,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காமகோடி பீடத்தில் விளங்கும் காமகலா ஸ்வரூபிணியே, பாரதி, பைரவி, பத்திரை, சாம்பவி ஆகிய வடிவங்களாக விளங்கும் சிவையே, உன்னைத் துதிக்கின்றேன்.

मालिनि महेशचालिनि काञ्चीखेलिनि विपक्षकालिनि ते ।
शूलिनि विद्रुमशालिनि सुरजनपालिनि कपालिनि नमोऽस्तु ॥

79. அகாராதி க்ஷகாராந்த வர்ணமாலா ஸ்வரூபிணியாயும், பரமேஸ்வரனையும் சலிக்கச் செய்பவளாயும், காஞ்சியில் விளையாடுபவளாயும், சத்துருக்களுக்கு மிருத்யுவாய் விளங்குபவளாயும், சூலினீ ஸ்வரூபிணியாயும், பவழம் போன்ற மேனியையுடையவளாயும், தேவர்களைக் காப்பவளாயும், கபாலினியாயும் விளங்கும் உமக்கு நமஸ்காரம்.

देशिक इति किं शंके तत्तादृक्तव नु तरुणिमोन्मेषः ।
कामाक्षि शूलपाणेः कामागमसमययज्ञदीक्षायाम् ॥ ८० ॥

80. ஹே காமாக்ஷியே! வர்ணனுதீதமான உமது யௌவன விகாஸமானது மதனுகமத்தில் பிரதிபாதிக்கப்பட்டுள்ள (காம) யாக தீக்ஷையில் சூலபாணிக்கு ஆசாரியனுக இருக்கின்றதோ என்று எண்ணுகிறேன்.

वेतण्डकुम्भडम्बर-वैतण्डिककुचभरार्तमध्याय ।
कुङ्कुमरुचे नमस्यां शंकरनयनामृताय रचयामः ॥ ८१ ॥

81. யானையின் மஸ்தகத்தைத் தோற்கச் செய்யும்படியான ஸ்தனங்களின் பாரத்தால் வருந்தும் நுண்ணிய இடையையுடையதும், குங்குமம் போன்ற சிவந்த மேனியையுடையதும், சங்கரரது நேத்திரங்களுக்கு ஆனந்தத்தை விளைவிக்கும் அம்ருதம் போன்றதுமான ஒரு பொருளின் பொருட்டு நமஸ்காரம் செய்கின்றோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

अधिकाञ्चितमणिकाञ्चन-काञ्चीमधिकाञ्चि कांचिदद्राक्षम् ।
अवनतजनानुकम्पा-मनुकम्पाकूलमस्मदनुकूलाम् ॥ ८२ ॥

82. அநேக ரத்தினங்கள் இழைக்கப் பெற்ற தங்க ஒட்டியாணத்தைத் தரித்துள்ளதும், வணங்கும் ஜனங்களிடம் தயைகொண்டதும், அடியோங்களுக்கு அநுகூலமான ஆத்ம ஸ்வரூபமாயுள்ளதுமான பரம்பொருளைக் காஞ்சீபுரத்தில் கம்பாநதீ தீரத்தில் கண்டுகொண்டேன்.

परिचितकम्पातीरं पर्वतराजन्यसुकृतसंनाहम् ।
परगुरुकृपया वीक्षे परमशिवोत्सङ्गमङ्गलाभरणम् ॥ ८३ ॥

83. கம்பாநதீ தீரத்தில் மிக்க பரிசயமுடையதும், பர்வத ராஜனுடைய நல்வினைப் பயனுயுள்ளதும், பரமசிவனுடைய மடிக்கு (அழகைச் செய்யும்) ஓர் மங்களாபரணம் போன்றதுமான ஒரு வஸ்துவை எனது குருநாதரது கருணையால் காணப்பெற்றேன்.

दग्धमदनस्य शंभोः प्रथीयसीं ब्रह्मचर्यवैदग्धीम् ।
तव देवि तरुणिमश्री-चतुरिमपाको न चक्षमे मातः ॥ ८४ ॥

84. ஸ்வயம்பிரகாசமாய் விளங்கும் ஓ தாயே! மன்மதனைச் சாம்பராக்கிய பரமேச்வரரது மிகப் பெரிய பிரஹ்மசரிய விரதாநுஷ்டானத் திறமையை உமது யௌவன ஸ்ரீயின் முதிர்ந்த சாதுர்யமானது பொறுக்கவில்லை. (அவ்விரதத்தைப் பங்கஞ்செய்தது என்பது தாத்பரியமாம்.)

मदजलतमालपत्रा वसनितपत्रा कराहतखनित्रा ।
विहरति पुलिन्दयोषा गुञ्जाभूषा फणीन्द्रकृतवेषा ॥ ८५ ॥

85. (யானையின் மஸ்தகத்தினின்று பெருகும்) மத ஜலத்தினல் சித்திரிக்கப்பட்ட திலகாதிகளை அலங்காரமாகக் கொண்டவளும், இலைச் சருகையே வஸ்திரமாக அணிந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வளும், கையில் மண்வெட்டியை யுடையவளும், குந்துமணி மாலையை யாபரணமாய் அணிந்தவளும், நாகாபரணம் பூண்டவளுமான ஒரு வேட ஸ்திரீயானவள் லீலை செய்துகொண்டிருக்கின்றனள்.

अङ्के शुकिनी गीते कौतुकिनी परिसरे च गायकिनी ।
जयसि सविधेऽम्ब भैरव-मण्डलिनी श्रवसि शङ्खकुण्डलिनी ॥८६॥

86. ஓ தாயே! மடியில் கிளியையுடையவளாயும், பாட்டில் உத்ஸாஹமுடையவளாயும், ஸமீபத்தில் பாடகர்களை யுடையவளாயும், சுற்றிலும் பைரவ கணங்கள் சூழ்ந்துள்ளவளாயும், காதுகளில் சங்ககுண்டலங்களை யணிந்தவளாயும் இருந்து ஸர்வோத்கிருஷ்டமாய் விளங்குகின்றனை.

प्रणतजनतापवर्गा कृतबहुसर्गा ससिंहसंसर्गा ।
कामाक्षि मुदितभर्गा हतरिपुवर्गा त्वमेव सा दुर्गा ॥ ८७ ॥

87. ஹே காமாக்ஷியே! உன்னை வணங்கும் உபாஸகர்களுக்கு மோக்ஷஸ்வரூபிணியாயும், நானாவிதமான ஸ்ருஷ்டியைச் செய்பவளாயும், ஸிம்ஹ வாஹனத்தை யுடையவளாயும், பிரகாச வடிவ சிவத்தைச் சந்தோஷப்படுத்துபவளாயும், சத்துருக் கூட்டங்களை நாசப்படுத்துபவளாயுமுள்ள அந்த துர்க்கை நீயாகவே இருக்கின்றனை.

श्रवणचलद्वेतण्डा समरोद्दण्डा धुतासुरशिखण्डा ।
देवि कलितान्त्रषण्डा धृतनरमुण्डा त्वमेव चामुण्डा ॥ ८८ ॥

88. ஓ காமாக்ஷி தேவியே! காதில் அசைந்தொளிரும் தந்த குண்டலமணிந்தவளும், யுத்தரங்கத்தில் உத்தண்டமாய் விளங்குபவளும், அஸுரர்களின் சிரங்களைத் துணித்தவளும், நரம்புமாலை யணிந்தவளும், மனிதனுடைய சிரஸைக் கையில் தரித்தவளுமான சாமுண்டா தேவியும் நீயாகவே இருக்கின்றனை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

उर्वीधरेन्द्रकन्ये दर्वीभरितेन भक्तपूरेण ।
गुर्वीमकिंचनार्तिं खर्वीकुरुषे त्वमेव कामाक्षि ॥ ८९ ॥

89. பர்வதி ராஜகுமாரியாய் அவதரித்த ஓ காமாக்ஷியே! கரண்டியில் நிறைத்துக்கொண்ட அன்னரஸத்தினால் தரித்திரர்கள் அநுபவிக்கும் மஹத்தான கஷ்டத்தையும் வெகு விரைவில் போக்கியருளும் அன்னபூரணியாகவும் நீயே விளங்குகின்றனை.

ताडितरिपुपरिपीडन-भयहरणनिपुणहलमुसला ।
क्रोडपतिभीषणमुखी क्रीडसि जगति त्वमेव कामाक्षि ॥ ९० ॥

90. ஓ காமாக்ஷியே! (ஆயுதங்களால்) அடிக்கப்பட்டவர்களான சத்துருக்களின் பீடையாகும் பயத்தைப் போக்குவதில் ஸாமர்த்தியமுள்ள கலப்பை, உலக்கை இவைகளை ஆயுதங்களாயுடையவளாயும், வராஹபதிபோன்ற பயங்கரமான முகத்தை யுடையவளாயுமுள்ள மஹா வராஹியாகவும் உலகில் நீயே விளங்கித் திருவிளையாடல் புரிகின்றனை.

स्मरमथनवरणलोला मन्मथहेलाविलासमणिशाला ।
कनकरुचिचौर्यशीला त्वमम्ब बाला कराब्जधृतमाला ॥ ९१ ॥

91. ஓ அம்மையே! மன்மதனை யெரித்த மஹாதேவனை மணக்க விருப்பமுள்ளவளாயும், மாரனது லீலாவிலாஸங்கட்கோர் இரத்தினசாலையாயும், பத்தரைமாற்றுத் தங்கத்தையும் தோற்கச்செய்யும் அவ்வளவு பிரகாசமுள்ள தேககாந்தியை யுடையவளாயும், தாமரை மலர்போன்ற திருக்கரங்களில் புஷ்பமாலையை வைத்துக்கொண்டிருப்பவளாயுமுள்ள பாலாஸ்வரூப ஸ்வயம்வர கல்யாணியும் நீயே.

विमलपटी कमलकुटी पुस्तकरुद्राक्षशस्तहस्तपुटी ।
कामाक्षि पक्ष्मलाक्षी कलितविपञ्ची विभासि वैरिञ्ची ॥ ९२ ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

92. ஹே காமாக்ஷியே! தூய ஆடையணிந்தவளும், தாமரை மலரில் வீற்றிருப்பவளும், புஸ்தக ருத்திராக்ஷமாலை களால் அலங்கரிக்கப்பட்ட உள்ளங்கைகளையுடையவளும், அழகான இமைகளோடுகூடிய கண்களையுடையவளும், வீணையை மீட்டுகின்றவளுமான ஸரஸ்வதியாகவும் நீயே விளங்குகின்றனை.

कुङ्कुमरुचिपिङ्गमसृ-क्पङ्किलमुण्डालिमण्डितं मातः ।
जयति तव रूपधेयं जपपटपुस्तकवराभयकराब्जम् ॥ ९३ ॥

93. ஓ தாயே! குங்குமம்போற் சிவந்த திருமேனியுடைய தாயும், இரத்தம் சொட்டுகின்ற முண்டமாலையால் அலங்கரிக் கப்பட்டதாயும், ஜபமாலை, புஸ்தகம், வரதமுத்திரை, அபய முத்திரைகளைத் தரித்த கரகமலங்களை யுடையதாயுமுள்ள உமது திருவுருவம் ஸர்வோத்க்ருஷ்டமாய் விளங்குகின்றது.

कनकमणिकलितभूषां कालायसकलहशीलकान्तिकलाम् ।
कामाक्षि शीलये त्वां कपालशूलाभिरामकरकमलाम् ॥ ९४ ॥

94. ஓ காமாக்ஷி! தங்கத்தாலும் நவ ரத்னங்களாலும் ஆக்கப்பட்ட ஆபரணங்களை யணிந்தவளாயும், எஃகைப் பழிக்கும் தேஹகாந்தி யுடையவளாயும், கபாலம் சூலம் இவற்றைத் தாங்கி மனோஹரமாய் விளங்கும் மலர்க்கைகளை யுடையவளாயும் உம்மைத் தியானம் செய்கின்றேன்.

लोहितिमपुञ्जमध्ये मोहितभुवने मुदा निरीक्षन्ते ।
वदनं तव कुचयुगलं काञ्चीसीमां च केऽपि कामाक्षि ॥ ९५ ॥

95. உயர்ந்தோரையும் மோஹிக்கச் செய்யும் ஆற்ற லுள்ள ஹே காமாக்ஷியே! செந்நிறமுடைய அனுஹத சக்ரத் தின் மத்தியில் (மனதில்) உனது திருமுகத்தையும், இரண்டு ஸ்தனங்களையும், ஒட்டியாணம் தரிக்கும் கடிப்பிரதேசத்தை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யும் யாரோ சில மஹான்கள் சந்தோஷத்துடன் தரிசிக்கின்றனர்.

இதில் காமகலாத் தியானம் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது.

जलधिद्विगुणितहुतवह-दिशादिनेश्वरकलाश्विनेयदलैः ।
नलिनैर्महेशि गच्छसि सर्वोत्तरकरकमलदलममलम् ॥ ९६ ॥

96. குண்டலினீ சக்தியாகும் மஹேஶ்வரியே! நீ நான்கு, ஆறு, பத்து, பன்னிரண்டு, பதினாறு, இரண்டு என்னும் எண்ணிக்கையோடு கூடிய தளங்களையுடைய மூலாதாரம் முதல் ஆக்ஞை வரையுள்ள ஆறு ஆதார கமலங்களின் வழியாய் மேலுக்குச்சென்று எல்லாவற்றிற்கும் மேலுள்ள தூய குல ஸஹஸ்ர தள கமலத்தை யடைகின்றனை.

சிரஸிலுள்ள ஸஹஸ்ரதள கமலத்தை 'அகுல ஸஹஸ்ராரம்' என்றும் பெரியோர் கூறுவர்.

सत्कृतदेशिकचरणाः सबीजनिर्बीजयोगनिश्रेण्या ।
अपवर्गसौधवलभी-मारोहन्त्यम्ब केऽपि तव कृपया ॥ ९७ ॥

97. ஓ தாயே! குருவை ஆராதித்த சில பாக்கியவான்கள் உமது கடாக்ஷத்தால், ஸவிகல்பம் நிர்விகல்பமென்னும் பாகுபாடுகளையுடைய ஸமாதி என்னும் படிக்கட்டின் வழியாக முக்தியென்னும் மாளிகையின் மேல் உப்பரிகையில் ஏறிச் செல்கின்றனர்.

अन्तरपि बहिरपि त्वं जन्तुततेरन्तकान्तकृदहंते ।
चिन्तितसंतानवतां संततमपि तन्तनीषि महिमानम् ॥ ९८ ॥

98. காலகாலனாகிய மஹேஶ்வரனது பராஹந்தா ஸ்வரூபிணியே! ஜீவ ஸமூஹத்தின் உள்ளும் வெளியும் வியாபித்துள்ள நீ, இடைவிடாமல் அவிச்சின்னமாய்ச் சிந்திக்கும் மனனசீலர்களுக்கு, எப்பொழுதும் மிகச் சிறந்த மஹிமையாகும் ஆத்மஞானத்தை நன்றாய் ஸமர்ப்பித்துக்கொண்டிருக்கின்றனை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

कलमञ्जुलवागनुमित-गलपञ्जरगतशुकग्रहौत्कण्ठ्यात् ।
अम्ब रदनाम्बरं ते बिम्बफलं शम्बरारिणा न्यस्तम् ॥ ९९ ॥

99. ஓ தாயே! உம்முடைய உதடானது மிகவும் இனிமையான மொழிகளால் ஊகித்தறியப்பட்டதாய்கழுத்தாகிற கூட்டிலிருக்கும் கிளியைப் பிடிக்கவேண்டுமென்கிற ஆவலால் மன்மதனால் வைக்கப்பட்ட கோவைக் கனிபோல் இருக்கின்றது.

जय जय जगदम्ब शिवे जय जय कामाक्षि जय जयाद्रिसुते ।
जय जय महेशदयिते जय जय चिद्गगनकौमुदीधारे ॥ १०० ॥

100. உலகங்களைப் பெற்ற தாயாகிய மங்கள ஸ்வரூபிணியே! ஜய ஜய! ஸ்ரீ காமாக்ஷி தேவியே! ஜய ஜய! மலைமகளே! ஜய ஜய! மகேசுவரரின் காதலியே! ஜய ஜய! சித் என்னும் வானத்தில் விளங்கும் நிலாவின் பெருக்கே! ஜய ஜய! நீ ஸர்வோத்கிருஷ்டமாய் விளங்குவாயாக.

आर्याशतकं भक्त्या पठतामार्याकटाक्षेण ।
निस्सरति वदनकमला-द्वाणी पीयूषधोरणी दिव्या ॥ १०१ ॥

101. (ஆர்யா விருத்தத்தில் அமைந்து ஆர்யா தேவியாகும் பரதேவதையின் ஸ்துதியாகவுள்ள இந்த) ஆர்யா சதகத்தைப் பக்தியுடன் பாராயணஞ் செய்வோருடைய முகமாகிய தாமரையினின்று பொழியும் வாக்கு, (என்றும் பதினாறு வயது வாய்ந்தவளாக விளங்கும்) ஆர்யா தேவியின் கடைக்கண் பார்வையால், ஸதா அமிர்த வெள்ளமாக்ச் சிறந்து பெருகிக்கொண்டிருக்கும்.

आर्याशतकं संपूर्णम् ।

ஆர்யா சதகம் முற்றிற்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



ஸ்ரீ காஞ்சி ஏகாம்ரேச்வரர் கோவிலிலுள்ள 'ஏகாம்ரம்' (மாமரம்)



தஞ்சாவூர் பங்காரு காமாக்ஷி அம்மன் கோவில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி அம்மன் கோவிலிலுள்ள ஐந்துகோபுரங்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

॥ श्रीमूकपञ्चशती ॥

पादारविन्दशतकम् ।

பாதாரவிந்த சதகம்

महिम्नः पन्थानं मदनपरिपन्थिप्रणयिनि
प्रभुर्निर्णेतुं ते भवति यतमानोऽपि कतमः ।
तथापि श्रीकाञ्चीविहृतिरसिके कोपि मनसो
विपाकस्त्वत्पादस्तुतिविधिषु जल्पाकयति माम् ॥ १ ॥

1. மன்மதனை யெரித்த மஹாதேவன்மீது மையல் கொண்டு ஸ்ரீ காஞ்சிமா நகரத்தின்கண் திருவிளையாடல் புரிவதில் களிப்படையும் அன்னையே! உமது மஹிமையின் போக்கை நிர்ணயிப்பதற்கு எவ்வளவு முயற்சி செய்யினும் எவன்தான் சக்தியுள்ளவனாக ஆகின்றான்? ஆயினும் ஒருவிதமான என் மனபரிபாகமானது உமது பாதாரவிந்தங்களைத் துதிக்கும் முறைகளில் என்னை வாசலனாகச் செய்கின்றது.

गलग्राही पौरंदरपुरवनीपल्लवरुचां
धृतप्राथम्यानामरुणमहसामादिमगुरुः ।
समिन्धे बन्धूकस्तबकसहयुध्वा दिशि दिशि
प्रसर्पन्कामाक्ष्याश्चरणकिरणानामरुणिमा ॥ २ ॥

2. தேவேந்திர பட்டணத்தின் பூங்காவிலுள்ள விருக்ஷங்களின் தளிர்களின் காந்திகளைத் திரஸ்கரிப்பதாயும், முதன்மை வஹித்த, அதாவது, உதயகாலத்திய ஸூர்யனுடைய சிவந்த காந்திகளுக்கு ஆதிகுருவாயும், செம்பரத்தம் பூங்கொத்தோடு போட்டி போடுவதாயுமுள்ள காமாக்ஷியின் பாதகிரணங்களின் செம்மை நிறமானது எல்லாத் திசைகளிலும் வியாபித்துப் பிரகாசிக்கின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

मरालीनां यानाभ्यसनकलनामूलगुरवे
दरिद्राणां त्राणव्यतिकरसुरोद्यानतरवे ।
तमस्काण्डप्रौढिप्रकटनतिरस्कारपटवे
जनोऽयं कामाक्ष्याश्चरणनलिनाय स्पृहयते ॥ ३ ॥

3. அன்னப் பேடுகளின் நடைப்பழக்கத்திற்கு மூலகுருவாயும், தரித்திரர்களைக் காத்தருளுவதில் தேவலோகத்தின் உத்தியானத்திலுள்ள கற்பக விருக்ஷமாயும், அஞ்ஞானமென்னும் இருள் கூட்டத்தின் ஆடம்பரத் தோற்றத்தை முற்றும் ஒழிக்கும் வன்மையுள்ளதாயும் இருக்கிற காமாக்ஷியின் பாத கமலத்தை யடைய அடியேன் ஆவல் கொண்டிருக்கிறேன்.

वहन्ती सैन्दूरीं सरणिमवनम्रामरपुरी-
पुरंध्रीसीमन्ते कविकमलबालार्कसुषमा ।
त्रयीसीमन्तिन्याः स्तनतटनिचोलारुणपटी
विभान्ती कामाक्ष्याः पदनलिनकान्तिर्विजयते ॥ ४ ॥

4. (தேவியை) நமஸ்கரிக்கின்ற தேவ ஸ்திரீகளின் வகுடுகளில் ஒளிரும் குங்குமத்தின் இயல்பை யடைந்தும், கவிகளாகிய செந்தாமரைகளை மலரச் செய்யும் உதய ஸூர்யனின் காந்தியை யுடையதாயும், த்ரயீ என்னும் வேத மாதாவின் ஸ்தனபாரங்களுக்குக் கச்சாகவுள்ள சிவப்பு ரவிக்கையாகவும், ஸ்ரீ காமாக்ஷியின் திருவடித் தாமரைகளின் காந்தியானது மிகச் சிறந்து பிரகாசிக்கின்றது.

प्रणम्रीभूतस्य प्रणयकलहत्रस्तमनसः
स्मरारातेश्चूडावियति गृहमेधी हिमकरः ।
ययोः सांध्यां कान्तिं वहति सुषमाभिश्चरणयो-
स्तयोर्मे कामाक्ष्या हृदयमपतन्द्रं विहरताम् ॥ ५ ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

5. மன்மதனை வென்ற மஹாதேவரும் ப்ரணயகலஹத்தில் நடுங்கிய மனதோடு நமஸ்கரிக்க, அவரது திருமுடியாகிய வானத்தில் (லதாகிரஹத்தில்) நிலைபெற்று வாழும் சந்திரன் எந்த பாதங்களின் செவ்வொளிகளால் மாலைக் காலத்துச் செவ்வானத்தின் காந்தியைப் பெறுகின்றானோ, காமாக்ஷியின் அத்தகைய பாதங்களில் என் ஹ்ருதயமானது (ஈடுபட்டு) சோம்பலுறாமல் ஸதா விளையாடிக்கொண்டிருக்கட்டும்.

ययोः पीठायन्ते विबुधमुकुटीनां पटलिका
ययोः सौधायन्ते स्वयमुदयभाजो भणितयः ।
ययोर्दासायन्ते सरसिजभवाद्याश्चरणयो-
स्तयोर्मे कामाक्ष्या दिनमनु वरीवर्तु हृदयम् ॥ ६ ॥

6. தேவதைகள் அல்லது ஞானிகளினுடைய மகுடங்களின் வரிசைகள் எவைகளுக்கு ஆஸனங்களோ, தாமாகவே ஆவிர்பவித்த வேத வாக்குகள் எவைகள் உலாவுவதற்கான மாடமாளிகைகளோ, மலரோனாகும் நான்முகன் முதலானோர் எவைகளுக்குத் தாஸர்களோ, ஸ்ரீ காமாக்ஷியின் அந்தப் பாதங்களில் என் ஹ்ருதயம் எந்நாளும் நிலைபெற்று விளங்கட்டும்.

नयन्ती संकोचं सरसिजरुचं दिक्परिसरे
सृजन्ती लौहित्यं नखकिरणचन्द्रार्धखचिता ।
कवीन्द्राणां हृत्कैरवविकसनोद्योगजननी
स्फुरन्ती कामाक्ष्याश्चरणरुचिसंध्या विजयते ॥ ७ ॥

7. செந்தாமரையின் காந்தியை (தோற்கடித்து) மெலியச் செய்வதாயும், திக்குகளில் எல்லாம் செம்மை நிறத்தைத் தோற்றுவிப்பதாயும், நகங்களின் காந்தி யென்னப்படும் பிறைச் சந்திரனோடு கூடியதாயும், கவிச்சிரேஷ்டர்களின் ஹ்ருதயமென்னும் செவ்வல்லிப் பூக்களுக்கு மலர்ச்சியைத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தரும் முயற்சியை யுடையதாயுமுள்ள ஸ்ரீ காமாக்ஷியின் பாதங்களின் காந்தியாகும் அந்தி நேரமானது ஸர்வோத்கிருஷ்டமாய்ப் பிரகாசிக்கின்றது.

विरावैर्माञ्जीरैः किमपि कथयन्तीव मधुरं
पुरस्तादानम्रे पुरविजयिनि स्मेरवदने ।
वयस्येव प्रौढा शिथिलयति या प्रेमकलह-
प्ररोहं कामाक्ष्याश्चरणयुगली सा विजयते ॥ ८ ॥

8. (சிரிப்பால்) திரிபுரங்களையும் அழித்த பரமசிவன் தன் முன்னே புன்முறுவல் தவழும் திருமுகத்தோடு வணங்கி நிற்கும்போது, எந்தச் சரணயுகளமானது, திறமை வாய்ந்த தோழியைப் போல, சிலம்பின் ஒலிகள் என்னும் இனிய பேச்சால் எதையோ சொல்லுபவள்போல் விளங்கி, ப்ரணய கலஹத்தின் முளையைத் தகர்த்துவிடுகின்றதோ, ஸ்ரீகாமாக்ஷியின் அந்தச் சரணயுகளமானது ஸர்வோத்கிருஷ்டமாய் விளக்குகின்றது.

सुपर्वस्त्रीलोलालकपरिचितं षट्पदकुलैः
स्फुरल्लाक्षारागं तरुणतरणिज्योतिररुणैः ।
भृतं कान्त्यम्भोभिर्विसृमरमरन्दैः सरसिजै-
र्विधत्ते कामाक्ष्याश्चरणयुगलं बन्धुपदवीम् ॥ ९ ॥

9. நமஸ்கரிக்கின்ற தேவ மாதர்களின் அசைந்து மிளிரும் கூந்தல்களோடு கூடியதாயும், ஒளி பொருந்திய செம்பஞ்சுக் குழம்புப் பூச்சை யுடையதாயும், ஒளிகளாகிய நீர்த்திவலைகளால் நிறைந்ததாயுமுள்ள காமாக்ஷியின் சரணயுகளமானது (கூந்தல்களாகிய) வண்டுக் கூட்டங்களோடு கூடியவையும், (செம்பஞ்சுப் பூச்சின்) சிவந்த ஒளிகளால் பாலஸூர்யனுடைய காந்தியையுடையவையும், ஒளிபொருந்திய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மகரந்தப் பொடிகளால் நிறைந்தவையுமான தாமரை மலர்களோடு (சமானமாகின்றது) உறவுகொள்கின்றது.

रजःसंसर्गेऽपि स्थितमरजसामेव हृदये
परं रक्तत्वेन स्थितमपि विरक्तैकशरणम् ।
अलभ्यं मन्दानां दधदपि सदा मन्दगतितां
विधत्ते कामाक्ष्याश्चरणयुगमाश्चर्यलहरीम् ॥ १० ॥

10. காமாக்ஷியின் சரணயுகளமானது, தனக்கு ரஜஸ்ஸின் (மகரந்தப் பொடியாகிய புழுதியின்) ஸம்பந்த மிருந்தாலும், ரஜஸ் (ரஜோகுணம்) சிறிதும் இல்லாதவர்களின் ஹ்ருதயத்தில் மட்டுமே நிலைபெற்றிருப்பதாயும், அதிக ராகத்தோடு (சிவப்போடு) விளங்கினாலும் ராகம் (பற்று) அற்றவர்களுக்கே புகலிடமாயும், எப்பொழுதும் மந்தகதி (மென்னடை)யோடு கூடியதானாலும் மந்தர்களால் (புத்திக் கூர்மை யில்லாதவர்களால்) சென்றடைய முடியாததாயும் மேன்மேலும் ஆச்சர்யத்தையே அளிக்கின்றது.

ரஜஸ் - புழுதி, ரஜோகுணம்; ராக - சிவப்பு, ஆசை; மந்தகதி மெதுவான நடை, புத்திக் கூர்மையில்லாதவனுடைய போக்கு. இவ்வாறு இரண்டு பொருள்களைக் கொண்ட பதங்களைப் ப்ரயோகித்து, இரண்டாவது பொருளின்படி, ஒன்றிற்கொன்று விரோதம் தோற்றுவது ஓர் ஆச்சர்யம் என்கிறார்.

जटाला मञ्जीरस्फुरदरुणरत्नांशुनिकरै-
र्निषीदन्ती मध्ये नखरुचिझरीगाङ्गपयसाम् ।
जगत्त्राणं कर्तुं जननि मम कामाक्षि नियतं
तपश्चर्यां धत्ते तव चरणपाथोजयुगली ॥ ११ ॥

11. காமாக்ஷியே! என் தாயே! ஜகத் முழுவதையும் எப்பொழுதும் காப்பதற்காகவே, தாமரை போன்றதான உம்முடைய சரணயுகளமானது (தன் தலைப்பாகத்திலுள்ள)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிலம்புகளில் ஒளிர்கின்ற செம்மணிகளின் ஒளிக்கற்றை களாகிய செஞ்சடைகளை யுடையதாகி, நகங்களினின்று அருவிபோலே பாயும் காந்திவெள்ளமாகிய கங்காப் பிரவா ஹத்தின் மத்தியிலே அமர்ந்து, நியதமாய்த் தவஞ் செய்வதை மேற்கொண்டு விளங்குகின்றது.

तुलाकोटिद्वन्द्वक्वणितभणिताभीतिवचसो-
विंनम्रं कामाक्षी विसृमरमहःपाटलितयोः ।
क्षणं विन्यासेन क्षपिततमसोर्मे ललितयोः
पुनीयान्मूर्धानं पुरहरपुरंध्री चरणयोः ॥ १२ ॥

12. திரிபுராந்தகரான பரமசிவனின் தேவியான காமாக்ஷியானவள், தம் இரண்டு நூபுரங்களின் ஒலிகளால் அபய வாக்குகளைத் தருபவையாயும், ஒளி பரந்து சிவந்தவை யாயும், இருளை (தமோகுணத்தை) நீக்குபவையாயும், மேன் மையும் அழகுமுடையவையாயும் விளங்கும் (தம்) இரண்டு சரணங்களையும் க்ஷணப்பொழுது (என் தலைமீது) எடுத்து வைப்பதால் வணங்கிய என் சிரஸ்ஸைப் பரிசுத்தமாக்கட்டும்.

भवानि द्रुह्येतां भवनिबिडितेभ्यो मम मुहु-
स्तमोव्यामोहेभ्यस्तव जननि कामाक्षि चरणौ ।
ययोर्लाक्षाबिन्दुस्फुरणधरणाद्धूर्जटिजटा-
कुटीरा शोणाङ्कं वहति वपुरेणाङ्ककलिका ॥ १३ ॥

13. பவதேவரின் பத்தினியே! காமாக்ஷியே! என் தாயே! ஜடாபாரத்தையுடைய பரமசிவனுடைய சடையாகிய குடி சையிலே வாழுகின்றவனான மான்போன்ற கரிய மறுவை யுடைய சந்திரனின் கலையானது (பரமசிவன் வணங்கும் போது உம் பாதங்களைத் தொடுவதால்) எந்த இரண்டு பாதங்களின் செம்பஞ்சுப் பூச்சின் தூளிகளின் காந்தியாலே சிவந்த மறுவை யுடையதாகின்றதோ, அந்த உம்முடைய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சரணங்கள் இரண்டும், என்னுடையதாய் தொடர்ச்சியாக வரும் பிறப்புகளைத் தருகின்ற அஞ்ஞானமாகிய இருளின் (தமோ குணத்தின்) மயக்கங்களுக்கு விரோதியாகி அவற்றை அழித்துவிடட்டும்.

पवित्रीकुर्युर्नः पदतलभुवः पाटलरुचः
परागास्ते पापप्रशमनधुरीणाः परशिवे ।
कणं लब्धुं येषां निजशिरसि कामाक्षि विवशा
वलन्तो व्यातन्वन्त्यहमहमिकां माधवमुखाः ॥ १४ ॥

14. பரம மங்கள மூர்த்தியே (பர சிவையே)! காமாக்ஷியே! விஷ்ணு (மாதவன்) முதலானவர்கள் எந்த மகரந்தத் தூளிகளில் ஓர் அணுவையாவது தங்கள் தங்கள் சிரஸ்ஸிலே பெறுவதற்காக, தங்களை முற்றும் மறந்தவர்களாகி, உம்மைச் சூழ்ந்துகொண்டு, 'நான்' 'நான்' என்று முந்துகின்றார்களோ, பாபங்களைப் போக்கும் திறமை வாய்ந்தவைகளும், சிவந்த ஒளியுடையவைகளும், உம்முடைய பாதகமலங்களிலே பிறந்தவைகளுமான அந்த மகரந்தத் தூளிகள் நம்மைப் பரிசுத்தர்கள் ஆக்கட்டும்.

बलाकामालाभिर्नखरुचिमयीभिः परिवृते
विनम्रस्वर्नारीविकचकचकालाम्बुदकुले ।
स्फुरन्तः कामाक्षि स्फुटदलितबन्धूकसुहृद-
स्तटिल्लेखायन्ते तव चरणपाथोजकिरणाः ॥ १५ ॥

15. காமாக்ஷியே! உம்முடைய திருவடித் தாமரைகளினின்று வீசும் ஒளிக்கிரணங்கள், நகங்களின் (வெண்மையான) ஒளிகளாகிய கொக்குகளின் வரிசைகளாலே நாற்புறமும் சூழப் பெற்றவையும், (உம்மை) நமஸ்கரிக்கின்ற தேவமாதர்களின் விரிந்த கூந்தல்கள் என்பவையுமான படர்ந்த கார்மேகங்களின் இடையே மின்னிப் பிரகாசிக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கின்றவையுமாகி, மலர்ந்து வெளிப்படத் தோன்றும் இதழ்களையுடைய செம்பரத்த மலர்களை நண்பர்களாகக் கொண்ட மின்னற்கொடிகளாய் விளங்குகின்றன.

सरागः सद्वेषः प्रसृमरसरोजे प्रतिदिनं
निसर्गादाक्रामन्विबुधजनमूर्धानमधिकम् ।
कथंकारं मातः कथय पदपद्मस्तव सतां
नतानां कामाक्षि प्रकटयति कैवल्यसरणिम् ॥ १६ ॥

16. அன்னையே! காமாக்ஷியே! எப்பொழுதும் ராகத்தை (சிவப்பு நிறத்தை) யுடையதாயும், அலர்ந்த செந்தாமரையினிடம் துவேஷமுடையதாயும், எப்பொழுதும் தன் ஸ்வபாவத்தாலேயே விபுதர்களுடைய (ஞானிகளுடைய, தேவர்களுடைய) சிரஸிலே அளவுகடந்து அடியெடுத்து வைப்பதாயும் விளங்கும் உம் திருவடித் தாமரையானது, வணக்கமுடைய ஸஜ்ஜனங்களுக்கு கைவல்ய பதவிக்கு உரிய வழியை விளக்குவது எவ்வாறு என்பதை விரித்துச் சொல்வாயாக.

ராகத்தையும் துவேஷத்தையுமே எப்போதும் உடையதாகி, உத்தம ஞானிகளைப் பழித்து, அவர்களுடைய தலைமேலேறிக் குதிக்கும் இயல்பையுடைய பாதமானது, கைவல்ய மார்க்கத்தையடைய விரும்பி வணங்கி நிற்கும் ஸஜ்ஜனங்களுக்கு ஆசார்யன் என்பது எப்படி? தாம் உபதேசிக்கும் முறைப்படி, விருப்பு வெறுப்புகள் இல்லாமலும் பெரியோர்களின் திருவடிகளைச் சிர மேற்கொண்டும் இருப்பதன்றோ ஆசார்ய லக்ஷணம்?

जपालक्ष्मीशोणो जनितपरमज्ञाननलिनी-
विकासव्यासङ्गो विफलितजगज्जाड्यगरिमा ।
मनःपूर्वाद्रिं मे तिलकयतु कामाक्षि तरसा
तमस्काण्डद्रोही तव चरणपाथोजरमणः ॥ १७ ॥

17. காமாக்ஷியே! உமது சரணம் என்னும் தாமரையின் காதலனான ஸூர்யன், (ஜபாதேவி தன்னுடன் இருப்ப

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தால்) செம்பரத்தம் பூவிலுள்ள செவ்வொளி போன்ற சிவப்பு நிறமுடையவனாய், பரம ஞானமாகிய தாமரையை மலரச் செய்வதிலே கருத்துடையவனாய், உலகத்திலுள்ள ஜடத்தன்மையின் (அஞ்ஞானத்தின்) கனத்தைப் பயனற்ற தாக்குகின்றவனாய், (தமோ குணமாகிய) இருளின் ஸமூஹத்தை நீக்குகின்றவனாய், என் மனதாகிய உதயபர்வதத்தை யடைந்து, அங்கேயே எப்பொழுதும், (நெற்றியிலிட்ட குங்குமப் பொட்டைப்போல) சிறந்து விளங்கட்டும்.

नमस्कुर्मः प्रेङ्खन्मणिकटकनीलोत्पलमहः-
पयोधौ रिङ्खद्भिर्नखकिरणफेनैर्धवलिते ।
स्फुटं कुर्वाणाय प्रबलचलदौर्वानलशिखा-
वितर्कं कामाक्ष्याः सततमरुणिम्ने चरणयोः ॥ १८ ॥

18. நகங்களினின்று அலைமோதி யெழுகின்ற (வெண்ணிறமுடைய) காந்திகளாகிய நுரைகளால் வெண்மையுடையதும், அசைந்து ஒளி வீசுகின்ற ரத்னகடகம் என்னும் காற்காப்பிலேயுள்ள நீலரத்னங்களின் காந்தியையுடையதுமாய், ஸமுத்ரத்தின் மத்தியிலே அதிக சக்தியுடையதாய் எரிகின்ற வடவைத் தீயின் ஜ்வாலையோ என்று ஊஹித்தறியும்படி செய்வதான காமாக்ஷியின் திருவடிகள் இரண்டிலுமுள்ள செம்மை நிறத்திற்கு எப்பொழுதும் நமஸ்காரஞ் செய்துக் கொண்டிருப்போம்.

शिवे पाशायेतामलघुनि तमःकूपकुहरे
दिनाधीशायेतां मम हृदयपाथोजविपिने ।
नभोमासायेतां सरसकवितारीतिसरिति
त्वदीयौ कामाक्षि प्रसृतकिरणौ देवि चरणौ ॥ १९ ॥

19. காமாக்ஷி தேவியே! பரமசிவனுக்கு மனைவியான மங்கள ரூபிணியே (சிவையே)! ஒளி பரப்புவனவாகிய உம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முடையதான சரணங்கள் இரண்டும், (தமோகுணம்) அஞ்ஞானம் என்னும் இருளால் நிறைந்ததும் எளிதிற் கரையேற முடியாததுமான பாழ்ங்கிணற்றில் (கரையேற உதவுவதற்காகத் தாழவிடப்பட்ட) தாம்புக் கயிறுகளாகட்டும்; என்னுடைய ஹ்ருதயமாகிய தாமரைக் காட்டிலே விளங்கும் ஸூர்யர்களாகட்டும்; ரஸங்களோடு கூடியதான கவிதை என்னும் நதியின் ஜலத்தைப் பெருகச் செய்வதில் ஆவணி மாதமாகட்டும் (மழைக்காலமாகட்டும்).

निषक्तं श्रुत्यन्ते नयनमिव सद्वृत्तरुचिरैः
समैर्जुष्टं शुद्धैरधरमिव रम्यैर्द्विजगणैः ।
शिवे वक्षोजन्मद्वितयमिव मुक्ताश्रितमुमे
त्वदीयं कामाक्षि प्रणतशरणं नौमि चरणम् ॥ २० ॥

20. பரமசிவனின் மனைவியான மங்கள ஸ்வரூபிணியே (சிவையே)! உமாதேவியே! காமாக்ஷியே! கண்ணனது காதின் எல்லைவரையிலே அமைந்திருப்பதுபோல, உம் திருப்பாதமும் வேதங்களின் சிரோபாகமாகிய உபநிஷத்திலே நிலை பெற்றிருக்கிறது; உதடானது நன்றான வடிவுடையதாய் விளங்குபவைகளும் ஒன்றோடொன்று ஒத்திருப்பவைகளும் தூய வெண்ணிறமானவைகளும் அழகு வாய்ந்தவைகளுமான பல் வரிசைகளோடு சேர்ந்திருப்பதுபோல, உம் திருப்பாதமும் நன்னடத்தையால் அழகாக விளங்குபவர்களாய் ஸமபுத்தி யுடையவர்களாய் பரிசுத்தர்களாய் இன்புறத் தக்கவர்களாய் விளங்கும் இருபிறப்பாளரின் ஸமூஹத்தையுடையது; நன்முத்துக்களுக்கு உறைவிடமாய் விளங்கும் (உம்) இரண்டு கொங்கைகளையும் போல, உமது திருப்பாதமும் முக்தர்களுக்குப் புகலிடமாக உள்ளது; அத்தகையதாய் அடிவணங்குகின்றவர்களுக்குப் புகலிடமான உம்முடைய சரணத்தை வணங்குகிறேன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ப்ருத்யந்தம், த்விஜகண, முக்த முதலிய சொற்களும் 'த்விஜ கண' என்பதன் அடைமொழிகளும் இரண்டு பொருள்களையுடையவை; இரண்டாவது பொருளால், தேவியின் கண், உதடு, கொங்கை இவற்றிற்கும் பாதத்திற்கும் ஒப்புமை கூறப்பட்டது.

नमस्यासंप्रज्ञन्नमुचिपरिपन्थिप्रणयिनी-
निसर्गप्रेङ्खोलत्कुरलकुलकालाहिशबले ।
नखच्छायादुग्धोदधिपयसि ते वैद्रुमरुचां
प्रचारं कामाक्षि प्रचुरयति पादाब्जसुषमा ॥ २१ ॥

21. காமாக்ஷியே! நமுசியை ஸம்ஹரித்த இந்திரனுடைய காதலியாகிய இந்திராணியின் கூந்தலின் கற்றைகளாகிய கருநாகங்கள், (அவள் உம்மை) நமஸ்கரிக்கும்போது அசைந்தாடுவதால், (அவற்றின் கருமையாலும் அவற்றிலுள்ள ரத்னங்களாலும்) நானாவர்ணமான ஒளிகளை யுடையவையான நக கிரணங்களாலாகிய திருப்பாற்கடலின் பாலிலே, உம்முடைய திருவடித் தாமரைகளின் சோதியானது பவழங்களின் (சிவந்த) காந்தியை மிகுதியாகப் பரப்புகின்றது.

कदा दूरीकर्तुं कटुदुरितकाकोलजनितं
महान्तं संतापं मदनपरिपन्थिप्रियतमे ।
क्षणात्ते कामाक्षि त्रिभुवनपरीतापहरणे
पटीयांसं लप्स्ये पदकमलसेवामृतरसम् ॥ २२ ॥

22. மன்மதனை யழித்த பரமசிவனுக்கு மிகவும் இன்பமானவளே! காமாக்ஷியே! உக்கிரமான பாபமாகிய விஷத்தால் எனக்கு உண்டான மிகுந்த தாபத்தைப் போக்கிக் கொள்வதற்கு, மூன்று லோகங்களுக்குமுள்ள தாபங்களை முற்றும் ஒரு க்ஷணத்திலே போக்கும் திறமை வாய்ந்ததாய் உம்முடைய திருவடித் தாமரைகளில் தொண்டு புரிவதான அமிர்தத்தை என்றுதான் பெறுவேனோ?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ययोः सांध्यं रोचिः सततमरुणिम्ने स्पृहयते
ययोश्चान्द्री कान्तिः परिपतति दृष्ट्वा नखरुचिम् ।
ययोः पाकोद्रेकं पिपठिषति भक्त्या किसलयं
म्रदिम्नः कामाक्ष्या मनसि चरणौ तौ तनुमहे ॥ २३ ॥

23. எந்த இரண்டு சரணங்களுடைய செந்நிறத்தை ஸந்தியா காலத்தில் ஒளிரும் ஒளியானது பெற விரும்புகின்றதோ, எவற்றிலுள்ள நகங்களின் காந்தியைக் கண்டு சந்திரனுடையதான காந்தியானது நாலாபக்கத்திலும் சிதறுண்டு போகின்றதோ, எவற்றின் மென்மையின் வளத்தைத் தளிரும் பத்தியுடன் கற்க விரும்புகின்றதோ, காமாக்ஷியின் அத்தகைய சரணங்கள் இரண்டையும் மனதில் நிறைத்துக் கொள்கிறோம்.

जगन्नेदं नेदं परमिति परित्यज्य यतिभिः
कुशाग्रीयस्वान्तैः कुशलधिषणैः शास्त्रसरणौ ।
गवेष्यं कामाक्षि ध्रुवमकृतकानां गिरिसुते
गिरामैदंपर्यं तव चरणपद्मं विजयते ॥ २४ ॥

24. காமாக்ஷியே! மலைமகளே! உம்முடைய திருவடித் தாமரையானது, யாராலும் செய்யப்படாமல் இயல்பாகவே அமைந்துள்ள வேத வசனங்களின் உட்பொருளாகி, சாஸ்திர மார்க்கத்திலே மங்களமான புத்தியுடையவர்களாய் தர்ப்பையின் நுனி போன்ற கூர்மையான புத்திநுட்பமுடையவர்களாய் முற்றும் துறந்த ஸந்நியாஸிகளால் ஜகத்திலுள்ள ஒவ்வொரு பொருளையும் 'இது பரம்பொருளன்று' என்று தள்ளிவிட்டுத் தேடத் தக்கதாயும் என்றும் அழியாத நிலைபெற்றதாயும் பிரகாசிக்கின்றது.

कृतस्नानं शास्त्रामृतसरसि कामाक्षि नितरां
दधानं वैशद्यं कलितरसमानन्दसुधया ।
अलंकारं भूमेर्मुनिजनमनश्चिन्मयमहा-
पयोधेरन्तस्स्थं तव चरणरत्नं मृगयते ॥ २५ ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

25. காமாக்ஷியே! முனிவர்களின் மனமானது சாஸ்திரமாகிய அமிர்தப் பொய்கையிலே ஸ்நானஞ்செய்து, தூய்மையை (தெளிவை) மிகுதியாகப் பெற்று, (ஆனந்தம் என்னும் அமிர்தத்தால் இன்புறுவதாகி) ஆனந்தம் என்னும் அமிர்தத்தால் நீரோட்டமுள்ளதாயும் பூமிக்கு அலங்காரமாயிருப்பதாயும் சித் ஆகிய மஹா ஸமுத்ரத்தின் மத்தியிலே நிலைத்திருப்பதாயுமுள்ள உம்முடைய சரணம் ஆகிய ரத்னத்தை நாடிச் செல்கின்றது,

मनोगेहे मोहोद्भवतिमिरपूर्णे मम मुहु-
र्दरिद्राणीकुर्वन्दिनकरसहस्राणि किरणैः ।
विधत्तां कामाक्षि प्रसृमरतमोवञ्चनचणः
क्षणार्धं सान्निध्यं चरणमणिदीपो जननि ते ॥ २६ ॥

26. காமாக்ஷியம்மையே! அஞ்ஞானம் என்னும் பேரிருளை நீக்குகின்ற திறமையுடையதான உம்முடைய சரணமாகிய ரத்னதீபமானது, தனது கிரணங்களால் பல்லாயிரம் தினகரர்களையும் பயனற்றவர்களாகச் செய்துகொண்டு, அடிக்கடி மோஹத்தால் எழுந்த அந்தகாரத்தால் நிறைந்ததான என்னுடைய மனமாகிய வீட்டிலே அரைக்ஷணமாவது ஒளிபெறக் காட்சியளிக்கட்டும்.

कवीनां चेतोवन्नखररुचिसंपर्कि विबुध-
स्रवन्तीस्रोतोवत्पटुमुखरितं हंसकरवैः ।
दिनारम्भश्रीवन्नियतमरुणच्छायसुभगं
मदन्तः कामाक्ष्याः स्फुरतु पदपङ्केरुहयुगम् ॥ २७ ॥

27. கவிகளின் மனதைப்போல நகருசி யுடையதாகி (கடுமையற்ற இன்சொற்களில் ஆசையுடையதாகி, நகங்களின் காந்தியையுடையதாகி), ஹம்ஸகரவங்களால் (அன்னப் பறவையின் சப்தங்களால், நூபுரங்களின் சப்தங்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

களால்) பேராரவாரத்தோடு செல்லும் நதிபோலச் செல்வ தாகி, அருணோதய காலத்தின் அழகிய ஒளியைப்போல எப்பொழுதும் அருணச்சாயையால் (அருணனுடைய காந்தி யால், சிவப்பு நிறத்தால்) அழகு வாய்ந்தவையான காமாக்ஷி யினுடைய திருவடித் தாமரைகள் இரண்டும் ஒருங்கே என் உள்ளத்திலே நிரந்தரமாக ஒளி வீசிக்கொண்டிருக்கட்டும்.

सदा किं संपर्कात्प्रकृतिकठिनैर्नाकिमुकुटै-
स्तटैर्नीहाराद्रेरधिकमणुना योगिमनसा ।
विभिन्ते संमोहं शिशिरयति भक्तानपि दृशा-
मदृश्यं कामाक्षि प्रकटयति ते पादयुगलम् ॥ २८ ॥

28. காமாக்ஷியே! உம்முடைய திருவடித் தாமரைகள் இரண்டும், இயற்கையாகவே கடினமா யிருக்கின்றவையான தேவலோகத்தவர்களின் கிரீடங்களுடைய சேர்க்கையாலே கடினத் தன்மையைப்பெற்று ஸம்மோஹத்தைப் பிளந்தெறி கின்றனவோ? பனிமலையாகிய ஹிமாசலத்தினுடைய தாழ் வரைகளின் சேர்க்கையால் (குளிர்ச்சியை மிகக்கொண்டவை யாகி) பக்தர்களை (மனங்) குளிரச் செய்கின்றனவோ? மிகவும் நுண்ணியதாகவுள்ள யோகிகளின் மனதோடு அதிகம் சேர்ந்திருப்பதால் (ஸூக்ஷ்மத் தன்மை பெற்று) கண்களுக்குப் புலப்படாதவற்றையும் (உம்முடைய ஸ்வ ரூபம் ரூபம் முதலியவற்றையும்) நன்கு புலப்படச் செய்து கொண்டிருக்கின்றனவோ?

पवित्राभ्यामम्ब प्रकृतिमृदुलाभ्यां तव शिवे
पदाभ्यां कामाक्षि प्रसभमभिभूतैः सचकितैः ।
प्रवालैरम्भोजैरपि च वनवासव्रतदशाः
सदैवारभ्यन्ते परिचरितनानाद्विजगणैः ॥ २९ ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

29. பரமசிவனின் பத்தினியான மங்கள ஸ்வரூபிணியே (சிவையே)! அன்னையே! காமாக்ஷியே! தூய்மையாயும் இயற்கையாக அமைந்த மென்மையாயுமுள்ள உம்முடைய திருவடிகள் இரண்டினலும் நன்ருக அவமதிக்கப்பட்டு அச்சமடைந்தவைகளான தளிர்களாலும் தாமரை மலர்களாலும், அநேகவிதமான த்விஜர்களுக்கு (பிராம்மணர்களுக்கு,பறவைகளுக்கு) ஸேவை செய்துகொண்டிருப்பவைகளாகிறபடியால், அவைகளால் வனவாஸ வ்ரத அனுஷ்டானங்கள் (காட்டில் இருப்பதும்,தண்ணீரின் மத்தியில் இருப்பதுமான விரதத்தின் நியமங்கள்) மேற்கொள்ளப்பட்டு, ஓயாமல் எப்பொழுதும் நடைபெறுகின்றன.

चिराद्दृश्या हंसैः कथमपि सदा हंससुलभं
निरस्यन्ती जाड्यं नियतजडमध्यैकशरणम् ।
अदोषव्यासङ्गा सततमपि दोषाप्तिमलिनं
पयोजं कामाक्ष्याः परिहसति पादाब्जयुगली ॥ ३० ॥

30. ஸ்ரீ காமாக்ஷியின் திருவடித் தாமரைகள் இரண்டும் ஹம்ஸர்களால் (ஹம்ஸர் என்னும் ஸன்னியாஸிகளால்) நெடுங்காலமான பின்பு எப்படியோ காணக்கூடியவைகளாயும் ஜடத்தன்மையை (அஞ்ஞானத்தை)ப் போக்குபவையாயும் எப்பொழுதுமே யாதொரு தோஷத்தின் (குற்றத்தின்) ஸ்பர்சமும் இல்லாதவையாயும் விளங்கி, எக்காலத்திலும் ஹம்ஸங்களுக்கு (அன்னப்பறவைகளுக்கு) எளிதாகக் கிடைப்பதாயும், ஜடத்தின் (ஜலத்தின்) மத்தியத்தையே எப்பொழுதும் தனக்குரியதான தனித்த வாசஸ்தானமாக வுடையதாயும், தோஷம் (மாலைப்பொழுது) வருங்கால் மலினமடைவதாயுமுள்ள தாமரை மலரைப் பரிஹஸிக்கின்றன.

सुराणामानन्दप्रबलनतया मण्डनतया
नखेन्दुज्योत्स्नाभिर्विसृमरतमःखण्डनतया ।
पयोजश्रीद्वेषव्रतरततया त्वच्चरणयो-
र्विलासः कामाक्षि प्रकटयति नैशाकरदशाम् ॥ ३१ ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

31. காமாக்ஷியே! உம்முடைய சரணங்கள் இரண்டினு முள்ள காந்தியானது, தேவர்களுக்கு (அமிர்த மயமாயிருப்ப தால்) மிகுந்த ஆனந்தத்தை யளிப்பதாலும், (தேவர்களின் முடிகளுக்கு) அலங்காரமாகி அழகு வாய்ந்திருப்பதாலும், நகங்களுடைய நிலவொளியால் சூழ்ந்துள்ள இருளை (அஞ்ஞானத்தை) அழித்துவிடுவதாலும், செந்தாமரையின் காந்தியோடு பகைகொள்வதான விரதத்திலே இன்புறும் தன்மையாலும், சந்திரனுடைய ஒளியின் நிலைமையைப் பெற்றிருப்பதை வெளிப்படுத்துகின்றது.

सितिम्ना कान्तीनां नखरजनुषां पादनलिन-
च्छवीनां शोणिम्ना तव जननि कामाक्षि नमने ।
लभन्ते मन्दारग्रथितनवबन्धूककुसुम-
स्रजां सामीचीन्यं सुरपुरपुरन्ध्रीकचभराः ॥ ३२ ॥

32. காமாக்ஷியம்மையே! உம்மை வணங்கும்போது, தேவலோகத்து ஸ்திரீகளின் கூந்தல்கள், (உம்முடைய) நகங்களினின்றும் வெளிப்படுகின்ற ஒளிகளின் வெண்மையாலும், திருவடித் தாமரைகளுடைய காந்திகளின் செந்நிறத்தாலும், புதிய மந்தார மலர்களைச் சேர்த்துக் கோத்த செம்பரத்தம்பூ மாலைகளின் அழகான தன்மையை அடைகின்றன. (உம்முடைய பாதங்களிலே சாத்திய பூமாலைகள்போல் விளங்குகின்றன).

स्फुरन्मध्ये शुद्धे नखकिरणदुग्धाब्धिपयसां
वहन्नब्जं चक्रं दरमपि च लेखात्मकतया ।
श्रितो मात्स्यं रूपं श्रियमपि दधानो निरुपमां
त्रिधामा कामाक्ष्याः पदनलिननामा विजयते ॥ ३३ ॥

33. காமாக்ஷியின் திருவடித் தாமரை என்று பெயர் கொண்ட மஹாவிஷ்ணுவானவர் ('த்ரிதாமா' மூன்று இருப்பிடங்களையுடையவர் என்ற பெயருக்கு அனுகுணமாக) சங்கு, சக்கிரம், தாமரைமலர் இவற்றை (தேவதைகளின் வடிவங்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

களாய், இரேகை வடிவங்களாய்) தம்மிடத்திலே கொண்டு, (வானத்திலே) நகங்களின் ஒளிகளாகிய திருப்பாற்கடலின் பரிசுத்தமான (வெண்மையான) மத்திய பாகத்திலே விளங்கு பவராயும், (பூமியிலே) மத்ஸ்ய ரூபத்தை (மச்சிய வடிவான இரேகையை) மேற்கொண்டவராயும், (வைகுண்டத்திலே) ஒப்பற்ற ஸ்ரீ தேவியை (காந்தியை)த் தரித்துக்கொண்டிருப் பவராயும் சிறந்து விளங்குகின்றார்.

திருவடித்தலமானது சங்க ரேகை, சக்கிர ரேகை, பத்மரேகை, மத்ஸ்ய ரேகை) ஒப்பற்ற அழகு ஆகியவற்றை யுடையதாகி நககாந்தி யினூடே பிரகாசிப்பதால், மூவுலகத்திலுமுள்ள மஹாவிஷ்ணுவின் மூர்த்திகள் மூன்றும் இங்கே ஒருங்கே யமைந்தனவோ என்று தோன்றுகின்றன.

नखश्रीसंनद्धस्तबकनिचितः स्वैश्च किरणैः
पिशङ्गैः कामाक्षि प्रकटितलसत्पल्लवरुचिः ।
सतां गम्यः शङ्के सकलफलदाता सुरतरु-
स्त्वदीयः पादोऽयं तुहिनगिरिराजन्यतनये ॥ ३४ ॥

34. காமாக்ஷியே! பர்வதராஜனான ஹிமவான் பெற்ற மகளே! உம்முடையதான இந்தத் திருப்பாதமானது, நகங் களின் காந்திகளாலே தொடுக்கப்பட்ட பூங்கொத்துகளால் நிறைந்ததாயும், வெளிறின சிவப்பு வர்ணமுடையவையாய் தன்னிடத்திலிருந்து பரவும் கிரணங்களாலே ஒளிபொருந் திய தளிர்களின் காந்தியை வெளிப்படுத்துவதாயும், எல்லா வகைப் பலன்களையும் (பழங்களையும்) அளிப்பதாயும், நல் லோர்களால் சென்று அடைவதற்குரியதாயுமுள்ள (தேவ லோகத்து) கல்பக விருக்ஷம் என்றே நினைக்கிறேன்.

वषट्कुर्वन्माञ्जीरजकलकलैः कर्मलहरी-
हवींषि प्रोद्दण्डं ज्वलति परमज्ञानदहने ।
महीयान्कामाक्षि स्फुटमहसि जोहोति सुधियां
मनोवेद्यां मातस्तव चरणयज्वा गिरिसुते ॥ ३५ ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

35. காமாக்ஷியே! அன்னையே! மலைமகளே! உம்முடைய திருவடியாகிய மகிமைபொருந்திய யாககர்த்தாவானவர், நல்ல புத்திமான்களின் மனம் என்னும் யாகமேடையிலே மிக உக்கிரமாகக் கொழுந்துவிட்டெரிந்து நன்ருக ஒளிர்கின்ற பரம ஞானம் என்னும் ஹோமாக்கினியிலே, கர்மாக்களாகிய நெய்யே ஆகுதிகளாக, (உம்முடைய) சிலம்புகளினின்று எழுந்த கல கல சப்தங்களாகிய வஷட்காரங்களைச் சொல்லிக்கொண்டு, ஹோமஞ் செய்கிருர்.

புத்திசாலிகள், உம்முடைய திருவடியின் துணைகொண்டு, தங்கள் மனதிலே ஞானமாகிய தீயை வளர்த்து, வினைகளை எரித்துச் சாம்பலாக்கி விடுகிருர்கள் என்பது கருத்து.

महामन्त्रं किंचिन्मणिकटकनादैर्मृदु जप-
न्क्षिपन्दिक्षु स्वच्छं नखरुचिमयं भासनरजः ।
नतानां कामाक्षि प्रकृतिपटुरुच्चाट्य ममता-
पिशाचीं पादोऽयं प्रकटयति ते मान्त्रिकदशाम् ॥ ३६ ॥

36. காமாக்ஷியே! உம்முடைய இந்தத் திருவடியானது இயற்கையிலே திறமைவாய்ந்ததாய், மணிகளை உள்ளீடாகவுடைய தண்டைகளின் இனிய சப்தங்களால் ஏதோ மஹாமந்திரத்தை மெதுவாக ஜபித்துக்கொண்டும், நகங்களின் காந்தியாகிய தூய வெண்ணீற்றை (விபூதியை) திக்குகளிலே தூவிக்கொண்டும், தன்னை வணங்குவோர்களின் மமதையாகிற பிசாசை விரட்டிக்கொண்டும், தான் மந்திரவாதியாகிய தன்மையை நன்ருக விளக்குகின்றது.

उदीते बोधेन्दौ तमसि नितरां जग्मुषि दशां
दरिद्रां कामाक्षि प्रकटमनुरागं विदधती ।
सितेनाच्छाद्याङ्गं नखरुचिपटेनाङ्घ्रियुगली-
पुरन्ध्री ते मातः स्वयमभिसरत्येव हृदयम् ॥ ३७ ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

37. காமாக்ஷியம்மையே! உமது திருவடியிணை என்னும் குல ஸ்திரீயானவள், (எவருடைய ஹ்ருதயத்திலே) எப்பொழுது ஞானம் (ஆத்மபோதம்) என்னும் சந்திரன் உதயமாகின்ருேனே, எப்பொழுது அஞ்ஞானம் என்னும் அந்தகாரம் மிகவும் க்ஷீணதசை யடைந்து நசித்துப் போகின்றதோ, அப்பொழுதே (தன்னுடைய) ப்ரீதியை (அருளை) வெளியிட்டுக்கொண்டு, நகங்களின் காந்தியான வெள்ளைப் போர்வையால் தன் அங்கங்களை போர்த்திக்கொண்டு, (அபிஸாரிகையைப் போல), தானாகவே (அவருடைய) ஹ்ருதயமாகிய இடத்தை நாடிவருகிருள்.

'எப்போது ஒருவன் இருதயத்திலே தேவியின் திருவடி தானாகவே வந்தருளுகின்றதோ, அப்போதே அவனுக்கு ஞானேதயமாகி மனத்து இருள் முழுவதும் அகன்றுவிடும்' என்னும் காரணகாரிய முறையானது இங்கு சாதுர்யமாக மாற்றியமைக்கப் பெற்றுள்ளது.

दिनारम्भः संपन्नलिनविपिनानामभिनवो
विकासो वासन्तः सुकविपिकलोकस्य नियतः ।
प्रदोषः कामाक्षि प्रकटपरमज्ञानशशिन-
श्चकास्ति त्वत्पादस्मरणमहिमा शैलतनये ॥ ३८ ॥

38. காமாக்ஷியே! மலைமகளே! உமது திருவடிகளை ஸ்மரணைசெய்வதின் மஹிமை, செல்வங்களாகிய தாமரைக் காடுகளுக்குப் புதிய சூர்யோதயமாகவும், இன்கவிகளாகிய குயில்வர்க்கத்திற்கு என்றும் நிலைத்திருக்கும் வஸந்தகாலத்து மலர்ச்சியாகவும், பரம ஞானமாக விளங்கும் பூர்ண சந்திரனுக்கு ஏற்ற சாயங்காலமாகவும் விளங்குகின்றது.

ஸ்மரித்தவுடன் மனதிலே பிரஸன்னமாவதால், திருவடியின் மஹிமையை ஸ்மரண மஹிமை என்கிருர்.

धृतच्छायं नित्यं सरसिरुहमैत्रीपरिचितं
निधानं दीप्तीनां निखिलजगतां बोधजनकम् ।
मुमुक्षूणां मार्गप्रथनपटु कामाक्षि पदवीं
पदं ते पातङ्गीं परिकलयते पर्वतसुते ॥ ३९ ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

39. காமாக்ஷியே! மலைமகளே! உம்முடைய திருவடியானது, எப்பொழுதும் சாயை (அழகு, சூர்யபத்னி) யோடு விளங்குவதாயும், (எப்பொழுதும்) தாமரைகளின் சிநேகத்தைப் பெற்றதாயும், ஒளிகளுக்கு உறைவிடமாயும், உலகங்கள் அனைத்திற்கும் போதத்தை (ஞானத்தை, கண்விழிப்பதை) உண்டுபண்ணுவதாயும், மோக்ஷத்தை விரும்புவோர்களுக்கு வழியைத் தெளிவாகக் காட்டும் திறமை வாய்ந்ததாயும் விளங்கி, (தனக்குள்ளதான) சூர்யனுடைய தன்மையைத் தெரிவிக்கின்றது.

शनैस्तीर्त्वा मोहाम्बुधिमथ समारोढुमनसः
क्रमात्कैवल्याख्यां सुकृतिसुलभां सौधवलभीम् ।
लभन्ते निःश्रेणीमिव झटिति कामाक्षि चरणं
पुरश्चर्याभिस्ते पुरमथनसीमन्तिनि जनाः ॥ ४० ॥

40. காமாக்ஷியே! திரிபுரத்தை யழித்த பரமசிவனுடைய பத்தினியே! அஞ்ஞானமாகிய சமுத்திரத்தை மெல்லக் கடந்து, அதன் பிறகு, படிப்படியாக கைவல்யம் என்னும் பெயரை யுடையதாய் புண்ணியஞ் செய்தவர்கள் மட்டுமே எளிதிலே அடையக்கூடியதான மாளிகையின் மாடத்தை ஏறிச்சென்று அடையவேண்டுமென்ற எண்ணமுடைய ஜனங்கள், தாங்கள் செய்யும் புரச்சரணைகள் என்னும் பூஜாரம்பங்களாலேயே, அதிசீக்கிரத்திலே, படிக்கட்டைப் பெறுவதுபோல, உம்முடைய சரணத்தைப் பெறுகிறார்கள்.

प्रचण्डार्तिक्षोभप्रमथनकृते प्रातिभसरि-
त्प्रवाहप्रोद्दण्डीकरणजलदाय प्रणमताम् ।
प्रदोपाय प्रौढे भवतमसि कामाक्षि चरण-
प्रसादौन्मुख्याय स्पृहयति जनोऽयं जननि ते ॥ ४१ ॥

41. காமாக்ஷியம்மையே! கொடிய துன்பங்களைத் தருகின்ற மனக்கலக்கங்களை அழிப்பதாயும், அடிவணங்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கின்றவர்களின் பிரதிபையாகிய ஆற்று வெள்ளத்தை அபரிமிதமாக அதிகரிக்கச் செய்யும் மேகமாயும், ஸம்ஸாரமாகிய அடர்ந்த இருளிலே ஒளிவீசுகின்ற தீபமாயு முள்ளதான உம்முடைய திருவடியினின்று எழுகின்ற அருளைப் பெற இந்த ஆள் (அதாவது, தாஸனான நான்) ஆசைப்படுகின்றான்.

मरुद्भिः संसेव्या सततमपि चाञ्चल्यरहिता
सदारुण्यं यान्ती परिणतिदरिद्राणसुषमा ।
गुणोत्कर्षान्माञ्जीरककलकलैस्तर्जनपटुः
प्रवालं कामाक्ष्याः परिहसति पादाब्जयुगली ॥ ४२ ॥

42. காமாக்ஷியின் திருவடித் தாமரைகள் இரண்டும், எப்பொழுதும் மருத்துகளால் (தேவர்களால்) நன்றாக ஸேவிக்கப்பெற்றாலும் சாஞ்சல்யம் (அசைவு) அற்றதாயும் எப்பொழுதும் செந்நிறமுடையதாயும் ஏற்றத் தாழ்வுகளில்லாமல் ஒருபடிப்பட்ட அழகு வாய்ந்ததாயும் விளங்கி, (சில சமயங்களிலே மட்டும், மருத்துகளால். (காற்றுகளால்) அடையப் பெற்றதும் அப்பொழுதெல்லாம் அசைவதும் இளமையில் மட்டும் செந்நிறமுடையதும் முற்றிக் குறைவுபடும் அழகு வாய்ந்ததுமான தளிரைத் தன் சிலம்புகளால் கலகல சப்தங்களைக் கொண்டு பயமுறுத்தும் திறமையுடையதாய், தன் குணத்தின் மேன்மையாலே, ஏளனஞ் செய்கின்றது.

जगद्रक्षादक्षा जलजरुचिशिक्षापटुतरा
समैर्नम्या रम्या सततमभिगम्या बुधजनैः ।
द्वयी लीलालोला श्रुतिषु सुरपालादिमुकुटी-
तटीसीमाधामा तव जननि कामाक्षि पदयोः ॥ ४३ ॥

43. காமாக்ஷியம்மையே! ஜகத்தை ரக்ஷிக்கும் வல்லமையுடையதும், தாமரைகளின் காந்தியை ஒடுக்குவதில் மிக்க திறமையுடையதும், எல்லோராலும் (ஸாது ஜனங்களால்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எப்பொழுதும் வணங்கத் தக்கதும், அழகுவாய்ந்ததும், ஞானிகளால் (புத்திமான்களால்) எப்பொழுதும் விரும்பிச் சென்று அடையத்தக்கதும், வேதங்களிலே தன்னிச்சைப்படி உலாவி விளையாடுவதுமாகிய உம்முடைய திருவடிகளின் இணையானது தேவராஜனை இந்திரன் முதலானவர்களின் கிரீடங்களுடைய மேற்பாகங்களை உறைவிடமாகக் கொண்டுள்ளது.

गिरां दूरौ चोरौ जडिमतिमिराणां कृतजग-
त्परित्राणौ शोणौ मुनिहृदयलीलैकनिपुणौ ।
नखैः स्मेरौ सारौ निगमवचसां खण्डितभव-
ग्रहोन्मादौ पादौ तव जननि कामाक्षि कलये ॥ ४४ ॥

44. காமாக்ஷியம்மையே! வாக்குகளுக்கு எட்டாதிருப்பவையும், ஜடத்தன்மை (அஞ்ஞானம்) ஆகிய இருளையெல்லாம் அபகரிப்பவையும், ஜகத்தை நன்றாக ரக்ஷணை புரிபவையும், செந்நிறமுடையவையும், முனிவர்களின் ஹ்ருதயங்களைக் களிப்பிக்கும் லீலையிலே தனித் திறமையுடையவையும், நகங்களின் ஒளிகளால் புன்முறுவலுடையவையும், வேத வசனங்களின் ஸாரமானவையும், ஸம்ஸாரம் என்னும் பிசாசின் செருக்கை யடக்குபவையுமான உம்முடைய திருவடிகளைத் தியானஞ் செய்கிறேன்.

अविश्रान्तं पङ्कं यदपि कलयन्यावकमयं
निरस्यन्कामाक्षि प्रणमनजुषां पङ्कमखिलम् ।
तुलाकोटिद्वन्द्वं दधदपि च गच्छन्नतुलतां
गिरां मार्गं पादो गिरिवरसुते लङ्घयति ते ॥ ४५ ॥

45. காமாக்ஷியே! பர்வதச் சிரேஷ்டரான ஹிமவானின் புத்திரியே! உம்முடைய திருவடியானது, எப்பொழுதும் இடையருது செம்பஞ்சுக் குழம்பாலான (சேற்றை)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பங்கத்தை யுடையதாயிருந்தும் நன்ருக வணங்குவதில் ஆர்வங்கொண்டவர்களுடைய (பாபம்) பங்கம் முழுவதையும் தொலைத்தும், (சிலம்புகள்) துலாகோடிகள் இரண்டையும் (தராசின் இரண்டு முனைகளையும்) தரித்ததாயிருந்தும் (உவமையற்ற தன்மை) துலையின் தன்மை யற்றதாயும் (தராசின் தன்மையற்றதாயும்), வாக்குகளின் ரீதியை (அதாவது, வாச்சியார்த்தத்தை)க் கடந்துவிடுகின்றது.

प्रवालं सव्रीलं विपिनविवरे वेपयति या
स्फुरल्लीलं बालातपमधिकबालं वदति या ।
रुचिं सांध्यां वन्ध्यां विरचयति या वर्धयतु सा
शिवं मे कामाक्ष्याः पदनलिनपाटल्यलहरी ॥ ४६ ॥

46. எந்தச் செந்நிற வொளியானது தளிரை வெட்கத்தோடு காட்டு மூலையிலே நடுக்கமுறச் செய்கின்றதோ, பிரகாசிக்கின்ற அழகையுடைய பாலஸூர்யனை எது சிறிய சிசு என்று இகழ்ந்து பேசுகின்றதோ, அந்திவானத்து ஒளியை யாதொரு பயனுமில்லாத மலடியாகச் செய்கின்றதோ, காமாக்ஷியின் திருவடித் தாமரைகளிலிருந்து அலைமேல் அலையாகப் பெருகும் அந்தச் செந்நிற வொளியானது என்னுடைய மங்களங்களை விருத்தி செய்வதாக.

किरञ्ज्योत्स्नारीतिं नखमुखरुचा हंसमनसां
वितन्वानः प्रीतिं विकचतरुणाम्भोरुहरुचिः ।
प्रकाशः श्रीपादस्तव जननि कामाक्षि तनुते
शरत्कालप्रौढिं शशिशकलचूडप्रियतमे ॥ ४७ ॥

47. காமாக்ஷியம்மையே! சந்திரகலையைச் சூடிய பரமசிவனின் காதலியே! உம்முடைய திருவடியானது, நகங்களின் முன் பாகங்களின் காந்தியாலே ஹம்ஸர்களின் (ஸன்னியாஸிகளின்) மனதுகளிலே நிலாவைப் பொழிந்துகொண்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

டும், அப்பொழுது அலர்ந்த தாமரை மலர்களின் காந்தியை யுடையதாகி, இன்பத்தை (எங்கும்) பரப்பிக்கொண்டும், ஒளியழகு வாய்ந்ததாகி, சரத்காலத்தின் முதிர்ந்த அழகைப் பெற்று விளங்குகின்றது.

नखाङ्कूरस्मेरद्युतिविमलगङ्गाम्भसि सुखं
कृतस्नानं ज्ञानामृतममलमास्वाद्य नियतम् ।
उदञ्चन्मञ्जीरस्फुरणमणिदीपे मम मनो
मनोज्ञे कामाक्ष्याश्चरणमणिहर्म्ये विहरताम् ॥ ४८ ॥

48. என்னுடைய மனமானது, எந்நாளும் நகங்களாகிய முளைகளின் புன்முறுவல் என்னும் காந்தியாகிய தூய கங்கா தீர்த்தத்தில் சுகமாக ஸ்நானஞ்செய்வதும், தோஷமற்ற தான ஞானமாகிய அமிர்தத்தை எந்நாளும் பருகுவதுமாகி, சிலம்புகளின் காந்திகளால் மணிவிளக்கை யுடையதும் மனதிற்கு இன்பம் விளைவிப்பதுமான காமாக்ஷியின் திருவடியாகிய சிறந்த மாளிகையின் மேன்மாடத்திலே (ஏறியிருந்து) எந்நாளும் களித்துக்கொண்டிருப்பதாக.

भवाम्भोधौ नौकां जडिमविपिने पावकशिखा-
ममर्त्येन्द्रादीनामधिमुकुटमुत्तंसकलिकाम् ।
जगत्तापे ज्योत्स्नामकृतकवचःपञ्जरपुटे
शुकस्त्रीं कामाक्ष्या मनसि कलये पादयुगलीम् ॥ ४९ ॥

49. பிறவிப்பெருங்கடலிலே தோணியாகவும், ஜடத்தன்மை (அஞ்ஞானம்) ஆகிய அடர்ந்த காட்டிலே அக்னி ஜ்வாலையாகவும், அடிவணங்குகின்ற தேவேந்திரன் முதலானவர்களுடைய திருமுடிகளிலேயுள்ள சிரோபூஷணமான பூமொட்டாகவும், ஜகத்தின் தாபங்களுக்கு (தாபங்களைப் போக்குவதற்கு) நிலாவாகவும், யாராலும் இயற்றப்படாத (அநாதியாகவுள்ள) சொற்களாலான வேதமாகிய கூட்டினுள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இருக்கும்) பெண்கிளியாகவும் உள்ளதான காமாக்ஷியின் சரணயுகளத்தை (என்) மனதிலேஅமைத்துக்கொள்கிறேன்.

परात्मप्राकाश्यप्रतिफलनचुञ्चुः प्रणमतां
मनोज्ञस्त्वत्पादो मणिमुकुरमुद्रां कलयते ।
यदीयां कामाक्षि प्रकृतिमसृणाः शोधकदशां
विधातुं चेष्टन्ते बलरिपुवधूटीकचभराः ॥ ५० ॥

50. காமாக்ஷியே! எந்த (திருவடியாகிய) கண்ணாடிக்கு, இயற்கையிலே மென்மைவாய்ந்தவையான (பலன் என்னும் அசுரனை யழித்த இந்திரனுடைய பத்தினி) இந்திராணியின் அடர்ந்த கூந்தல்கள் (கண்ணாடியை) துடைத்து சுத்தஞ் செய்யுங் கருவியின் நிலையைப்பெற விரும்பி அசைந்தாடுகின்றனவோ (முயல்கின்றனவோ), அடிவணங்குகின்றவர்களுக்கு பரமாத்மாவின் ஸ்வரூபத்தை வெளிப்படுத்தும் பிரதிபிம்பத்தைக் காட்டுந் திறமையுடையதும் மனத்திற்கு இன்பத்தை யளிப்பதுமான உம்முடைய அந்தத் திருவடியானது, மணியாலான கண்ணாடி என்னும் பெயருக்கு உரியதாக விளங்குகின்றது.

अविश्रान्तं तिष्ठन्नकृतकवचःकन्दरपुटी-
कुटीरान्तः प्रौढं नखरुचिसटालीं प्रकटयन् ।
प्रचण्डं खण्डत्वं नयतु मम कामाक्षि तरसा
तमोवेतण्डेन्द्रं तव चरणकण्ठीरवपतिः ॥ ५१ ॥

51. காமாக்ஷியே! யாராலும் இயற்றப்படாமல் அனாதியாகவுள்ள வேதம் என்னும் குகையின் உட்புறமாகிய வாஸஸ்தானத்தில் சோர்வின்றி இருந்துகொண்டும், நகங்களின் காந்திகளான பிடரிமயிரைப் பெருமைதோன்ற உதறிக்கொண்டும், உம்முடைய திருவடியாகிய சிங்கமானது என்னுடைய (தமோகுணம்) அஞ்ஞானமாகிய பயங்கர

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மான பெரிய யானையை விரைவிலே துண்டு துண்டாகப் பிளந்தெறிவதாக.

पुरस्तात्कामाक्षि प्रचुररसमाखण्डलपुरी-
पुरंध्रीणां लास्यं तव ललितमालोक्य शनकैः ।
नखश्रीभिः स्मेरा बहु वितनुते नूपुररवै-
श्चमत्कृत्या शङ्के चरणयुगली चाटुरचनाः ॥ ५२ ॥

52. காமாக்ஷியே! உம்முடைய சரணயுகளம் என்னும் ஸ்திரீயானவள், தன்முன் நடைபெறுகின்றதான இந்திர லோக ஸ்திரீகளுடைய மிகுந்த ரஸமுள்ளதும் அழகு வாய்ந்ததுமான லாஸ்யம் என்னும் நர்த்தனத்தைக் கண்டு, நகங்களின் காந்திகளால் மெல்லெனச் சிரிப்பவளாகி, நூபுரங்களின் ஒலிகளாலே பிரீதிவார்த்தைகளை சமத்காரமாக அதிகம் வெளியிடுகின்றாள் என்று நினைக்கிறேன்.

सरोजं निन्दन्ती नखकिरणकर्पूरशिशिरा
निषिक्ता मारारेर्मुकुटशशिरेखाहिमजलैः ।
स्फुरन्ती कामाक्षि स्फुटरुचिमये पल्लवचये
तवाधत्ते मैत्रीं पथिकसुदृशा पादयुगली ॥ ५३ ॥

53. காமாக்ஷியே! தாமரையைப் பழிக்கும் எழிலுடையதான உம்முடைய சரணயுகளம் என்னும் ஸ்திரீயானவள், நகங்களின் கிரணங்கள் என்னும் பச்சைக் கர்ப்பூரத்தால் குளிர்ச்சிபெற்றவளாயும், மன்மதனை யழித்த பரமசிவனுடைய திருமுடியிலுள்ள சந்திரகலையினின்றும் பெருகுகின்ற பனித்திவலைகளால் நனைந்தவளாயும், (தன்னிடமிருந்தே) வெளிப்படுகின்றவையான காந்திகள் ஆகிய தளிர்களின்மீது புரளுகின்றவளாயும், (தன்னைவிட்டு வேறுநாடு சென்ற) பிரயாணியின் காதலியோடு (நட்புடைய) சமானமான நிலையை அடைகின்றாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

नतानां संपत्तेरनवरतमाकर्षणजपः
प्ररोहत्संसारप्रसरगरिमस्तम्भनजपः ।
त्वदीयः कामाक्षि स्मरहरमनोमोहनजपः
पटीयान्नः पायात्पदनलिनमञ्जीरनिनदः ॥ ५४ ॥

54. காமாக்ஷியே! நமஸ்கரிப்பவர்களுக்குச் செல்வத்தை வரவழைத்து அளிக்கும் ஆகர்ஷண மந்திரமாயும், நன்றாக வளரும் ஸம்ஸாரத்தினுடைய செழிப்பின் மிகுதியை (வளர வொட்டாது) தடுக்கும் ஸ்தம்பன மந்திரமாயும், காமனை யழித்த பரமசிவனுடைய மனத்தையும் மோஹமுறச் செய்யும் மோஹன மந்திரமாயும் விளங்குவதான உம்முடைய திருவடித் தாமரைகளிலுள்ள சிலம்புகளின் தெளிவான இனிய ஒலியானது எம்மைக் காப்பதாக.

वितन्वीथा नाथे मम शिरसि कामाक्षि कृपया
पदाम्भोजन्यासं पशुपरिवृढप्राणदयिते ।
पिबन्तो यन्मुद्रां प्रकटमुपकम्पापरिसरं
दृशा नानन्द्यन्ते नलिनभवनारायणमुखाः ॥ ५५ ॥

55. பசுக்களாகிய ஜீவகோடிகளுக்கு பதியாகிய பரமசிவனுடைய இன்னுயிர்க் காதலியே! எம்பிராட்டியே! காமாக்ஷியே! கம்பாநதியின் பக்கத்திலே தெளிவாகப் பதிந்துள்ள எந்தத் திருவடிகளின் சுவடுகளைத் தங்கள் கண்களால் ஆர்வத்தோடு கண்டு களித்து தாமரையோனான பிரும்மா, நாராயணன் முதலியவர்கள் ஸகலவிதமான ஸம்பத்துகளின் வளர்ச்சியையும் பெற்று ஸந்தோஷிக்கின்றார்களோ, (அத்தகைய) திருவடித் தாமரைகளை என் தலைமீது வைப்பது என்பதை கிருபையோடு செய்தருளுவாயாக.

प्रणम्रोद्यद्‌वृन्दारकमुकुटमन्दारकलिका-
विलोलल्लोलम्बप्रकरमयधूमप्रचुरिमा ।
प्रदीप्तः पादाब्जद्युतिविततिपाटल्यलहरी-
कृशानुः कामाक्ष्या मम दहतु संसारविपिनम् ॥ ५६ ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

56. அடிவணங்கி யெழுகின்ற தேவர்களின் திருமுடி களிற் சூடிய மந்தார மலர்களிலே ஸஞ்சரிக்கின்ற வண்டு களின் அடர்த்தியான கூட்டம் என்னும் புகையை மிகுதி யாகவுடையதாயும், நன்ருக ஜ்வலிக்கின்றதாயும், காமாக்ஷி யின் திருவடித் தாமரைகளின் ஒளித்திரள் என்னும் செம்மை நிறத்தின் ப்ரவாஹமாய் விளங்கும் அக்கினியானது எனது ஸம்ஸாரமாகிய படர்ந்த காட்டை எரித்தொழிப்பதாக.

वलक्षश्रीर्ऋक्षाधिपशिशुसदृक्षैस्तव नखै-
र्जिघृक्षुर्दक्षत्वं सरसिरुहभिक्षुत्वकरणे ।
क्षणान्मे कामाक्षि क्षपितभवसंक्षोभगरिमा
वचोवैचक्षण्यं चरणयुगली पक्ष्मलयतात् ॥ ५७ ॥

57. காமாக்ஷி! நக்ஷத்திரங்களுக்கு நாயகனுன சந்திர னுடைய இளம்பிறையை யொத்தவைகளான (உம்முடைய) நகங்களாலே வெண்ணிலாவை யுடையதும், தாமரைகளை ஏழைகளாக்கும் திறமையைப் பெற விரும்புகின்றதும், ஒரு க்ஷணப் பொழுதிலேயே ஸம்ஸாரமாகிய துக்க மயமான இரு ளின் அடர்த்தியை அழித்துவிடுவதுமான உம்முடைய சரண யுகளம் (என்னும் சந்திர மண்டலங்களைக் கொண்ட வானம்) எனக்கு வாக்கின் தெளிவை செழிக்கச் செய்வதாகுக.

समन्तात्कामाक्षि क्षततिमिरसंतानसुभगा-
ननन्ताभिर्भाभिर्दिनमनु दिगन्तान्विरचयन् ।
अहंताया हन्ता मम जडिमदन्तावलहरि-
र्विभिन्तां संतापं तव चरणचिन्तामणिरसौ ॥ ५८ ॥

58. காமாக்ஷியே! எல்லையற்ற காந்திகளால் எந்நாளும் எல்லாத் திசைகளின் எல்லைகளிலும் படர்ந்துள்ள இருளை யெல்லாம் அழித்து, அவற்றை மனோஹரமான அழகு வாய்ந்தவைகளாகச் செய்துகொள்பவையான உம்முடைய திருவடிகளாகிய இந்தச் சிந்தாமணியானது, அஞ்ஞான

Ih Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாகிய யானையை ஸம்ஹாரஞ் செய்யும் சிங்கம் போன்ற தாய், அகங்காரத்தை முற்றும் ஒழிப்பதாய், என்னுடைய (ஸம்ஸார துக்கமாகிய) தாபத்தைப் போக்கி யருள்வதாக.

दधानो भास्वत्तामभृतनिलयो लोहितवपु-
र्विनम्राणां सौम्यो गुरुरपि कवित्वं च कलयन् ।
गतौ मन्दो गङ्गाधरमहिषि कामाक्षि भजतां
तमःकेतुर्मातस्तव चरणपद्मो विजयते ॥ ५९ ॥

59. கங்காதரராகிய பரமசிவனுடைய ராணியே! காமாக்ஷியே! அன்னையே! உம்முடைய திருவடித் தாமரையானது, ஒளிமிகுந்து விளங்குந் தன்மையால் சூரியனாகவும், அமிர்தமயமாய் இருப்பதால் சந்திரனாகவும், சிவந்த வடிவாக அமைந்ததால் செவ்வாயாகவும், அடிவணங்குகின்றவர்களுக்கு ஸௌம்மியமாகவும் குருவாகவும் அருளுவதால் (ஸௌம்மியனான) புதனாகவும் (கிரஹமாகிய) குருவாகவும், கவித்தன்மையோடு பொருந்தியிருப்பதால் (கிரஹமாகிய) சுக்கிரனாகவும், (மந்தகதியை யுடையதாகையால்) நடையாலே சனியின் தன்மையைப் பெற்றதாகவும், தன்னைப் பூஜிப்பவர்களுடைய (தமோகுணத்திற்கு) அஞ்ஞானத்திற்கு விரோதியாகி அஞ்ஞானத்தை யழிப்பதால், தமம் என்னும் இராகுவாகவும் கேதுவாகவும், (இவ்வாறு, நவ க்ரஹங்களுமாய்) சிறந்து விளங்குகின்றது.

நவ க்ரஹங்களும் தேவியின் திருவடியிலே அந்தர்கதம் ஆகையால், திருவடியை வணங்குவோர் நவக்ரஹங்களையும் பூஜை செய்த பலனைப் பெறுவார்கள் என்பது கருத்து.

नयन्तीं दासत्वं नलिनभवमुख्यानसुलभ-
प्रदानाद्दीनानाममरतरुदौर्भाग्यजननीम् ।
जगज्जन्मक्षेमक्षयविधिषु कामाक्षि पदयो-
र्धुरीणामीष्टे कस्तव भणितुमाहोपुरुषिकाम् ॥ ६० ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

60. காமாக்ஷியே! தாமரையிலே தோன்றிய நான்முகன் முதலியவர்களைக் குற்றேவல் செய்யும் அடிமைகளாக்கிக் கொண்டும், ஏழை யெளியவர்களுக்கு எளிதாகப் பெறமுடியாத அரும்பொருளை அளிப்பதால் தெய்வத்தன்மை பொருந்திய கல்பக விருக்ஷங்களுக்கும் இழிவான நிலைமையை உண்டு பண்ணிக்கொண்டும், ஜகத்தின் தோற்றம், ரக்ஷை, அழிவு ஆகிய காரியங்களிலே நிர்வாஹ சக்தியுடையதான உம்முடைய திருவடிகளின் ஆண்மையை (ஆற்றலை) வர்ணிப்பதற்கு வல்லவர் யார்?

जनोऽयं संतप्तो जननि भवचण्डांशुकिरणै-
रलब्ध्वैकं शीतं कणमपि परज्ञानपयसः ।
तमोमार्गे पान्थस्तव झटिति कामाक्षि शिशिरां
पदाम्भोजच्छायां परमशिवजाये मृगयते ॥ ६१ ॥

61. அன்னையே! காமாக்ஷியே! பரம மங்கள மூர்த்தியான சிவபிரானின் மனைவியே! ஸம்ஸாரமாகிய வெங்கதிரோனுடைய கிரணங்களாகிய வெயிலால் வெதும்பிப் பரிதவித்து, பரமஞானமாகிய தண்ணீரின் குளிர்ச்சி தருகின்ற ஒருசிறு திவலையையுங்கூடப் பெருதவனுகி, அஞ்ஞானமாகிய இருண்ட வழியிலே திரிந்து உழலும் இந்த ஆள் (தாஸனுகிய நான்), அதிவேகமாகவே (இப்பொழுதே) உம்முடைய திருவடிகளாகிய தாமரைகளினுடைய குளிர்ந்த நிழலை அடைய விரும்பித் தேடுகின்ருன்.

जयत्यम्ब श्रीमन्नखकिरणचीनांशुकमयं
वितानं बिभ्राणे सुरमुकटसंघट्टमसृणे ।
निजारुण्यक्षौमास्तरणवति कामाक्षि सुलभा
बुधैः संविन्नारी तव चरणमाणिक्यभवने ॥ ६२ ॥

62. அன்னையே! காமாக்ஷியே! (உம்முடைய) நகங்களின் ஒளிகள் என்னும் சீனதேசத்து வெண்பட்டாகிய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அழகுவாய்ந்த மேற்கட்டியை யுடையதாயும், தேவர்களுடைய கிரீடங்கள் உராய்வதால் பளபளவென்னும் காந்தியை யுடையதாயும், தன்னிடத்தில் இயல்பாகவே யமைந்ததான செந்நிறம் என்னும் சிவந்த பட்டுகளை கீழ்விரிப்பாகவுடைய தாயும் விளங்குகின்றதான உம்முடைய திருவடிகளாகிய மாணிக்க மாளிகையிலே, ஸம்வித்ஞானம் என்னும் பெண் மணியானவள் ஞானிகளால் எளிதிலே சென்றடையக் கூடிய வளாக விளங்குகிருள்.

प्रतीमः कामाक्षि स्फुरिततरुणादित्यकिरण-
श्रियो मूलद्रव्यं तव चरणमद्रीन्द्रतनये ।
सुरेन्द्राशामापूरयति यदसौ ध्वान्तमखिलं
धुनीते दिग्भागानपि च महसा पाटलयते ॥ ६३ ॥

63. மலையரசன் பெற்ற மகளே! காமாக்ஷியே! உம்முடைய திருவடியானது, உதித்து எழுகின்ற பால ஸூர்யனுடைய கிரணங்களின் காந்திக்கு அடிப்படைக் காரணமாகிய மூலப்பொருள் (சூரியன்) என்றே நிச்சயிக்கிறோம். ஏனென்ருல், இந்தத் திருவடியானது தேவேந்திரனுடைய ஆசையை (இந்திரனுடைய ஆசையாகிய கிழக்குத் திசையைச் சூரியன் தன் கிரணங்களால் நிரப்புவதுபோல) நிறைவேற்றுகின்றது; (அஞ்ஞானம் என்னும்) இருளையெல்லாம் அழித்து விடுகின்றது; தன்னுடைய பேரொளியால் எல்லாத் திசைகளையும் சிவந்தவையாகச் செய்கின்றது.

महाभाष्यव्याख्यापटुशयनमारोपयति वा
स्मरव्यापारेर्ष्यापिशुननिटिलं कारयति वा ।
द्विरेफाणामध्यासयति सततं वाधिवसतिं
प्रणम्रान्कामाक्ष्याः पदनलिनमाहात्म्यगरिमा ॥ ६४ ॥

64. காமாக்ஷியின் திருவடித் தாமரைகளுக்கு அமைந்த பெருமையின் ஆதிக்கமானது, அடிவணங்குவோர்களை, (வியா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கரண ஸூத்ரங்களுக்கு) மஹா பாஷ்யம் என்னும் வியாக்கியானத்தை இயற்றும் திறமைவாய்ந்த (பதஞ்சலியாக அவதரித்த) ஆதிசேஷனுகிய சயனத்திலே (மஹா விஷ்ணுவாக) ஏறி யமரும்படி செய்விக்கும்; அல்லது, மன்மதனுடைய காரியத்தைக் கண்டு கோபங்கொண்டு விழித்த நெற்றியை யுடையவனுக (முக்கண்ணனுக)ச் செய்விக்கும்; அல்லது, வண்டுகளின் உறைவிடமாகிய தாமரையிலே எப்பொழுதும் வாழ்பவனுக (நான்முகனுக)ச் செய்விக்கும்.

மும்மூர்த்திகளும் தங்களுக்குரிய பெருமைகளை தேவியினுடைய பாதங்களிலே பணிந்துதான் பெற்ருர்கள் ஆகையால், திருவடி தொழுவோர் எவராயினும் தாம் தாம் விரும்பிய பேறுகளைப் பெறுவார்கள் என்பது கருத்து.

विवेकाम्भस्स्रोतस्स्नपनपरिपाटीशिशिरिते
समीभूते शास्त्रसरणहलसंकर्षणवशात् ।
सतां चेतःक्षेत्रे वपति तव कामाक्षि चरणो
महासंवित्सस्यप्रकरवरबीजं गिरिसुते ॥ ६५ ॥

65. காமாக்ஷியே! மலைமகளே! உம்முடைய திருவடியானது, வெள்ளநீரைப் பாய்ச்சுவதற்கான பாசன வாய்க்கால்களை வகுப்பதான பகுத்தறிவு (விவேகம்) என்னும் ஸாதனத்தால் நீர்வளமுடையதாயும், சாஸ்திரங்களாகிய கலப்பைகளைக் கொண்டு சிந்தனை செய்தல் ஆகிய உழுதலின் காரணமாக ஸமமாகச் செய்யப்பட்டதாயுமுள்ள (ஸம நோக்கையுடையதான) நல்லவர்களுடைய சித்தமாகிய வயலிலே ஸம்வித்ஞானமாகிய சிறந்த பயிரை விளைவிக்கும் திறமை வாய்ந்த நல்ல விதையை விதைக்கின்றது.

விவேகமும் சாஸ்திரப் பயிற்சியும் மனதைப் பண்படுத்துகின்றன; ஆயினும், தேவியின் பாதாரவிந்தமானது மனதிலே பக்தியை ஊன்றி யிருக்கச் செய்தால் மட்டுமே, ஆத்மஞானம் பெற்று மோக்ஷமடையலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

दधानो मन्दारस्तबकपरिपाटीं नखरुचा
वहन्दीप्तां शोणाङ्गुलिपटलचाम्पेयकलिकाम् ।
अशोकोल्लासं नः प्रचुरयतु कामाक्षि चरणो
विकासी वासन्तः समय इव ते शर्वदयिते ॥ ६६ ॥

66. (பிரளய காலத்தில் எல்லாவற்றை ஒடுக்குகின்றவரான) பரமசிவனுடைய காதலியே! காமாக்ஷியே! (உம்முடைய) நகங்களின் காந்தியால் மந்தார விருக்ஷத்தின் பூங்கொத்தின் அமைப்பை யுடையதாயும், செந்நிறமுடைய விரல்களாகிய ஒளி வீசுகின்ற செண்பக மொட்டுகளின் காந்தியையுடையதாயும், வஸந்த காலத்தைப்போல மலர்ச்சி பெற்றதாயும் விளங்குகின்றதான உம்முடைய திருவடியானது, அசோகோல்லாஸத்தை (துன்பம் சிறிதும் கலவாத பேரின்பத்தை, அசோக மலர்களின் மலர்ச்சியை) நமக்கு அதிகரிக்கச் செய்வதாக.

வஸந்த காலத்திலே மந்தார மலர்களையும் செண்பக மலர்களையுமுடைய பூஞ்சோலைபோலத் தோன்றும் தேவியின் திருப்பாதம் அசோக மலர்களையு முடையதாகி நமக்கு ஆனந்தத்தைப் பெருகச் செய்யட்டும் என்பது ஶ்லேஷையின் கருத்து. 92-வது சுலோகத்தின் அடிக்குறிப்பையும் காண்க.

नखांशुप्राचुर्यप्रसृमरमरालालिधवलः
स्फुरन्मञ्जीरोद्यन्मरकतमहश्शैवलयुतः ।
भवत्याः कामाक्षि स्फुटचरणपाटल्यकपटो
नदः शोणाभिख्यो नगपतितनूजे विजयते ॥ ६७ ॥

67. மலையரசன் பெற்ற மகளே! காமாக்ஷியே! தங்களுடைய திருவடிகளினுடைய பரிசுத்தமான செம்மை நிறமாகிய வேஷத்தை யுடையதாகி சோணம் என்னும் பெயரையுடைய நதியானது, (உம்முடைய) நகங்களின் காந்திகளாகிய கூட்டமாக நீந்திச் செல்லுகின்ற அன்னப் பறவைகளின் வரிசைகளால் வெண்ணிறமுடையதாயும், ஒளி வீசுகின்ற சிலம்பு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

களினின்றும் எழுகின்றதான மரகதங்களின் ஒளியாகிய பாசியோடு கூடியதாயும் சிறந்து விளங்குகின்றது.

धुनानं पङ्कौघं परमसुलभं कण्टककुलै-
र्विकासव्यासङ्गं विदधदपराधीनमनिशम् ।
नखेन्दुज्योत्स्नाभिर्विशदरुचि कामाक्षि नितरा-
मसामान्यं मन्ये सरसिजमिदं ते पदयुगम् ॥ ६८ ॥

68. காமாக்ஷியே! (பாபங்களாகிய) சேற்றின் குவியலை அழிப்பதும், (தீச்செயல்களைச் செய்கின்றவர்களான) முட்களால் அடையமுடியாத மேன்மையுடையதும், பிறரை எதிர்பாராமல் சுதந்திரமுடையதாய் எப்பொழுதும் மலர்ச்சியுடைமையால் அழகுவாய்ந்ததும், நகங்களாகிய சந்திரர்களின் நிலவொளிகளால் அதிகம் காந்திபெற்று விளங்குவதுமான உம்முடைய இந்தச் சரணயுகளமானது (சேற்றிலே உண்டாகிச் சேற்றைச் செழிக்கச் செய்வதும், காம்புகளிலே முட்களை யுடையதும், தான் மலர்ச்சி யுறுவதற்கு ஸூர்யனுடைய உதவியை நாடுவதும், ஒரு சந்திரனைக் கண்டாலும் வாடுவதுமான தாமரை மலர்போல் அல்லாத) ஓர் ஒப்பற்ற தாமரை மலர் என்றே கருதுகிறேன்.

करीन्द्राय द्रुह्यत्यलसगतिलीलासु विमलैः
पयोजैर्मात्सर्यं प्रकटयति कामं कलयते ।
पदाम्भोजद्वन्द्वं तव तदपि कामाक्षि हृदयं
मुनीनां शान्तानां कथमनिशमस्मै स्पृहयते ॥ ६९ ॥

69. காமாக்ஷியே! உம்முடைய திருவடித் தாமரைகள் இரண்டும் மெல்ல மெல்ல நடந்து செல்வதாகிய விளையாட்டுகளில் கஜேந்திரனோடு பகை கொள்ளுகின்றன; பரிசுத்தமான தாமரை மலர்களிடம் பொறாமை காட்டுகின்றன; காமத்தை விளைவிக்கின்றன; ஆயினும் சாந்தர்களும் மனன

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சீலர்களுமான முனிவர்களின் சித்தமானது உம்முடைய சரண யுகளத்திலே எப்பொழுதும் ஆசைகொள்கின்றது, ஏன்?

மனோவிருத்திகளை நிரோதஞ் செய்த காரணத்தால் மெதுவாக நடக்கும் மதயானையை யொத்த சித்தத்தை யுடையவர்களாய், ஜீவ ப்ரஹ்மைக்யத்தை மனனஞ் செய்யும் முனிவர்கள், யானை நடையைப் பழிக்கும் நடையுடைய உமது பாதங்களை விரும்பலாமா? சுத்தஸத்துவ ஸ்வரூபமுடைய தன்மையால் பரிசுத்தமான ஹ்ருதய கமலத்தை யுடைய முனிவர்கள் அத்தகைய கமலங்களைப் பழிக்கும் திருவடிகளை யடைய ஆசைகொள்ளலாமா? காமங்களை வெறுத்து ஒதுக்கிய சாந்தசீலர்கள் காமத்தை விளைவிக்கும் திருவடிகளை விரும்பலாமா? கூடாது; ஆயினும், அவர்களுடைய சித்தம் விரும்புகின்றதே! ஏன் என்றால் சரணயுகளமாகிய மத்தகஜத்தின் மந்தகமனமும் பாதகமலங் களின் தூய்மையும் அவர்கள் பெறுவதற்குரிய அநுகூலப் பொருள் களேயாம்; மோக்ஷ காமனையையும் உமது சரணங்கள் பரிபூர்த்தி செய்வதால் உமது திருப்பாதங்களையே முனிவர்கள் விரும்புகிறார்கள்.

निरस्ता शोणिम्ना चरणकिरणानां तव शिवे
समिन्धाना संध्यारुचिरचलराजन्यतनये ।
असामर्थ्यादेनं परिभवितुमेतत्समरुचां
सरोजानां जाने मुकुलयति शोभां प्रतिदिनम् ॥ ७० ॥

70. மங்கள ஸ்வரூபிணியான (பரமசிவனின் பத்தினி யான) சிவையே! மலையரசன் பெற்ற மகளே! உமது திருவடி களுடைய காந்திகளின் செம்மையால் ஸந்திகாலத்துச் செவ் வானத்தின் ஒளியானது, தோல்வியடைந்து (அதனாலுண் டான கோபத்தால் அதிகம் சிவந்து) ஜ்வலிக்கின்றதாகி, (தன்னை அவமானஞ்செய்த) இதை (இந்த பாதாரவிந்தங் களின் செவ்வொளியை) அவமானப்படுத்துவதற்குத் திறமை யில்லாமையால், அதற்குச் சமானமான காந்தியையுடையவை களான தாமரைகளின் காந்தியை ஒவ்வொரு நாளும் (தாம ரைகள் கூம்புவதால்) மறைந்துகொள்ளும்படி செய்கின்றது என்று அறிந்துகொண்டேன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

उपादिक्षद्दाक्ष्यं तव चरणनामा गुरुरसौ
मरालानां शङ्के मसृणगतिलालित्यसरणौ ।
अतस्ते निस्तन्द्रं नियतममुना सख्यपदवीं
प्रपन्नं पाथोजं प्रति दधति कामाक्षि कुतुकम् ॥ ७१ ॥

71. காமாக்ஷியே! உம்முடைய திருவடி என்னும் பெயர் கொண்ட இந்த ஆசார்யர் ஹம்ஸங்களுக்கு (ஹம்ஸர்களாகிய ஸன்னியாசிகளுக்கு) அழகிய நடையின் (ஒழுக்கத்தின்) லளிதமான முறையிலே திறமைபெறும் வழியை உபதேசித்தார் என்று நினைக்கிறேன். அதனாலேதான், அந்த ஹம்ஸங்கள் (பரமஹம்ஸர்கள்) எப்பொழுதும் ஊக்கத்தோடு இந்த (ஆசார்யரான) திருவடியோடு தோழமைபெற்ற தாமரையினிடத்திலே தவிராது ஆவல் கொள்கின்றன (திருவடியின் ஸாதிருச்யத்தாலே தாமரை மலரிடத்திலும் இடையறாத பக்தியோடு ஜாக்கிரதையாக நடந்துகொள்கிறார்கள்.)

दधानैः संसर्गं प्रकृतिमलिनैः षट्पदकुलै-
र्द्विजाधीशश्लाघाविधिषु विदधद्भिर्मुकुलताम् ।
रजोमिश्रैः पद्मैर्नियतमपि कामाक्षि पदयो-
र्विरोधस्ते युक्तो विषमशरवैरिप्रियतमे ॥ ७२ ॥

72. (ஒற்றைப்படையான) ஐந்து பாணங்களையுடையவனுக்குப் பகைவரான பரமசிவன் அதிகப் பிரியங்கொள்கின்ற காதலியே! காமாக்ஷியே! இயற்கையிலேயே மலினம் (மாசு, கருநிறம்) உள்ளவையான வண்டுகளின் கூட்டங்களோடு சேர்ந்து பழகுகின்றவையாயும், த்விஜர்களுக்கு ராஜாவான சந்திரனுடைய (ஒளி பரப்புவதான) சிறந்த செய்கைகளைக் கண்டு வாடிச் சுருங்குகின்றவைகளாயும், ரஜஸ் (அழுக்கு, மகரந்தப் பொடி)களோடு கலந்ததாயுமுள்ள

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தாமரைகளோடு எப்பொழுதுமே உம்முடைய இரண்டு திருவடிகளுக்கும் விரோதம் இருப்பது பொருத்தமே.

துஷ்டர்களோடு பழகிக்கொண்டும், பிராம்மணச் சிரேஷ்டர்களின் நடவடிக்கையைக் காணச் சகியாமல் தலைமறைந்தும் திரியும் கெட்டவர்கள், நல்லவர்கள்போலத் தோன்றினாலும், அவர்களுக்கு உம்முடைய திருவடியின் சகாயம் கிடையாது என்பது கருத்து.

कवित्वश्रीमिश्रीकरणनिपुणौ रक्षणचणौ
विपन्नानां श्रीमन्नलिनमसृणौ शोणकिरणौ ।
मुनीन्द्राणामन्तःकरणशरणौ मन्दसरणौ
मनोज्ञौ कामाक्ष्या दुरिततहरणौ नौमि चरणौ ॥ ७३ ॥

73. கவித்தயாகிய லக்ஷ்மியை அடைவிக்கும் திறமை வாய்ந்தவைகளும், துன்பமுற்றவர்களைக் காப்பாற்றும் வல்லமை பெற்றவைகளும், அழகிய தாமரைகளைப்போல எழில் வாய்ந்தவைகளும், சிவந்த காந்தியை யுடையவைகளும், முனிவரர்களின் அந்தக்கரணங்களை இருப்பிடங்களாகக் கொண்டவைகளும், மென்னடை யுடையவைகளும், (காண்போர்) மனதிற்கு இன்பத்தைத் தருகின்றவைகளும், பாபங்களை அழிக்கின்றவைகளுமான காமாக்ஷியின் சரணங்களை நமஸ்கரிக்கின்றேன்.

परस्मात्सर्वस्मादपि च परयोर्मुक्तिकरयो-
र्नखश्रीभिर्ज्योत्स्नाकलिततुलयोस्ताम्रतलयोः ।
निलीये कामाक्ष्या निगमनुतयोर्नाकिनतयो-
र्निरस्तप्रोन्मीलन्नलिनमदयोरेव पदयोः ॥ ७४ ॥

74. சிறந்த பொருள் அனைத்திலும் மிகச்சிறந்தவையும், முக்தியை அளிப்பவையும், நகங்களின் காந்திகளால் நிலவோடு ஒப்பிடத்தக்கவையும், சிவந்த அடித்தலங்களையுடையவையும், வேதங்களால் ஸ்துதிக்கப் பெற்றவையும், தேவர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

களால் வணங்கப்பெற்றவையும், நன்றாக மலர்ந்த தாமரை மலர்களின் கொழுப்பை யடக்கியவையுமான காமாக்ஷியின் பாதங்கள் இரண்டிலுமே லயித்து அவற்றையே (உறைவிடமாக) நிலயமாகக் கொண்டிருக்கிறேன்.

स्वभावादन्योन्यं किसलयमपोदं तव पदं
म्रदिम्ना शोणिम्ना भगवति दधाते सदृशताम् ।
वने पूर्वस्येच्छा सततमवने किं तु जगतां
परस्येत्थं भेदः स्फुरति हृदि कामाक्षि सुधियाम् ॥७५॥

75. பகவதியே! காமாக்ஷியே! தளிரும் உம்முடைய இந்தப்பாதமும் மென்மையாலும் செந்நிறத்தாலும் ஒன்றோடொன்று இயற்கையிலேயே ஒப்புமை கொண்டுள்ளன; ஆயினும், "முன்னதாகிய தளிருக்கு வனத்தில் ஆசை, ஆனால் பின்னதாகிய உமது பாதத்திற்கு எப்பொழுதும் உலகங்களின் ரக்ஷையில் (அவனத்தில்) ஆசை" என்ற இவ்வாறான வேற்றுமை பேரறிவாளர்களின் மனதிலே தோன்றுகின்றது.

कथं वाचालोऽपि प्रकटमणिमञ्जीरनिनदैः
सदैवानन्दार्द्रान्विरचयति वाचंयमजनान् ।
प्रकृत्या ते शोणच्छविरपि च कामाक्षि चरणो
मनीषानैर्मल्यं कथमिव नृणां मांसलयते ॥ ७६ ॥

76. காமாக்ஷியே! உம்முடைய சரணமானது, மணிச் சிலம்புகளின் தெளிவான இன்னொலிகளால் பெரிய வாயாடியாக இருந்தும் எவ்வாறு வாயை அடக்கிய ஸன்னியாசிகளை எப்பொழுதும் நிரம்பித் ததும்பும் ஆனந்தத்தையுடையவர்களாகச் செய்கின்றது? இயற்கையாகவே சிவந்தநிறமுடையதாயினும், எவ்வாறு மனிதர்களின் புத்திக்கு (மாசற்று விளங்குந் தன்மையை, வெண்மையை) நிர்மலத்தன்மையைப் போஷிக்கின்றது?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

चलत्तृष्णावीचीपरिचलनपर्याकुलतया
मुहुर्भ्रान्तस्तान्तः परमशिववामाक्षि परवान् ।
तितीर्षुः कामाक्षि प्रचुरतरकर्माम्बुधिममुं
कदाहं लप्स्ये ते चरणमणिसेतुं गिरिसुते ॥ ७७ ॥

77. பரமசிவனுடைய வாமபாகத்திலுள்ள காதலியே! காமாக்ஷியே! மலைமகளே! மேன்மேலும் எழுகின்ற ஆசைகளாகிய அலைகள் மோதுவதாலுண்டான குழப்பத்தால் அடிக்கடி மயக்கமுற்றவனும், நிலைகுன்றி மெய் சோர்ந்தவனும், (வலியிழந்து) தன்னம்பிக்கையற்றவனுமுள்ள நான் இந்த இருவினையாகிய மிகப் பெரிதான சமுத்திரத்தைக் கடந்து அக்கரை செல்ல விரும்பியவனாய், உம்முடையதான சரணமாகிய ரத்னமயமாய் விளங்கும் ஸேதுவை (அணையை) எப்பொழுது அடைவேனோ?

विशुष्यन्त्यां प्रज्ञासरिति दुरितग्रीष्मसमय-
प्रभावेण क्षीणे सति मम मनःकेकिनि शुचा ।
त्वदीयः कामाक्षि स्फुरितचरणाम्भोदमहिमा
नभोमासाटोपं नगपतिसुते किं न कुरुते ॥ ७८ ॥

78. காமாக்ஷியே! மலையரசன் பெற்ற மகளே! பாபங்களாகிய கோடைகாலத்து வெயிலால் என்னுடைய பிரக்ஞை ஆகிய நதி வரண்டுபோய், என் மனமாகிய மயிலானது துக்கத்தால் மெலிந்து வாடியிருந்தும், உம்முடைய சரணமாகிய ஒளிபொருந்திய கார்மேகத்தின் பெருமையானது ஆவணி மாதத்துப் பெருஞ்செயலைச் செய்யலாகாதா?

கோடையால் ஆறுகள் வற்றி வரண்டுபோவதையும் மயில்கள் வாடுவதையும் காணச் சகியாத கார்மேகம் பெருவெள்ளமாக மழை பொழிவதைப் போலவே, தேவியின் சரணங்களும், மக்கள் மனம் வருந்தி பாபச்செயல்களால் அறிவிழந்திருப்பதே காரணமாக அருள் மழை பொலிப்பன என்பது கருத்து.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

विनम्राणां चेतोभवनवलभीसीम्नि चरण-
प्रदीपे प्राकाश्यं दधति तव निर्धूततमसि ।
असीमा कामाक्षि स्वयमलघुदुष्कर्मलहरी
विघूर्णन्ती शान्तिं शलभपरिपाटीव भजते ॥ ७९ ॥

79. காமாக்ஷியே! அடிவணங்குகின்றவர்களுடைய மனமாகிய வீட்டின் மேன்மாடத்தின் தளத்திலே, உம்முடைய சரணமாகிய நல்விளக்கானது இருளை விரட்டிவிட்டுப் பிரகாசத்தை யளிக்கின்றபோது, அளவுபடாதவையும் எண்ணிறந்தவையுமான கொடிய தீவினைகளின் குவியல்கள் (அலையலையாக) விட்டிற்பூச்சிகளின் கும்பல்களைப்போலத் தாமாகவே சுற்றிக் கவிந்துகொண்டு விழுந்து அழிந்துவிடுகின்றன.

विराजन्ती शुक्तिर्नखकिरणमुक्तामणितते-
र्विपत्पाथोराशौ तरिरपि नराणां प्रणमताम् ।
त्वदीयः कामाक्षि ध्रुवमलघुवह्निर्भववने
मुनीनां ज्ञानाग्नेररणिरयमङ्घ्रिर्विजयते ॥ ८० ॥

80. காமாக்ஷியே! உம்முடையதான இந்தத் திருவடியானது, நகங்களின் காந்திகளாகிய முத்துமணிக் குவியலுக்குப் பிறப்பிடமான முத்துச்சிப்பியாகவும், அடிவணங்குகின்ற மனிதர்களுக்கு துன்பமாகிய சமுத்திரத்தில் (அக்கரை சேர்ப்பதான) புணையாகவும், ஸம்ஸாரமாகிய காட்டிலே பெருந்தீயாகவும் விளங்குவதாகி, முனிவர்களுடைய ஞானமாகிய தீயைக் கடைந்துகொடுக்கும் அரணியாகச் சிறந்து விளங்குகின்றதன்றோ?

சிப்பிக்கு ஒரு முத்தாகத் தான் இருக்கும்; திருவடியாகிய முத்துச் சிப்பியிலோ, நககிரணங்களாகிய எண்ணிறந்த முத்து வரிசைகள் நெருக்கமாக அமைந்திருக்கின்றன என்பது அற்புதம்; ஒரு வஸ்துவே நீரிலே தெப்பமாகவும் காட்டிலே தீயாகவும் முனிவர்களின் மனதிலே தீயைக் கடைந்தெடுக்கும் கடைகோலாகவும் இருப்பது அதினும் அற்புதம்; ஆயினும் இது மெய்யே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

समस्तैः संसेव्यः सततमपि कामाक्षि विबुधैः
स्तुतो गन्धर्वस्त्रीसुललितविपञ्चीकलरवैः ।
भवत्या भिन्दानो भवगिरिकुलं जृम्भिततमो-
वलद्रोही मातश्चरणपुरुहूतो विजयते ॥ ८१ ॥

81. காமாக்ஷியம்மையே! தங்களுடைய சரணமாகிய தேவேந்திரனானவன், எப்பொழுதுமே இடைவிடாமல் தேவர்கள் (ஞானிகள்) அனைவராலும் நன்றாக ஆட்செய்வதற்கு உரியவனாகவும், கந்தருவ மகளிருடைய மிகச் சிறந்த வீணைகளின் இன்னிசையால் ஸ்துதிசெய்யப் பெற்றவனாகவும், ஸம்ஸாரம் என்னும் மலைத்தொடர்ச்சியை பிளந்தெறிந்தும், படர்ந்த அஞ்ஞானமான (தமோகுணமான) இருள் என்னும் பலாஸுரனை யழித்தவனாகவும் சிறந்து விளங்குகிறான்.

ஞானிகளுக்குப் புகலாகியும், கந்தர்வர்களால் புகழப்பெற்றும், தேவியின் திருவடியானது அஞ்ஞானத்தை யொழித்து ஸம்ஸாரத்தை அழித்துவிடுகின்றது.

वसन्तं भक्तानामपि मनसि नित्यं परिलस-
द्घनच्छायापूर्णं शुचिमपि नृणां तापशमनम् ।
नखेन्दुज्योत्स्नाभिः शिशिरमपि पद्मोदयकरं
नमामः कामाक्ष्याश्चरणमधिकाश्चर्यकरणम् ॥ ८२ ॥

82. எப்பொழுதும் பக்தர்களின் மனதிலே வஸந்தமாயிருந்தும் (வாழ்வதாயிருந்தும்), சூழ ஒளிவீசுகின்ற கனச்சாயையால் (அடர்ந்த எழிலால்) நிறைந்ததாயிருந்தும், சுசியாயிருந்தும் (பரிசுத்தமுடையதாயிருந்தும்), மனிதர்களுக்கு தாபசமனமாயும் (தாபத்திரயங்களையும் நீக்குவதாயும்), நகங்களாகிய சந்திரர்களின் நிலாவொளிகளால் சிசிரமாய் (குளிர்ந்ததாய்) இருந்தும், தாமரைகளை மலரச்செய்வ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தாயும் அதிக ஆச்சரியத்தை விளைவிப்பதான காமாக்ஷியின் சரணத்தை நமஸ்காரஞ் செய்கிறோம்.

வஸந்தம், கனச்சாயையால் நிறைந்தது, சுசி, தாபசமனம், சிசிரம், முதலிய சொற்களின் சிலேஷைப் பொருளால் வஸந்தம், கார் காலம், கோடை, சரத்காலம், சிசிரம், (அதனுள் அடங்கிய ஹேமந்தம்) ஆகிய ஆறு பருவங்களையும் குறிப்பிட்டு, எப்பொழுதும் ஒன்றுக் கொன்று விரோதமான காலங்களை ஒத்திருப்பதால், தேவியின் பாதம் பரமாச்சரியத்தை விளைவிக்கிறது என்று காட்டுகிறார். மேலும், நிலாவும் சிசிரருது என்னும் பனிக்காலமும் தாமரை மலரை வாடச் செய்யும்; அவைகளின் தன்மைகளையுடைய திருவடியோ, தாமரைகளுக்கு தேவியின் பாதத்தை ஒத்தவை என்னும் பெருமையை அளிப்பது என்று வியப்புத் தோன்றுமாறு, பத்மோதயகரம் என்னும் பதமானது பிரயோகிக்கப் பெற்றது.

कवीन्द्राणां नानाभणितिगुणचित्रीकृतवचः-
प्रपञ्चव्यापारप्रकटनकलाकौशलनिधिः ।
अधःकुर्वन्नब्जं सनकभृगुमुख्यैर्मुनिजनै-
र्नमस्यः कामाक्ष्याश्चरणपरमेष्ठी विजयते ॥ ८३ ॥

83. காமாக்ஷியின் சரணமாகிய ப்ரஹ்மாவானவர், கவியரசர்களின் நானாவிதமான சொற்களின் சேர்க்கையால் அழகு பெற்றதான சொற்கள் நிறைந்த உலகை (வாங்மய ப்ரபஞ்சத்தை) அமைப்பதாகிய தொழிலால் வெளிப்படுத்திய கலைத்திறமை நிரம்பியவராகி, தாமரையைத் தன் கீழாக்கிக்கொண்டும் (ஆஸனமாக்கிக்கொண்டும், தன் அழகால் தாமரையை இகழ்ந்தும்) ஸனகர் பிருகு முதலான முனிவர்களால் வணங்கத்தக்கவராகிச் சிறந்துவிளங்குகிறார்.

தேவியின் சரணத்தை ஸ்மரிப்பதாலேதான், மஹா கவிகளாகி ஆச்சரியமாக விளங்கும் சொல்லுலகத்தைச் சிருஷ்டிக்கிறார்கள். ஆகையால் தேவியின் சரணகமலம் நான்முகனை விடச் சிறந்தவராய் பிறரைக்கொண்டு சிருஷ்டித்தொழில் நடத்துபவரான மஹா ப்ரஹ்மாவாக விளங்குகின்றது என்கிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

भवत्याः कामाक्षि स्फुरितपदपङ्केरुहभुवां
परागाणां पूरैः परिहृतकलङ्कव्यतिकरैः ।
नतानामामृष्टे हृदयमुकुरे निर्मलरुचि
प्रसन्ने निश्शेषं प्रतिफलति विश्वं गिरिसुते ॥ ८४ ॥

84. காமாக்ஷியே! மலைமகளே! தங்களுடையவையான மலர்ந்து ஒளி வீசுகின்ற திருவடித் தாமரைகளினின்று எழுந்த மகரந்தத் தூளிகளாலானவையும் களங்கங்களின் சுவடுகளைப் போக்குகின்றவையுமான குவைகளால் நன்றாகத் துடைக்கப்பெற்று, (உம்மை) வணங்குவோர்களின் ஹ்ருதயமாகிய கண்ணாடியானது மாசற்ற ஒளியுடையதாயும் தெளிவுடையதாயும் விளங்கும்போது, அகில உலகமும் அங்கே பிரதிபலிக்கின்றது.

तव त्रस्तं पादात्किसलयमरण्यान्तरमगा-
त्परं रेखारूपं कमलमसुमेवाश्रितमभूत् ।
जितानां कामाक्षि द्वितयमपि युक्तं परिभवे
विदेशे वासो वा शरणगमनं वा निजरिपोः ॥ ८५ ॥

85. காமாக்ஷியே! உம்முடைய திருவடிக்குப் பயந்து நடுங்கிப்போய், தளிரானது காட்டிற்குள்ளே புகுந்துகொண்டது; தாமரையோ, இரேகையின் உருவங்கொண்டு இந்தத் திருவடியையே புகலிடமாகக் கொண்டுள்ளது; தோற்றவர்கள் அவமானப்படும்போது, அயல்நாட்டிலே சென்று வசித்தல், அல்லது, தன்னுடைய பகைவனையே சரண்புகுதல் என்று இரண்டில் ஒன்றுதான் பொருந்திய செயலாகும்.

गृहीत्वा याथार्थ्यं निगमवचसां देशिककृपा-
कटाक्षार्कज्योतिश्शमितममताबन्धतमसः ।
यतन्ते कामाक्षि प्रतिदिवसमन्तर्द्रढयितुं
त्वदीयं पादाब्जं सुकृतपरिपाकेन सुजनाः ॥ ८६ ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

86. காமாக்ஷியே! ஆசார்யனுடைய கிருபை நிறைந்த கடாக்ஷங்களாகிய ஸூர்யகிரணங்களினால், மமகாரத்தால் ஏற்பட்ட பந்தமான அஞ்ஞானம் என்னும் இருளை நீக்கிக் கொண்டவர்களான ஸாதுக்கள், தங்கள் புண்யத்தின் பயனாக வேதவசனங்களின் உண்மைப் பொருளைக் கண்டறிந்து, உம்முடையதான (அந்த உண்மைப் பொருளான) திருவடித் தாமரையை எந்நாளும் (தங்கள்) மனதிலே நிலைபெற்றிருக்கும்படி செய்ய முயல்கின்றார்கள்.

जडानामप्यम्ब स्मरणसमये त्वच्चरणयो-
र्भ्रमन्मन्थक्ष्माभृद्घुमघुमितसिन्धुप्रतिभटाः ।
प्रसन्नाः कामाक्षि प्रसभमधरस्पन्दनकरा
भवन्ति स्वच्छन्दं प्रकृतिपरिपक्का भणितयः ॥ ८७ ॥

87. காமாக்ஷியே! அறிவில்லாதவர்களுக்கும் உமது சரணங்களை ஸ்மரிக்கும்பொழுதே, சுழல்கின்ற மத்தாகிய மந்திரமலையால் 'கும் கும்' என்று ஒலிக்கின்ற சமுத்திர ஜலத்தை ஒத்தவைகளாயும் தெளிவுள்ளவைகளாயும் இயல்பாகவே கனிந்தவைகளாயும் வலியவே உதடுகளைத் துடிக்கச் செய்பவையுமான வாக்குகள் தாமாகவே தோன்றுகின்றன.

தேவியின் திருவடிகளைத் தியானிப்பதால் உண்டாகும் கவிதையானது சுவையுடையதாயும் தெளிய கருத்துடையதாயும் மந்த புத்தியுடையவர்களின் உதடுகளினின்றும் சமுத்திர கோஷத்தோடு புறப்படுகின்றது.

वहन्नप्यश्रान्तं मधुरनिनदं हंसकमसौ
तमेवाधःकर्तुं किमिव यतते केलिगमने ।
भवस्यैवानन्दं विदधदपि कामाक्षि चरणो
भवत्यास्तद्द्रोहं भगवति किमेवं वितनुते ॥ ८८ ॥

88. காமாக்ஷியே! பகவதியே! தங்களுடைய இந்தப் பாதமானது இடைவிடாமல் இன்னொலியுடைய ஹம்ஸகத்தை (சிலம்பை) (தலைமீது) ஏந்திக்கொண்டிருந்தும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதையே (ஹம்ஸகமாகிய அழகிய அன்னப்பறவையையே) உல்லாஸமாகச் செல்லும் இனிய நடையிலே தனக்குக் கீழ்ப் பட்டதாகச் செய்வதிலே ஏன் பிரயத்தினம் செய்வதுபோலத் தோன்றுகின்றது? பவதேவனின் ஆனந்தத்தையே அளித்துக் கொண்டிருந்தும், அதனை (பவம் என்னும் ஸம்ஸாரத்தை)ப் பகைத்து அழிப்பதையே ஏன் இவ்வாறு செய்து முடிக்கின்றது?

यदत्यन्तं ताम्यत्यलसगातवार्तास्वपि शिवे
तदेतत्कामाक्षि प्रकृतिमृदुलं ते पदयुगम् ।
किरीटैः संघट्टं कथमिव सुरौघस्य सहते
मुनीन्द्राणामास्ते मनसि च कथं सूचिनिशिते ॥ ८९ ॥

89. மங்கள ஸ்வரூபிணியான சிவையே! காமாக்ஷியே! இயற்கையிலேயே மென்மை பொருந்தியதும், 'மென்னடை' என்னும் சொல்லை யுபயோகித்தாலும் மிக்க தாபத்தையடைவதுமான உம்முடைய இந்தச் சரணயுகளமானது, தேவர்களின் ஸமூஹத்தின் (தலைவணங்குவதால்) கிரீடங்கள் உராய்தலை எப்படித்தான் பொறுத்துக்கொள்கின்றதோ? மனனசீலர்களான முனிவரர்களுடையதான ஊசிபோன்ற கூர்மையுடைய (ஏகாக்ர) சித்தத்தில் எப்படி வீற்றிருக்கின்றதோ?

मनोरङ्गे मत्के विबुधजनसंमोदजननी
सरागव्यासङ्गं सरसमृदुसंचारसुभगा ।
मनोज्ञा कामाक्षि प्रकटयतु लास्यप्रकरणं
रणन्मञ्जीरा ते चरणयुगलीनर्तकवधूः ॥ ९० ॥

90. காமாக்ஷியே! விபுதர்களுக்கு (தேவர்களுக்கு, ஞானிகளுக்கு) பேரானந்தத்தை யுண்டுபண்ணுவதான உம்முடைய சரணயுகளம் ஆகிய நாட்டியப் பெண்ணானவள் என்னுடைய மனதாகிய நடனமேடையிலே ஒலிசெய்கின்ற சிலம்புகளையுடையவளாகியும், ராகத்தோடு (சங்கீதத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தோடு, செந்நிறத்தோடு) பொருந்திய வகையிலே, இனிதாயும் மெதுவாயுமுள்ள பாத ஸஞ்சாரத்தாலே (அடியெடுத்து வைப்பதாலே) அழகுவாய்ந்தவளாகியும், மனதிற்கு இன்பமளிப்பவளாகியும், லாஸ்யம் என்னும் நாட்டிய விசேஷத்தை ஆடிக்காட்டுவாளாக.

परिष्कुर्वन्मातः पशुपतिकपर्दं चरणराट्
पराचां हृत्पद्मं परमभणितीनां च मकुटम् ।
भवाख्ये पाथोधौ परिहरतु कामाक्षि ममता-
पराधीनत्वं मे परिमुषितपाथोजमहिमा ॥ ९१ ॥

91. காமாக்ஷியம்மையே! பசுக்களாகிய ஜீவகோடிகளுக்கு அதிபதியான பரமசிவனுடைய ஜடாமகுடத்தையும், மிகவும் உத்கிருஷ்டமான வேத வசனங்களின் திருமுடி போன்ற உபநிஷத்தாகிய மகுடத்தையும், (ஸம்ஸார ஸங்கங்களின்றும் மீண்டவர்களான) விரக்தர்களின் ஹ்ருதயங்கள் என்னும் தாமரை மலரையும் செம்மையாக்கிக் கொண்டும் தாமரையின் பெருமையை அபகரித்துக்கொண்டும் விளங்கின்றவரான உம் திருவடியாகிய அரசர், ஸம்ஸாரமாகிய சமுத்திரத்திலே மமகாரமாகிய கொடுங்கோலுக்கு ஆட்பட்டிருக்கும் என் நிலைமையை நீக்கி (தமக்கே ஆளாக்கி) யருள்வாராக.

மமதாபராதீனத்வம் என்பதற்கு மமதையால் ஸ்வதந்திரனயிருக்கும் நிலைமையை என்று பொருள் கொள்ளலாம்; அப்போது, பரமசிவனுடைய ஜடா மகுடமும் வேதாந்தங்களும் முனிவர்களின் இருதயமும் தேவியின் பாதாரவிந்தங்களால் ஸ்வதந்திர மிழந்து பரதந்திரமாய் இருப்பதுபோல, நானும் இருக்குமாறு அருளவேண்டும் என்னும் கருத்துத் தோன்றும்.

प्रसूनैः संपर्कादमरतरुणीकुन्तलभवै-
रभीष्टानां दानादनिशमपि कामाक्षि नमताम् ।
स्वसङ्गात्कङ्केलिप्रसवजनकत्वेन च शिवे
त्रिधा धत्ते वार्तां सुरभिरिति पादो गिरिसुते ॥ ९२ ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

92. காமாக்ஷியே! மங்கள ஸ்வரூபிணியான சிவையே! மலைமகளே! தெய்வமகளின் கூந்தல்களிலேயுள்ள மலர்களோடு சேர்ந்துள்ள தன்மையாலும், (உம்மை) நமஸ்கரிப்பவர்களுடைய விருப்பங்களையெல்லாம் எப்பொழுதுமே அளிக்கின்ற தன்மையாலும், தன்னுடைய சேர்க்கையால் அசோக மரங்களிலே தளிரும் பூவும் தோன்றுவதற்குக் காரணமாகும் தன்மையாலும், இவ்வாறு மூன்று வகையாலும் ஸுரபி என்னும் உத்தமமான பெயரைப் பெற்று விளங்குகின்றது.

ஸுரபி: என்னும் சொல்லிற்கு, வாஸனை யுடையது என்றும் காமதேனு என்றும் வஸந்த காலம் என்றும் பொருள்; தேவியின் திருவடி இம்மூன்றின் தன்மைகளையும் ஒருங்கே உடையாதாகையால், இம் மூன்றையும் விட திருவடியே இந்தப் பெயருக்கு உரியதாகின்றது என்கிறார். அசோக விருக்ஷம் வஸந்த காலத்திலே தான் தளிர்விட்டு புஷ்பிக்கும்; உத்தமிகளின் பாத ஸ்பர்சத்தாலே தான் அது பூக்கத் தொடங்கும் என்னும் கொள்கைப்படி, தேவியின் பாத ஸ்பர்சமானது எக்காலத்திலும் அசோக மரத்தைப் பூக்கச் செய்யுமாதலால், அப்பாதத்தை நித்யமாகவுள்ள வஸந்தம் என்று சிறப்பித்துக் கூறுகிறார். பாத ஸ்பர்சத்தால் சோகமின்மையினின்றும் (அசோகத்தினின்று) ஆனந்தம் பெருகுகின்றது என்று த்வனி.

महामोहस्तेनव्यतिकरभयात्पालयति यो
विनिक्षिप्तं स्वस्मिन्निजजनमनोरत्नमनिशम् ।
स रागस्योद्रेकात्सततमपि कामाक्षि तरसा
किमेवं पादोऽसौ किसलयरुचिं चोरयति ते ॥ ९३ ॥

93. காமாக்ஷியே! உம்முடைய எந்தத் திருவடி என்பவர், மஹாமோஹன் என்னும் திருடனால் ஏற்படக்கூடிய ஆபத்திற்குப் பயந்து தம்மிடத்திலே சேமித்து வைக்கப் பெற்றதான தம் அடியார்களின் மனதாகிய ரத்னத்தை (இராப்பகலாக) எப்பொழுதும் பாதுகாத்துக் கொண்டிருக்கின்றாரோ, இந்தத் திருவடி என்னும் அவரே தளிரின் காந்தியைத் தம்முடைய ராகத்தின் (ஆசையின், செந்நிறத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தின்) மிகுதியால் இவ்வாறு பலாத்காரமாக எப்பொழுதுமே திருடிக் கொண்டிருக்கிருரே, இது ஏன்?

सदा स्वादुंकारं विषयलहरीशालिकणिकां
समास्वाद्य श्रान्तं हृदयशुकपोतं जननि मे ।
कृपाजाले फालेक्षणमहिषि कामाक्षि रभसा-
द्गृहीत्वा रुन्धीथास्तव पदयुगीपञ्जरपुटे ॥ ९४ ॥

94. என் அன்னையே! நெற்றிக்கண்ணை யுடையவரான பரமசிவனுடைய ராணியே! காமாக்ஷியே! (கிருபையாகிய வலையை யுடையவளே! சரண யுகளமாகிய கிளிக் கூண்டை யுடையவளே!) 'இனிது! இனிது!' என்று (இனிதாகக்) கூவிக்கொண்டு, பஞ்சேந்திரியங்களாலும் அனுபவிப்பதற்குரியதான விஷய ஸுகமாகிய அலைபோலப் பரப்பிய நொய் யரிசியைப் புசித்துப் புசித்துக் களைப்படைந்ததான என்னுடைய ஹ்ருதயமாகிய கிளிக்குஞ்சை (உம்முடைய) கிருபையாகிய வலையிலே வலியப் பிடித்துக்கொண்டு, உம்முடைய சரணயுகளமாகிய கூண்டினுள் அடைத்து வைப்பீராக.

கண்ணால் காமனை யழித்தவரையும் கடைக்கண் பார்வை என்னும் வலையால் வசப்படுத்தினவள் ஆதலால், நொய் போன்ற சிற்றின்பமாகிய காமத்திற்குத் தோற்றுப் போகும் என் மனதையும் கிருபாகடாக்ஷமாகிய வலையிலே அகப்படுத்திக்கொண்டு திருவடியாகிய கூட்டினுள் எப்பொழுதும் வாழும்படி செய்வது எளிது என்கிருர்.

धुनानं कामाक्षि स्मरणलवमात्रेण जडिम-
ज्वरप्रौढिं गूढस्थिति निगमनैकुञ्जकुहरे ।
अलभ्यं सर्वेषां कतिचन लभन्ते सुकृतिन-
श्चिरादन्विष्यन्तस्तव चरणसिद्धौषधमिदम् ॥ ९५ ॥

95. காமாக்ஷியே! (தன்னை) சிறிது ஸ்மரணஞ் செய்த மாத்திரத்திலே ஜடத்தன்மை (அஞ்ஞானம்) ஆகிய ஜ்வரத்தின் கடுமையைப் போக்குகின்றதும், வேதங்களாகிய லதா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கிருஹங்களின் உட்புறத்திலே மறைந்து கொண்டிருப்பதும், யாவருக்கும் கிடைக்கக் கூடாததுமான உமது சரணமாகிய இந்த ஸித்தௌஷதத்தை, எவரோ வெகு காலமாகத் தேடித் திரிந்த புண்ணியசாலிகளான சிலர் மட்டுமே கைப்பற்று கிறார்கள்.

रणन्मञ्जीराभ्यां ललितगमनाभ्यां सुकृतिनां
मनोवास्तव्याभ्यां मथिततिमिराभ्यां नखरुचा ।
निधेयाभ्यां पत्या निजशिरसि कामाक्षि सततं
नमस्ते पादाभ्यां नलिनमृदुलाभ्यां गिरिसुते ॥ ९६ ॥

96. காமாக்ஷியே! மலைமகளே! இனிதாக ஒலிக்கின்ற சிலம்புகளை யுடையவையும், அழகிய மென்னடை யுடையவை யும், புண்ணியசாலிகளின் மனதிலே வாழ்கின்றவையும், நகங்களின் காந்தியால் இருளை முற்றும் அழிப்பவையும், கணவனாலே தம்முடைய சிரஸ்ஸிலே வைத்துக் கொள்ளத் தக்கவையும், தாமரை மலர்களைப் போல மிருதுவாயிருப்ப வையுமான உம்முடைய பாதங்கள் இரண்டிற்கும் எப் பொழுதும் (என்னுடைய) நமஸ்காரம்.

सुरागे राकेन्दुप्रतिनिधिमुखे पर्वतसुते
चिराल्लभ्ये भक्त्या शमधनजनानां परिषदा ।
मनोभृङ्गो मत्कः पदकमलयुग्मे जननि ते
प्रकामं कामाक्षि त्रिपुरहरवामाक्षि रमताम् ॥ ९७ ॥

97. பௌர்ணமீ சந்திரனுக்குச் சமானமான முகத்தை யுடையவளே! மலைமகளே! தாயே! காமாக்ஷியே! திரிபுரங் களையும் அழித்த பரமசிவனுடைய (வாம பாகத்தி லமர்ந்த) பத்தினியே! என்னுடையதான மனமாகிய வண்டானது, நல்ல செந்நிறமுடையவையும், மனச் சாந்தியையே தனமாகக் கொண்ட முனிவர்களின் ஸமூஹத்திற்கு பக்தியின் உதவி யால் வெகு காலத்திற்குப் பிறகு கிடைக்கக்கூடியவையுமான

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உம்முடைய திருவடித் தாமரைகள் இரண்டிலும் விரும்பிய வாறு மிகுதியாக இன்புறுவதாக.

शिवे संविद्रूपे शशिशकलचूडप्रियतमे
शनैर्गत्यागत्या जितसुरवरेभे गिरिसुते ।
यतन्ते सन्तस्ते चरणनलिनालानयुगले
सदा बद्धुं चित्तप्रमदकरियूथं दृढतरम् ॥ ९८ ॥

98. மங்கள ஸ்வரூபிணியான சிவையே! ஸம்வித் ஞான வடிவமானவளே! சந்திரனுடைய கலையை (சிரோ பூஷணமாக)ச் சூட்டிக்கொண்டு விளங்கும் பரமசிவனுடைய உத்தம பத்தினியே! மலைமகளே! மெல்ல உலாவுகின்ற நடையழகாலே தேவேந்திரனுடைய யானையாகிய ஐரா வதத்தை வென்றவளே! உம்முடைய திருவடித் தாமரைகள் என்னும் கட்டுத்தறிகள் இரண்டிலும் சித்தங்கள் ஆகிய மதங்கொண்ட யானை மந்தையை மிகவும் கெட்டியாக எப் பொழுதும் கட்டி வைப்பதற்கு ஸாதுக்கள் இடைவிடாது (எப்பொழுதுமே) முயன்று வருகிறார்கள்.

यशः सूते मातर्मधुरकवितां पक्ष्मलयते
श्रियं दत्ते चित्ते कमपि परिपाकं प्रथयते ।
सतां पाशग्रन्थिं शिथिलयति किं किं न कुरुते
प्रपन्ने कामाक्ष्याः प्रणतिपरिपाटी चरणयोः ॥ ९९ ॥

99. அன்னையே! புகழைப் பெறச் செய்கின்றது; இனிய கவிதையை செழிக்கச் செய்கின்றது; (அழகு முத லான) செல்வத்தைத் தருகின்றது; சொல்ல வொண்ணாத தொரு பக்குவ நிலையை மனதில் உண்டாக்குகின்றது; ஸாதுக்களின் ஆசாபாசமாகிய சிக்கலை அவிழ்த்துவிடுகின் றது; காமாக்ஷியின் சரணங்கள் இரண்டிலும் அடிவணங்கு வதான முறையானது சரண்புகுந்தவன் விஷயமாக என் னென்ன தான் செய்யாமல் இருக்கின்றது?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

मनीषां माहेन्द्रीं ककुभमिव ते कामपि दशां
प्रधत्ते कामाक्ष्याश्चरणतरुणादित्यकिरणः ।
यदीये संपर्के धृतरसमरन्दा कवयतां
परीपाकं धत्ते परिमलवती सूक्तिनलिनी ॥ १०० ॥

100. எந்தக் கிரணத்தின் ஸம்பந்தம் ஏற்பட்டபோது கவிபுனைபவர்களுடைய பாசுரங்களாலாகிய தாமரையானது, (காவிய ரஸங்களாகிய) இனிய மகரந்தங்களை யுடையதாகியும், நறுமணம் பொருந்தியதாகியும், (திராக்ஷை, க்ஷீரம் முதலான பாகங்களால்) பரிபக்குவ நிலையை (மலர்ச்சியை) யுடையதாகின்றதோ, காமாக்ஷியாகிய உம்முடைய திருவடியாகிய உதய ஸூர்யனுடைய அந்தக் கிரணமானது, இந்திரனுடைய திசையாகிய கீழ்வானத்தைப் போல, (என்) புத்தியை ஒப்பற்றதொரு (தெளிவை யுடையதான) நிலைமையை அடையச் செய்கின்றது.

पुरा मारारातिः पुरमजयदम्ब स्तवशतैः
प्रसन्नायां सत्यां त्वयि तुहिनशैलेन्द्रतनये ।
अतस्ते कामाक्षि स्फुरतु तरसा कालसमये
समायाते मातर्मम मनसि पादाब्जयुगलम् ॥ १०१ ॥

101. அன்னையே! ஹிமவான் என்னும் மலையரசன் பெற்ற மகளே! காமாக்ஷியே! முன்பு நூற்றுக்கணக்கான ஸ்துதிகளால் நீ பிரஸன்னையான பொழுதே, மன்மதனை யழித்த பரமசிவனானவர் திரிபுரத்தைச் செயித்தார்; ஆதலால், (என்னிடம்) காலன் வருங்காலம் வரும்போதும், என்னுடைய மனதிலே உம்முடைய திருவடித் தாமரைகள் இரண்டும் முழு பலத்துடனே விளங்குவனவாகுக.

உம்முடைய திருவடியின் துணை கொண்டே மன்மத விஜயமும் திரிபுர தகனமும் நடைபெற்றன வாகையால், காலனை எதிர்த்து வெற்றி தருவதுவும் அதுவே என்று உம் திருவடியை என் மனதிலே வைத்துக்கொள்ள நீரே உதவவேண்டும் என்று பிரார்த்திக்கிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

पदद्वन्द्वं मन्दं गतिषु निवसन्तं हृदि सतां
गिरामन्ते भ्रान्तं कृतकरहितानां परिबृढे ।
जनानामानन्दं जननि जनयन्तं प्रणमतां
त्वदीयं कामाक्षि प्रतिदिनमहं नौमि विमलम् ॥ १०२॥

102. பிராட்டியே! காமாக்ஷியம்மையே! நடையிலே மந்தமானவையும், நல்லோர்களின் ஹ்ருதயத்திலே வாழ்கின்றவையும், இயற்றியவர் இல்லாதவையாகி அநாதியாகவுள்ள வேத வாக்குகளின் சிகரங்களாகிய உபநிஷத்பாகத்திலே உலாவுகின்றவையும், அடிவணங்குகின்ற மனிதர்களுக்கு ஆனந்தத்தை யுண்டுபண்ணுகின்றவையுமான உம்முடைய மாசற்ற திருவடிகள் இரண்டையும் எந்நாளும் நான் ஸ்துதித்துக் கொண்டிருக்கின்றேன்.

इदं यः कामाक्ष्याश्चरणनलिनस्तोत्रशतकं
जपेन्नित्यं भक्त्या निखिलजगदाह्लादजनकम् ।
स विश्वेषां वन्द्यः सकलकविलोकैकतिलकः
श्चिरं भुक्त्वा भोगान्परिणमति चिद्रूपकलया ॥ १०३ ॥

103. எல்லா உலகங்களுக்கும் பேரானந்தத்தை யுண்டு பண்ணுகின்றதும் காமாக்ஷியின் திருவடித் தாமரைகளை ஸ்துதிசெய்யும் நூறு பாடல்களைக் கொண்டதுமான இந்த சதகத்தை எவனொருவன் இடைவிடாது எப்பொழுதும் சிரத்தையோடு (ஜபத்தைப்போற் சொல்கிறானோ) பாராயணஞ் செய்கின்றானோ, அவன் எல்லோராலும் வணங்கத் தக்கவனாயும், கவிகளின் ஸமூஹங்களுக்கெல்லாம் (திலகம் போல்) ஒப்பற்ற நடுநாயகனாயும் நீண்டகாலம் போகங்களை அனுபவித்தபின், சித்ரூப கலையாகிய பரதேவதையின் ஸ்வரூபமாகவே ஆகின்றான்.

पादारविन्दशतकं संपूर्णम् ॥

பாதாரவிந்த சதகம் முற்றிற்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

॥ श्रीमूकपञ्चशती ॥

स्तुतिशतकम् ।

ஸ் து தி ச த க ம்

पाण्डित्यं परमेश्वरि स्तुतिविधौ नैवाश्रयन्ते गिरां
वैरिञ्चान्यपि गुम्फनानि विगलद्गर्वाणि शर्वाणि ते ।
स्तोतुं त्वां परिफुल्लनीलनलिनश्यामाक्षि कामाक्षि मां
वाचालीकुरुते तथापि नितरां त्वत्पादसेवादरः ॥ १ ॥

1. சர்வன் என்னும் பரமசிவனுடைய பத்தினியாகிய சர்வாணியே! பரமேசுவரியே! உம்மை ஸ்துதிக்கும் முறையிலே, (வாக்வல்லபனான) பிரமனுடைய சொல்வளங்களும் (சக்தியின்மையால்) கர்வம் நீங்கியவைகளாக, திறமையற்றுப் போகின்றன; ஆயினும், உம்முடைய திருவடிகளில் பணிவிடை செய்வதில் (எனக்கு) உள்ள பற்றானது, நன்கு மலர்ந்த கருநீல புஷ்பத்தைப் போன்ற கரிய கண்களையுடையவளே! காமாக்ஷியே! உம்மை ஸ்துதிப்பதற்கு என்னை மிகவும் வாக் விலாஸமுடையவனாகச் செய்கின்றது.

तापिञ्छस्तबकत्विषे तनुभृतां दारिद्र्यमुद्राद्विषे
संसाराख्यतमोमुषे पुररिपोर्वामाङ्कसीमाजुषे ।
कम्पातीरमुपेयुषे कवयतां जिह्वाकुटीं जग्मुषे
विश्वत्राणपुषे नमोऽस्तु सततं तस्मै परंज्योतिषे ॥ २ ॥

2. (பச்சை நிறத்தால்) தமால மரத்தின் பூங்கொத்தை நிகர்த்த காந்தியை யுடையதும், ஜீவர்களுடைய ஏழைத் தன்மையின் சுவட்டையும் அழிப்பதும், ஸம்ஸாரம் என்னும் இருளை யொழிப்பதும், திரிபுரங்களை யழித்த பரமசிவ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

னுடைய இடது தொடைப் புறத்திலே இன்பமாக அமர்ந்திருப்பதும், கம்பாநதியின் கரையை அடைந்திருப்பதும், கவி புனைகின்றவர்களின் நாக்கை வாஸஸ்தானமாக அடைந்திருப்பதும், ஜகத் முழுவதையும் காப்பாற்றும் வண்மையுடையதுமான (வர்ணிக்க வொண்ணாத) அந்தப் பரஞ்சோதிப் பொருளுக்கு எப்பொழுதும் (என்) வணக்கம் உரியதாகுக.

ये संध्यारुणयन्ति शंकरजटाकान्तारचन्द्रार्भकं
सिन्दूरन्ति च ये पुरंदरवधूसीमन्तसीमान्तरे ।
पुण्यं ये परिपक्वयन्ति भजतां काञ्चीपुरे मामभी
पायासुः परमेश्वरप्रणयिनीपादोद्भवाः पांसवः ॥ ३ ॥

3. எந்த பாததூளிகள் (பிரணய கலஹத்திலே வணங்குவதால்) மங்களங்களைச் செய்கின்றவரான பரமசிவனுடைய அடர்ந்த காடுபோன்ற ஜடைகளிலே யுள்ள பாலசந்திரனை மாலை வேளையிலுள்ள செவ்வானத்தை ஒத்ததாகச் சிவந்து விளங்கும்படி செய்கின்றனவோ, எந்த பாததூளிகள் தேவேந்திரனுடைய மனைவியின் நேர்வகிடு எடுக்கப்பெற்றதான கூந்தல்களின் மத்திய பாகத்தின் நடுவைச் செந்தூரப் பொடிகளை யுடையதாக விளங்கும்படி செய்கின்றனவோ, எந்தப் பாததூளிகள் காஞ்சீபுரத்திலே தங்களைப் பூஜிப்பவர்களுடைய புண்ணியத்தைப் பக்குவமாகிப் பயன்தரும்படி செய்கின்றனவோ, பரமேசுவரருடைய சிறந்த காதலியாகிய காமாக்ஷியின் பாதங்களில் அமைந்தவையான அத்தகைய இந்தத் தூளிகள் என்னை காத்தருள்வனவாகுக.

कामाडम्बरपूरया शशिरुचा कम्रस्मितानां त्विषा
कामारेरनुरागसिन्धुमधिकं कल्लोलितं तन्वती ।
कामाक्षीति समस्तसज्जननुता कल्याणदात्री नृणां
कारुण्याकुलमानसा भगवती कम्पातटे जृम्भते ॥ ४ ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

4. காம விலாஸங்களின் ஆடம்பரங்களால் நிறைந்ததாயும் சந்திர வொளியைப் போன்றதாயுமுள்ள அழகிய புன்முறுவல்களின் காந்தியால், காமனை யழித்த பரமசிவனுக்குக் காமக்கடல் அலைகளாலே கொந்தளிப்பதை அதிகரிக்கச் செய்பவளாயும், (அதனாலேயே) ஸஜ்ஜனங்கள் அனைவராலும் "காமாக்ஷியே!" என்று ஸ்துதி செய்யப்பெற்றவளாயும், மனிதர்களுக்கு மங்களங்களை யளிப்பவளாயும், கருணை ததும்பும் மனதையுடையவளாயும் விளங்கும் பகவதியான அம்பிகை கம்பாநதிக் கரையிலே வீற்றிருக்கிறாள்.

कामाक्षीणपराक्रमप्रकटनं संभावयन्ती दृशा
श्यामा क्षीरसहोदरस्मितरुचिप्रक्षालिताशान्तरा ।
वामाक्षीजनमौलिभूषणमणिर्वाचां परा देवता
कामाक्षीति विभाति कापि करुणा कम्पातटिन्यास्तटे ॥ ५॥

5. காமத்தினுடைய குன்றாத வல்லமையை நன்றாக விளங்கும்படி கண்ணாலே போஷித்து மதிப்பையுடையதாகச் செய்பவளாயும், யௌவன பருவத்தை யடைந்தவளாயும், (அதனாலே 'ஶ்யாமா' என்னும் பெயருக்கு உரியவளாயும், அல்லது கரியநிற முடையவளாயும்), பாலுக்கு உடன் பிறப்போ என்னும்படி வெண்மையான முறுவலின் காந்தியால் திக்குகளின் எல்லைகளிலுள்ள இருளையும் கழுவிப் போக்கியவளாயும், அழகிய கண்களையுடைய மங்கையருக்குத் தலைமைபெற்ற சூடாமணியாக விளங்குபவளாயும், (வாக்குகளுக்கு எட்டாதவளாயும்) வாக்குகளுக்குப் பரம அதிஷ்டான தேவதையாயுமுள்ள ஒப்பற்ற கருணையே கம்பாநதிக் கரையிலே காமாக்ஷி என்று சிறந்து விளங்குகின்றது.

श्यामा काचन चन्द्रिका त्रिभुवने पुण्यात्मनामानने
सीमाशून्यकवित्ववर्षजननी या कापि कादम्बिनी ।
माराराातिमनोविमोहनविधौ काचित्तमःकन्दली
कामाक्ष्याः करुणाकटाक्षलहरी कामाय मे कल्पताम् ॥ ६ ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

6. மூவுலகுகளிலும் கரியவொளி வீசுவதான சந்திரிகை ஒன்று உள்ளது; புண்ணியசாலிகளினுடைய முகத்திலே, எல்லையற்றதான கவிதையை மழைபோலே பொழிகின்ற மேக வரிசை ஒன்று உள்ளது; காமனை வென்ற பரமசிவனுடைய மனதை நன்ருக மயக்கும் தொழிலிலே (தமோமயமான) இருட்பிழம்பு போன்றதான ஒன்று உள்ளது; காமாக்ஷியின் கருணை வாய்ந்த கடைக்கண்களினின்று அலைமேலலையாகப் பெருகும் வெள்ளமாகிய அதுவே என் அபீஷ்டத்தை நிறைவேற்றுவதின் பொருட்டு அமைவதாக.

प्रौढध्वान्तकदम्बके कुमुदिनीपुण्यांकुरं दर्शय-
ञ्ज्योत्स्नासंगमनेऽपि कोकमिथुनं मिश्रं समुद्भावयन् ।
कालिन्दीलहरीदशां प्रकटयन्कम्रां नभस्यद्भुतां
कश्चिन्नेत्रमहोत्सवो विजयते काञ्चीपुरे शूलिनः ॥ ७ ॥

7. அடர்ந்து செறிந்த காரிருளிலே அல்லிமலர்களுடைய நல்வினைப் பயனின் முளையாகிய பிறைச் சந்திரனைத் தோன்றச்செய்தும், (அதனுல்) நிலா இல்லாத காலத்திலும் (நிலாப் பொழுதிலே மட்டும் புணர்கின்ற இயல்புடையவையான) சக்கிரவாகப் பறவைகளின் ஆணையும் பெண்ணையும் சேர்ந்திருக்கும்படி செய்தும், ஆகாசவெளி முழுவதிலும் யமுனை யாற்றின் கரிய நிறமுடைய வெள்ளம் போன்ற திருமேனி யொளியின் அழகு வாய்ந்ததும் ஆச்சரியமுடையதுமான நிலைமையை விளக்கிக் கொண்டும், சூலப்படையேந்திய பரமசிவனுடைய கண்களுக்கு ஆனந்தம் விளைப்பதான பெரிய திருவிழாப் போன்றது ஒன்று காஞ்சீபுரத்திலே சிறந்து விளங்குகின்றது.

கூந்தல் காரிருள் போன்றது; அங்கே யுள்ள இளம்பிறையாலும் எப்பொழுதும் நிலாக் காலமாயிருக்கிறது; அதனுல் சக்கிரவாக மிதுனம் போன்ற ஸ்தனங்கள் இடைவெளியின்றி யிருப்பது தெரிகின்றது. ஆகாசம் போல் நுண்ணிய இடையானது தாழ்ந்த கூந்தல்களின் ஒளியால் மறைந்துள்ளது; இவ்வாறு காமாக்ஷி பரமசிவனுடைய கண்ணுக்கு இனிய காட்சியாக விளங்குகிருள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

तन्द्राहीनतमालनीलसुषमैस्तारुण्यलीलागृहै-
स्तारानाथकिशोरलाञ्छितकचैस्ताम्रारविन्देक्षणैः ।
मातः संश्रयतां मनो मनसिजप्रागल्भ्यनाडिंधमैः
कम्पातीरचरैर्घनस्तनभरैः पुण्याङ्कुरैः शांकरैः ॥ ८ ॥

8. வாட்ட மில்லாத தமால மலரைப் போன்ற நீல வொளியுடையவையும், இளமைப் பருவத்து இன்ப விளை யாட்டுகளுக்கு அமைந்த உறைவிடங்களாயிருப்பவையும், நக்ஷத்திரங்களுக்கு நாயகனுன இளஞ் சந்திரனை அடையாள மாகக் கொண்டு விளங்குகின்ற கூந்தல்களை யுடையவையும், செந்தாமரை விழிகளை யுடையவையும், மனதிலே யெழுங் காமத்தின் வளர்ச்சிக்குக் காரணமானவையும், கடினமான ஸ்தனங்களையுடையவையும் (மங்களங்களை யருளும் பரம சிவனுக்கு உரியவையும்) மங்களங்களையே அருளுபவையும், கம்பாநதி தீரத்திலே நடமாடுகின்றவையுமான புண்ணிய மென்னும் கிழங்கினின்றும் முளைத்தெழுந்த முளைகளாலே (என்) அன்னையே! என் மனமானது செழிப்புற்று விளங்குவதாக.

மேன்மையைக் காட்டுவதற்காகப் பன்மையாக பஹுவசன மாகக் கூறி, மனஞ் செழிப்புறுவதையும் குறிப்பிடுகிறூர்; தேவியின் உருவமானது, நல்வினை யென்னும் கிழங்கிலே முளைத்து, கூந்தல், கண், கொங்கை முதலிய அவயவங்களையுடையதாய், நதி தீரத்தில் உல்லாஸமாக நடமாடுகின்ற அற்புதமான முளைகளாக உருவகப் படுத்தப் பெற்றது.

नित्यं निश्चलतामुपेत्य मरुतां रक्षाविधिं पुष्णती
तेजस्संचयपाटवेन किरणानुष्णद्युतेर्मुष्णती ।
काञ्चीमध्यगतापि दीप्तिजननी विश्वान्तरे जृम्भते
काचिच्चित्रमहो स्मृतापि तमसां निर्वापिका दीपिका ॥ ९ ॥

9. என்ன ஆச்சரியம்! நிகரற்றதொரு (ரத்னமய மான) தீபமானது, தான் எப்பொழுதும் அசைவற்றதாகி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மருத்துகள் (காற்றுகள், தேவர்கள்) ரக்ஷை பெறுமாறு போஷித்துக் கொண்டும், ஒளிக் குவாலின் வண்மை யால் (தேஜஸ் நிறைந்திருப்பதால்) தண்கதிரோனாகிய சந்திரனுடைய கிரணங்களையும் மங்கும்படி செய்துகொண்டும், நினைத்த பொழுதே நினைப்பவர்களின் அஞ்ஞானமாகிய இருளை அகற்றிக் கொண்டும், காஞ்சிப் பிரதேசத்திலுள்ள தாயினும் உலகம் முழுவதிலும் பேரொளியைக் உண்டுபண்ணிக் கொண்டும் பெருமையுடன் விளங்குகின்றது.

ஸ்ரீ காமாக்ஷி ஓர் அற்புதமான தீபம்; மற்றை விளக்குகள் ஏற்றி வைக்கப் பட்டால் மட்டுமே இருளைப் போக்குவன; அவையுள்ள இடங்களில் மட்டுமே ஒளி வீசுவன; இந்த தீபமோ, நினைத்த மாத்திரத்தில் அஞ்ஞானமாகிய காரிருளைப் போக்குவது; காஞ்சி என்னும் ஒரு இடத்திலே இருந்துகொண்டு உலகெங்கிலும் ஒளி வீசுகின்றது; மேலும் காற்றால் அசையாத ஜ்வாலையை யுடையது. மருத்துகளால் தனக்கு அபாயம் இல்லாதிருப்பது மட்டும் அன்று; அந்த மருத்துகளை ரக்ஷித்து விருத்தியாகும்படி செய்கின்றது; தண்ணளி பரப்பும் தன் குளிர்ந்த கிரணங்களால் குளிர்ந்த கிரணங்களையுடைய சந்திரனுடைய தேஜஸ்ஸும் பிரகாசியாமல் மங்கும்படி செய்கின்றது.

காஞ்சீதேசம் என்றால் நடுவிடம்; மேல் உலகங்கள் ஏழு, கீழ் உலகங்கள் ஏழு; இவற்றிற்கு நடுவிலே பூமி; பூமண்டலத்தின் நடுப் பாகமாகிச் சிறந்து விளங்குவது காஞ்சீபுரம். இரேழியில் ஏற்றிய தீபத்தைப்போல், உலகங்களுக்கெல்லாம் மத்தியபாகமாக அமைந்த காஞ்சீபுரத்திலே ஒளிரும் இவ் விளக்கு எல்லா உலகங்களுக்கும் ஒளி தருகின்றது.

कान्तैः केशरुचां चयैर्भ्रमरितं मन्दस्मितैः पुष्पितं
कान्त्या पल्लवितं पदाम्बुरुहयोर्नेत्रत्विषा पत्रितम् ।
कम्पातीरवनान्तरं विदधती कल्याणजन्मस्थली
काञ्चीमध्यमहामणिर्विजयते काचित्कृपाकन्दली ॥ १० ॥

10. மனதிற்கும் வர்ணனைக்கும் எட்டாததாய் எல்லா மங்களங்களுக்கும் பிறப்பிடமாய் (அவற்றைக் குலைகுலை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யாகத் தருவதான) கருணை வடிவு கொண்ட வாழை மரமானது, கம்பா நதிக்கரையிலுள்ள பூங்காவனத்தின் உட்பிரதேசத்தை, (தன்னுடைய) கூந்தலின் ஒளிகளுடைய அதிக அழகாலும் செழுமையாலும் வண்டுகளோடு கூடியதாகவும், (தன்னுடைய) மூந்த ஹாஸங்களால் பூக்களோடு கூடியதாகவும், (தன்) திருவடித் தாமரைகள் இரண்டின் காந்தியினல் தளிர்களோடு கூடியதாகவும் திருக்கண்களின் காந்தியால் தளங்களோடு கூடியதாயும் விளங்கும்படி செய்துகொண்டு, காஞ்சீ நகரத்தின் மத்திய பாகத்திலே, காஞ்சி என்னும் ஆபரணத்தின் நடுநாயகமா யமைந்த மஹாரத்னம் போல் சிறந்து விளங்குகின்றது.

குலைகுலையாக வேண்டிய மட்டும் பழங்களைத் தருவதாலும், கருணை என்னும் ஜலம் நிறைந்து ஜலமயமாய் இருப்பதாலும், தேவி வாழை என்று வர்ணிக்கப் பெற்ருள். ஒரு வாழையே ஒரு பூங்காவனம் போல் ஆய்விட்டது என்பது அதிசயம்; அதுவே மணியாகவும் விளங்குகின்றது என்பது இன்னும் பெரிய அதிசயம். காஞ்சீநகரம் அநேக திவ்யமான மணிகளைக் கோத்த மேகலையைப் போன்றுள்ளது என்றும் அம்மணிகள் எல்லாவற்றிலும் சிறந்த மஹா மணியாக விளங்குகிருள் ஸ்ரீ காமாக்ஷி என்றும் காஞ்சீமத்ய மஹாமணி: என்பதால் விளங்குகின்றது.

राकाचन्द्रसमानकान्तिवदना नाकाधिराजस्तुता
मूकानामपि कुर्वती सुरधुनीनीकाशवाग्वैभवम् ।
श्रीकाञ्चीनगरीविहाररसिका शोकापहन्त्री सता-
मेका पुण्यपरम्परा पशुपतेराकारिणी राजते ॥ ११ ॥

11. பசுக்களாகிய ஜீவகோடிகளின் பதியான பரமசிவனுடைய நல்வினைத் தொடரானது, வடிவுடையதாகியும், பௌர்ணமிச் சந்திரனை யொத்த காந்தியோடு விளங்கும் திருமுக மண்டலத்தை யுடையதாகியும், தேவராஜனுகிய இந்திரனுலே ஸ்துதிக்கப் பெற்றதாகியும், ஊமைகளுக்கு தேவலோகத்து நதியாகிய கங்கையின் வெள்ளத்தை யொத்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சொல்வளத்தை அளிப்பதாகியும், (விளையாட்டாகவே) ஸஜ்ஜனங்களின் துயரங்களை அழித்துவிடுவதாகியும், ஸ்ரீ காஞ்சிபுரத்திலே திருவிளையாடல் புரிவதில் ஆனந்தமுற்று ஒப்பற்றதாக விளங்குகின்றது.

தன்னைப் போன்ற ஊமைகளுக்கும் கங்கை வெள்ளம் போல், கவிதை ப்ரமபாவனமாய்த் தட்டுத்தடையின்றிப் பெருகும் என்கிறார்.

जाता शीतलशैलतः सुकृतिनां दृश्या परं देहिनां
लोकानां क्षणमात्रसंस्मरणतः संतापविच्छेदिनी ।
आश्चर्यं बहु खेलनं वितनुते नैश्चल्यमाबिभ्रती
कम्पायास्तटसीम्नि कापि तटिनी कारुण्यपाथोमयी ॥ १२ ॥

12. கருணை வெள்ளத்தையே தன் திருமேனியாகக் கொண்டதான ஒப்பற்றதோர் ஆறு, பனிமலையாகிய ஹிமவானிடத்திலே உற்பத்தியாகியும், நல்வினைகளைச் செய்த மனிதர்களுக்கு மட்டுமே காணக் கிடைப்பதாகியும், உலக மக்களின் தாபங்களையெல்லாம் (தன்னை) ஒரு நொடிப் பொழுது நினைத்த மாத்திரத்திலே அகற்றிக்கொண்டும், (ஓடிப் பாயாமல் ஓரிடத்திலேயே) அசைவற்றுத் தங்கியிருக்கும் தன்மையை அடைந்தும், கம்பாநதிக் கரையின் மேலே வியப்புறத்தக்க பல திருவிளையாடல்களைப் புரிந்துகொண்டிருக்கின்றது.

ஏனைய ஆறுகள் ஓடிப்பாய்வன ; கரைகளினூடே செல்வன ; நீராடுவோரின் தேகத்திலுள்ள தாபங்களையே நீக்குவன ; ஹிமவானிடமிருந்து பெருகும் கங்காநதியும் தாபத்திரயங்களையும் போக்குவதற்கு, அங்கே சென்று நீராடவேண்டும். காமாக்ஷி என்னும் நதியோ காருண்யமயமாக உள்ளது ; நினைத்த மாத்திரத்திலே தாபங்களைப் போக்கவல்லது ; அகாதமான மடுவைப்போல காஞ்சீ நகரத்திலே தேங்கியுள்ளது ; கரை கடந்த வெள்ளமாயினும் பாய்ந்தோடாமல் கம்பாநதிக் கரையின் மேல் அமைதியோடு அற்புதமாக விளங்குகின்றது ; இவையெல்லாம் என்ன அதிசயங்கள் !

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ऐक्यं येन विरच्यते हरतनौ दम्भावपुंभाविके-
रेखा यत्कचसोम्नि शेखरदशां नैशाकरी गाहते ।
औन्नत्यं मुहुरेति येन स महान्मेनासखः सानुमा-
न्कम्पातीरविहारिणा सशरणास्तेनैव धाम्ना वयम् ॥ १३ ॥

13. எந்தத் தேஜோமயமான வடிவினால் (ஸம்ஹார மூர்த்தியாகிய) பரமசிவனுடைய திருமேனி ஆண்மையும் பெண்மையுமுடையதாகி இருப்பதால் (அதன்) ஒன்றாகிய தன்மை விளக்கப்பெற்றதோ, எந்த வடிவிலேயுள்ள கூந்தலின்மீது சந்திரனுடைய கீற்றுப் பிறையானது சிரோபூஷணமாகிய திருமுடியின் நிலையை அடைகின்றதோ, மேனையின் துணைவனான (ஹிமவான் என்னும்) அப்பெரியோன் பல கொடுமுடிகளை யுடையவனாகிப் பலவாறாக உயர்ச்சிபெற்று (எப்பொழுதும்) விளங்குகிறானோ, கம்பாநதி தீரத்திலே திருவிளையாடல் புரிகின்ற அந்தத் தேஜோமயமான வடிவினாலேயே நாம் (புகலிடமுடையவர்களாகி) வீடு பெற்றவர்களானோம்.

अक्ष्णोश्च स्तनयोः श्रिया श्रवणयोर्बाह्वोश्च मूलं स्पृश-
न्नुत्तंसेन मुखेन च प्रतिदिनं द्रुह्यन्पयोजन्मने ।
माधुर्येण गिरां गतेन मृदुना हंसाङ्गनां ह्रेपय-
न्काञ्चीसीम्नि चकास्ति कोऽपि कवितासंतानबीजाङ्कुरः ॥ १४ ॥

14. தடையற்றுப் பெருகுவதான கவிதை என்னும் ஸந்தான விருக்ஷத்தின் விதையினின்று முளைத்தெழுந்த ஓர் ஆச்சர்யமான முளையானது, இரண்டு கண்களின் நீட்சியாலேயும் இரண்டு காதுகளின் அடிப்புறத்தையும் எட்டிப் பிடித்தும், இரண்டு கொங்கைகளின் பெருமையாலேயும் இரண்டு தோள்களின் அடிப்புறத்தையும் வியாபித்துக் கொண்டும், தலை மாலையாகிய பிறைச் சந்திரனால் (பாற்கடலிலே பிறந்தவனான) பயோஜன்மாவான சந்திரனையும் திருமுக மண்டலத்தால் (நீரிலே பிறந்ததான) பயோஜன்மாவான தாமரையையும் இடைவிடாது பிரதிதினமும் (பிறைச்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சந்திரனும் திருமுகமும் என்றும் மாருத இளமையும் விகாஸத்தையும் பெற்றவை; சந்திரனும் தாமரையும் பிரதிதினமும் தேய்வு வளர்ச்சிகளையும் விகாஸத்தையும் வாட்டத்தையும் உடையவை என்பதால்) பழித்துக்கொண்டும், சொற்களின் இனிமையாலும் மெல்லிய நடையாலும் அன்னப் பேடுகளைக் கற்றுப் பழகச் செய்துகொண்டும், காஞ்சீபுரப் பிரதேசத்திலே ஒளிபெற்று விளங்குகின்றது,

खण्डं चान्द्रमसं वतंसमनिशं काञ्चीपुरे खेलनं
कालायश्छवितस्करीं तनुरुचिं कर्णेजपे लोचने ।
तारुण्योष्मनखंपचं स्तनभरं जङ्घास्पृशं कुन्तलं
भाग्यं देशिकसंचितं मम कदा संपादयेदम्बिके ॥ १५ ॥

15. (ஜகத்திற்குத் தாயாகிய) அம்பிகையே! (கூந்தலிலே சூட்டும்) தலை மாலையாகிய சந்திரகலையும், எப்பொழுதும் (இடையருது) காஞ்சீபுரத்திலே (நிகழும்) திருவிளையாடலும், கருமை நிறத்து இரும்பினுடைய காந்தியை அபகரிக்கின்ற திருமேனியின் காந்தியும், காதுகளிலே மெதுவாக அளவளாவுகின்ற கண்கள் இரண்டும், யௌவனத்திற்குரியதான காமமாகிய வெம்மையால் கூரியதான பரமேசுவரருடைய நகங்களையும் (மென்மை யுடையதாக) மழுங்கச் செய்யும் கடினமான கொங்கைத்தலமும், முழங்காலுக்குக் கீழாகவும் படிந்த கூந்தலுமாக, (இவ்வாறு பலபடியாக அமைந்ததாகி) (என்னுடைய) குரு மூர்த்திகளால் தேடித் திரட்டப் பெற்று என்னுடைய பாகத்திற்கு உரியதான செல்வத்தை நான் எப்பொழுது பெறுவேனே? (அதாவது, உம்முடைய ஸாரூப்பியத்தை எப்போது பெறுவேனே?)

तन्वानं निजकेलिसौधसरणिं नैसर्गिकीणां गिरां
केदारं कविमल्लसूक्तिलहरीसस्यश्रियां शाश्वतम् ।
अंहोवञ्चनचुञ्चु किंचन भजे काञ्चीपुरीमण्डनं
पर्यायच्छवि पाकशासनमणेः पौष्पेषवं पौरुषम् ॥ १६ ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

16. இயல்பாக அமைந்தவையான (யாராலும் இயற்றப்படாதவையான) வாக்குகளாகிய வேத பாகங்களைத் தன்னுடைய சொந்தத் திருவிளையாடல்களுக்கு ஏற்ற மேன்மாடங்களாகக் கொள்கின்றதும், கவி வீரர்களின் பாசுரங்களாகிய கதிர்கள் அலைகளைப்போலப் படர்ந்து ஒளி பரப்புகின்ற நற்பயிர்களாகிய செல்வங்கள் விளைகின்றதாக என்றும் விளங்கும் வயலாகியதும், பாபங்களைப் போக்குவதிலே திறமை வாய்ந்ததும், காஞ்சீபுரத்தை அலங்கரித்துக்கொண்டிருப்பதும், இந்திர நீல மணிக்குச் சமானமான சோபையுடையதும் (தாமரை, அசோகு, மா, நவமல்லிகை, நீலோத்பலம் என்னும்) ஐந்து புஷ்பங்களையும் பாணங்களாகவுடைய மன்மதனுடைய ஆண்மையின் உருவமாக விளங்குகின்றதுமான ஒப்பற்ற தனிப் பொருளைத் தொழுகின்றேன்.

आलोके मुखपङ्कजे च दधती सौधाकरीं चातुरीं
चूडालंक्रियमाणपङ्कजवनीवैरागमप्रक्रिया ।
मुग्धस्मेरमुखी घनस्तनतटीमूर्च्छालमध्याञ्चिता
काञ्चीसीमनि कामिनी विजयते काचिज्जगन्मोहिनी ॥१७॥

17. ஸுதாகரமாகிய (அமுதத்தைப் பொழிகின்ற) நிலாவின் (அல்லது, அமுதத்திற்குப் பிறப்பிடமாகிய பாற்கடலின்) திறமையைத் தன்னுடைய திருக்கண்ணோக்கத்திலும் கமலவதனத்திலும் காட்டிக் கொண்டும், தாமரைக் காட்டின் மீது வைரங்கொண்ட செயல்களை யுடையவனை சந்திரனை (தன்னுடைய) திருமுடியிலே அலங்காரமாகச் சூட்டிக் கொண்டும், மடமை தோன்றும் இளமுறுவலைக் கொண்ட திருமுகத்தினை யுடையவளாயும், கடினமான திருமுலைத்தடத்தை யுடையவளாயும், இல்லையோ என்னும்படி சிறுத்த இடையாலே அழகு பெற்றவளாயும், ஜகத்தை எல்லாம் மயக்கக்கூடிய ரூபத்தையுடையவளாயும். ஒப்பற்றதோர் அழகு வாய்ந்த பெண்மணி காஞ்சீபுரத்தின் எல்லையினுள் மிகச் சிறந்து விளங்குகிருள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

यस्मिन्नम्ब भवत्कटाक्षरजनी मन्देऽपि मन्दस्मित-
ज्योत्स्नासंस्नपिता भवत्यभिमुखी तं प्रत्यहो देहिनम् ।
द्राक्षामाक्षिकमाधुरीमदभरव्रीडाकरी वैखरी
कामाक्षि स्वयमातनोत्यभिसृतिं वामेक्षणेव क्षणम् ॥ १८ ॥

18. காமாக்ஷியம்மையே! (என்ன ஆச்சரியம்!) மந்த புத்தியுடையவனுக இருந்தாலும் எவன் ஒருவனிடத்திலே தங்களுடைய கடாக்ஷமாகிய (காரிருள் போன்ற) இராப் பொழுதானது இளமுறுவலாகிய வெண்ணிலாவிலே நன்கு மூழ்கியதாகி எதிர்கொண்டு வருகின்றதோ, அந்த க்ஷணத் திலேயே அந்த மனிதனை உத்தேசித்து, த்ராக்ஷை, தேன் என்று இனிமையாலே கர்வங் கொண்ட பொருள்களை வெட்க முறும்படி செய்கின்ற திறமை வாய்ந்தவளும் கண்ணழகு வாய்ந்தவளுமான வாக்கு என்னும் பெண்ணானவள் தானு கவே (காதல் மேலிடுவதால் காதலனை நாடிச் செல்லும்) அபிஸாரிகையின் செயலை மேற்கொள்கிருள் போலும் (தானுகவே புறப்பட்டு அவனிடம் வந்து சேர்கிருள்.)

कालिन्दीजलकान्तयः स्मितरुचिस्वर्वाहिनीपाथसि
प्रौढध्वान्तरुचः स्फुटाधरमहोलौहित्यसंध्योदये ।
माणिक्योपलकुण्डलांशुशिखिनि व्यामिश्रधूमश्रियः
कल्याणैकभुवः कटाक्षसुषमाः कामाक्षि राजन्ति ते ॥ १९ ॥

19. காமாக்ஷியே! ஸர்வ மங்களங்களுக்கும் சிறந்த தோர் பிறப்பிடமாகவுள்ள உம்முடைய கடைக்கண் பார்வை களின் (கருநிறமான) காந்திகளானவை, (புன்) முறுவல் களின் காந்தியாகிய கங்கைப் பெருவெள்ளத்திலே (கருநிற முடையவையாகக் காணப்படும்) யமுனையாற்று நீரின் காந் திகளாயும், மிகச்சிவந்த ஒளி வீசுகின்ற உதடுகள் என்னும் ஸந்தியாகாலம் தொடங்கும் போது அபிவிருத்தி யடைகின்ற இருளின் கரிய காந்திகளாகவும், மாணிக்கக் கற்களையுடைய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குண்டலங்களாகிய செந்தீயிலே சூழ்ந்தெழுகின்ற (கரிய) புகைகளின் அழகிய தோற்றங்களாகவும் திகழ்கின்றன.

कलकलरणत्काञ्ची काञ्चीविभूषणमालिका
कचभरलसच्चन्द्रा चन्द्रावतंससधर्मिणी ।
कविकुलगिरः श्रावंश्रावं मिलत्पुलकांकुरा
विरचितशिरःकम्पा कम्पातटे परिशोभते ॥ २० ॥

20. காஞ்சீபுரத்திற்கே மிகச்சிறந்த அலங்காரமாகி விளங்கும் பூமாலையாகிய பெண்மணியானவள், கலகல என்று ஒலி செய்கின்ற காஞ்சி என்னும் ஒட்டியாணத்தை யுடையவளாயும் (காஞ்சிபுரத்தைத் தன்னைச் சூழ்ந்துள்ள வையான நானுவித ஆபரணங்களின் கோவையாகக் கொண் டவளாயும்) அடர்ந்த கூந்தலின்மீது ஒளி வீசுகின்ற சந்திர னைச் சூட்டிக் கொண்டவளாயும், சந்திரனைச் சிரோ பூஷண மாகவுடைய பரமசிவனுக்குத் தரும பத்தினியாகவும், கவி களினுடைய சிறந்த வாக்குகளைக் கேட்குந்தோறும் மெய் சிலிர்த்து (மெச்சி) சிரக்கம்பஞ் செய்கின்றவளாயும் கம்பா நதிக்கரையிலேயே சிறந்து விளங்குகின்றாள்.

सरसवचसां वीचो नीचोभवन्मधुमाधुरी
भरितभुवना कीर्तिर्मूर्तिर्मनोभवजित्वरी ।
जननि मनसो योग्यं भोग्यं नृणां तव जायते
कथमिव विना काञ्चीभूषे कटाक्षतरङ्गितम् ॥ २१ ॥

21. தாயே! காஞ்சீபுரத்திற்கு ஓர் அலங்காரமாய் அமைந்தவளே! (காஞ்சி என்னும் ஒட்டியாணத்தை அணிந்து விளங்குபவளே!) உமது கடாக்ஷங்களின் வீழ்ச்சி யாலன்றி வேறு எவ்விதமாகத் தான், மனிதர்களுக்கு தேனின் இனிமையையும் கீழ்ப்பட்டதாகச் செய்கின்ற மிக்க ரஸம்பொருந்திய வாக்குகளின் வரிசையும் (உல்லாஸமும்), உலகமெல்லாம் பரவிய புகழும், காமனையும் (அழகால்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வென்ற திருமேனியும் மனதிற்குப் பொருத்தமான போக்கியப் பொருளும் கிடைக்கக்கூடும்?

भ्रमरितसरित्कूलो नीलोत्पलप्रभयाऽऽभया
नतजनतमःखण्डी तुण्डीरसीम्नि विजृम्भते ।
अचलतपसामेकः पाकः प्रसूनशरासन-
प्रतिभटमनोहारी नारीकुलैकशिखामणिः ॥ २२ ॥

22. ஹிமவான் என்னும் மலை புரிந்த தவங்களின் முழுப் பயனாகத் தோன்றி, பூக்களை பாணங்களாகக் கொண்ட வில்லையுடைய மன்மதனை எதிர்த்து வெற்றி கொண்ட வீரரான பரமசிவனுடைய மனதையும் அபஹரிக்கின்றதாகி, பெண்களின் குலத்திற்கே ஒப்பற்றதொரு சூடாமணியாக விளங்கும் பொருளானது (கருமாணிக்கமானது), (கம்பா) நதிக்கரையைத் தன் (திருமேனியின்) ஒளியினாலே (கரிய ஒளிகளாகிய) வண்டுகளையுடையதாகச் செய்துகொண்டும், (தன்னை) வணங்குகின்ற மனிதர்களின் அஞ்ஞானமாகிய இருளைப் யழிப்பதாகியும், தொண்டை மண்டலத்திலே (காஞ்சிபுரத்திலே) நன்கு விளங்குகின்றது.

தேவி ஒரு கருமாணிக்கம்; அவள் மலையிலே தோன்றியது மலை செய்த பாக்யத்தினால்; ஆயினும் அது இயல்பேயாகும்; வீரன் ரத்னங்களை அபஹரிப்பான்; இந்த ரத்னமோ காமனை வென்ற வீரனுடைய கன்னெஞ்சையும் அபஹரிக்கின்றதே; இது ஓர் அதிசயம்; தன் கருநீலவொளிகளாலே கம்பா நதிக்கரையை நிழலுடைய பூஞ்சோலையாகச் செய்வது, அதிசயமாயினும் இயல்பேயாகும்; அந்த இருள்போன்ற நிழலால் தன் அடிக் கீழ் உள்ளவர்களின் (மன) இருளைப் போக்குவது என்பது மிக்க அதிசயமாகும்.

मधुरवचसो मन्दस्मेरा मतङ्गजगामिन-
स्तरुणिमजुषस्तापिञ्छाभास्तमःपरिपन्थिनः ।
कुचभरनताः कुर्युर्भद्रं कुरङ्गविलोचनाः
कलितकरुणाः काञ्चीभाजः कपालिमहोत्सवाः ॥ २३ ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

23. இன்சொல்லுடையதும், புன்முறுவலுடையதும், யானையின் நடையையொத்த நடையை யுடையதும், இளமை பொருந்தியதும், தமால மலர்களைப் போல (பசுமையான) ஒளி வீசுகின்றதும், இருளை (அஞ்ஞானத்தை) அகற்றுவதும், கொங்கைகளின் பாரத்தாலே சற்று வளைந்திருப்பதும், மானின் விழிகளை யொத்த விழிகளையுடையதும், கருணை கூர்வதும், காஞ்சிபுரத்திலே வீற்றிருக்கின்றதுமான கபாலியாகிய பரமசிவனுடைய பேரானந்தமாகிய வடிவமானது (அனைவர்க்கும்) பேரின்பத்தை அளிப்பதாகுக.

कमलसुषमाकक्ष्यारोहे विचक्षणवीक्षणाः
कुमुदसुकृतक्रीडाचूडालकुन्तलबन्धुराः ।
रुचिररुचिभिस्तापिच्छश्रीप्रपञ्चनचुञ्चवः
पुरविजयिनः कम्पातीरे स्फुरन्ति मनोरथाः ॥ २४ ॥

24. திரிபுரத்தை வென்ற பரமசிவனுடைய மனோரதங்களாக விளங்கும் ஒரு வடிவமானது, தாமரை மலரின் செவ்வியோடு அதே வகுப்பிலே உயர்த்தி வைப்பதற்கு வேண்டிய திறமை வாய்ந்தவையான கண்களை யுடையதாகியும், அல்லி மலர்களின் புண்ணிய வடிவான சந்திரனை விளையாட்டாகவே சிரோ பூஷணமாகக் கொண்ட கூந்தலால் அழகு வாய்ந்ததாகியும், (தன் திருமேனியினின்று எழுகின்ற) அழகிய காந்திகளாலே தமால மலரின் ஒளியழகைப் பரப்பும் திறமை யுடையதாயும் கம்பா நதிக்கரையிலே விளங்குகின்றது.

कलितरतयः काञ्चीलीलाविधौ कविमण्डली-
वचनलहरीवासन्तीनां वसन्तविभूतयः ।
कुशलविधये भूयासुर्मे कुरङ्गविलोचनाः
कुसुमविशिखारातेरक्ष्णां कुतूहलविभ्रमाः ॥ २५ ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

25. காஞ்சீபுரத்திலே திருவிளையாடல் புரிவதில் இச்சையுடையதும், கவிகள் ஒன்று சேர்ந்து பாடும் பாடல் களின் ப்ரவாஹமாகிய வாஸந்திகை மலர்களுக்கு வஸந்த காலத்தின் நிறைந்த செல்வமாகியதும், மானின் விழிகளை யொத்த விழிகளை யுடையதும், புஷ்பபாணனாகிய மன்மதனை வென்று அழித்த பரமசிவனுடைய கண்களுக்குப் பெரு மகிழ்ச்சியால் மயக்கத்தை யளிப்பதுமான பொருளானது எனக்கு நன்மைபுரிவதின்பொருட்டு நிலைபெற்றிருப்பதாகுக.

कवलिततमस्काण्डास्तुण्डीरमण्डलमण्डनाः
सरसिजवनीसंतानानामरुंतुदशेखराः ।
नयनसरणेर्नेदीयांसः कदा नु भवन्ति मे
तरुणजलदश्यामाः शंभोस्तपःफलविभ्रमाः ॥ २६ ॥

26. அஞ்ஞானமாகிய இருளின் திரளை விழுங்குகின்ற தும், தொண்டை மண்டலத்தை அலங்கரிப்பதும், தாமரைக் காட்டிலே பூத்த மலர் வரிசைகளின் உயிரை வாட்டும் சந்திரனைச் சிரஸிலே கொண்டு விளங்குவதும், கார்காலத்து நீருண்ட மேகத்தைப் போல கரிய திருமேனியுடையதும், சம்புவாகிய பரமசிவனின் தவத்தின் பயனாக விளங்கு கின்றதுமான பொருளானது எப்பொழுது தான் என் கண் வட்டத்திற்கு அருகாமையில் அமைந்திருக்குமோ?

अचरममिषुं दीनं मीनध्वजस्य मुखश्रिया
सरसिजभुवो यानं म्लानं गतेन च मञ्जुना ।
त्रिदशसदसामन्नं खिन्नं गिरा च वितन्वती
तिलकयति सा कम्पातीरं त्रिलोचनसुन्दरी ॥ २७ ॥

27. முக்கண்ணரான பரமசிவனுடைய அழகிய பத் தினியானவள், மீனக்கொடியோனாகிய மன்மதனுடைய முத லாவது பாணமாகச் சிறந்து விளங்கும் தாமரை மலரைத்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தன் திருமுகத்திலே திகழும் அழகால் துன்புற்று வாடுவதாகவும், தாமரையிலே பிறந்தவரான பிரும்மாவின் வாஹனமாகிய ஹம்ஸத்தையும் தன் அழகிய நடையாலே சோர்வுற்றதாகவும், (அமுதத்தை யுண்டதால் நான்காவது பருவமாகிய கிழத்தனத்தை யடையாமல் என்றும் மூன்ருவது பருவமாகிய யௌவன தசையிலேயே இருப்பவர்களாய், தாபத் திரயத்தையும் போக்கிக் கொண்டவர்களான) தேவர்கள் கூடியுண்ணும் அன்னமாகிய அமிருதத்தைத் தன் சொல்வளத்தால் ஏக்கமுற்றதாகவும் செய்துகொண்டிருப்பவளாய், கம்பா நதீ தீரத்திற்கே ஒரு (ஒப்பற்ற) திலகம் போலச் சிறந்து விளங்குகிருள்.

जननि भुवने चङ्क्रम्येऽहं कियन्तमनेहसं
कुपुरुषकरभ्रष्टैर्दुष्टैर्धनैरुदरंभरिः ।
तरुणकरुणे तन्द्राशून्ये तरङ्गय लोचने
नमति मयि ते किंचित्काञ्चीपुरीमणिदीपिके ॥ २८ ॥

28. அன்னையே! காஞ்சீபுரத்திற்கு ஓர் ஒளி பொருந்திய ரத்னதீபமாக விளங்குபவளே! நான் எவ்வளவு காலம் (இந்த) இழிந்த குண முடையவர்களின் கையினின்றும் நழுவுகின்ற தீய செல்வங்களாலே வயிறு வளர்ப்பவனுகி உலகெங்கும் அலைந்தலைந்து உழலுவேன்? புதிது புதிதாகக் கிளர்ந்து எழுகின்ற கருணையை யுடையவையும், சோம்பாமல் என்றும் ஊக்கத்தோடு துறுதுறு என்று இருப்பவையுமான உம்முடைய இரண்டு கண்களையும் (உம்மை) வணங்கி நிற்கும் என்மீது அலைமேல் அலையாகப் பாயும்படி சிறிது நோக்குவீராக. (செவ்விமாருது என்றும் புதுமை வாய்ந்ததான கருணையை வடிவமாகக் கொண்டவளே! அடியார்களைப் பாதுகாப்பதிலே சிறிதும் சோம்பலின்றிச் சுறுசுறுப்பா யிருப்பவளே!)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

मुनिजनमनःपेटीरत्नं स्फुरत्करुणानटी-
विहरणकलागेहं काञ्चीपुरीमणिभूषणम् ।
जगति महतो मोहव्याधेर्नृणां परमौषधं
पुरहरदृशां साफल्यं मे पुरः परिजृम्भताम् ॥ २९ ॥

29. முனிவர்களின் மனமாகிய பெட்டிக்குள் (ஜாக்கிரதையாக) வைக்கப்பெற்ற (சிறந்த) ரத்னமாகவும், துள்ளி விளையாடுகின்ற கருணையாகிய நாட்டியப் பெண்ணுக்கு விளையாடிக் களிப்பதற்குரிய நடன சாலையாகவும், மனிதர்களுடைய அஞ்ஞானமாகிய நோய்க்கு மிகச் சிறந்த மருந்தாகவும், திரிபுரத்தை யழித்த பரமசிவனுடைய கண்களின் நற்பயனுகவும், காஞ்சீபுரத்திலே யுள்ள ஒளிவாய்ந்த ரத்னமயமான பூஷணமாகவுமுள்ள தனிப்பொருள் என் முன்பு நன்ருக விளங்கிக்கொண்டிருப்பதாக.

मुनिजनमनोधाम्ने धाम्ने वचोमयजाह्नवी-
हिमगिरितटप्राग्भारायाक्षराय परात्मने ।
विहरणजुषे काञ्चीदेशे महेश्वरलोचन-
त्रितयसरसक्रीडासौधाङ्गणाय नमो नमः ॥ ३० ॥

30. முனிவர்களின் மனமாகிய பிரதேசத்திற்கு சோதியாயும், வாக்குகளாகிய கங்கைக்கு இமயமலையின் விசாலமான கொடுமுடியாயும், அழிவில்லாததும் மேலான ஆத்மாவாகியதுமான அக்ஷரஸ்வரூப பரமாத்மாவாயும், மகேசுவரரான பரமசிவனுடைய கண்கள் மூன்றும் இனிமைவாய்ந்த திருவிளையாடல்களைச் செய்வதற்கான உப்பரிகையின் மாடமாயும், காஞ்சி நாட்டிலே இன்புற்றிருப்பதான பொருளுக்கு மீண்டும் மீண்டும் (நம்முடைய) நமஸ்காரங்கள்.

मरतकरुचां प्रत्यादेशं महेश्वरचक्षुषा-
ममृतलहरीपूरं पारं भवाख्यपयोनिधेः ।
सुचरितफलं काञ्चीभाजो जनस्य पचेलिमं
हिमशिखरिणो वंशस्यैकं वतंसमुपास्महे ॥ ३१ ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

31. மரதகங்களின் காந்திகளை மழுங்கச் செய்வதாயும், மஹேசுவரரான பரமசிவனுடைய கண்களுக்கு அமுத அலைகள் நிறைந்த வெள்ளமாயும், ஸம்ஸாரம் என்னும் ஸமுத்திரத்திற்கு (அப்பாலுள்ள) கரையாயும், காஞ்சிபுரத்தில் வாழுகின்ற மனிதனுக்கு (அவனுடைய) நல்வினையின் கனிந்த பழமாயும், பனிமலையாகிய ஹிமவானுடைய வமிசத்திற்கு ஒப்பற்றதொரு சூடாமணியாயும் விளங்கும் பொருளையே உபாஸிக்கின்றோம்.

தேவி தெய்வத்தன்மை பொருந்திய மரகத மணியாவாள்; அவளுடைய திருமேனியின் ஒளி மற்றை மரகதங்களைப் பழிப்பதாகும்; இந்த மணியிலே அமுதமயமான நீரோட்டமிருப்பதை பரமேசுவரன் கண்டறிந்தவர். ஸம்ஸாரம் என்னும் ஸாகரத்தைக் கடந்து சென்றவர்களே இம் மணியைக் காணக்கூடும்; குலகிரிகளின் வமிசத்திற்கே ஓர் உயர்ந்த சிரோபூஷணமாக இம்மணி இமயமலையின் உச்சியிலே விளங்கும் பெருமை வாய்ந்தது. காஞ்சீபுரத்திலுள்ளவர்கள் செய்த பாக்கியத்தால், இது இவர்கள்முன் தோன்றி ஸர்வ ஸித்திகளையும் தருகின்ற சிந்தாமணியாக விளங்குகின்றது.

प्रणमनदिनारम्भे कम्पानदीसखि तावके
सरसकवितोन्मेषः पूषा सतां समुदञ्चितः ।
प्रतिभटमहाप्रौढप्रोद्यत्कवित्वकुमुद्वतीं
नयति तरसा निद्रामुद्रां नगेश्वरकन्यके ॥ ३२ ॥

32. கம்பாநதியை (இணைபிரியாத) தோழியாக வுடையவளே! மலையரசன் பெற்ற மகளே! உம்மை நமஸ்கரிப்பது என்னும் நாளின் தொடக்கத்திலேயே ஸஜ்ஜனங்களின் ரஸங்கள் பொருந்திய கவிதையின் ஒளிமயமான ஸூர்யனவன் முற்றும் உதயமாகி, அப்பொழுதே (தன் வலுவாலே) (அந்த ஸஜ்ஜனங்களுக்கு) விரோதிகளின் மிக்க கர்வங்கொண்டு கிளர்ந்தெழுகின்ற கவிதையாகிய அல்லி மலரைக் கண்ணயர்ந்து வாட்டமுறும்படி செய்கின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

शमितजडिमारम्भा कम्पातटीनिकटेचरी
निहतदुरितस्तोमा सोमार्धमुद्रितकुन्तला ।
फलितसुमनोवाञ्छा पाञ्चायुधी परदेवता
सफलयतु मे नेत्रे गोत्रेश्वरप्रियनन्दिनी ॥ ३३ ॥

33. ஜடத்தன்மையை (அஞ்ஞானத்தை)த் தொடங்க வொட்டாமலே தடுப்பவளாயும், பாபக்குவியல்களை அறவே ஒழிப்பவளாயும், பாதிமதியை அடையாளமாகக் கொண்ட கூந்தலையுடையவளாயும், நல்லோர்களின் (தேவர்களின், வேதவித்துகளின், ஞானிகளின்) அபீஷ்டங்களைப் பூர்த்தி செய்பவளாயும், ஐந்து ஆயுதங்களை (சங்கு, சக்கிரம், கதை, வாள், வில் ஆகியவற்றை, அல்லது பாணங்களாகிய ஐந்து மலர்களை) யுடையவளாயும், மலை யரசனின் அன்பார்ந்த மகளாயும் விளங்கும் பரதேவதையானவள் கம்பாநதியின் அருகாமையிலே உலாவுகின்றவளாய் என்னுடைய இரண்டு கண்களையும் பயன்பெற்றவையாகச் செய்வாளாக.

मम तु धिषणा पीड्या जाड्यातिरेक कथं त्वया
कुमुदसुषमामैत्रीपात्रीवतंसितकुन्तलाम् ।
जगति शमितस्तम्भां कम्पानदीनिलयामसौ
श्रयति हि गलत्तन्द्रा चन्द्रावतंससधर्मिणीम् ॥ ३४ ॥

34. கட்டுக்கு அடங்காமல் வளர்கின்ற அஞ்ஞானமே! என்னுடைய புத்தியானது உன்னால் எவ்வாறு பீடிக்கப்படுவதாகும்? என் புத்தியோ, சோம்பலை யொழித்துவிட்டு, அல்லி மலரின் அழகிற்கு அனுகூலமானதாக அமைந்த சந்திரனைச் சூடிய கூந்தலை யுடையவளாய், சந்திரனைச் சிரோபூஷணமாகச் சூட்டிக்கொண்டவரான பரமசிவனுடைய தருமபத்தினியாய், கம்பாநதிக் கரையிலே வாழுகின்றவளாய், உலகிலெங்குமுள்ள ஜடத்தன்மையை யழிப்பவளை இதோ சரண்புகுந்து விளங்குகின்றது, பார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

परिमलपरीपाकोद्रेकं पयोमुचि काञ्चने
शिखरिणि पुनर्द्वैधीभावं शशिन्यरुणातपम् ।
अपि च जनयन्कंम्बोर्लक्ष्मीमनम्बुनि कोऽप्यसौ
कुसुमधनुषः काञ्चीदेशे चकास्ति पराक्रमः ॥ ३५ ॥

35. (கருணை மழைபெய்யுங் கூந்தலால்) கார்மேகத்திற்கு நறுமணத்தின் மிகுதியையும், பொன்மலையாகிய மேருவிற்கு (தன் கொங்கைகள் இரண்டினாலும் ஒப்பற்ற நிலைமை நீங்கி) இரட்டையாயிருக்குந் தன்மையையும், சந்திரனுக்கு (பரமசிவன் தன்னுடைய திருவடிகளிலே பணியும்போது திருவடிகளின் செவ்வொளியால்) அருணனுடைய காந்தியாகிய செம்மை நிறத்தையும், நீரின்றி வரண்டதான (கழுத்துப் புறமாகிய) பிரதேசத்திற்கு சங்கினுடைய தோற்றத்தின் அழகையும் உண்டுபண்ணிக் கொண்டு ஒப்பற்றதான இப்பொருள் காஞ்சிநாட்டிலே புஷ்பங்களை வில்லிலே பாணங்களாகத் தொடுக்கும் மன்மதனுடைய பராக்கிரமமே வடிவெடுத்தாற்போல விளங்குகின்றது.

पुरदमयितुर्वामोत्सङ्गस्थलेन रसज्ञया
सरसकविताभाजा काञ्चीपुरोदरसीमया ।
तटपरिसरैर्नीहाराद्रेर्वचोभिरकृत्रिमैः
किमिव न तुलामस्मच्चेतो महेश्वरि गाहते ॥ ३६ ॥

36. மஹேசுவரியே! திரிபுரத்தை யழித்தவரான பரமசிவனுடைய இடது மடித்தலத்தோடும், ரஸங்கள் பொருந்திய கவிதையைப் பெற்றவர்களின் நாக்கினோடும், காஞ்சிபுரத்தின் மத்திய பாகத்தோடும், ஹிமயமலையின் விசாலமான பிராந்தியங்களோடும், யாராலும் இயற்றப்படாமல் தாமாகவே அமைந்த வாக்குகளாகிய வேதவசனங்களோடும் ஒத்தநிலையை எங்களுடைய மனமானது அடையாததாகுமோ?

எங்கள் மனத்தில் இடைவிடாது தாங்கள் வீற்றிருப்பதால் தாங்கள் இடைவிடாது வீற்றிருக்கும் மேற்சொன்ன இடங்களோடு ஒப்புமையுடையதே என்பது கருத்து.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

नयनयुगलीमासाकीनां कदा नु फलेग्रहीं
विदधाति गतौ व्याकुर्वाणा गजेन्द्रचमत्क्रियाम् ।
मरतकरुचो माहेशाना घनस्तननम्रिताः
सुकृतविभवाः प्राञ्चः काञ्चीवतंसधुरंधराः ॥ ३७ ॥

37. சிறந்த யானையின் நடையழகை விளக்கிக் காட்டுவதாகியும், மரகத மணியின் ஒளியையுடையதாகியும், கனமுடைய ஸ்தனங்களால் சிறிது வளைந்த திருமேனியையுடையதாகியும், காஞ்சீபுரத்திற்குச் சிரோபூஷணமாகும் திறமையையுடையதாகியும், மஹேசுவரரான பரமசிவனுடைய பூர்வ புண்ணியத்தின் பயன்களால் அமைந்து சிறந்த மூர்த்தியானது எப்பொழுதுதான் எங்களுடைய கண்ணிணைகளைப் பயன்பெற்றவையாகச் செய்யுமோ?

मनसिजयशःपारम्पर्यं मरन्दझरीसुवां
कविकुलगिरां कन्दं कम्पानदीतटमण्डनम् ।
मधुरललितं मत्कं चक्षुर्मनीषिमनोहरं
पुरविजयिनः सर्वस्वं तत्पुरस्कुरुते कदा ॥ ३८ ॥

38. இடையறுது சாசுவதமாக விளங்குவதான மன்மதனுடைய கீர்த்தியாகவும், மகரந்தத் தூளிகள் நிறைந்த அருவிக்குக் காரணமாகியவையான கவிகளின் சிறந்த வாக்குகளுக்குத் தோற்றுவாயாகவும் (அடிக் கிழங்காகவும்), கம்பாநதிக் கரைக்கு அலங்காரமாகவும், இனிய அழகு வாய்ந்ததாகவும், புத்திமான்களின் மனதைக் கவர்வதாகவும், திரிபுரத்தை வென்றவரான பரமசிவனுடைய சகல சொத்தாகவும் (வர்ணிக்கவொண்ணுததாகவும்)விளங்கும் அந்தப் பொருளை என்னுடைய கண்ணுனது பிரத்தியக்ஷமாகத் தன் முன்னே காணப்பெறுவது எப்பொழுதோ?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

शिथिलिततमोलीलां नीलारविन्दविलोचनां
दहनविलसत्फालां श्रीकामकोटिमुपास्महे ।
करधृतलसच्छूलां कालारिचित्तहरां परां
मनसिजकृपालीलां लोलालकामलिकेक्षणाम् ॥ ३९ ॥

39. அஞ்ஞானத்தைச் சிதறுண்டு போகும்படி திருவிளையாடல் புரிபவளும், கருநெய்தல் மலர்களை யொத்த கண்களையுடையவளும், அக்கினிபோல் ஜ்வலிக்கின்ற நெற்றியையுடையவளும், ஒளிவீசுகின்ற சூலாயுதத்தைக் கையிலே ஏந்தியவளும், காலனை யழித்தவரான பரமசிவனுடைய உள்ளத்தைக் கவர்கின்றவளும், மன்மதனுக்குக் கருணை புரிவதையே ஒரு விளையாடலாகக் கொண்டவளும், அசைந்தாடுகின்ற அளகங்களாகிய முன்னுச்சிமயிரை யுடையவளும், நெற்றிக்கண்ணை யுடையவளும், மிகச் சிறந்தவளுமான ஸ்ரீ காமகோடியை (காமங்களுக்கு எல்லை நிலமானவளை) உபாஸிக்கின்றோம்.

कलालीलाशाला कविकुलवचःकैरववनी-
शरज्ज्योत्स्नाधारा शशधरशिशुश्लाघ्यमुकुटी ।
पुनीते नः कम्पापुलिनतटसौहार्दतरला
कदा चक्षुर्मार्गं कनकगिरिधानुष्कमहिषी ॥ ४० ॥

40. கலைகளை விளையாடுமிடங்களாகக் கொண்டவளும், குமுத மலர்கள் செறிந்த காட்டிலே சரத்காலத்து நிலா பொழிவது போன்றவையான கவிகளின் சிறந்த வாக்குகளை யுடையவளும், பாலசந்திரனைப் புகழ்தற்குரிய மகுடமாகக் கொண்டவளும், பொன்மலையான மேருவை வில்லாகக் கொண்டவரான பரமசிவனுடைய ராணியுமாய் கம்பாநதியின் மணல்பரந்த கரையிலே மனக்களிப்போடு உலாவுகின்றவள் எப்பொழுது கண்பார்வையிலே தோன்றி எங்களைப் பரிசுத்தர்களாகச் செய்வாளோ?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

नमः स्तान्नम्रेभ्यः स्तनगरिमगर्वेण गुरुणा
दधानेभ्यश्चूडाभरणममृतस्यन्दि शिशिरम् ।
सदा वास्तव्येभ्यः सविधभुवि कम्पाख्यसरिते
यशोव्यापारेभ्यः सुकृतविभवेभ्यो रतिपतेः ॥ ४१ ॥

41. ஸ்தனங்களின் பெருமையா லெழுந்த அதிக கர்வத்திலை (முன்புறமாக) வளைந்து விளங்குகின்றவையும், குளிர்ச்சியுடையவனுகி அமிர்தத்தைப் பொழிகின்ற சந்திரனைத் திருமுடிக்கு ஆபரணமாக வுடையவையும், 'கம்பா' என்னும் நதிக்கு அருகாமையிலுள்ள நிலத்திலே எப்பொழுதும் வாழ்கின்றவையும், ரதீ தேவியின் நாயகனுன மன்மதனுக்குப் புகழை விளைவிக்கின்றவையுமான நல்வினைப் பயன்களாகிய செல்வங்களுக்கு (எப்பொழுதுமே எங்களுடைய) நமஸ்காரம் அமைவதாகுக.

असूयन्ती काचिन्मरकतरुचो नाकिमुकुटी-
कदम्बं चुम्बन्ती चरणनखचन्द्रांशुपटलैः ।
तमोमुद्रां विद्रावयतु मम काञ्चीनिलयना
हरोत्सङ्गश्रीमन्मणिगृहमहादीपकलिका ॥ ४२ ॥

42. ஹரதேவராகிய பரமசிவனுடைய மடித்தலமாகிய அழகிய ரத்னமயமான வீட்டினுள் விளங்கும் பெருவிளக்கின் ஜ்வாலையான ஒப்பற்றதொரு பூமொட்டானது, மரகதங்களின் காந்திகளைப் பொருமையாலே பழிப்பதாயும், தேவர்களின் கிரீடங்களின் தொகுதியை (தன்னுடைய) திருவடியிலுள்ள நகங்களாகிய சந்திரர்களுடைய ஒளித்திரளால் ஆதரவோடு தடவிக் கொடுப்பதாயும், காஞ்சீபுரத்திலே (என்றும்) ஸ்திரமாயிருப்பதாயும் விளங்கிக்கொண்டு என்னுடையதான பெயர்பெற்ற அஞ்ஞானமாகிய இருளை விரட்டியோடச் செய்வதாக.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

अनाद्यन्ता काचित्सुजननयनानन्दजननी
निरुन्धाना कान्तिं निजरुचिविलासैर्जलमुचाम् ।
स्मरारेस्तारल्यं मनसि जनयन्ती स्वयमहो
गलत्कम्पा शम्पा परिलसति कम्पापरिसरे ॥ ४३ ॥

43. இணையற்றதொரு மின்னற்கொடியானது, ஆதி அந்தம் இரண்டும் அற்றதாய் (அடியும் முடியும் இல்லாத தாய்), நல்லோர்களுடைய கண்களுக்கு ஆனந்தத்தைஉண்டு பண்ணுவதாய், தன்னுடைய திருமேனியின் காந்தியாகிய அழகிய ஒளிகளால் மழைபொழியும் கார்மேகங்களின் காந்தியை மேலெழ வொட்டாது ஒடுக்குவதாய், மன்மதனை வென்றவரான பரமசிவனுடைய மனதிலே சஞ்சலத்தை யுண்டுபண்ணிக் கொண்டும், தான் மட்டும் (மின்னற்கொடி யாயிருந்தும் தன்னியல்பான) சஞ்சல ஸ்வாபத்தைத் தவிர்த்ததாய் ஆச்சரியமாய் கம்பாநதிக் கரையிலே சூழ ஒளி பரப்பிக்கொண்டும் விளங்குகின்றது.

மின்னற்கொடி க்ஷணப்பொழுதிலே தோன்றி மறையும்; எல்லோருடைய கண்களையும் கூசச்செய்யும்; கார்மேகங்களுக்கு அழகையும் பெருமையையும் அளிக்கும், ஆகாசத்திலே காணப்படும்; இந்த அபூர்வமான மின்னற்கொடியோ, அனாதி காலமாகவுள்ளது; என்றும் முடிவில்லாமல் ஒளி வீசிக்கொண்டு இருக்கக் கூடியது; பாக்கியசாலிகள் கண்டுகளிக்கும்படி காஞ்சியிலே திகழ்வது; கார்மேகங்களின் கர்வத்தைத் தன் திருமேனியழகால் அடக்குவது; பூமியிலே நதிக்கரையிலே விளங்குவது; இவை ஒவ்வொன்றும் ஆச்சர்யகரமானது.

सुधाडिण्डीरश्रीः स्मितरुचिषु तुण्डीरविषयं
परिष्कुर्वाणासौ परिहसितनीलोत्पलरुचिः ।
स्तनाभ्यामानम्रा स्तबकयतु मे काङ्क्षिततरुं
दृशामैशानीनां सुकृतफलपाण्डित्यगरिमा ॥ ४४ ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

44. ஈசானராகிய பரமசிவனுடைய மூன்று கண்களுக்கும் உரிய நல்வினைப் பயனை யருளும் திறமைவாய்ந்ததாய் (நம்முடைய கண்களாலும் காணப் பெற்றதான) இந்தச் சிறந்த பொருளானது, (ஒரு பெரிய ஏரியைப் போல) தன் முகத்திலே எழுகின்ற மந்தஹாஸங்களின் (வெண்ணிறங் கொண்ட) காந்திகளால் அமிர்தமயமான வெள்ளை நுரைகளின் காந்திகளையுடையதாயும், குவளைமலர்களின் (நீல நிறமான) ஒளிகளை (அந்தப் புன்சிரிப்புகளால்) பரிஹாஸஞ் செய்வதாயும், தொண்டை நாட்டை வளமுடையதாகச் செய்கின்றதாகி, ஸ்தனங்களால் சிறிது வளைந்து விளங்குவதாகி (கரைகளுக்கு உள்ளடங்கியிருக்கும் நீர்ப்பரப்பையுடைய ஏரியைப் போன்றதாகி), என்னுடைய விருப்பம் என்னும் மரத்தை (தன் கடாக்ஷங்களாகிய நீரைப் பாய்ச்சி) பூங்கொத்துக்களோடு விளங்குமாறு புஷ்பிக்கும்படி செய்வதாக.

பரமசிவனுடைய திருக்கண்களுக்கு நல்வினைப் பயனாகிய பழத்தைப் யளிப்பதாய், ஏரிபோன்ற திருவுருவத்தினின்று பெருக்கெடுத்தோடிப் பாயும் கடாக்ஷங்கள் என் ஆசையாகிய மரத்தைப் பூக்கச் செய்வது எளிது என்கிறார்.

कृपाधाराद्रोणी कृपणधिषणानां प्रणमतां
निहन्त्री संतापं निगममुकुटोत्तंसकलिका ।
परा काञ्चीलीलापरिचयवती पर्वतसुता
गिरां नीवी देवी गिरिशपरतन्त्रा विजयते ॥ ४५ ॥

45. மலைமகளாய்ப் பிறந்து, மலையில் ஈசுவரனாக வாழ்கின்ற பரமசிவனுக்கு மனைவியாகி, வேதங்களின் மகுடங்களாகிய உபநிஷத்துகளின் சிரோபூஷணமான பூமொட்டாகவும், வாக்குகளின் எல்லையாகவும், பிராட்டியாகவும் விளங்குந் தேவியானவள், காஞ்சீபுரத்திலே (என்றும்) திருவிளையாடல் புரிகின்ற வழக்கமுடையவளாகி (மலையிற் பிறந்து மலையில் வாழும் ஒரு வேடனைத் தன் வசமாக்கி அவனைத் தன்னுடன் அழைத்துக்கொண்டும், வேத வசனங்களாகிய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆடைகளை இடுப்பிலே கட்டி முடிந்துகொண்டும், உபநிஷத்துக்களைத் தலையிலே பூமொட்டுகளாக கொண்டும், காஞ்சி என்னும் ஒட்டியாணத்தை விளையாட்டாகவே இடையிலே பொருந்த அணிந்துகொண்டும் விளங்கும் வேடப் பெண்ணாகி) கிருபையாகிய நீரை வார்க்கும் நீர்ச்சாலையுடையவளாய் (தண்ணீர்ப் பந்தலிலே நீர் வார்ப்பதற்கான சாய்கரகத்தையுடையவளாய்) புத்தியில்லாதவர்களாயினும் (கருணை வெள்ளத்தைப் பருகுவதற்காக) தலைவணங்கி நிற்கின்றவர்களுடைய தாபத் திரயங்களையும் (தாகத்தை யெல்லாம்) முற்றும் நீக்குபவளாய் மிகவும் சிறப்புற்றவளாக விளங்குகிருள்.

कवित्वश्रीकन्दः सुकृतपरिपाटी हिमगिरे-
विंधात्री विश्वेषां विषमशरवीरध्वजपटी ।
सखी कम्पानद्याः पदहसितपाथोजयुगली
पुराणो पायान्नः पुरमथनसाम्राज्यपदवी ॥ ४६ ॥

46. கவிதையாகிய செல்வங்கள் வளருவதற்கு மூலகாரணமான அடிக்கிழங்காகவும், இமயமலையினுடைய நல்வினையால் மேன்மேலும் பெருகுகின்ற பயன்களின் வரிசையாகவும், (ஒற்றைப்பட்ட) ஐந்து பாணங்களையுடைய வீரனை மன்மதனுக்குரிய (கொடியாக வுயர்த்திய) பட்டுத் துவஜபடத்தை (அவனை வென்று அவனுடைய உரிமைகளைக் கைப்பற்றிக் கொண்டு அவனுடைய ராஜ்யத்தை வஹிப்பதால்) உடையவளாகவும், கம்பாநதி என்னும் ஸ்திரீக்கு (அவளைப் பிரியமாட்டாத) தோழியாகவும், தாமரையைப் பரிகசிக்கும் திருவடிகள் இரண்டினை யுடையவளாகவும் திரிபுரத்தை யழித்த பரமசிவனின் ஸாம்ராஜ்யத்தை (எல்லோருக்கும் மன்னனாகிய நிலையை)ப் பெறுவதற்குரிய வழியாகி அந்த ஸாம்ராஜ்ய நிலையே உருவெடுத்தாற் போன்றவளாகவும் விளங்குபவளாகி, உலகோர் அனைவருக்கும் தாயா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ராகவும் இராணியாகவும் பண்டைக்காலந் தொட்டு வீற்றிருப்பவள் நம்மைக் காப்பாளாக.

दरिद्राणा मध्ये दरदलिततापिच्छसुषमाः
स्तनाभोगक्लान्तास्तरुणहरिणाङ्काङ्कितकचाः ।
हराधीना नानाविबुधमुकुटीचुम्बितपदाः
कदा कम्पातीरे कथय विहरामो गिरिसुते ॥ ४७ ॥

47. இடையிலே சிறுமையுடையவர்களாயும் (சிற்றிடையுடையவர்களாயும்), சிறிதே அலர்ந்த காயாம்பூவின் பேரழகுவாய்ந்த திருமேனியையுடையவர்களாயும், ஸ்தனங்களின் பெருமையால் வருந்துபவர்களாயும், (மானாகிய மறுவுடைய) சந்திரனுடைய இளம்பிறையை சென்னிப் பூவாகச் சூட்டிய கூந்தல்களை யுடையவர்களாயும், ஹரதேவராகிய பரமசிவனுக்கு (மட்டுமே) அடங்கியவர்களாகி நானாவிதமான தேவர்களின் (ஞானிகளின்) திருமுடிகளாலே தொடப்பெற்ற திருவடிகளை யுடையவர்களாயும், எப்பொழுது கம்பாதீரத்திலே விளையாடுவோம், சொல்வாய், மலைமகளே!

நாங்கள் உம்மையே தியானிப்பதால், உம்மோடு ஒன்றாகிய உருவங்களைப் பெற்று, (ஸாரூப்யம் பெற்று), உமக்குச் சமானமான தோழிகளாகி, உம்மோடு என்று கன்னிப் பருவத்து விளையாட்டுகளில் இன்புறுவோம் என்கிறார். மன்னரும் அவர்களுடைய ராணிகளும் தங்கள் தங்கள் பதவியைக் காட்டும் சென்னிப் பூக்களைச் சூட்டிக் கொள்வார்கள்.

वरीवर्तु स्थेमा त्वयि मम गिरां देवि मनसो
नरीनर्तु प्रौढा वदनकमले वाक्यलहरी ।
चरीचर्तु प्रज्ञाजननि जडिमानः परजने
सरीसर्तु स्वैरं जननि मयि कामाक्षि करुणा ॥ ४८ ॥

48. (வாக்குகளுக்குத் தலைவியான) தேவியே! என்னுடைய மனதின் நிலையும் வாக்குகளின் நிலையும் உம்மிடத்தி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

லேயே சிறந்து விளங்கட்டும்; (என்னுடைய) முகமாகிய (வாயாகிய) தாமரையிலே வாக்குகளின் பெரு வெள்ளமாகிய திறமைவாய்ந்த ஸ்திரீயானவள் (அழகிய விந்யாஸங்களோடு) நடனமாடட்டும்; நல்லறிவை உண்டுபண்ணுகின்றவளே! (என்னுடைய) அஞ்ஞானமாகிய ஜடத்தன்மையானது நமக்குப் புறம்பான மனிதர்களிடத்திலே போகட்டும்; அன்னையே! காமாக்ஷியே! என்னிடத்தில் தன்னியல்பாகவே கருணையானது பாய்ந்துகொண்டிருக்கட்டும்.

क्षणात्ते कामाक्षि भ्रमरसुषमाशिक्षणगुरुः
कटाक्षव्याक्षेपो मम भवतु मोक्षाय विपदाम् ।
नरीनर्तु स्वैरं वचनलहरी निर्जरपुरी-
सरिद्वीचीनीचीकरणपटुरास्ये मम सदा ॥ ४९ ॥

49. காமாக்ஷியே! வண்டுகளுக்கு காந்திபெறும் வகையைக் கற்றுக்கொடுக்கும் குருவாகியதான உம்முடைய கடாக்ஷங்களின் வீழ்ச்சியானது ஒரு க்ஷணத்திலே ஆபத்துகளினின்று நான் விடுதலை பெறுவதின்பொருட்டு ஒரு க்ஷண நேரமாவது அமைவதாக; என்னுடைய வாயிலே தன்னிச்சைப்படி எப்பொழுதும் வாக்குகளின் வரிசைகளையுடையதான கவிதையென்னும் நடனமாது தேவலோகத்து நதியாகிய கங்கையின் வெள்ளத்தைக் கீழ்மைப்படுத்தும் திறமை வாய்ந்தவளாய் நடனமாடட்டும்.

என் வாக்குகளிலே அமைந்த ஸ்துதிகளிலே உம்மைப் பரமசிவன் பிரணயகாலத்திலே தலைவணங்குவதைக் கூறுவதால், கங்கையும் அப்பொழுது தாழ்ச்சி பெறுகிறாள் என்பது கருத்து.

पुरस्तान्मे भूयःप्रशमनपरः स्तान्मम रुजां
प्रचारस्ते कम्पातटविहृतिसंपादिनि दृशोः ।
इमां याच्ञामूरीकुरु सपदि दूरीकुरु तमः-
परीपाकं मत्कं सपदि बुधलोकं च नय माम् ॥ ५० ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

50. கம்பாநதிக் கரையிலே இன்புறும் விளையாட்டுகளை யுடையவளே! என்னுடைய துன்பங்களை மாய்ப்பதிலே சக்தி வாய்ந்ததான உம்முடைய திருக்கண்களின் பார்வை யானது என் முன்பாக சஞ்சரித்துக்கொண்டிருக்கட்டும்; இப்பொழுதே (என்னுடைய) இந்தப் பிரார்த்தனையை ஏற்றுக்கொள்வாயாக; (இப்பொழுதே) என்னுடையதான அஞ்ஞானத்தின் முதிர்ச்சியை அப்புறப்படுத்துவாயாக; (இப்பொழுதே) ஞானிகளின் (தேவர்களின்) ஸந்நிதியிலே என்னை அழைத்துச் செல்வாயாக.

उदञ्चन्ती काञ्चीनगरनिलये त्वत्करुणया
समृद्धा वाग्धाटी परिहसितमाध्वी कवयताम् ।
उपादत्ते मारप्रतिभटजटाजूटमुकुटी-
कुटीरोल्लासिन्याः शतमखतटिन्या जयपटीम् ॥ ५१ ॥

51. காஞ்சீநகரத்தைக் கோயிலாகக் கொண்டவளே! உம்முடைய கருணையாலே (காஞ்சீபுரத்திலே) தோன்றி (அந்தக் கருணையாலே) வளமுடையதாகப் பெருகுகின்ற (என்னுடைய இந்த) வாக்குகளின் வெள்ளமானது, கவிபுனைகின்றவர்களைத் தன் இனிமையால் பரிஹாஸஞ் செய்து கொண்டு, காமனை எதிர்த்து வென்றவரான பரமசிவனுடைய ஜடாமண்டலத்தின் முடிப்பாகமாகிய அரண்மனைமீது உல்லாஸமாக அசைகின்ற தேவலோகத்து நதியாகிய கங்கையின் வெற்றிக் கொடியாயிருக்கும் தன்மையை அபகரித்துத் தன்னுடையதாக்கிக் கொள்கின்றது.

காமனை வென்றதற்கு அடையாளமாக பரமசிவன் தன் ஜடாமகுடமாகிய குன்றின்மீது கங்கையைக் கொடியாக உயர்த்தியிருப்பதை உம் அடிக்கீழ்த் தாழ்த்தி, உம் கருணையாலேபெருகி வளமுடையதான என் வாக்கானது பரமசிவனை நீர் வெற்றிகொண்டதற்கு அடையாளமாகத் திருவடியிலே கட்டிய வெற்றிக்கொடியாகிய கங்கையின் இயல்பை அடைகின்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

श्रियं विद्यां दद्याज्जननि नमतां कीर्तिममितां
सुपुत्रान् प्रादत्ते तव झटिति कामाक्षि करुणा ।
त्रिलोक्यामाधिक्यं त्रिपुरपरिपन्थिप्रणयिनि
प्रणामस्त्वत्पादे शमितदुरिते किं न कुरुते ॥ ५२ ॥

52. காமாக்ஷியே! (உம்மை) வணங்குகின்றவர்களுக்கு உம்முடைய கருணையானது அளவற்ற கீர்த்தியையும் நன் மக்களையும் அப்பொழுதே தந்தருளுகின்றது; திரிபுரத்தை எதிர்த்து அழித்தவரான பரமசிவனுடைய காதலியே! உமது கருணையானது மூவுலகத்திலும் மேன்மையையும் அளிக்கின்றது; பாபங்களை யெல்லாம் அழித்தொழிப்ப வளே! (பாபங்களை யழித்தொழிப்பதான) உம்முடைய திரு வடியிலே நன்றாக வணங்குவதானது என்னதான் செய்யாது? (ஆகையால்) அன்னையே! (எனக்கு) செல்வத்தையும் வித்தையையும் அளிப்பதாகுக.

உன்னுடைய பாதங்களிலே வணங்குகின்றவர்களுக்குகருணை கூர்ந்து பெரும்புகழையும் நன்மக்களையும் இகத்திலே யளித்து, பரத்திலே ஸர்வலோகங்களையும் ஆளும் அதிகாரத்தையும் அளிக்கின் ருய் என்பது பிரஸித்தம்; ஆயினும், நான் அவற்றை வேண்டேன்; வேதங்களாகிய செல்வமும் ஞானமுமே நான் வேண்டுபவை; அவை யிரண்டும் ஸ்ரீதேவியும் ஸரஸ்வதியுமாக உமது கண்களாக விளங்குகின்றவர்களின் வசத்தில் இருப்பனவாதலால், அவைகளைத் தருமாறு ஆக்ஞை யிட்டருளுவாய் என்கிருர்.

मनःस्तम्भं स्तम्भं गमयदुपकम्पं प्रणमतां
सदा लोलं नीलं चिकुरजितलोलम्बनिकरम् ।
गिरां दूरं स्मेरं धृतशशिकिशोरं पशुपते-
र्दृशां योग्यं भोग्यं तुहिनगिरिभाग्यं विजयते ॥ ५३ ॥

53. அடிவணங்குகின்றவர்களுடைய மன அடக்கத் தைக் கர்வமுடையதாகச் செய்கின்றதான கருணையாயும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(கம்பாநதிக் கரையிலுள்ள பொருளாயும்), (கரியஒளியால்) வண்டுகளை யெல்லாம் வென்ற அளகங்களை யுடையதாகி எப்பொழுதும் நீரோட்டமுடையதாய் அசைந்தாடுகின்ற கருநீல ரத்னமாயும், வாக்குகளுக்கு எட்டாததாயினும் (கண்களாலே காண்பதற்கு எளியதாய்) பாலசந்திரனைத் தரித்துக்கொண்டிருக்கும் மலர்ந்த முறுவலாயும், பசுக்களாகிய ஜீவர்களுக்கு நாயகரான பரமசிவனுடைய கண்களுக்கு இன்பமளிக்கும் பொருளாவதற்கு உரியதாகி, பனிமலையின் பேறுக அமைந்த பொருள் மிகச் சிறந்து விளங்குகின்றது.

அடியார்களின் மனதிலே வந்துறைவதால் அவர்கள் மனம் பெருமை கொள்கின்றது; கருமையும் ஒளியும் பெற்று விளங்கும் வண்டுகளின் கர்வத்தை அளகத்தால் போக்குகின்ற நீலரத்னமாகின்றது; வாக்குகளின் கர்வத்தை யடக்கி கண்களுக்கு கர்வத்தை யளிக்கின்றது. ஆதலால் தேவியின் உருவம் பரமசிவனையும் தன் வசப்படுத்தும் திறமையுடையதாகி, அவருடைய கண்களுக்கு பரம சுகத்தைத் தருவதாகின்றது.

घनश्यामान्कामान्तकमहिषि कामाक्षि मधुरा-
न्दृशां पातानेतानमृतजलशीताननुपमान् ।
भवोत्पाते भीते मयि वितर नाथे दृढभव-
न्मनश्शोके मूके हिमगिरिपताके करुणया ॥ ५४ ॥

54. காமனை அழித்தவரான பரமசிவனுடைய ராணியே! காமாக்ஷியே! (என்) பிராட்டியே! இமயமலைமேல் விளங்கும் வெற்றிக்கொடியே! கார்மேகங்களைப் போல கருநிறமுடையவையும், இனிமை யுடையவையும், அமுதமாகிய (நீர்த் திவலைகளால்) நீரால் குளிர்ச்சி யுடையவையும் ஒப்பற்றவையாயுமுள்ள கண்ணோக்கத்தின் வீழ்ச்சிகளாகிய இந்த அருவிகளை, ஸம்ஸாரமாகிய பேராபத்திலே அகப்பட்டுக்கொண்டு பீதியுடையவனாகி மனதிலே நிலைத்த துயரங்களை யுடையவனான இந்த ஊமையான என்மீது (மூகன்மீது), கருணையோடு பாயும்படி செய்வாயாக.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருவிபோல் நிரந்தரமாக அமிர்தமயமான கடாக்ஷங்கள் பாய்ந்தால் மட்டுமே, ஸம்ஸார வெக்கையாலே தவித்து, துன்பங்களால் மனமும் வாக்கும் ஸ்தம்பித்து, உடலும் நடுங்குகின்ற நிலையிலுள்ள நான் உமக்கு ஆட்செய்துகொண்டிருக்க இயலும் என்கிறார்.

नतानां मन्दानां भवनिगलबन्धाकुलधियां
महान्ध्यं रुन्धानामभिलषितसंतानलतिकाम् ।
चरन्तीं कम्पायास्तटभुवि सवित्रीं त्रिजगतां
स्मरामस्तां नित्यं स्मरमथनजीवातुकलिकाम् ॥ ५५ ॥

55. ஸம்ஸாரமாகிய கழுத்துக்கட்டினாலே கலங்கிய புத்தியுடையவர்களாய் (லகான், கடிவாளம் முதலிய கட்டுகளால் கலங்கிப்போய் சோர்வுற்று விழுங் குதிரைகளைப் போல) மந்த புத்தியுடையவர்களாயினும் (உம்முடைய பாதங்களிலே) விழுந்து நமஸ்கரிப்பவர்களின் பெரிய (மூல) அஞ்ஞானமாகிய குருட்டுத் தனத்தைத் தடுத்து நீக்குகின்றதாயும், விரும்பிய விருப்பங்களை யெல்லாம் அதிகமாக உதவுகின்றதாயுமுள்ள 'ஸந்தானலதை' என்னும் கற்பகக் கொடியாகி, (நம்மை நோக்கி) கம்பாநதிக் கரைப் புறத்திலே உலாவி வருகின்றவளும், மூவுலகங்களையும் பிறப்பிக்கின்றவளும், மன்மதனை யழித்தவரான பரமசிவனைப் பிழைப்பிக்கும் ம்ருதஸஞ்ஜீவனி மூலிகையின் கொழுந்தாகியவளுமான (சொல்லொண்ணாத தன்மையளான) அந்த தேவியை எப்பொழுதும் இடைவிடாது நினைத்துக்கொண்டிருக்கிறோம்.

தேவி ஒப்பற்றதோர் ஓஷதி; இந்த ஓஷதியின் அடிவேர் மேலே பட்டால் பிறவிக் குருடனுக்கும் கண்ணொளி உண்டாகும்; மூர்ச்சை நீங்கி புத்தித் தெளிவு உண்டாகும்; கழுத்தை யழுத்தும் சுமைக்கட்டும் நீங்கிவிடும்; இந்த மூலிகையின் தளிர்தான் மன்மதனை வெல்லும் சக்தியைப் பரமசிவனுக்கு அளித்தது; மூவுலகும் பிறப்பதற்கும் இந்த மூலிகையே காரணம்; இதன் வேர்ப்பற்றிலே விழுந்து நாமும் பிழைப்பதற்கென்றே இது மெல்ல கம்பாநதிக் கரையின் மேட்டிலே உலாவிவருவது அதிசயமல்லவா? நினைக்குமுன் கண்முன்னே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வந்து தோன்றும் இம்மூலிகையை என்றும் மனதினால் சிந்திப்போமாக. மோந்தால் ஸ்வஸ்தமாக்கும் ஓஷதிபோலன்றி நினைத்தாலே ஸ்வஸ்தமாக்கும் மூலிகை இது; பர்வதத்தை நாடிப் போகவேண்டாம்; ஏனெனில், இம் மூலிகை ஆர்த்தனை நாடி அவனிருக்குமிடத்திற்கே வந்து உதவுகின்றது.

परा विद्या हृद्याश्रितमदनविद्या मरकत-
प्रभानीला लीलापरवशितशूलायुधमनाः ।
तमःपूरं दूरं चरणनतपौरंदरपुरी-
मृगाक्षी कामाक्षी कमलतरलाक्षी नयतु मे ॥ ५६ ॥

56. தன் இருதயத்திலே காமகலையானது நன்கமையப் பெற்றவளாய் (காமகலை முழுவதையும் தன் மனதாலே உணர்ந்தவளாய்) சிறந்த ஸ்ரீவித்யா ஸ்வரூபிணியாக விளங்குகின்றவளும், மரகத மணியின் காந்தியைப் போல நீல நிறமுடையவளும், சூலாயுதத்தையுடையவரான பரம சிவனுடைய மனதை விளையாட்டாகவே தன் வசப்படுமாறு செய்தவளும், மானின் விழிகளைப்போன்ற விழிகளையுடைய தேவேந்திர லோகத்துப் பெண்களைத் தன் பாதங்களிலே வணங்குவோர்களாகக் கொண்டவளும், தாமரையைப்போல மெல்ல அசைந்து ஒளிரும் (மிளிரும்) கண்களையுடையவளுமான காமாக்ஷியானவள் என்னுடையதான அஞ்ஞான இருளின் திரளை வெகுதூரத்திற்கு அப்பால் போகும்படி விரட்டி விடுவாளாக.

अहंताख्या मत्कं कवलयति हा हन्त हरिणी
हठात्संविद्रूपं हरमहिषि सस्याङ्कुरमसौ ।
कटाक्षव्याक्षेपप्रकटहरिपाषाणपटलै-
रिमामुच्चैरुच्चाटय झटिति कामाक्षि कृपया ॥ ५७ ॥

57. ஹரதேவரான பரமசிவனுடைய ராணியே! காமாக்ஷியே! ஸம்வித்ஞானத்தின் வடிவான இந்த முளைப்பயிரை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

என்னுடையதான அகந்தை (அகங்காரம்) என்னும் பிணை மானனது தைரியமாக வந்து தின்னுகின்றதே! ஆ! ஐயோ! (நாற்புறமும் செலுத்தும்) கடைக்கண்ணின் நோக்குகள் என்று பிரசித்திபெற்று நெருக்கமாக எறியப்படுகின்ற இந்திர நீலக்கற்களால் இந்த (அகங்காரமாகிய) மானை இந்த க்ஷணமே கிருபைகொண்டு விரட்டியோட்டுவாயாக.

बुधे वा मूके वा तव पतति यस्मिन्क्षणमसौ
कटाक्षः कामाक्षि प्रकटजडिमक्षोदपटिमा ।
कथंकारं नास्मै करमुकुलचूडालमुकुटा
नमोवाकं ब्रूयुर्नमुचिपरिपन्थिप्रभृतयः ॥ ५८ ॥

58. காமாக்ஷியே! புத்திமானானாலும் சரி, ஊமையானாலும் சரி, எவனொருவன்மீது பிரபலமான (ஜடத்தனத்தை) அஞ்ஞானத்தையழிக்கும் திறனுடையதான உம்முடைய இந்தக் கடாக்ஷமானது க்ஷணப்பொழுது விழுகின்றதோ, அவன் பொருட்டு, (நமுசியை எதிர்த்துப் போர் புரிந்து அவனையழித்தவனான) தேவேந்திரன் முதலானவர்கள், தங்கள் திருமுடிகளிலேயுள்ள கிரீடங்களின்மீது சூட்டிய (பூமொட்டுகளைப்போல)சூடாமணிகளைப் போல தங்கள் கைகளைக் கூப்பிக்கொண்டிருப்பவர்களாய், 'நம:' என்னும் வார்த்தைகளைச் சொல்பவர்களாக ஏன் இருக்கமாட்டார்கள்?

தேவியின் கடாக்ஷத்தைப் பெற்றவர்களில் அறிவாளி, அறிவில்லாத ஊமையன் என்னும் பாகுபாடு இல்லை; முன்புள்ள நீசதையெல்லாம் நீங்கி (தேவியை யொத்தவர்களாகி) இந்திரன் முதலான தேவர்களாலும் போற்றப்பெற்ற பெரு நிலையைப் பெறுவார்கள்.

प्रतीचीं पश्यामः प्रकटरुचिनीवारकमणि-
प्रभासध्रीचीनां प्रदलितषडाधारकमलाम् ।
चरन्तीं सौषुम्ने पथि परपदेन्दुप्रविगल-
त्सुधार्द्रां कामाक्षीं परिणतपरंज्योतिरुदयाम् ॥ ५९ ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

59. மிகச் சிறந்த ஒளி பொருந்தியவையான நீவாரம் என்னும் காட்டு நெல்லின் மணிகளினுடைய காந்தியை ஒத்த காந்திகளுக்கு (மங்குதலைத் தருகின்ற) அஸ்தமன திசையைப் போலவும்,ஆறு ஆதாரங்களாகிய தாமரைகளை (ஸூர்யனைப் போல) நன்ருக மலரச் செய்வதாகவும், ஸுஷும்னை என்னும் நாடியின் வழியே செல்வதாகவும், பரமபதமாகிய சந்திரனிடமிருந்து பெருகி வழியும் அமிர்தத்தால் ஈரித்ததாகவும், நன்ருக முதிர்ந்த பரஞ்சோதியின் உதயமாகவும் விளங்கும் காமாக்ஷியைக் கண்டுகொண்டோம்.

சூரியன், சந்திரன், அஸ்தமனதிசை, உதயபருவம், ஸுஷும்னையிலே செல்லக்கூடிய ஸூக்ஷ்மதை, ஒளியின் பரப்பு இவ்வாறு முரணுடைய பொருள்களோடு ஒப்புமைபெற்று ஒப்பற்றதாக விளங்குகின்ருள் என்கிருர்.

जम्भारातिप्रभृतिमुकुटीः पादयोः पीठयन्ती
गुम्फान्वाचां कविजनकृतान्स्वैरमारामयन्ती ।
शम्पालक्ष्मीं मणिगणरुचापाटलैः प्रापयन्ती
कम्पातीरे कविपरिषदां जृम्भते भाग्यसीमा ॥ ६० ॥

60. ஜம்பாஸுரனை யழித்தவனை தேவேந்திரன் முதலானவர்களின் மகுடங்களை (தன்னுடைய) பாதங்கள் இரண்டிற்கும் அடிநிலையாக (பீடங்களாக)ச் செய்து கொண்டும், கவிகளாகிய ஜனங்களாலே இயற்றப்பெற்ற வாக்குகளின் செழித்த சோலைகளைத் தான் தன்னிச்சைப்படி உலாவுவதற்குரிய பூம்பொழில்களாகச் செய்துகொண்டும், (தான் அணிந்துள்ள அணிகளிலுள்ள) மணிகளின் திரளால் எழுந்த செவ்வொளிகளாகிய பாடலிப் பூக்களால் மின்னற் கொடியின் காந்தியை (கம்பாநதிக் கரையிலே) என்றும் இருப்பதாகச் செய்துகொண்டும், கவிகளின் சங்கங்களுக்குரிய (ஸமூஹங்களுக்குரிய) செல்வத்தின் பேரெல்லையானது (மிகச் சிறந்த பாக்கியமானது) விளங்குகின்றது.

பாதபீடங்களாகும் பேறுகளைத் தேவர்களின் திருமுடிகளுக்கு திருவடிகளாலே அளித்துக்கொண்டும், தன் வடிவழகால் கவிகளின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாடல்களுக்கு அழகு செய்துகொண்டும், தான் அணிந்துள்ள அணிகளின் சோபையாலே கம்பா தீரத்தைப் பேரெழில் வாய்ந்ததாகச் செய்துகொண்டும் விளங்கி, இவ்வண்ணம் விளங்குகின்றாள் என்று கவிகள் சங்கமிருந்து பாடிக் கொண்டாடும்படி அவர்களுக்குக் காட்சியளிக்கிறாள்.

चन्द्रापीडां चतुरवदनां चञ्चलापाङ्गलीलां
कुन्दस्मेरां कुचभरनतां कुन्तलोद्धूतभृङ्गाम् ।
माराराते र्मदनशिखिनं मांसलं दीपयन्तीं
कामाक्षीं तां कविकुलगिरां कल्पवल्लीमुपासे ॥ ६१ ॥

61. சந்திரனைத் திருமுடியிலே சூட்டும் பூமாலை (கண்ணி)யாகக் கொண்டவளும், பரந்த திருமுக மண்டலத்தையுடையவளும், (சஞ்சலமுடையவையாகி) மிளிர்கின்ற கடைக்கண்பார்வைகளால் உல்லாஸமாக இருப்பவளும், முல்லையைப்போன்ற முறுவலையுடையவளும், கொங்கைகளின் கனத்தால் சிறிது முன்புறமாக வளைந்த திருமேனியையுடையவளும், வண்டுகளை (கருநிறத்தாலும் காந்தியாலும்) வென்று ஒழித்த கூந்தலையுடையவளும், (அக்கினிக் கண்ணால்) மன்மதனை வென்று அழித்தவரான பரமசிவனுக்கு, காதலாகிய அக்கினியை புஷ்டியுடையதாக ஜ்வலிக்கும்படி மூட்டிவிடுகின்றவளும், கவிகளின் ஸமூஹங்களுடைய வாக்குகளுக்கு(உரிய பலன்களை அளிக்கின்ற) கற்பகக் கொடியாக விளங்குகின்றவளுமான (வர்ணிக்க இயலாத தன்மையுடையவளான) அந்தக் காமாக்ஷியை (அண்டினவனாய், அவளை) உபாஸனை செய்துகொண்டிருக்கிறேன்.

कालाम्भोदप्रकरसुषमां कान्तिभिस्तिर्जयन्ती
कल्याणानामुदयसरणिः कल्पवल्ली कवीनाम् ।
कंदर्पारेः प्रियसहचरी कल्मषाणां निहन्त्री
काञ्चीदेशं तिलकयति सा कापि कारुण्यसीमा ॥ ६२ ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

62. கார்மேகங்களின் காந்தியைத் தன்னுடைய காந்திகளாலே பயமுறுத்தி விரட்டுகின்றதும், (ஸகல) மங்களங்களும் தோன்றுவதற்கான காரணமாக (வழியாக)வுள்ளதும், கவிகளுக்கு (கோரிய பயன்களைத் தருவதான) கற்பகக் கொடியானதும், தோஷங்களை (எல்லாம்) அழிக்கின்றதுமான எல்லையற்றதொரு கருணையானது, மன்மதனை யழித்தவரான பரமசிவனுடைய பிரியபத்தினியாய், காஞ்சி நாட்டை (ஒரு திலகம் போல) சிறப்பாக அலங்கரிக்கின்றது.

ऊरीकुर्वन्नुरसिजतटे चातुरीं भूधराणां
पाथोजानां नयनयुगले पारिपन्थ्यं वितन्वन् ।
कम्पातीरे विहरति रुचा मोघयन्मेघशैलीं
कोकद्वेषं शिरसि कलयन्कोऽपि विद्याविशेषः ॥ ६३ ॥

63. ஒப்பற்றதொரு தனி வித்யையின் வடிவாகிய தேவியானவள், (மார்பில் எழுந்த) கொங்கைத் தலத்திலே மலைகளின் (கடினத் தன்மையான) திறமையை மெச்சித் தன்னுடையதாக அமைத்துக்கொண்டும், கண்கள் இரண்டிலும் தாமரை மலர்களிடமுள்ள விரோதத்தை விளக்கிக்கொண்டும், (திருமேனியின்) காந்தியாலே மேகங்களின் வரிசையை (தன்மையை)ப் பயனற்றதாகச் செய்துகொண்டும், (கொங்கைகளை யொத்த) சக்கிரவாகப் பக்ஷிகளுக்கு விரோதியான சந்திரனைத் தலையிலே அணிந்துகொண்டும் கம்பாநதிக் கரையிலே விளையாடிக் களிக்கின்றாள்.

ஒப்புமை கொண்டவற்றுள் சிலவற்றை அங்கீகரித்தும் சிலவற்றை நிரஸ்கரித்தும் தன்னிச்சைப்படி விளையாடுகின்றாள் என்னும் ஸ்வாரஸ்யம் தோன்றப் பாடுகின்றார்.

काञ्चीलीलापरिचयवती कापि तापिच्छलक्ष्मी-
र्जाड्यारण्ये हुतवहशिखा जन्मभूमिः कृपायाः ।
माकन्दश्रीर्मधुरकविताचातुरी कोकिलानां
मार्गे भूयान्मम नयनयोर्मान्मथी कापि विद्या ॥ ६४ ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

64. காஞ்சீபுரத்திலே விளையாடிக் களிக்கின்ற வழக்க முடையவளாகியும், தமாலபுஷ்பத்தின் ஒப்பற்ற காந்தியை யுடையவளாகியும், (ஜடத்தனம்) அஞ்ஞானமாகிய காட்டிலே தீயின் ஜ்வாலையாகியும், கிருபைக்குப் பிறப்பிடமாகியும், இனிய கவிதையிலே வல்லவையான குயில்களுக்கு (கவிகளாகிய குயில்களுக்கு) மாமரத்தின் (வஸந்த காலத்திலுண்டான தளிர்களால் எழுந்த) காந்தியாகியும் ஒப்பற்றதாக விளங்கும் காமகலையின் வடிவமானது என் கண்கள் செல்லும் வழியே (எதிர்கொண்டு வந்து) தோன்றுவதாக.

सेतुर्मातर्मरतकमयो भक्तिभाजां भवाब्धौ
लीलालोला कुवलयमयी मान्मथी वैजयन्ती ।
काञ्चीभूषा पशुपतिदृशां कापि कालाञ्जनाली
मत्कं दुःखं शिथिलयतु ते मञ्जुलापाङ्गमाला ॥ ६५ ॥

65. அன்னையே! ஸம்ஸாரமாகிய கடலிலே பக்திமான்களுக்காக அமைந்த மரகத மயமான அணையாகவும், விநோதமாகப் பறந்துகொண்டிருக்கின்றதும் நீலோத்பல மயமானதும் மன்மதனுடையதுமான வெற்றிக் கொடியாகவும், காஞ்சீபுரத்திற்கு அலங்காரமாகவும் (ஒட்டியாணமாகிய அணியாகவும்), பசுக்களான ஜீவகோடிகளுக்கு பதியான பரமசிவனுடைய கண்களுக்குக் கரிய மை தீற்றியதுபோலச் சிறந்து விளங்குவதாகவும் அமைந்த உம்முடைய கடைக் கண்களின் நோக்கங்களாலான அழகிய (கருநீல) மாலையானது என்னுடையதான துக்கத்தைச் சிதறுண்டு அழியும்படி செய்வதாக.

व्यावृण्वानाः कुवलयदलप्रक्रियावैरमुद्रां
व्याकुर्वाणा मनसिजमहाराजसाम्राज्यलक्ष्मीम् ।
काञ्चीलीलाविहृतिरसिके काङ्क्षितं नः क्रियासु-
र्बन्धच्छेदे तव नियमिनां बद्धदीक्षाः कटाक्षाः ॥ ६६ ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

66. காஞ்சீபுரத்திலே திருவிளையாடல்கள் புரிவதில் இன்புறுகின்றவளே! நீலோத்பல மலர்களின் இதழ்களினுடைய மேன்மையோடு பகைபூண்டிருப்பதை நன்ருகத் தெரிவித்துக் கொண்டிருப்பவையும், காமனுகிய பேரரசனுடைய ஸாம்ராஜ்யமாகிய செல்வத்தை விரிவாக விளக்கிக் கொண்டிருப்பவையும், ஒடுக்கமுடையவர்களுக்கு ஸம்ஸாரமாகிய பந்தத்தை அறுத்தொழிப்பது என்னும் காரியத்திலே விரதம் பூண்டு கங்கணங் கட்டிக்கொண்டவைகளுமாய் விளங்கும் உம்முடைய கடைக்கண்களின் நோக்கங்கள் எங்களுடைய விருப்பத்தைச் செய்து முடிப்பனவாக.

ஒரு யாகத்தைச் செய்து முடிக்கவேண்டுமென்று தொடங்குகின்றவர்கள் எத்தனை இடையூறுகள் நேர்ந்தாலும் எடுத்த காரியத்தை முடித்தே தீர்வது என்னும் உறுதிகொண்டு கைகளிலே கங்கணங்களைக் கட்டிக்கொண்டும், நியமங்களை மேற்கொண்டவர்களாகியும், உரிய ப்ரக்ரியைகளை முத்ரைகளாலே செய்துகொண்டும், யாகத்திற்கு உதவும் பேரரசரின் பெருஞ் செல்வங்களின் உதவியை பெற்றும், உத்தேசித்த காரியத்தை நிறைவேற்றுவார்கள்; தேவியின் கடைக்கண்ணோக்கங்களாகிய ருத்விக்குகள் மேற்கொண்ட கார்யம் ஸம்ஸாரத்தை யழித்தல் என்பது; அது எங்களுக்கு விருப்பமான கார்யம், எங்கள் பொருட்டுத் தொடங்கப் பெற்றது; ஆகையால் அது இனிது முற்றுப் பெறுவதாக என்கிருர்.

कालाम्भोदे शशिरुचि दलं कैतकं दर्शयन्ती
मध्येसौदामिनि मधुलिहां मालिकां राजयन्ती ।
हंसारावं विकचकमले मञ्जुमुल्लासयन्ती
कम्पातीरे विलसति नवा कापि कारुण्यलक्ष्मीः ॥ ६७ ॥

67. கருணையாகிய ஒரு புதிய லக்ஷ்மியானவள் தன்னுடைய கூந்தலாகிய கார்மேகத்திலே தாழம்பூவின் மடலாகிய (பிறைச்) சந்திரனுடைய ஒளியைக் காட்டிக்கொண்டும், (இடையாகிய) மின்னற்கொடியின் மத்தியிலே (தேனுண்ணுகின்ற) வண்டுகளாலான (கருநீல) மாலையை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒளிரும்படி செய்துகொண்டும், (திருவ்டிகளாகிய) விரிந்த தாமரை மலரிலே ஹம்ஸங்களின் (நூபுரங்களின்) ஒலியை அழகாக எழுப்பிக்கொண்டும் கம்பாநதியின் கரையிலே நன்ருக விளங்குகின்ருள்.

கம்பாநதிக் கரையிலே ஒரு புதிய பூங்கொடி சிறந்து விளங்குகின்றது. அதன் உச்சிப் பாகத்திலே (தேவியின் சூடாமணியாக அமைந்த பிறைச் சந்திரனுகிய) தாழைமடல் கரிய இலைகளின் (கூந்தலின்) இடையே காணப்படுகின்றது; மின்னற்கொடி போன்ற அதில் இடைப்பாகத்திலே கரியபூக்களின் மாலைபோன்ற திருமேனி (வேணி) யானது தோன்றுகின்றது; அதன் அடிப்பாகத்திலே, ஹம்ஸங்கள் (நூபுரங்கள்) சப்தித்துக்கொண்டு தங்குகின்ற தாமரைமலர்கள்; இவ்வாறு ஒரு கொடியிலே மூவகைப்பூ அமைந்தது ஓரதிசயம். தேவி லக்ஷ்மிபோல் விளங்குகிருள் என்பதையும் சிலேஷையால்விளக்குகிருர். லக்ஷ்மியானவள் கார்மேகம் போன்ற திருமாலின் மேனியிலே தாழைமடல்போலவும், திருமாலின் மார்பின் கீழுள்ள கரியரோம ராஜியை பிரகாசிக்கும்படி செய்யும் மின்னலொளிபோலவும், தாமரை போன்று அலர்ந்த மார்பிலே 'அகலகில்லேன்' என்று சப்தித்துக் கொண்டு உறைகின்ற ஹம்ஸம் போலவும் விளங்குகிருள்.

चित्रं चित्रं निजमृदुतया भर्त्सयन्पल्लवालीं
पुंसां कामान्भुवि च नियतं पूरयन्पुण्यभाजाम् ।
जातः शैलान्न तु जलनिधेः स्वैरसंचारशीलः
काञ्चीभूषा कलयतु शिवं कोऽपि चिन्तामणिर्मे ॥ ६८ ॥

68. ஆச்சர்யம்! ஆச்சர்யம்! இதோ ஓர் அற்புதமான சிந்தாமணி காஞ்சிபுரத்திற்கு (ஒட்டியாணத்திற்கு) அலங்காரமாக விளங்குகின்றது; இது (பிரஸித்தமான சிந்தாமணியைப்போல) திருப்பாற்கடலினின்று பிறந்ததன்று; மலையிலே (ஹிமவானிடத்திலே) பிறந்தது; (ஜடப்பொருளான அந்த சிந்தாமணியைப் போலாது) இது தன்னிஷ்டப்படி எங்கும் செல்கின்ற தன்மையையுடையது; (ஆகையால்) புண்ணியங்களை யுடையவர்களான மனிதர்களுக்கு (அவர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கள் எங்கே இருந்தாலும் அவர்களிடம் சென்று) பூமியிலே ஒழுங்காக இடைவிடாமல் (அவர்கள் நினைக்கவேண்டிய அவசியமின்றியே) அவர்களுடைய அபீஷ்டங்களை யெல்லாம் நிறைவேற்றுகின்றது. (சிந்தாமணியோ தன்னை யடைந்தவர்களின் அபீஷ்டங்களை அவர்கள் சிந்தனை செய்தால் மட்டுமே நிறைவேற்றுகின்றது); (சிந்தாமணியைப் போல கடினவஸ்துவாக இராமல்) தளிர்களின் வர்க்கத்தையே தன்னுடைய மென்மையால் அச்சுறுத்திக்கொண்டு விளங்குகின்றது. இந்த அற்புதமான சிந்தாமணியானது எனக்கு மங்களத்தை (பரமசிவனை) அளிப்பதாகுக.

ताम्राम्भोजं जलदनिकटे तत्र बन्धूकपुष्पं
तस्मिन्मल्लीकुसुमसुषमां तत्र वीणानिनादम् ।
व्यावृण्वाना सुकृतलहरी कापि काञ्चीनगर्या-
मैशानी सा कलयतितरामैन्द्रजालं विलासम् ॥ ६९ ॥

69. எது (அலைமேலலையாகப் பெருகும்) நல்வினைப் பயனாகிய வெள்ளமாகி ஒப்பற்றதாய் காஞ்சீபுரத்திலே விளங்குகின்றதோ, ஈசானராகிய பரமசிவனுடையதான அந்த வெள்ளமானது (கூந்தலாகிய) கார்மேகத்தின் அருகாமையிலே (திருமுக மண்டலமாகிய) செந்தாமரை மலரையும், அங்கேயே (அந்தத் திருமுக மண்டலத்திலே சிவந்த உதடுகளாகிய) செம்பரத்த மலரையும், அதனுள்ளே (பல் வரிசைகளாகிய) முல்லையரும்புகளின் (வெண்மையான) ஒளியையும், அங்கேயே (அந்த உதடுகளுக்கு உள்ளேயே, குரலாகிய) வீணையின் இன்னொலியையும் நன்முக விளங்குமாறு செய்துகொண்டு, இந்திரஜாலத்தின் முழுத்திறமையை மிக நன்முக விளக்கிக்கொண்டிருக்கின்றது.

ஆகாசத் தாமரை, அத்தாமரையிலே ஒரு செம்பரத்தம்பூ, அதனுட்புறத்திலே மல்லிகை மொட்டுகள்; அவற்றின் வழியே வருகின்ற வீணையொலி என்று இவ்வாறு இந்திரஜாலம் செய்யும் பரமசிவ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

னுடைய பத்தினியாக, காஞ்சீபுரத்து மக்கள்முன் தேவியானவள் அற்புதமாகத் தோன்றுகிறாள்.

आहारांशं त्रिदशसदसामाश्रये चातकाना-
माकाशोपर्यपि च कलयन्नालयं तुङ्गमेषाम् ।
कम्पातीरे विहरतितरां कामधेनुः कवीनां
मन्दस्मेरो मदननिगमप्रक्रियासंप्रदायः ॥ ७० ॥

70. சாதகப் பக்ஷிகளுக்குத் தஞ்சமாகவுள்ள கூந்தலாகிய மேகத்திலே (மூன்றாவது பருவமாகிய யௌவனத்தையே எப்போதும் உடையவர்களான) தேவர்களின் ஸமூஹங்களுக்கு உணவாகிய அமிர்தத்தின் பாகமாகிய சந்திரனின் பிறையை அளித்துக்கொண்டும், (நுண்ணிய இடையாகிய) ஆகாசத்தின்மீதும் இந்தத் தேவர்களுக்கு உயர்ந்த வாஸஸ்தலத்தை (தன் நாபீப் பிரதேசத்தை) அளித்துக்கொண்டும், மெல்லிய புன்முறுவலை யுடையதாயும், மன்மதனுடைய வேதமாகிய காமசாஸ்திரத்திலே வகுக்கப்பெற்ற கார்யங்களின் அனுஷ்டான முறையே உருவெடுத்தாற்போன்றதாயும், கவிகளுக்கு விரும்பியவற்றை யெல்லாம் சுரக்கும் காமதேனுவானது கம்பாநதிக் கரையிலே மிகவும் களிப்புற்று உலாவுகின்றது.

आर्द्रीभूतैरविरलकृपैरात्तलीलाविलासै-
रास्थापूर्णैरधिकचपलैरञ्चिताम्भोजशिल्पैः ।
कान्तैर्लक्ष्मीललितभवनैः कान्तिकैवल्यसारैः
काश्मल्यं नः कबलयतु सा कामकोटी कटाक्षैः ॥ ७१ ॥

71. (வர்ணிக்கவொண்ணாதவளான) அந்தக் காமகோடியானவள், இடையறாது பெருகுகின்ற கிருபையாகிய வெள்ளத்தால் ஈரித்திருப்பவையும், விளையாட்டிலே உற்சாகத்தைப் பெற்றவையாகி (அவ்விளையாடல்களாலே பக்தர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

களுடைய) ஆசைகளை நிறைவேற்றுகின்றவையும், வளர்ந்த தாமரை மலர்களின் வடிவங்களால் அசைந்தாடுந் தன்மையை அதிகமாக வுடையவையும், காந்தியின் தனிப்பட்ட தான செழிப்பை (அதாவது, காந்தியின் முழுமையை) யுடையவையும், செல்வத்திற்கு (ஸ்ரீ தேவிக்கு) அமைந்த அழகான உறைவிடங்களாய் அழகு வாய்ந்தவையுமான கடைக்கண்ணோக்கங்களால் எங்களுடைய மாசுற்ற தன்மையை ஒழித்துவிடுவாளாக. (वाणीलक्ष्मीललितभवनैः என்பது பாடமானல், 'ஸரஸ்வதிக்கும் லக்ஷ்மிக்கும் அழகிய வாஸஸ்தானங்களாகிய இரண்டு கண்களைச் சேர்ந்தவையும்' என்று பொருள் கொள்ளலாம்.)

आधून्वन्त्यै तरलनयनैराङ्गजीं वैजयन्ती-
मानन्दिन्यै निजपदजुषामात्तकाञ्चीपुरायै ।
आस्माकीनं हृदयमखिलैरागमानां प्रपञ्चै-
राराध्यायै स्पृहयतितरामादिमायै जनन्यै ॥ ७२ ॥

72. மன்மதனுடையதான வெற்றிக் கொடியை (தம்முடையதான) அசைந்து மிளிர்கின்ற கண்ணோக்கங்களால் (காற்றிலே போல) படபடவென்று அடித்துக்கொண்டு விளங்கும்படி செய்தும், (தம்முடைய) திருவடிகளை யடைந்தவர்களுக்கு ஆனந்தத்தை யளித்துக்கொண்டும், வேதாகமங்களாகி விரிந்த நூல்கள் எல்லாவற்றையும் கொண்டு பூஜிக்கத் தக்கவளாகியும், முதன்மையாகவுள்ள தாயாகியும் காஞ்சீபுரத்தை யடைந்த காமாக்ஷியை எங்களுடையதான மனம் மிகவும் விரும்பிப் போற்றுகின்றது.

दूरं वाचां त्रिदशसदसां दुःखसिन्धोस्तरित्रं
मोहक्ष्वेलक्षितिरुहवने क्रूरधारं कुठारम् ।
कम्पातीरप्रणयि कविभिर्वर्णितोद्यच्चरित्रं
शान्त्यै सेवे सकलविपदां शांकरं तत्कलत्रम् ॥ ७३ ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

73. மூன்ருவதான யௌவன பருவத்தையே எப்போதும் உடையவர்களான தேவர்களின் சபையிலுள்ளவர்கள் (ஸ்துதிகளாகக்) கூறும் வாக்குகளுக்கும் அப்பாற்பட்டவளாயும், துன்பமாகிய ஸமுத்ரத்தின் அக்கரைக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கும் ஓடமாயும், அஞ்ஞானமாகிய படர்ந்த மரங்களையுடைய காட்டிலே (அதை யழிக்கின்றதான) கூரிய முனையுடைய கோடரியாயும், கம்பாநதிக் கரையிலே ஆசைகொண்டவளாயும், கவிகளால் வர்ணிக்கப் பெற்ற சிறந்த நடத்தையை யுடையவளாயும், (மங்களங்களையே புரிபவளாயும்) மங்களங்களையே தருகின்ற பரமசிவனுக்கு உரியவளாயும், அந்தப் பரமசிவனுடைய பத்தினியாயும் விளங்கும் காமாக்ஷியை, எல்லாத் தீங்குகளும் ஒழியும்பொருட்டு, நான் அடிபணிந்து ஆட்செய்கின்றேன்.

खण्डीकृत्य प्रकृतिकुटिलं कल्मषं प्रातिभश्री-
शुण्डीरत्वं निजपदजुषां शून्यतन्द्रं दिशन्ती ।
तुण्डीराख्ये महति विषये स्वर्णवृष्टिप्रदात्री
चण्डी देवी कलयति रतिं चन्द्रचूडालचूडे ॥ ७४ ॥

74. இயல்பாகவே (வாலைப் போல) கோணலாகிய தோஷத்தை வெட்டியெறிந்தும், தெள்ளறிவாகிய (பிரதிபையாகிய) செல்வத்தின் சிறப்பைத் தம்முடைய திருவடிகளையடைந்தவர்களுக்குச் சோம்பலின்றி அளித்துக்கொண்டும், (துண்டீரம்) தொண்டைமண்டலம் என்னும் பெரிய நாட்டிலே பொன்மழை பெய்யும்படி செய்துகொண்டும், ஊடலிலே கோபங்கொள்கின்றவளான தேவியானவள் சந்திரனைச் சூடாமணியாகச் சூட்டிக்கொண்டவரான பரமசிவனிடத்தில் (அவ்வூடலால்) காதலை யுண்டுபண்ணுகிறுள்.

பிரணயகாலத்திலே ஊடலைத் தணிப்பதற்காகத் தம்முடைய திருவடியிலே தலைவணங்கும் பரமசிவனைக் கண்ணெடுத்து நோக்காமல் கோபங்கொண்டு வேற்றுமுகமாகி, தன்னுடைய அடியார்களுடைய இயற்கையாயுள்ள குற்றங்களைக் களைந்தும், அவர்களுக்கு ஞானத்தை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யளித்தும், தம்மைச் சூழ்ந்துள்ள நாடு முழுவதிலும் பொன்மழை பொழியும்படியும் கடைக்கண்ணுலே அருளுகின்ருள். ஆகவே, தேவியின் ஊடலால், அடியார்களுக்கும் நாடு முழுவதிற்குமே லாபம்; 'ஊடுதல் காமத்திற்கு இன்பம்' ஆதலின், பரமசிவனுக்கும் பரமலாபம் என்கிருர்.

येन ख्यातो भवति स गृही पूरुषो मेरुधन्वा
यद्दृक्कोणे मदननिगमप्राभवं बोभवीति ।
यत्प्रीत्यैव त्रिजगदधिपो जृम्भते किंपचानः
कम्पातीरे स जयति महान्कश्चिदोजोविशेषः ॥ ७५ ॥

75, எந்தத் தேஜோமயப் பொருளை (பத்தினியாக)க் கொண்டதால் (வருணிக்க வொண்ணுதவரான) அந்தப் பரமசிவன் (இல்லறமுடையவராகவும்) கிருகஸ்தாசிரமத்தையுடையவராகவும் பௌருஷம் நிறைந்தவராகவும் (பரம புருஷனுகவும்) மேருமலையை வில்லாக ஏந்தியவராகவும் பிரஸித்தி பெற்று விளங்குகின்ருரோ, எந்தத் தேஜோமயப் பொருளின் கடைக் கண்ணிலே காம சாஸ்திரத்தின் பெருமையானது நன்ருக அமைந்துள்ளதோ, எந்தத் தேஜோமயப் பொருளின் அன்பிலுலேயே கருமித்தனமுடைய ஏழையும் மூவுலகங்களையும் ரக்ஷிக்குந் தலைவனுகச் சிறப்புறுகின்ருனே, அந்தத் தேஜோமயமான ஒப்பற்ற தனிப் பெரும்பொருளானது கம்பாநதிக் கரையிலே விளங்குகின்றது.

धन्या धन्या गतिरिह गिरां देवि कामाक्षि यन्मे
निन्द्यां भिन्द्यात्सपदि जडतां कल्मषादुन्मिषन्तीम् ।
साध्वी माध्वीरसमधुरताभञ्जिनी मञ्जुरीति-
र्वाणीवेणी झटिति वृणुतात्स्वर्धुनीस्पर्धिनी माम् ॥ ७६ ॥

76. தேவியே! காமாக்ஷியே! என்னுடைய வாக்குகளின் போக்கானது, பாபங்களாகிய தோஷத்தினின்று பெருகுகின்றதான இகழ்தற்குரிய அஞ்ஞானத்தைப் பிளந்தெறி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யுமேயானால், அது அதிக பாக்கியசாலியேயாகும்; (ஆகையால்) தேனின் இன்சுவையை சுவையற்றதாக்குகின்ற இனிமை வாய்ந்தவளும் மென்மையும் அழகும் பொருந்திய நடத்தை யுடையவளும் நற்குணமுடையவளும் (இவற்றால்) தேவலோகத்து நதியாகிய கங்கையோடு போட்டி போட்டுக் கொண்டு அவளை (இனிமையிலும் குணத்திலும் போக்கிலும்) வெல்கின்றவளுமான வாக்குகளின் பெருவெள்ளம் என்னும் மங்கையானவள் இப்பொழுதே என்னை (நாயகனாக) வரிப்பாளாக.

यस्या वाटी हृदयकमलं कौसुमी योगभाजां
यस्याः पीठी सततशिशिरा शीकरैर्माकरन्दैः ।
यस्याः पेटी श्रुतिपरिचलन्मौलिरत्नस्य काञ्ची
सा मे सोमाभरणमहिषी साधयेत्काङ्क्षितानि ॥ ७७ ॥

77. எவளுடைய புஷ்பமயமான பொழிலானது யோகிகளினுடைய (ஞானத்தைப் பெற்றவர்களுடைய) உள்ளமாகிய தாமரையோ, எவளுடைய பீடமானது (வீற்றிருக்கும் ஆஸனமானது) மகரந்தப் பொடிகளாகிய குளிர்ந்த திவலைகளால் (ஸஹஸ்ரதள பத்மத்திலே தேவி வீற்றிருப்பதால்) எப்பொழுதும் குளிர்ச்சியுடையதோ, வேதங்களின் திருமுடிகளாகிய உபநிஷத்துகளிலே விளங்குகின்ற ரத்னத்திற்கு (திருவடியாகிய ரத்னத்தை வைப்பதற்கு) எவளுடைய நகைப் பெட்டியாக காஞ்சீபுரமானது விளங்குகின்றதோ, அத்தகையவளாய் சந்திரனை (திருமுடியிலே) பூஷணமாகப் பூண்டவரான சந்திர மௌலீசுவரருக்கு ராணியானவள் (காமாக்ஷியானவள்) என்னுடைய விருப்பங்களை நான் பெறுமாறு அருளுவாளாக.

एका माता सकलजगतामीयुषी ध्यानमुद्रा-
मेकाम्राधीश्वरचरणयोरेकतानां समिन्धे ।
ताटङ्कोद्यन्मणिगणरुचा ताम्रकर्णप्रदेशा
तारुण्यश्रीस्तबकिततनुस्तापसी कापि बाला ॥ ७८ ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

78. ஒப்பற்றவொரு இளம்பெண்ணானவள், உலகங்கள் அனைத்திற்கும் ஒரு தனித் தாயாகியும், தியானஞ் செய்வதின் அடையாளங்களையுடையவளாயும், தாடங்கங்கள் என்னும் காதோலைகளிலே (மிளிரும்) ஒளி வீசும் ரத்னங்களின் திரள்களுடைய காந்தியாலே சிவப்புற்று விளங்கும் கன்னங்களையுடையவளாயும், யௌவன பருவத்தின் காந்திகளாகிய பூங்கொத்துகளால் அழகு நிரம்பிய திருமேனியையுடையவளாயும், தவவேடம் பூண்டவளாயும், ஒரு மாமரத்தின் கீழே (அனைத்திற்கும்) ஈசுவரராய் அமர்ந்த பரமசிவனுடைய திருவடிகள் இரண்டிலும் ஒன்றுகும்படி ஊன்றிய மனதையுடையவளாகவும் சிறப்புற்று விளங்குகிருள்.

எல்லோர்க்கும் தாய் ஆயினும் இளம்பெண்; அழகு பூத்த இளமையிலே தவவேடம்; தாடங்கம் முதலிய ஆபரணங்கள்; அதோடு பரமனைத் தியானஞ் செய்வதின் அடையாளங்கள். என்ன சேராச் சேர்த்தி என்று அதிசயிக்கிருர்.

दन्तादन्तिप्रकटनकरी दन्तिभिर्मन्दयानै-
र्मन्दाराणां मदपरिणतिं मथ्नती मन्दहासैः ।
अङ्कूराभ्यां मनसिजतरोरङ्कितोराः कुचाभ्या-
मन्तःकाञ्चि स्फुरति जगतामादिमा कापि माता ॥ ७९ ॥

79. உலகங்கள் அனைத்திற்கும் ஆதியாகிய ஒப்பற்ற தனித்தாயானவள், (தன்னுடைய) மெல்லிய நடை வகைகளால் யானைகளோடு போட்டி போட்டுக்கொண்டு எதிர்த்து வெற்றிபெறும் செயலை வெளிப்படுத்துகின்றவளாயும், (தன்னுடைய) புன்முறுவல்களாலே மந்தார மலர்களின் செழுப்புடைய மலர்ச்சியை (முதிர்ச்சியை)க் கலக்கி அழிப்பவளாயும், (மனதிலே பிறந்த) காமமாகிய மரத்தின் செழுமையுடைய முளைகளைப் போன்ற கொங்கைகள் இரண்டாலும் சிறந்து விளங்கும் திருமார்பையுடையவளாயும் காஞ்சீபுரத்தினுள்ளே விளங்குகின்ருள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

त्रियम्बककुटुम्बिनीं त्रिपुरसुन्दरीमिन्दिरां
पुलिन्दपतिसुन्दरीं त्रिपुरभैरवीं भारतीम् ।
मतङ्गकुलनायिकां महिषमर्दनीं मातृकां
भणन्ति विबुधोत्तमा विहृतिमेव कामाक्षि ते ॥ ८० ॥

80. காமாக்ஷியே! விளையாட்டாகக் கொண்ட உன்னுடைய உருவத்தையே ஞானிகளுள் மிகச் சிறந்தோர் மூன்று கண்களையுடைய பரமசிவனுடைய மனைவியென்றும், திரிபுரத்தை யழித்தவருடைய காதலியென்றும், மஹாலக்ஷ்மீ ஸ்வரூபமாக விளங்குகின்றவள் என்றும், வேடர்களுக்குத் தலைவராக விளங்கிய பரமசிவனுடைய காதலியென்றும், திரிபுரத்தையழித்த பயங்கர மூர்த்தியாகிய பைரவரின் பத்தினியென்றும், பாரதீதேவி யென்றும், மதங்க முனிவரின் வமிசத்தை (அவதரித்ததால்) விளங்கச் செய்த தலைவியென்றும், மஹிஷாஸுரனை அழித்தவள் என்றும் அகரம் முதலாகிய எழுத்துகளின் ஸ்வரூபமாக விளங்கும் மாத்ருகை என்றும் (ஒன்ருன 'ஸத்'தைப் பலவாறு விப்ரர்கள் கூறுவது போன்று) பலவாறு கூறுகிருர்கள்.

महामुनिमनोनटी महितरम्यकम्पातटी-
कुटीरकविहारिणी कुटिलबोधसंहारिणी ।
सदा भवतु कामिनी सकलदेहिनां स्वामिनी
कृपातिशयकिंकरी मम विभूतये शांकरी ॥ ८१ ॥

81. பெரிய முனிவர்களின் மனமாகிய மேடையிலே நடிக்கும் நாட்டியப் பெண்ணும், மிகச் சிறந்த அழகுவாய்ந்த கம்பாநதிக் கரையிலுள்ள கோயிலிலே இன்புற்றிருப்பவளும், கோணலான புத்தியை அழித்தொழிப்பவளும், எல்லா ஜீவர்களுக்கும் (உயிர்களுக்கும்) பிராட்டியும், கிருபை என்னும் அளவுகடந்த திறமையுடைய வேலைக்காரியையுடையவளும், மங்களங்களைச் செய்யும் பரமசிவனுடைய காதலியு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மான காமாக்ஷி எப்பொழுதும் என் மேன்மையின் பொருட்டு (எனக்கு ஐச்வர்யத்தை யளிப்பவளாக) விளங்குபவளாக.

जडाः प्रकृतिनिर्धना जनविलोचनारुंतुदा
नरा जननि वीक्षणं क्षणमवाप्य कामाक्षि ते ।
वचस्सु मधुमाधुरीं प्रकटयन्ति पौरंदरी-
विभूतिषु विडम्बनां वपुषि मान्मथीं प्रक्रियाम् ॥ ८२ ॥

82. அன்னையே! காமாக்ஷியே! உம்முடைய திருக்கண்ணோக்கத்தை க்ஷணப்பொழுது பெற்றதுமே, ஞானமேயில்லாமல் ஜடத்தன்மையுடையவர்களாய், பிறவியிலே தரித்திரர்களாய், மனிதர்கள் காண்பதற்கு அருவருப்பு அடையும்படியான ரூபமுடையவர்களாய் இருக்கும் மனிதர்களும் வாக்குகளிலே தேனின் இனிமையையும் (மனதிலே) இந்திரனுடைய செல்வங்களிலே (அவற்றினும் சிறந்த செல்வங்களையுடையவர்களாதலால்) பரிஹாஸபுத்தியையும், உடலிலே மன்மதனுக்குரிய அழகின் சிறப்பையும் விளக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

घनस्तनतटस्फुटस्फुरितकञ्चुलीचञ्चली-
कृतत्रिपुरशासना सुजनशीलितोपासना ।
दृशोः सरणिमश्नुते मम कदा नु काञ्चीपुरे
परा परमयोगिनां मनसि चित्कला पुष्कला ॥ ८३ ॥

83. பரமயோகிகளுக்கு (ஞானிகளுக்கு) மனதிலே சிறந்து விளங்குகின்றவளாயும், பூர்ண சித்கலாஸ்வரூபிணியாயும், பெருத்த கொங்கைத் தலத்தாலே தெளிவாகக் காணப்படுகின்ற கச்சு என்னும் ரவிக்கையாலே திரிபுரத்தையும் வென்று அதிகாரஞ் செலுத்தியவரான பரமசிவனுடைய மனோதிடத்தைக் குலைப்பவளாயும், நல்லோர்கள் புரியும் (உபாஸனைகளை) வழிபாடுகளை ஏற்றுக்கொள்ப

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வளாயும் விளங்கும் காமாக்ஷியானவள், காஞ்சீபுரத்திலே என் கண்கள் இரண்டும் செல்கின்ற வழியிலே எப்பொழுது தான் எதிர்ப்படுவாளோ? (என் கண்ணுக்குகளைத் தன்னிடத்திலே லயிக்கும்படி செய்வாளோ?)

कवीन्द्रहृदयेचरी परिगृहीतकाञ्चीपुरी
निरूढकरुणाझरी निखिललोकरक्षाकरी ।
मनःपथदवीयसी मदनशासनप्रेयसी
महागुणगरीयसी मम दृशोऽस्तु नेदीयसी ॥ ८४ ॥

84. (பகவத் பாதர்கள்போன்ற) சிறந்த ஞானிகளின் மனதிலே நடமாடுகின்றவளும், காஞ்சீபுரத்தைக் கோயிலாகக்கொண்டவளும், இடையறாது பாயும் கருணையாகிய அருவியையுடையவளும், உலகங்களையெல்லாம் பாதுகாப்பவளும், மனதின் ஸஞ்சாரத்திற்கு (மனதால் அடைவதற்கு) எட்டாதவளும், மன்மதனை அடக்கி வெற்றிபெற்றவரான பரமசிவனுக்குக் காதலியானவளும், பெருங்குணங்களாலே கௌரவம் வாய்ந்தவளுமான காமாக்ஷியானவள் என் கண்ணுக்கு அருகிலிருப்பவளாய் விளங்குவாளாக.

धनेन न रमामहे खलजनान्न सेवामहे
न चापलमयामहे भवभयान्न दूयामहे ।
स्थिरां तनुमहेतरां मनसि किं च काञ्चीरत-
स्मरान्तककुटुम्बिनीचरणपल्लवोपासनाम् ॥ ८५ ॥

85. செல்வத்திலே இன்புறுவோம் அல்லோம்; துஷ்டர்களை அடைந்து (அவர்களுக்கு) ஏவல்புரிவோம் அல்லோம்; மனத்தடுமாற்றத்தை அடைவோம் அல்லோம்; ஸம்ஸாரத்தைப்பற்றிய அச்சத்தாலே துன்புறுவோம் அல்லோம்; மேலும், காஞ்சீபுரத்திலே இன்புறுகின்றவளாய் மன்மதனை யழித்தவரான பரமசிவனுடைய மனைவியாகிய காமாக்ஷியின் திருவடிகளாகிய தளிர்களை வழிபடுவதையே மனதிலே நிலைபெற்றிருக்கும்படி நன்றாக நிரப்பிக் கொள்கின்றோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

सुराः परिजना वपुर्मनसिजाय वैरायते
त्रिविष्टपनितम्बिनीकुचतटी च केलीगिरिः ।
गिरः सुरभयो वयस्तरुणिमा दरिद्रस्य वा
कटाक्षसरणौ क्षणं निपतितस्य कामाक्षि ते ॥ ८६ ॥

86. காமாக்ஷியே! உம்முடைய கடைக்கண் செல்லும் வழியிலே ஒரு கணப்பொழுது ஒருவன் விழுந்துகிடப்பானுனல், அவன் ஏழையாயினும், அவனுக்குத் தேவர்கள் ஏவல் புரிகின்றவர்கள் ஆவார்கள், (அவனுடைய) தேகம் மன்மதன் (பொறாமைகொண்டு) பகைகொள்ளும்படி அழகுடையதாகின்றது; தேவதாஸிகளாகிய அப்ஸரஸ்களின் கொங்கைத் தலமும் (அவன்) விளையாடுவதற்கான குன்றுகளாகின்றன; (அவனுடைய) வாக்குகள் நறுமணமுடையவையாகின்றன; வயதும் யௌவன பருவமாகின்றது.

पवित्रय जगत्त्रयीविबुधबोधजीवातुभिः
पुरत्रयविमर्दिनः पुलककञ्चुलीदायिभिः ।
भवक्षयविचक्षणैर्व्यसनमोक्षणैर्वीक्षणै-
र्निरक्षरशिरोमणिं करुणयैव कामाक्षि माम् ॥ ८७ ॥

87. மூவுலகங்களிலும் தேவர்களையும் ஞானிகளையும் ஞானத்தால் உயிர்ப்பிக்கின்றவையும், முப்புரங்களையும் அழித்தவரான பரமசிவனுக்கு (மெய் முழுவதிலும் பரந்திருப்பதால்) மயிர்க்கூச்சமாகிய சட்டையை (அணிந்துகொள்ளும்படி) உதவுகின்றவையும், ஸம்ஸாரத்தை அழிக்கும் வல்லமை வாய்ந்தவையும், துன்பங்களினின்று விடுதலை செய்பவையுமான கண்ணோக்கங்களால், காமாக்ஷியே! எழுத்தறியாதவர்களுள் சூடாமணிபோல் தலைசிறந்து விளங்கும் நிரக்ஷர சிரோமணியான என்னைக் கருணைகொண்டு பரிசுத்தனாக்குவாயாக.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

कदा कलितखेलनाः करुणयैव काञ्चीपुरे
कलायमुकुलत्विषः शुभकदम्बपूर्णाङ्कुराः ।
पयोधरभरालसाः कविजनेषु ते बन्धुराः
पचेलिमकृपारसा परिपतन्ति मार्गे दृशोः ॥ ८८ ॥

88. அன்னையே! (கருநீலவொளியால்) காயாம் பூ மொட்டுகளின் காந்தியையுடையவையும், நன்மையின் திரளாக வளர்வதற்குக் காரணமான முளைகளாயிருப்பவையும், கொங்கைகளாகிய மலைகளைக்கடந்து வருவதால் மென்னடையுடையவையும், கவிகளிடம் பக்ஷபாதமுடையவையும், பழுத்த கிருபையாகிய பழத்தின் சாறுகளையுடையவையுமாகி காஞ்சீபுரத்திலே திருவிளையாடல் புரிகின்றவையாய் (என்) கண்கள் செல்லும் வழியிலேயே கருணைகொண்டு எப்பொழுதுதான் குவிந்துவிழுகின்றனவோ?

अशोध्यमचलोद्भवं हृदयनन्दनं देहिना-
मनर्घमधिकाञ्चि तत्किमपि रत्नमुद्द्योतते ।
अनेन समलंकृता जयति शङ्कराङ्कस्थली
कदास्य मम मानसं व्रजति पेटिकाविभ्रमम् ॥ ८९ ॥

89. மலையிலே தோன்றியதும், (கடைசல் வேலைசெய்து) தீட்டமுடியாததும் (தீட்டவேண்டிய அவசியமில்லாததும்), (காண்போர்களான) உயிர்களின் மனங்களைக் களிப்பிப்பதும், விலை மதிக்கவொண்ணாததுமான ஒப்பற்றதோர் இரத்தினமானது காஞ்சீபுரத்திலே ஒளிவீசுகின்றது; இந்த ரத்னத்தால் அலங்கரிக்கப்பெற்று, மங்களங்களைத்தருகின்றவரான பரமசிவனுடைய மடித்தலமானது மேன்மைபெற்று விளங்குகின்றது; இந்த ரத்னத்திற்குரிய பெட்டியாகும் அழகிய நிலையை என் மனமானது அடைவது எப்பொழுதோ?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

परामृतझरीप्लुता जयति नित्यमन्तश्चरी
भुवामपि बहिश्चरी परमसंविदेकात्मिका ।
महद्भिरपरोक्षिता सततमेव काञ्चीपुरे
ममान्वहमहंमतिर्मनसि भातु माहेश्वरी ॥ ९० ॥

90. (அகுலஸஹஸ்ராரத்தினின்று) மிகச்சிறந்த அமிர்தமாகப் பாயும் அருவியிலே திளைக்கின்றவளாகவும், எப்பொழுதுமே புவனங்களுக்கு உட்புகுந்துள்ளவளாகவும் (அந்தர்யாமினியாகவும்), (அவற்றிற்கு) வெளியிலும் பரவியிருப்பவளாகவும், எல்லாவற்றிலும் சிறந்ததான ஸம்வித் ஞானத்தைமட்டுமே தன்னுடைய தனிவடிவாகக் கொண்டவளாகவும் (சங்கரபகவத் பாதர்கள்போன்ற) மஹான்களாலே காஞ்சீபுரத்திலே எப்பொழுதுமே ஸாக்ஷாத்கரிக்கப்பெற்றவளாகவும் (கண்களாலே காணும்படி விளங்குபவளாகவும்) மஹேசுவரரான பரமசிவன் 'தான்' என்னும் உணர்ச்சியோடு (அகங்காரத்தோடு) பாராட்டப்பெற்றவளாகவும் (மஹேசுவரருடைய பராஹந்தாஸ்வரூபிணியாகவும்), எவள் விளங்குகிருளோ அவள் என்னுடைய மனதிலே எந்நாளும் திகழ்வாளாக.

तमोविपिनधाविनं सततमेव काञ्चीपुरे
विहाररसिका परा परमसंविदुर्वीरुहे ।
कटाक्षनिगलैर्दृढं हृदयदुष्टदन्तावलं
चिरं नयतु मामकं त्रिपुरवैरिसीमन्तिनी ॥ ९१ ॥

91. முப்புரத்தையும் பகைகொண்டு அழித்தவரான பரமசிவனுடைய பத்தினியான பரதேவதையானவள் காஞ்சீபுரத்திலே திருவிளையாடல் புரிவதில் இன்புறுகின்றவளாகி, அஞ்ஞானமாகிய அடர்ந்த காட்டிலே (ஓயாமல்) திரிந்து அலைகின்றதான என்னுடைய மனமாகிய துஷ்டயானையை (தன்னுடைய) கடைக்கண்ணோக்கங்களாகிய சங்கலி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

களாலே மிகச்சிறந்த ஸம்வித் ஞானமாகிய (ஓட்டுமா) மரத் தடியிலே வெகுகாலம் கட்டுண்டிருக்கும்படி கெட்டியாகக் கட்டிப்போடுவாளாக.

त्वमेव सति चण्डिका त्वमसि देवि चामुण्डिका
त्वमेव परमातृका त्वमपि योगिनीरूपिणी ।
त्वमेव किल शांभवी त्वमसि कामकोटी जया
त्वमेव विजया त्वयि त्रिजगदम्ब किं ब्रूमहे ॥ ९२ ॥

92. ஸதீதேவியே! நீயே சண்டிகாதேவி; தேவியே! நீ சாமுண்டிகையாய் விளங்குகின்றாய்; நீயே மிகச் சிறந்த தாயாகின்றாய்; (பரம அக்ஷரமாகிய பிரணவமாகின்றாய்); நீ தானும் யோகம் புரிகின்றவளாகி யோகினியின் ரூபத்தை யுடையவளாய் விளங்குகின்றாய்; நீயே அல்லவா (சம்பு தேவரின் பத்தினியாகிய) சாம்பவி; (காமங்களுக்கு எல்லை நிலமாயிருக்கும்) காமகோடியாகிய நீ ஜயை (வெற்றிமகள்) ஆகின்றாய்; நீயே (மிகச் சிறந்த வெற்றி வடிவமான) விஜயை; உன்னிடத்திலே மூவுலகும் (உள்ளது); (மூவுல கங்களுக்கும்) அன்னையே! (உன்னைப்பற்றி) நாங்கள் என்ன சொல்வோம்?

நீ எத்தனை விதங்களாக எங்கள் கண்களுக்கு முன் தோன்றி யருளினாலும், உன்னுடைய ஸ்வரூபத்தை யறிந்து சொல்லால் விரித் துரை செய்ய இயலாது என்கிறார்.

परे जननि पार्वति प्रणतपालिनि प्रातिभ-
प्रदात्रि परमेश्वरि त्रिजगदाश्रिते शाश्वते ।
त्रियम्बककुटुम्बिनि त्रिपदसङ्गिनि त्रीक्षणे
त्रिशक्तिमयि वीक्षणं मयि निधेहि कामाक्षि ते ॥ ९३ ॥

93. (எல்லாவற்றினும் சிறந்தபொருளான) பரதேவ தையே! அன்னையே! மலை மகளே! அடிவணங்குவோர் களைக் காக்கின்றவளே! பிரதிபை என்னும் ஞானவொளியை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அளிக்கின்றவளே! எல்லோரினும் சிறந்த ஈசுவரியே! (பரமேசுவரரின் பத்தினியே!) மூவுலகங்களிலும் சரண்புகப் பெற்றவளே! என்றும் (அழியாமல்) இருப்பவளே! முக்கண்ணரான பரமசிவனுடைய வாழ்க்கைத் துணைவியே! மூன்று பாதங்களாக வகுக்கப்பெற்ற மந்திரத்திலே பொருந்தியிருப்பவளே! (திரிபாத் விபூதி என்னும் நிஷ்கள ப்ரஹ்ம ஸ்வரூபத்திலே கலந்திருப்பவளே! பக்தி, யோகம், ஞானம் ஆகிய மூன்று வழிகளாலும் அடையப்பெற்றவளே!) மூன்று கண்களையுடையவளே! (இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி ஆகிய) மூன்று சக்திகளுமாகியவளே! காமாக்ஷியே! உன்னுடைய கண்ணோக்கத்தை என்மீது மிகுதியாக வைப்பாயாக.

मनोमधुकरोत्सवं विदधती मनीषाजुषां
स्वयंप्रभववैखरीविपिनवीथिकालम्बिनी ।
अहो शिशिरिता कृपामधुरसेन कम्पातटे
चराचरविधायिनी चलति कापि चिन्मञ्जरी ॥ ९४ ॥

94. புத்தியால் (ஸ்தோத்திரங்களால்) இன்புறுகின்றவர்களுடைய மனங்களாகிய வண்டுகளுக்கு (திருவிழாப் போன்ற) களிப்பை யளிப்பதும், தானாகவே தோன்றியவையான வாக்குகளாலாகிய வேதங்கள் என்னும் காட்டு வழிகளிலே தொங்குகின்றதும், கிருபையாகிய இனிய தேனினால் குளிர்ந்திருப்பதும், சரம் அசரம் ஆகிய இருவகைப்பொருளுக்கும் தன்னைக் கொடுத்துக் கொண்டிருப்பதுமான (அவற்றை ஸ்ருஷ்டிப்பதுமான) ஒப்பற்றதொரு சித் என்னும் பூங்கொத்தானது கம்பா நதிக்கரையிலே உலாவுகின்றது, என்ன ஆச்சர்யம்!

कलावति कलाभृतो मुकुटसीम्नि लीलावति
स्पृहावति महेश्वरे भुवनमोहने भास्वति ।
प्रभावति रमे सदा महितरूपशोभावति
त्वरावति परे सतां गुरुकृपाम्बुधारावति ॥ ९५ ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

95. கலைகளையுடையவனான சந்திரனுடைய கலையைத் தன்னுடைய திருமுடியின்மீது உடையவளே! லீலைகளையுடையவளே! மகேசுவரரிடத்தில் ஆசைகொண்டவளே! புவனங்களை (யெல்லாம்) மயங்கும்படி செய்வதிலே திறமை வாய்ந்த காந்திகளையுடையவளே! ஒளி பொருந்தியவளே! (லக்ஷ்மீதேவியா யிருப்பவளே! எப்பொழுதும்) போற்றப் பெற்றதான ரூபத்தின் காந்தியை யுடையவளே! பரப் பிரும்மமான பரமசிவனிடத்தில் அதிவேகத்தோடு சென்று உறைபவளே! (எல்லோரினும் சிறந்தவளான பரதேவதையே!) நல்லோர்களுக்கு அதிகமான கிருபையாகிய அருவி நீர்ப் பெருக்கை யுடையவளே! நான் (உன்னை) எப்பொழுதும் (கண்டுகொண்டே) இன்புறுகின்றேன்.

त्वयैव जगदम्बया भुवनमण्डलं सूयते
त्वयैव करुणार्द्रया तदपि रक्षणं नीयते ।
त्वयैव खरकोपया नयनपावके हूयते
त्वयैव किल नित्यया जगति संततं स्थीयते ॥ ९६ ॥

96. உலகனைத்திற்கும் தாயாகிய உன்னாலேயே பூமண்டலம் முழுவதும் உண்டாக்கப்படுகின்றது; கருணைபொழிவதால் ஈரித்திருக்கும் உன்னாலேயே அந்த பூமண்டலம் பாதுகாப்பையும் அடைகின்றது; மிகு சினங்கொண்ட உன்னாலேயே அது (நெற்றிக்) கண்ணாகிய தீயிலே (ஹோமமாகி) எரிக்கப்படுகின்றது; எப்பொழுதும் உள்ளவளான உன்னாலேயேயன்றோ உலகிலே எப்பொழுதும் இடையறாது நிலை பெற்றிருப்பது என்பது நிகழ்கின்றது.

நீயே உலகங்கள் தோன்றுமுன்னும் இருக்கும் நித்தியப்பொருள், உன்னிடமிருந்தே உலகங்கள் தோன்றி, உன்னுடைய கருணையால் வாழ்ந்து, உன்னுடைய கோபத் தீயால் அழிந்து போகின்றன; ஆகையால் நீயே தனித்து நிலைபெற்றிருக்கும் பொருளாக விளங்குகின்றாய் என்கிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

चराचरजगन्मयीं सकलहृन्मयीं चिन्मयीं
गुणत्रयमयीं जगत्त्रयमयीं त्रिधामामयीम् ।
परापरमयीं सदा दशदिशां निशाहर्मयीं
परां सततसन्मयीं मनसि चिन्मयीं शीलये ॥ ९७ ॥

97. அசையும்பொருள் அசையாத ஜடப்பொருள் ஆகிய உலகங்களாகியும், எல்லாருடைய ஹ்ருதயங்களுமாகியும், 'சித்' ஆகியும், (தாமஸ ராஜஸ ஸாத்விகங்கள் ஆகிய) மூன்று குணங்களாகியும், (பூமி, அந்தரிக்ஷம், ஸ்வர்க்கம் ஆகிய) மூன்று உலகங்களாகியும், (சந்திரன், ஸூர்யன் அக்னி ஆகிய) மூன்று ஒளிகளாகியும், பரம் அபரம் என்று இருவகையாகக் கூறப்படும் ப்ரஹ்மஸ்வரூபிணி யாகியும் (கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு, வடக்கு, வடகிழக்கு, கீழ், மேல் ஆகிய) பத்துத் திசைகளாகியும், இரவு பகல் இரண்டுமாகியும், எப்பொழுதும் ஸத் மாத்திரமே யாகியும் சித் மாத்திரமே யாகியும் (எல்லோரினும் சிறந்து) விளங்கும் பரதேவதையை எப்பொழுதும் மனதிலே சிந்தனை செய்து வழிபடுகிறேன்.

जय जगदम्बिके हरकुटुम्बिनि वक्त्ररुचा
जितशरदम्बुजे घनविडम्बिनि केशरुचा ।
परमवलम्बनं कुरु सदा पररूपधरे
मम गतसंविदो जडिमडम्बरताण्डविनः ॥ ९८ ॥

98, போற்றி! அனைத்துலகும் ஈன்ற தாயே! ஹரதேவரின் வாழ்க்கைத் துணைவியே! திருமுக மண்டலத்தின் ஒளியாலே சரத்காலத்துச் சந்திரனை (தாமரை மலரை) வென்றவளே! கூந்தலின் காந்தியாலே மேகங்களைப்பழிக்கின்றவளே! மிகச் சிறந்ததான (கடவுள்) வடிவத்தை யுடையவளே! (இயற்கையாகவுள்ள) ஸம்வித்ஞானத்தை இழந்து (ஜடத்தனமாகிய) அஞ்ஞானத்தின் மேலீட்டால் தள்ளாடுகின்ற எனக்கு எப்போதும் உதவுமாறு (உனது திருவடியாகிய) சிறந்ததோர் ஊன்றுகோலைத் தந்தருளுவாய்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

भुवनजननि भूषाभूतचन्द्रे नमस्ते
कलुषशमनि कम्पातीरगेहे नमस्ते ।
निखिलनिगमवेद्ये नित्यरूपे नमस्ते
परशिवमयि पाशच्छेदहस्ते नमस्ते ॥ ९९ ॥

99. புவனங்களைப் பெற்ற அன்னையே! சந்திரனை (தலைக்கு) அணியாகக் கொண்டவளே! உனக்கு நமஸ்காரம்; பாபங்களை (தோஷங்களை) யழிப்பவளே! கம்பாநதிக்கரையிலே கோயில் கொண்டவளே! உனக்கு நமஸ்காரம்; எல்லா வேதங்களாலும் உணர்த்துவதற்கு உரியவளே! எப்பொழுதுமுள்ள வடிவமுடையவளே! உனக்கு நமஸ்காரம்; பரமசிவனாகவே இருப்பவளே! பாசத்தையும் (கோடரியையும்) அங்குசத்தையும் ஏந்திய கைகளையுடையவளே! (பாசங்களை அறுக்கும் திருக்கை வளத்தை யுடையவளே!) உனக்கு நமஸ்காரம்.

क्वणत्काञ्ची काञ्चीपुरमणिविपञ्चीलयझरी-
शिरःकम्पा कम्पावसतिरनुकम्पाजलनिधिः ।
घनश्यामा श्यामा कठिनकुचसीमा मनसि मे
मृगाक्षी कामाक्षी हरनटनसाक्षी विहरतात् ॥ १०० ॥

100. ஒலிக்கின்ற (காஞ்சி என்னும்) ஒட்டியாணத்தை யுடையவளும், காஞ்சீபுரத்திலே மாணிக்க மணியாலாகிய வீணையின் லயத்தோடு கூடிய ஒலிப்பெருக்கால் இன்புற்று சிரக்கம்பஞ் செய்கின்றவளும், கம்பையின் கரையிலே வாழ்கின்றவளும், (அனுகம்பை என்னும்) கருணை நிறைந்த கடலாகியவளும், மேகத்தைப்போன்ற கருநிறமுடையவளும், 'சியாமா' என்னும் இளம்பிராயத்தினளும், கடினமான கொங்கைத்தலத்தை யுடையவளும், மானின் விழிகளைப் போன்ற விழிகளை யுடையவளும், ஹரதேவரான பரமசிவனுடைய நடனத்தை (யுகாந்தகாலத்திலே தனியாக) காண்கின்றவளுமான காமாக்ஷியானவள் என் மனதிலே களித்து விளையாடுவாளாக.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

समरविजयकोटी साधकानन्दधाटी
मृदुगुणपरिपेटी मुख्यकादम्बवाटी ।
मुनिनुतपरिपाटी मोहिताजाण्डकोटी
परमशिववधूटी पातु मां कामकोटी ॥ १०१ ॥

101. போரிலே பெறும் வெற்றியின் பேரெல்லையாகியும், தன்னை உபாஸிக்கும் ஸாதகர்களுக்கு ஆனந்தப்பெருக்காகியும், மென்மைக்குணங்களுக்குக் கொள்கலனுகியும், கடப்ப மரங்களையுடைய பூம்பொழிலை முக்கியமான வாஸஸ்தானமாகக் கொண்டவளாகியும், முனிவர்களால் இடைவிடாமல் ஸ்துதிக்கப் பெற்றவளாகியும், கோடி பிரும்மாண்டங்களையும் (அழகால்) மயக்குகின்றவளாகியும், பரமசிவனுடைய பத்தினியாகியும் விளங்கும் காமகோடியானவள் என்னைக் காத்தருளுவாளாக.

इमं परवरप्रदं प्रकृतिपेशलं पावनं
परापरचिदाकृतिप्रकटनप्रदीपायितम् ।
स्तवं पठति नित्यदा मनसि भावयन्नम्बिकां
जपैरलमलं मखैरधिकदेहसंशोषणैः ॥ १०२ ॥

102. சிறந்த வரங்களை அளிப்பதும், இயற்கையாகவே அழகுவாய்ந்ததும், (படிப்பவர்களை) பரிசுத்தர்களாகச் செய்வதும், பரம் என்றும் அபரம் என்றும் சித்வடிவங் கொண்டதென்றும் விளக்குகின்ற நல்விளக்காகியதுமான இந்த ஸ்தோத்ரத்தை, அம்பிகையை மனதிலே போற்றிக் கொண்டே எப்பொழுதும் சொல்லிக்கொண்டிருந்தால், ஜபங்களைச் செய்ய வெண்டியதில்லை, யாகங்களைச் செய்ய வேண்டியதில்லை, உடலை அதிகமாக (தவங்களால்) வாட்ட வேண்டியதில்லை.

स्तुतिशतकं संपूर्णम् ॥

ஸ்துதிசதகம் முற்றிற்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

अङ्कितशङ्करदेहा-मङ्कुरितोरोजकङ्कणाश्लेषैः ।
अधिकाञ्चि नित्यतरुणी-मद्राक्षं कांचिदद्भुतां बालाम् ॥

आर्या. १५.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

॥ मूकपञ्चशती ॥

॥ कटाक्षशतकम् ॥

கடாக்ஷ சதகம்

मोहान्धकारनिवहं विनिहन्तुमीडे
मूकात्मनामपि महाकविताबदान्यान् ।
श्रीकाञ्चिदेशशिशिरीकृतिजागरूका-
नेकाम्रनाथतरुणीकरुणावलोकान् ॥ १ ॥

1. என்னுடைய அஞ்ஞானமாகிய இருளின் திரளை நன்ருக அழிப்பதற்காக, ஊமையர்களுக்கும் பெருமை வாய்ந்த கவிதையை அளிக்கின்றவையும், திருக்காஞ்சி நாட்டின் (வெப்பத்தைத் தணித்து அதனை)க் குளிர்ச்சியுடையதாகச் செய்வதிலே கருத்துடையவையுமாகி, ஒரு மாமரத்தின் கீழமர்ந்த நாதனுடைய பத்தினியாகிய காமாக்ஷியின் கருணைபொழியும் நோக்குகளைப் புகழ்கின்றேன்.

मातर्जयन्ति ममताग्रहमोक्षणानि
माहेन्द्रनीलरुचिशिक्षणदक्षिणानि ।
कामाक्षि कल्पितजगत्त्रयरक्षणानि
त्वद्वीक्षणानि वरदानविचक्षणानि ॥ २ ॥

2. அன்னையே! காமாக்ஷியே! உம்முடைய நோக்குகள், மமதையாகிய பிசாசினின்றும் (அடியார்களை) விடுவிக்கின்றவையும், இந்திரநீல ரத்னங்களின் ஒளியைச் செம்மையுறச் செய்யும் திறமைவாய்ந்தவையும், உலகங்கள் மூன்றை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யும் காப்பதற்காக அமைந்தவையும், (கோரிய) வரன்களை அளிப்பதிலே தேர்ச்சிபெற்றவையுமாக விளங்குகின்றன.

आनङ्गतन्त्रविधिदर्शितकौशलाना-
मानन्दमन्दपरिघूर्णितमन्थराणाम् ।
तारल्यमम्ब तव ताडितकर्णसीम्नां
कामाक्षि खेलति कटाक्षनिरीक्षणानाम् ॥ ३ ॥

3, அன்னையே! காமாக்ஷியே! காமசாஸ்திரத்தின் விதிகளை விளக்குவதிலே திறமைவாய்ந்தவையும், ஆனந்தத்தால் மெல்லச் சுழன்று வளைகின்றவையும், காதுகளின் ஓரங்களைத் தாக்குகின்றவையுமான உம்முடைய கடைக்கண்ணோக்கங்களின் சலனமானது (பளபளப்பானது) இனிது விளங்குகின்றது.

कल्लोलितेन करुणारसवेल्लितेन
कल्माषितेन कमनीयमृदुस्मितेन ।
मामञ्चितेन तव किंचन कुञ्चितेन
कामाक्षि तेन शिशिरीकुरु वीक्षितेन ॥ ४ ॥

4. காமாக்ஷியே! கருணைவெள்ளத்தால் அலைமோதுகின்றதும், அழகுவாய்ந்த புன்முறுவலால் கருநிறமும் வெண்ணிறமுமாய்க் கலந்து தோன்றுகின்றதும், வளைந்து சிறிது குறுகியதாகத் தோன்றுகின்றதுமான உம்முடைய (வர்ணிக்க வொண்ணாத) அந்த நோக்கினால் என்னை மெய் குளிரச் செய்வாயாக.

साहाय्यकं गतवती मुहुरर्जुनस्य
मन्दस्मितस्य परितोषितभीमचेताः ।
कामाक्षि पाण्डवचमूरिव तावकीना
कर्णान्तिकं चलति हन्त कटाक्षलक्ष्मीः ॥ ५ ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

5. காமாக்ஷியே! அடிக்கடி வெண்ணிறமுடைய புன்முறுவலின் உதவியைப் பெற்றதாகியும், பயங்கர மூர்த்தியாகிய பரமசிவனுடைய மனதைக் களிப்பிப்பதாகியுமுள்ள உம்முடையதரின கடைக்கண்களின் ஒளியானது, அடிக்கடி புன்முறுவலையுடைய அர்ஜுனனுடைய உதவியைப் பெற்றதாகியும் பீமஸேனனுடைய மனதைக் களிப்பிப்பதாகியுமுள்ள பாண்டவர்களின் சேனையைப் போன்றதாகியும், ஐயோ, கர்ணனுடைய பக்கலிலே போய்ச் சேர்வதைப்போல, காதுகளின் அருகிலே செல்கின்றதே!

தேவியின் கண்கள் காதுகள்வரையிலே நீண்டிருப்பவை யாதலால், கடைக்கண்ணோக்குகள் காதுகளின் பக்கமாகச் செல்கின்றன என்று கூறி, விரோதியாகிய கர்ணனுடைய பக்கத்திற் சேர்ந்து கொண்டனவே என்று சிலேஷையாலே ஆச்சர்யமும் வருத்தமும் தோன்றக் கூறுகிறார்.

अस्तं क्षणान्नयतु मे परितापसूर्य-
मानन्दचन्द्रमसमानयतां प्रकाशम् ।
कालान्धकारसुषमां कलयन्दिगन्ते
कामाक्षि कोमलकटाक्षनिशागमस्ते ॥ ६ ॥

6. காமாக்ஷியே! உம்முடைய அழகுவாய்ந்த கடைக்கண்ணோக்கு என்னும் (இரவின் வருகையானது) மாலைப் பொழுதானது என்னுடைய மனப்புழுக்கமாகிய ஸூர்யனை ஒரு கணப்பொழுதிலே அஸ்தமிக்கச் செய்வதாக; காரிருளின் பெருமையை திக்குகளின் எல்லைப்புறத்திலே போக்கிவிடுவதாகி, ஆனந்தமாகிய சந்திரனை ஒளிபெற்று விளங்கும்படி செய்வதாக (என்னிடம் அழைத்துவருவதாக.)

ताटङ्कमौक्तिकरुचाङ्कुरदन्तकान्तिः
कारुण्यहस्तिपशिखामणिनाधिरूढः ।
उन्मूलयत्वशुभपादपमस्मदीयं
कामाक्षि तावककटाक्षमतङ्गजेन्द्रः ॥ ७ ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

7. காமாக்ஷியே! (உம்முடைய காதுகளிலேயுள்ள) தாடங்கங்கள் என்னும் காதோலைகளிலுள்ள முத்துகளின் காந்தியுடைய முனைகளாகிய தந்தங்களின் காந்தியை யுடையதும், பாகர்களுக்குச் சிரோபூஷணமாக விளங்கும் கருணையாகிய பாகனால் ஏறியமர்ந்துகொண்டு நடத்தப் பெற்றதுமான உம்முடைய கடைக்கண்ணோக்கம் என்னும் சிறந்த யானையானது எங்களுடையதான தீமையாகிய மரத்தை வேரோடு பிடுங்கியெறிவதாக.

छायाभरेण जगतां परितापहारी
ताटङ्करत्नमणितल्लजपल्लवश्रीः ।
कारुण्यनाम विकिरन्मकरन्दजालं
कामाक्षि राजति कटाक्षसुरद्रुमस्ते ॥ ८ ॥

8. காமாக்ஷியே! உம்முடைய கடைக்கண்ணோக்க மாகிய தேவலோகத்துக் கற்பகவிருக்ஷமானது, இருண்ட நிழலால் உலகத்தின் வெப்பத்தைப் போக்குகின்றதாகியும், தாடங்கங்களிலேயுள்ள சிறந்த ரத்னங்களாகிய தளிர் களின் சிறந்த அழகையுடையதாகியும், (பூக்களினின்றும்) கருணையாகிய தேனை அதிகமாக வடிய விடுகின்றதாகியும் சிறந்து விளங்குகின்றது.

सूर्याश्रयप्रणयिनी मणिकुण्डलांशु-
लौहित्यकोकनदकाननमाननीया ।
यान्ती तव स्मरहराननकान्तिसिन्धुं
कामाक्षि राजति कटाक्षकलिन्दकन्या ॥ ९ ॥

9. காமாக்ஷியே! உம்முடைய கடைக்கண்ணோக்க மாகிய (கருமைநிறமுடைய) யமுனையாறானது, ஸூர்ய மண்டலத்திலே உறைகின்றவரான பரமசிவனுடைய காதலியாகியும், (காதுகளிலேயுள்ள) ரத்னக் குழைகளின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒளிகளாகிய செந்தாமரை மலர்கள் பூத்த காடாகிக் கொண்டாடத் தக்கதாகியும், மன்மதனை யழித்தவரான பரமசிவனுடைய திருமுக மண்டலத்தின் காந்தி வெள்ளமாகிய கடலை நோக்கிச் செல்கின்றதாக விளங்குகின்றது.

प्राप्नोति यं सुकृतिनं तव पक्षपाता-
त्कामाक्षि वीक्षणविलासकलापुरंध्री ।
सद्यस्तमेव किल मुक्तिवधूर्वृणीते
तस्मान्नितान्तमनयोरिदमैकमत्यम् ॥ १० ॥

10. காமாக்ஷியே! உம்முடைய பக்ஷபாதத்தால் (நீர் சிறக்கணிப்பதால்) உமது நோக்குகளின் இனிய கலையாகிய குலஸ்திரீயானவள் எந்தப் புண்ணியசாலியை (கணவனாக) அடைகின்றாளோ (அதாவது, உமது நோக்குகள் எவன்மீது விழுகின்றனவோ), அவனையே அப்பொழுதே முக்தியாகிய மணாட்டியும் (கணவனாக) வரிக்கின்றாள் அன்றோ? (முக்தியும் அவனுக்குக் கிட்டுவதாகின்றது). ஆகையால் இவ்விருவருக்குமுள்ள இவ்விதமான (ஒருமனப்பாடு) ஐகமத்யம் மிகவும் அபூர்வமாக அமைந்துள்ளது.

உமது கண்ணோக்கின் பயனாக, உடனே மோக்ஷம் கிடைக்கும் என்கிறார்.

यान्ती सदैव मरुतामनुकूलभावं
भ्रूवल्लिशक्रधनुरुल्लसिता रसार्द्रा ।
कामाक्षि कौतुकतरङ्गितनीलकण्ठा
कादम्बिनीव तव भाति कटाक्षमाला ॥ ११ ॥

11. காமாக்ஷியே! உம்முடைய கடைக்கண்ணோக்கங்களைத் தொடர்ச்சியாகக் கொண்ட மாலையானது, எப்பொழுதுமே மருத்துகள் என்னும் தேவர்களுக்கு அனுகூலமான தன்மையை யடைந்தும், (உம்முடைய) புருவக் கொடியாகிய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்திர வில்லாலே ஒளிபெற்று விளங்கியும், (சிருங்காரம் முதலிய ரஸங்களால்) கருணை ரஸமென்னும் நன்னீரால் ஈரித்ததாகியும், நீலகண்டராகிய பரமசிவனை உவகை பெருகும்படி (நடனமாடும்படி) செய்து கொண்டும், ஏழு மருத்துகளையுடைய வாயு மண்டலத்திலே அவற்றின் அனுகூலத்தைப் பெற்றும் வான வில்லால் ஒளிபெற்றும் (நீலநிறமான கழுத்துகளையுடைய) மயில்களுக்கு உற்சாகத்தைப் பெருகச் செய்து (நடனமாடும்படி செய்து) கொண்டும் மழை பொழிகின்ற மேகங்களின் வரிசையைப்போல விளங்குகின்றது.

கருநிறத்தாலும் கருணைபொழிவதாலும் மேகங்களை யொத்த கடாக்ஷங்களை, சிலேஷையாலே, வாயுவை அனுகூலமாகப் பெற்று வானவில்லோடு மின்னி மயில்களைக் களிப்பிக்கும் தன்மையுடைய மேகங்களுக்கு ஒப்புமை கூறுகிறார்.

गङ्गाम्भसि स्मितमये तपनात्मजेव
गङ्गाधरोरसि नवोत्पलमालिकेव ।
वक्त्रप्रभासरसि शैवलमण्डलीव
कामाक्षि राजति कटाक्षरुचिच्छटा ते ॥ १२ ॥

12. காமாக்ஷியே! உமது கடைக்கண்ணோக்கங்களுடைய காந்தியின் திரளானது, முறுவல் மயமான (வெண்ணிறமுடைய) கங்கை நீரிலே (கலந்து விளங்கும் கருநிறமுடைய) யமுனைபோலவும், கங்கையை (சிரஸிலே) தரிக்கின்றவரான பரமசிவனுடைய மார்பிலே (விளங்கும்) அப்பொழுதலர்ந்த நெய்தல் மலர்களையுடைய பூமாலை போலவும், திருமுகமண்டலமாகிய சோதிமயமான ஏரியிலே பாசியின் படர்ந்த பரப்பைப் போலவும் விளங்குகின்றது.

संस्कारतः किमपि कन्दलितान् रसज्ञ-
केदारसीम्नि सुधियामुपभोगयोग्यान् ।
कल्याणसूक्तिलहरीकलमांकुरान्नः
कामाक्षि पक्ष्मलयतु त्वदपाङ्गमेघः ॥ १३ ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

13. காமாக்ஷியே! உமது கடைக்கண்ணுகிய மேகமானது, தன்னுடையம் சேர்த்தியினுலே எங்களுடைய நாக்குகளாகிய ஈரமுடைய வயலிலே (ஒப்பற்றதாக) ஆச்சரியமாக முளைத்து நல்ல ஞானிகளுக்கு உபயோகப்படும்படியான மங்களகரமான பாசுரங்களாகப் பெருகுகின்ற செந்நெல் மணிகளின் கதிர்களை நிரப்பித் தருவதாக.

தேவியின் கடாக்ஷத்தாலே தன்னைப்போன்றவர்களின் நாக்கிலே மங்களப் பாடல்கள் விளைவதால், அவை ஞானிகளின் செவிகளுக்கு உணவாகின்றது என்கிறுர், கடாக்ஷமாகிய மேகத்தினின்றும் கருணை வெள்ளம் பாய்ந்த வயலிலேதான், இவ்வாறான ஸ்துதிகளாகிய செந்நெற் பயிர் செழுத்திருக்கும்.

चाञ्चल्यमेव नियतं कलयन्प्रकृत्या
मालिन्यभूः श्रुतिपथाक्रमजागरूकः ।
कैवल्यमेव किमु कल्पयते नतानां
कामाक्षि चित्रमपि ते करुणाकटाक्षः ॥ १४ ॥

14. உம்முடைய கருணை ததும்பும் கடைக்கண்ணேக்கமானது இயல்பாகவே எப்பொழுதும் துள்ளி விளையாடுவதையே செய்து கொண்டிருந்தும் (சஞ்சலமுடையதாயிருந்தும்), கருநிறத்திற்குப் பிறப்பிடமா யிருந்தும் (அழுக்குடையதா யிருந்தும்), காதுகளின் பிரதேசத்தை ஆக்ரமிப்பதிலே ஊக்கமுடையதா யிருந்தும் (வேத மார்க்கத்தை மீறுவதிலே உற்சாகமுடையதா யிருந்தும்), (உம்மை) வணங்குகின்றவர்களுக்குக் கைவல்யமாகிய மோக்ஷத்தையே எவ்வாறு அளிக்கின்றதோ? இது ஆச்சர்யம்!

சஞ்சலத் தன்மையையுடையவனும் மும்மலங்களுக்கும் இடமானவனும், வேதநெறியை மீறி நடப்பவனுமான ஆசார்யன் எவ்வாறு தன்னை வணங்கி நிற்கும் சிஷ்யர்களுக்குக் கைவல்யத்தை அருளக்கூடும் என்று சிலேஷையில் ஆச்சர்யத்தை எழுப்புகிறுர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

संजीवने जननि चूतशिलीमुखस्य
संमोहने शशिकिशोरकशेखरस्य ।
संस्तम्भने च ममताग्रहचेष्टितस्य
कामाक्षि वीक्षणकला परमौषधं ते ॥ १५ ॥

15. அன்னையே! காமாக்ஷியே! மாம்பூவை அம்பாகக் கொண்டவனுன காமனை (அந்த அம்பை எறிந்ததால் பரம சிவனுலே நீருக்கப்பட்டவனை) மீண்டும் உயிர்பெறச் செய்வதிலும், சந்திரனுடைய இளம்பிறையைத் திருமுடியிலே சூடியவரான பரமசிவனை நன்ருக மயக்கமுறும்படி செய்வதிலும், மமதை என்னும் பிசாசினுல் ஆடுகின்றவனுன என்னுடைய சேஷ்டைகளை (யொழித்து) ஸ்தம்பித்து நிற்கும்படி (ஒரு நிலையிலே நிலைத்து நிற்கும்படி) செய்வதிலும், (உம்முடைய) நோக்கின் ஒரு சிறு பகுதியும் மிகச் சிறந்த மருந்தாகின்றது.

नीलोऽपि रागमधिकं जनयन्पुरारे-
र्लोलोऽपि भक्तिमधिकां दृढयन्नराणाम् ।
वक्रोऽपि देवि नमतां समतां वितन्व-
न्कामाक्षि नृत्यतु मयि त्वदपाङ्गपातः ॥ १६ ॥

16. தேவியே! காமாக்ஷியே! உம்முடைய கடைக்கண்ணேக்கங்களின் வீழ்ச்சியானது கருநிறமுடையதாயினும் திரிபுரத்தை யழித்தவரான பரமசிவனுக்குச் செவ்விய காதலை (செந்நிறத்தை) அதிகமாக உண்டுபண்ணிக் கொண்டும், (தான் எப்பொழுதும்) சலனமுடையதாயினும் மனிதர்களுக்குள்ள அதிக பக்தியை (சஞ்சலமடையாதபடி) திடப்படுத்திக் கொண்டும், (அருவியின் வீழ்ச்சிபோல்) வளைந்ததாயினும் (வளைந்து) வணங்குவோர்க்கும் (ஸமதையை, எல்லோரையும் ஒன்ருக நோக்குந் தன்மையை) நேர்மையை அளித்துக்கொண்டும் (நடனமேடைபோன்ற) என்மீது நடனஞ் செய்வதாகுக.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

कामद्रुहो हृदययन्त्रणजागरूका
कामाक्षि चञ्चलदृगञ्चलमेखला ते ।
आश्चर्यमम्ब भजतां झटिति स्वकीय-
संपर्क एव विधुनोति समस्तबन्धान् ॥ १७ ॥

17. காமாக்ஷியம்மையே! உம்முடைய கடைக்கண்ணேக் கங்களாலாகிய கயிருனது காமனைப் பகைத்து அழித்தவரான பரமசிவனுடைய மனதை ஈர்த்துக்கொள்வதிலே ஊக்கமுடையதாகி, (உம்மை) தொழுபவர்களுடைய பந்தங்களை யெல்லாம் (தொழுதெழுந்த) அப்பொழுதே தன்னுடைய சேர்க்கையாலே அறவே ஒழித்து விடுகின்றது, என்ன ஆச்சர்யம்!

कुण्ठीकरोतु विपदं मम कुञ्चितभ्रू-
चापाञ्चितः श्रितविदेहभवानुरागः ।
रक्षोपकारमनिशं जनयञ्जगत्यां
कामाक्षि राम इव ते करुणाकटाक्षः ॥ १८ ॥

18. காமாக்ஷியே! உமது கருணை ததும்பும் கடைக்கண்ணனது, வளைந்ததான புருவ வில்லோடு அமைந்ததாகி, சரீரத்தை இழந்து உம்மைச் சரணுக அடைந்தவனுன மன்மதனிடத்திலே தயையுடையதும் (காதலுற்றவரான பரமசிவனிடத்திலே அன்புடையதும்), உலகத்திலே எப்பொழுதும் (ஸாதுக்களை) ரக்ஷிப்பதாகிய உபகாரத்தைச் செய்துகொண்டும், தீய அரக்கர்களை அழிப்பதாகிய அபகாரத்தைச் செய்துகொண்டும், வளைந்த புருவத்தைப் போன்ற வில்லோடு விளங்குபவராயும், விதேஹராஜனுடைய மகளாகிய ஸீதாதேவியிடத்தில் அன்புடையவராயும் (ஸீதாதேவியின் அன்பைப் பெற்றவராயும்), உலகெங்கும் எப்பொழுதும் ரக்ஷையுடையதாக உபகரிக்கின்றவராயும் (அதன் பொருட்டே) தீய அரக்கர்களை நலிகின்றவராயும் விளங்கும் ஸ்ரீராமனைப் போலவே, என்னுடைய ஆபத்தை அழித்தொழிப்பதாகுக.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கடைக்கண் ஸ்ரீராமனைப் போலவே கருநிறமுடையது; கோதண்டத்தினின்று பொழியும் அம்பு மழைபோலே கடைக்கண்ணும் புருவமாகிய வில்லிலே நோக்கங்களாகிய அம்புகளைத் தொடுத்து நல்லோரைப் பாதுகாப்பதற்காக தீயோரை நலிகின்றது; ஸீதையிடத்திலே வைத்த அன்பே ஸ்ரீராமனைப் போர்புரியும்படி செய்ததைப் போல, பரமசிவனிடத்திலே கடைக்கண்ணுக்கு இருக்கும் அன்பே கடாக்ஷ மழையைப் பெய்யும்படி செய்கின்றது. அது ஸம்ஸாரமாகிய ஆபத்திலே அகப்பட்டுக்கொண்டு தவிக்கும் என்னை அருள்மழை பொழிந்து காப்பதாக என்கிறார்.

श्रीकामकोटि शिवलोचनशोषितस्य
भृङ्गारबीजविभवस्य पुनःप्ररोहे ।
प्रेमाम्भसार्द्रमचिरात्प्रचुरेण शङ्के
केदारमम्ब तव केवलदृष्टिपातम् ॥ १९ ॥

19. ஸ்ரீ காமகோடியே! அன்னையே! உம்முடைய கண்ணோக்கம் மட்டுமே, சிருங்கார ரசம் நிறைந்த விதையினின்றும் செழித்து வளர்ந்த மன்மதனாகிய பயிர் மங்களமூர்த்தியான பரமசிவனுடைய கண்ணாலேயே எரிந்து கரிந்து போன போது, அப் பயிரானது மீண்டும் செழித்து ஓங்கி வளரும்படி, அதி சீக்கிரத்திலேயும் மிகுதியாகவும் அன்பாகிய நீராலே ஈரமுடையதாக்கப் பெற்ற வயலாக விளங்கிற்று என்றே கருதுகிறேன்.

माहात्म्यशेवधिरसौ तव दुर्विलङ्घ्य-
संसारविन्ध्यगिरिकुण्ठनकेलिचुञ्चुः ।
धैर्याम्बुधिं पशुपतेश्चुलकीकरोति
कामाक्षि वीक्षणविजृम्भणकुम्भजन्मा ॥ २० ॥

20. காமாக்ஷியே! பெருமைகளுக்குக் களஞ்சியமாக விளங்குவதான உம்முடைய இந்த கண்ணோக்கத்தின் பரப்பாகிய அகஸ்தியமுனிவர், கடந்து செல்வதற்கு அரியதான ஸம்ஸாரமாகிய விந்தியமலையைக் குறுகியதாகச் செய்யும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விளையாட்டாலே புகழ்பெற்றவராயும்," ஜீவர்களான பசுக்களுக்குப் பதியாகிய பரமசிவனுடைய தைர்யமாகிய பெருங்கடலை உள்ளங்கை மத்தியிலுள்ள குழியின் அளவாகும்படி செய்கிறார்.

கடாக்ஷம் என்னும் பெயருடன் ஸஞ்சரிக்கும் அகஸ்தியர் வெறும் மலையையும் வெறுங்கடலையும் அடக்கவில்லை; ஸம்ஸாரமாகிய மலையைக் கடப்பதற்கு கடாக்ஷமே துணைசெய்து அதைத் தாழ்த்தவேண்டும்; அதுவே கடல்போன்று கம்பீரமான பரமசிவனுடைய தைர்யத்தையும் குறுக்கி உத்தரணி ஜலத்தைப் போலாக்கிவிட்டது.

पीयूषवर्षशिशिरा स्फुटदुत्पलश्री-
मैत्री निसर्गमधुरा कृततारकाप्तिः ।
कामाक्षि संश्रितवती वपुरष्टमूर्ते-
र्ज्योत्स्नायते भगवति त्वदपाङ्गमाला ॥ २१ ॥

21. காமாக்ஷியே! பகவதியே! உம்முடைய கடைக்கண்ணோக்குகளின் மாலையானது அமிர்தத்தைப் பொழிந்து குளிரச் செய்வதாயும், மலரும் கருநீல மலரின் காந்தியோடு நட்புடையதாயும், இயல்பாகவே இனிமையுடையதாயும், தாரகை என்னும் கருவிழியை அடைந்திருப்பதாயும், (ஐம்பெரும் பூதங்கள், இருசுடர்கள், யஜமானன் ஆகிய) எட்டு வடிவங்களையுடையவரான பரமசிவனுடைய உடலோடு சேர்ந்திருப்பதாயும், சந்திர கிரணங்களாகிய அமிர்தத்தைப் பொழிந்து குளிரச் செய்வதும் கருநீல மலர்களை மலரச் செய்வதும் இயல்பாகவே இனியதும் தாரகைகள் என்னும் நக்ஷத்திரங்களை (முறையே) அடைகின்றதும் பரமசிவனுடைய சிரஸிலே அவரைத் தொட்டுக் கொண்டிருப்பதுமான நிலாவாக விளங்குகின்றது.

கடைக் கண்ணோக்குகளாலான நிலாவை சிலேஷையால் பரமசிவனுடைய திருமுடியினின்று படரும் நிலாவானது யொத்ததாயினும், உண்மையில் ஒவ்வாதது என்பது கருத்து; ஜடையில் மேல் தொட்டதும் தொடாததுமாக இராமல், பரமசிவனுடைய எட்டு மூர்த்தி

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

களின்மீதும் நன்ருகப் பொருந்திப் பிரகாசிக்கும் தன்மையாலும் கரு நிறமும் குளிர்ச்சியும் இனிமையும் இயல்பாக அமைந்திருப்பதாலும் அந்நிலாவைக் காட்டிலும் சிறந்தது என்பது குறிப்பு; தேவியின் கடைக்கண்ணேக்கமானது எப்பொழுதும் ஈசுவரனுடைய திரு மேனியிலேயே உள்ளது என்பதையும் சிலேஷையாலே விளக்கு கிருர்.

अम्ब स्मरप्रतिभटस्य वपुर्मनोज्ञ-
मम्भोजकाननमिवाञ्चितकण्टकाभम् ।
भृङ्गीव चुम्बति सदैव सपक्षपाता
कामाक्षि कोमलरुचिस्त्वदपाङ्गमाला ॥ २२ ॥

22. அன்னையே! காமாக்ஷியே! பெண் வண்டானது மனோஹரமாயும் முட்கள் படர்ந்ததாயுமுள்ள தாமரைக் காட்டை யடைந்து, தன் சிறகுகளைத் தாழ்த்திக்கொண்டு (அந்தத் தாமரை மலர்களை) எப்பொழுதுமே முத்தமிட்டுக் கொண்டிருப்பதுபோல, அழகும் மென்மையும் பொருந்திய ஒளியையுடையதான உம்முடைய கடைக் கண்ணேக்குகளா லாகிய மாலை என்னும் பெண்மணியானவள், மனதிற்கு இன்பமளிப்பதும், மயிர்க்கூச்செறிவதால் (தண்டுகளின்) முட்கள் படர்ந்த தாமரைக்காட்டை யொத்ததுமான திரு மேனியை ஆசை மிகுந்தவளாகி (ஓயாமல்) எப்பொழுதுமே முத்தமிட்ட வண்ணமாயிருக்கிருள்.

केशप्रभापटलनीलवितानजाले
कामाक्षि कुण्डलमणिच्छविदीपशोभे ।
शङ्के कटाक्षरुचिरङ्गतले कृपाख्या
शैलूषिका नटति शंकरवल्लभे ते ॥ २३ ॥

23. காமாக்ஷியே! மங்களங்களை யளிக்கின்றவரான பரமசிவனுடைய பத்தினியே! உம்முடைய கிருபை என்னும் பெயருடைய நாட்டியப் பெண்ணானவள், உம்முடைய கூந்த லின் ஒளித்திரளாகிய நீல விதானத்தை யுடையதும், (உம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முடைய காதுகளிலே மிளிரும்) குண்டலங்களிலுள்ள ரத்னங்களின் காந்தியாலே தீபவொளியை யுடையதுமான கடைக்கண்களின் பரந்த ஒளியாகிய நடன மேடையிலே நர்த்தனஞ் செய்கிருள் என்று கருதுகிறேன்.

எங்கும் பரந்த கடைக்கண்ணேக்கங்கள் தேவியினுடைய கருணையின் இயல்புகளை நன்ருக விளக்கிக் காட்டுகின்றன என்கிருர். நடன மேடையிலே திபம் ஏற்றி வைக்கப்பட்டிருக்கும்; நீலப் பட்டாலான மேற்கட்டி இருக்கும்; கடாக்ஷப் பிரதேசத்தின்மீது தேவியின் கூந்தலும் அதன் எல்லையில் தேவியின் காதுகளும் இருப்பதால் அவற்றினின்று வரும் ஒளிகள் நீல விதானமாகவும் தீப வொளியாகவும் விளங்குகின்றன என்கிருர்.

अत्यन्तशीतलमतन्द्रयतु क्षणार्ध-
मस्तोकविभ्रममनङ्गविलासकन्दम् ।
अल्पस्मितादृतमपारकृपाप्रवाह-
मक्षिप्ररोहमचिरान्मयि कामकोटि ॥ २४ ॥

24. காமகோடியே! மிகவும் குளிர்ந்ததாகவும், அதிக அழகும் சலனமுடையதாகவும், மன்மதனுடைய பெருமிதத்திற்குக் காரணமாகவும், புன்முறுவலாலே போற்றப் பெற்றதாகவும், கரைகடந்த கிருபையின் வெள்ளமாகவும் விளங்கும் கண்ணெளியானது தாமதம் சிறிதுமின்றி என்மீது அரைக்கணப் பொழுது பாய்வதாகுக.

मन्दाक्षरागतरलीकृतिपारतन्त्र्या-
त्कामाक्षि मन्थरतरां त्वदपाङ्गडोलाम् ।
आरुह्य मन्दमतिकौतुकशालि चक्षु-
रानन्दमेति मुहुरर्धशशाङ्कमौलेः ॥ २५ ॥

25. காமாக்ஷியே! வெட்கமும் காதலும் பின்னும் முன்னுமாகச் சலிக்கச் செய்வதற்கு இணங்கி அவற்றின் வசப்பட்டு மிக மெல்ல ஊசலாடுவதான உம்முடைய கடைக்கண்ணுகிய ஊஞ்சலின்மீது மெதுவாக ஏறி வீற்றிருந்து,

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதிக உவகையுடையவனாகி, பாதி மதியைத் தம்முடைய முடியிலே சூடியவரான பரமசிவனுடைய கண் என்பவன் அடிக்கடி (இடையறாமல்) ஆனந்தத்தை யடைகிறான்.

பரமசிவனையே பார்த்துக் கொண்டிருக்கும் அம்பிகையின் கடாக்ஷமானது வெட்கத்தால் பின்வாங்கியும் ஆசையால் முன்னோக்கியும் ஊஞ்சற் பலகை போன்றதாகின்றது. 'கண்ணொடு கண்ணிணை நோக்கொத்ததாகி' பரமசிவனுடைய நோக்குகளும் தேவியின் நோக்குகளோடு பொருந்துகின்றன. பரமசிவனுடைய நோக்குகள் வெட்கமறியாதவை யாதலால் அவை தேவியின் நோக்குகளாகிய ஊஞ்சலை வேகமாய் ஆடும்படி செய்கின்றன. அதாவது, பரமசிவனுடைய கண்களால் விளங்கும் காதலால் தேவிக்கு வெட்கமும் காதலும் அதிகரிக்கின்றன.

त्रैयम्बकं त्रिपुरसुन्दरि हर्म्यभूमि-
रङ्गं विहारसरसी करुणाप्रवाहः ।
दासाश्च वासवमुखाः परिपालनीयं
कामाक्षि विश्वमपि वीक्षणभूभृतस्ते ॥ २६ ॥

26. திரிபுரஸுந்தரியே! காமாக்ஷியே! உம்முடைய கண்ணோக்கமாகிய மன்னவனுக்கு, முக்கண்ணரான பரமசிவனுடைய உடலானது உப்பரிகையாகவும், கருணையின் வெள்ளமே நீர்விளையாட்டிற்கு உரிய ஏரியாகவும், இந்திரன் முதலானவர்களே அடியார்களாகவும், உலகங்கள் அனைத்துமே பாதுகாத்து அரசு செலுத்துவதற்குரிய ராஜ்யமாகவும் ஆகின்றது.

உமது கண்கள் பரமசிவனுடைய திருமேனியிலேயே என்றும் தங்கி யிருப்பவையாகி கருணையிலே திளைத்து எல்லாவுயிர்களையும் ஆட்கொண்டு எல்லா வுலகங்களையும் காக்கின்றன என்கிறார்.

वागीश्वरी सहचरी नियमेन लक्ष्मी-
र्भ्रूवल्लरीवशकरी भुवनानि गेहम् ।
रूपं त्रिलोकनयनामृतमम्ब तेषां
कामाक्षि येषु तव वीक्षणपारतन्त्री ॥ २७ ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

27. அன்னையே! காமாக்ஷியே! எவர்களிடத்திலே உம்முடைய கண்ணோக்கங்களுக்கு அடிமையாகுந் தன்மை அமைந்துள்ளதோ, அவர்களுக்கு உரிமையாகவே, வாக்குகளுக்கு ஈசுவரியான சரஸ்வதியானவள் தோழியாவாள், ஸ்ரீதேவி அவர்களுடைய பூங்கொடிபோன்ற புருவ நெறிப்புகளின் கருத்துப்படி ஏவல்புரிவாள், உலகங்கள் எல்லாம் அவர்களுக்கு வீடாகும்; அவர்களுடைய உருவமும் மூவுலகத்தவர்களுடைய கண்களுக்கும் அமிர்தம்போல இனியதாக இருக்கும்.

माहेश्वरं झटिति मानसमीनमम्ब
कामाक्षि धैर्यजलधौ नितरां निमग्नम् ।
जालेन शृङ्खलयति त्वदपाङ्गनाम्ना
विस्तारितेन विषमायुधदाशकोऽसौ ॥ २८ ॥

28. அன்னையே! காமாக்ஷியே! (ஒற்றைப்பட்ட) ஐந்து பாணங்களை ஆயுதங்களாகவுடைய இந்த மன்மதனாகிய செம்படவன், மஹேசுவரராகிய பரமசிவனுடையதும் தைரியமாகிய கடலிலே நன்றாக மூழ்கி ஆழ்ந்திருப்பதுமான மனமாகிய மீனை, உம்முடைய கடைக்கண்ணோக்கங்கள் என்னும் பெயருடையதாய் நன்றாக விரிக்கப்பட்ட பெருவலையாலே கட்டுண்ணும்படி செய்கிறான்.

उन्मथ्य बोधकमलाकरमम्ब जाड्य-
स्तम्बेरमं मम मनोविपिने भ्रमन्तम् ।
कुण्ठीकुरुष्व तरसा कुटिलाग्रसीम्ना
कामाक्षि तावककटाक्षमहाङ्कुशेन ॥ २९ ॥

29. அன்னையே! காமாக்ஷியே! அறிவாகிய தாமரையோடையைக் கலக்கிக்கொண்டு மனமாகிய காட்டிலே அலைந்து திரிகின்றதான என்னுடைய அஞ்ஞானமாகிய காட்டு யானையை, உன்னுடையதான கடைக்கண்ணோக்கமாகிய வளைந்த முனைப்பாகத்தையுடைய பெரிய அங்குசத்

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

தாலே (உன்னுடைய் வசமாகும்படி வலி செய்து) அதிவேகமாக அடக்கிக்கொள்வாயாக.

उद्वेल्लितस्तबकितैर्ललितैर्विलासै-
रुत्थाय देवि तव गाढकटाक्षकुञ्जात् ।
दूरं पलाययतु मोहमृगीकुलं मे
कामाक्षि सत्वरमनुग्रहकेसरीन्द्रः ॥ ३० ॥

30. தேவியே! காமாக்ஷியே! உம்முடைய அடர்த்தியான கடாக்ஷமாகிய குகையினின்று எழுந்திருந்து, மேன்மேலும் அதிகரிக்கின்றவையும் (பூங்கொத்தைப்போல) அடுத்தடுத்துள்ளவையும் அழகும் எழுச்சியு முடையவையுமான நடைகளினுலேயே (உம்முடையதான) அனுக்ரஹமாகிய ஸிம்ஹராஜனது என்னுடையதான அஞ்ஞானமாகிய மான் கூட்டத்தை அதிவேகமாகவே வெகுதூரம் ஓடும்படி செய்வதாக.

स्नेहाद्दृतां विदलितोत्पलकान्तिचोरां
जेतारमेव जगदीश्वरि जेतुकामः ।
मानोद्धतो मकरकेतुरसौ धुनीते
कामाक्षि तावककटाक्षकृपाणवल्लीम् ॥ ३१ ॥

31. உலகங்களுக்கு (எல்லாம்) ஈசுவரியா யிருப்பவளே! காமாக்ஷியே! மீனக்கொடியோனுன மன்மதன் தன்னைச் செயித்தவரான பரமசிவனைச் செயிக்க விரும்பியவனுய் அதிக கர்வங் கொண்டவனுகி எண்ணெயாலே செம்மையாக்க (கூருடையதாக்க)ப் பெற்றதும் (அன்பு ஒழுகுகின்றதும்), நன்ருக மலர்ந்த கருநீல மலர்களின் காந்தியைக் கவர்ந்து கொண்டதுமான உம்முடைய கடைக்கண்ணேக்கமாகிய (மெல்லியதாயும் நீண்டதாயும் வளைவுடையதாயும் கருநிறமுடைய தாயுமுள்ள) கொடிபோன்ற உடைவாளைச் சுழற்றிக் கொண்டிருக்கின்ருன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உம்முடைய கடாக்ஷத்தைப் பெற்றதனால், தன்னை முன்பு வென்ற பரமசிவனை வெல்வது எளிது என்று தைரியமாக உம்முடையகடாக்ஷத்தைக் காட்டிக்கொண்டு அவரை எதிர்த்து நிற்கிறான், அதாவது, உமது கடாக்ஷத்திற்குத் தோற்று பரமசிவனும் காமவசமாகி விட்டார் என்கிறார். கடாக்ஷம் நாற்புறமும் வீசப்படுவதாயும் கருநிறமாயும் அன்பு பெருகுவதாயும் ஒளியுடையதாயும் வளைந்ததாயு மிருப்பதால் உடைவாளாக வர்ணிக்கப் பெற்றது.

श्रौतीं व्रजन्नपि सदा सरणिं मुनीनां
कामाक्षि संततमपि स्मृतिमार्गगामी ।
कौटिल्यमम्ब कथमस्थिरतां च धत्ते
चौर्यं च पङ्कजरुचां त्वदपाङ्गपातः ॥ ३२ ॥

32. காமாக்ஷியே! அன்னையே! உம்முடைய கடைக்கண்ணோக்கின் வீழ்ச்சியானது சுருதிகளின் (வேதங்களின், காதுகளின் மார்க்கத்தையே எப்பொழுதும் அடைந்திருப்பதாகியும், முனிவர்களுடைய ஸ்ம்ருதியின் (மனுமுதலிய ஸ்ம்ருதி நூல்களின், ஸ்மரணைகளின்) வழியே எப்பொழுதுமே நிலைபெற்றிருப்பதாகியும், எவ்வாறு குடிலத் தன்மையையும் (வளைந்து செல்லும் இயல்பையும், புத்திக் கோணலையும்) ஒரு நிலையுறாத சஞ்சலத் தன்மையையும் (ஓயாது சஞ்சலித்துக் கொண்டிருக்குந் தன்மையையும்) தாமரைகளின் காந்தியைத் திருடித் தன்னுடையதாக்கிக் கொள்ளுங் கள்ளத் தனத்தையும் பெற்றதாயிற்று?

வேதங்களையும் ஸ்ம்ருதிகளையும் அனுசரிப்பவர்களின் நடத்தை கள்ளங்கவடின்றி ஒரு நிலைப்பட்டதாக இருக்கும்; கடைக்கண்ணோக்கமோ கோணலாயும் சஞ்சலமாயும் திருட்டுத்தனமுடையதாயும் இருக்கிறதே என்று சிலேஷையாலே கூறுகிறார்.

नित्यं श्रुतेः परिचितौ यतमानमेव
नीलोत्पलं निजसमीपनिवासलोलम् ।
प्रीत्यैव पाठयति वीक्षणदेशिकेन्द्रः
कामाक्षि किंतु तव कालिमसंप्रदायम् ॥ ३३ ॥

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

33. காமாக்ஷியே! உம்முடைய கடைக்கண்ணுகிய உத்தமாசார்யரானவர், எப்பொழுதும் காதுகளின் பழக்கத்தைப் பெறுவதற்கு முயல்கின்றதும் உம்முடைய (கண்ணின்) ஸமீபத்திலே இருக்க விரும்புகின்றதுமாய், எப்பொழுதும் சுருதிகளின் பழக்கத்தைப் பெறுவதற்கே முயல்கின்றவனும் ஆசார்யராகிய தம்முடைய ஸமீபத்திலேயே வஸித்திருக்க விரும்புகின்றவனுமாய் சிஷ்யனுக விளங்கும் (தேவியின் காதிலுள்ள) கருநீல மலருக்கு மிகுந்த அன்போடு கரு நிறத்தின் இயல்பாகிய தீய பழக்கத்தையே கற்பிக்கின்ருர் அல்லவா?

கடாக்ஷமானது கரு நெய்தல் மலரைவிடக் கரியதாகையால் அதனிடமே கருமையா யிருக்குந் தன்மையைக் கற்க வந்தது போல் விளங்கின்றது தேவியின் கடைக்கண்ணின் அருகிலே காதிலே சொருகிய நெய்தற் பூ. வேதாப்யாஸமும் குருகுல வாஸமும் வாய்ந்த சிஷ்யனை ஒளிபொருந்திய நன்மார்க்கத்திலே பழக்காமல் இவ்வாறு இருண்ட துன்மார்க்கத்திலே பழக்குவது ஏனே என்று சிலேஷையால் ஆச்சர்யப்படுகிருர்.

भ्रान्त्वा मुहुः स्तबकितस्मितफेनराशौ
कामाक्षि वक्त्ररुचिसंचयवारिराशौ ।
आनन्दति त्रिपुरमर्दननेत्रलक्ष्मी-
रालम्ब्य देवि तव मन्दमपाङ्गसेतुम् ॥ ३४ ॥

34. காமாக்ஷியே! பூங்கொத்துக்களைப் போன்றவையான முறுவல்களாகிய வெண்ணுரைகளின் திரள்களையுடையதும் (உம்முடைய) திருமுக மண்டலத்தின் ஒளித்திரளாகிய நீரால் நிறைந்ததுமான கடலிலே வெகுகாலம் நீந்தித் திரிந்து சளைத்து, முப்புரங்களை யழித்தவரான பரமசிவனுடைய கண்ணிற்கு அழகுசெய்கின்ற நோக்கமாகிய லக்ஷ்மியானவள் மெள்ள உம்முடைய கடைக்கண்ணேக்கமாகிய அணையை அடைந்து இன்புறுகின்ருள்.

முறுவலாகிய வெண்ணுரை மிகுந்த முகச்சோதியாகிய கடலிலே தத்தளித்த பரமசிவனுடைய கண் என்பவள் ஒரு நிலையாய் அக்கடலி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

னூடே கரிய வொளியுடையதாகக் காணப்படும் கண்ணோக்கங்களாலாகிய அணையை யடைந்து களிப்பாறுகிறாள் என்று கூறி பரமசிவனின்கண்கள் அங்கு மிங்கும் சலியாமல் தேவியின் கடைக் கண்ணோடு ஒன்றுகிக் களிப்பதைக் குறிக்கின்றார்.

श्यामा तव त्रिपुरसुन्दरि लोचनश्रीः
कामाक्षि कन्दलितमेदुरतारकान्तिः ।
ज्योत्स्नावती स्मितरुचापि कथं तनोति
स्पर्धामहो कुवलयैश्च तथा चकोरैः ॥ ३५ ॥

35. திரிபுரஸுந்தரியே! காமாக்ஷியே! உம்முடைய கரு நிறமுடையதான கண்ணழகாகிய இராத்திரியானது தளதளத்து நெய்த்து விளங்கும் கருவிழியின் காந்தியென்கிற, முளைத்தெழுந்து செழித்த, நக்ஷத்திர காந்தியோடு கூடியதாகியும், முறுவல்களின் (வெண்ணிறக்) காந்தியாலே நிலாவோடு கூடியதாகியும், நெய்தல் மலர்களோடும் சகோர பக்ஷிகளோடுமே எவ்வாறு போட்டி போடுகின்றதோ, அஹோ! ஆச்சர்யம்!

தேவியின் கண்கள் ஒளியாலும் வடிவாலும் நெய்தல் மலர்களையும் சகோரங்களையும் ஒத்திருப்பனவாதலால், அவற்றோடு போட்டி போடுகின்றன என்று கூறி, இரவின் இருளைப்போற் கருநிறமுடையதும் முறுவலால் வெள்ளொளியுடையதுமாய் நிலாக்காலத்தையொத்த கண்ணனது அந்நிலாவைப் பருகும் சகோரங்களுக்கும் இரவிலே மலரும் நெய்தற் பூக்களுக்கும் நண்பனாயிராமல் இப்படிச் சண்டை யிடுவதற்கு காரணமில்லையே என்று ஆச்சர்யப்படுகிறார்.

कालाञ्जनं च तव देवि निरीक्षणं च
कामाक्षि साम्यसरणिं समुपैति कान्त्या ।
निश्शेषनेत्रसुलभं जगतीषु पूर्व-
मन्यत्त्रिनेत्रसुलभं तुहिनाद्रिकन्ये ॥ ३६ ॥

36. தேவியே! காமாக்ஷியே! பனிமலை பெற்ற மகளே! கரிய மையும் உம்முடைய கண்ணோக்கமும் ஒளியாலே ஸமான

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

மான நிலையை அடைகின்றன வாயினும் முன்னது உலகங் களிலே எல்லோருடைய கண்களுக்கும் எளிதாகக் கிடைக்கக் கூடியது, மற்றதோ முக்கண்ணரான பரமசிவனுடைய மூன்று கண்களுக்கே எளிதாகக் கிடைப்பதாகின்றது.

உமது கடாக்ஷங்கள் பரமசிவனுக்கு உரியன. ஆயினும், உம் முடைய கண்கள் 'சிறுச் சிறிதே எம்மேல் விழியாவோ' என்பது கருத்து. உமது கண்களைப் பருகுவதற்கு இரண்டு கண் போதா என்றே பரமசிவன் முக்கண்ணர் ஆனர் போலும் என்பது குறிப்பு.

धूमाङ्कुरो मकरकेतनपावकस्य
कामाक्षि नेत्ररुचिनीलिमचातुरी ते ।
अत्यन्तमद्भुतमिदं नयनत्रयस्य
हर्षोदयं जनयते हरिणाङ्कमौलेः ॥ ३७ ॥

37. காமாக்ஷியே! உம்முடைய கண்களின் காந்தியாகிய கருநீல நிறத்தின் செழுமை யாகியதும் மீனக்கொடியோனுன மன்மதனுகிய அக்கினியின் கொழுந்தாகியதுமான புகையா னது, மானுகிய மறுவையுடையவனுன சந்திரனைத் திருமுடி யிலே கொண்டவரான பரமசிவனுடைய கண்கள் மூன்றி னுக்கும் (அற்புதமாய்) மிகவும் அதிகமாய் (வர்ணிக்க வொண்ணுதபடியான இந்த) ஆனந்தத்தின் விருத்தியை உண்டுபண்ணிக் கொண்டிருக்கின்றது என்னும் இது ஓர் அற்புதம்.

புகை கண்களைக் கரிக்கும்; கடாக்ஷமாகிய புகையோ கண்க ளுக்கு ஆனந்தத்தைத் தருகின்றது என்றும், மன்மதனுகிய அக்கினியி னின்று எழுகின்ற புகை மன்மதனை எரித்த மூன்ருவது கண்ணிற்கும் துன்பத்தைத் தரவில்லை என்றும் ஆச்சர்யப்படுகிறுர்.

आरम्भलेशसमये तव वीक्षणस्स
कामाक्षि मूकमपि वीक्षणमात्रनम्रम् ।
सर्वज्ञता सकललोकसमक्षमेव
कीर्तिस्वयंवरणमाल्यवती वृणीते ॥ ३८ ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

38. காமாக்ஷியே! (உமது) கண்ணோக்கத்தை மாத்திரமே வேண்டி வணங்கிநிற்கும் ஊமையனையே (மூகனாகிய என்னையே) உம்முடைய கண்ணோக்கத்தின் தொடக்கத்திலேயான சிறு பொழுதிற்குள்ளேயே எல்லாவற்றையும் அறியும் அறிவையுடைய தன்மை (ஸர்வஜ்ஞதை) என்னும் பெண்மணியானவள் தானே நாயகனாக வரித்ததற்கு அடையாளமாக இடுகின்ற புகழ் என்னும் ஸ்வயம்வரமாலையைக் கையிலே ஏந்தியவளாகி வந்து, (தன்னை யடைய விரும்பி ஸ்வயம்வர மண்டபத்திலே வந்து குழுமியுள்ள) எல்லா மனிதர்களின் முன்பாகவே (அவர்கள் கண்காணவே) அந்தப் புகழ்மாலையை யிட்டு நாயகனாக வரிக்கின்றாள்.

காமாக்ஷியின் கடாக்ஷத்தையே வேண்டி வணங்கி நிற்பவன், தம்மைப் போல ஊமையனாயினும், மற்றவர்களை விடுத்து அவனை ஸர்வஜ்ஞ பீடத்திற்கு உரியவனாக்குகிறாள் என்று தாம் ஸர்வஜ்ஞ பீடத்திலே காமாக்ஷியின் கடாக்ஷத்தைப் பெற்றவுடனேயே வீற்றிருந்ததைச் சுட்டிக் காட்டி, தேவியின் கடாக்ஷத்தைப் பெற்ற ஜீவன் ஸர்வஜ்ஞனாகிய பரமாத்மாவோடு ஒன்றாகிறான் என்றும் குறிப்பிடுகிறார்.

कालाम्बुवाह इव ते परितापहारी
कामाक्षि पुष्करमधःकुरुते कटाक्षः ।
पूर्वः परं क्षणरुचा समुपैति मैत्री-
मन्यस्तु संततरुचिं प्रकटीकरोति ॥ ३९ ॥

39. காமாக்ஷியே! நீருண்ட கார்மேகத்தைப்போலவே உமது கடைக்கண்ணானது தாபங்களைப் போக்குகின்றதாகி, மேகம் (புஷ்கரம் என்னும்) மழை ஜலத்தை பொழிவது போல, (புஷ்கரம் என்னும்) கருநெய்தல் மலரை (தன்னுடைய காந்தியின் சிறப்பாலே) கீழ்ப்பட்டதாக்குகின்றது. முன்னதோ (கார்மேகமோ), க்ஷணப்பொழுது மின்னுகின்ற மின்னலோடு தோழமையுடையதாகின்றது; மற்றையதோ (உமது கடைக்கண்ணோ) எப்பொழுதும் ஒளி

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

யுடையதான பரம்பொருளை நன்றாக விளக்குகின்றது (எப்பொழுதும் ஒளியுடையதாகி விளங்குகின்றது).

நெய்தல் மலருக்குக் கருநிறமும் காந்தியுமே உண்டு; தாபங்களைப் போக்குந் திறமையில்லை, அதனாலே வெப்பத்தை நீக்கும் கார்மேகமும் தாபத்திரயங்களையும் நீக்கும் கடாக்ஷமும் நெய்தல் மலரை இகழ்கின்றன; ஆயினும் இவ் விரண்டினுள் மேகத்தோடு மின்னலொளி க்ஷணநேரமே காணப்படுகின்றது; அம்பிகையின் கடாக்ஷமோ ஒளிவடிவாகிய பரமசிவனுடைய திருமேனியிலேயே எப்பொழுதும் அமர்ந்திருந்து அத் திருமேனியை கரிய காந்தியோடு கூடியதாகச் செய்கின்ற ஏற்றமுடையது.

सूक्ष्मेऽपि दुर्गमतरेऽपि गुरुप्रसाद-
साहाय्यकेन विचरन्नपवर्गमार्गे ।
संसारपङ्कनिचये न पतत्यमूं ते
कामाक्षि गाढमवलम्ब्य कटाक्षयष्टिम् ॥ ४० ॥

40. காமாக்ஷியே! நுண்ணியதாயும் கடந்து செல்வதற்கு மிகவும் அரிதாயுமுள்ள மோக்ஷமார்க்கத்திலே குருவின் அருளைத் துணையாகக் கொண்டு நடந்துசெல்வோன் உம்முடைய கடைக்கண்ணோக்கமாகிய இந்த ஊன்றுகோலையே கெட்டியாகப் பிடித்து ஊன்றிக்கொண்டு தான் ஸம்ஸாரமாகிய சேற்றுக் குவியலிலே ஆழாமலும் வழுக்கி விழாமலு மிருக்கிறான்.

ஆசார்யன் சிஷ்யனுக்கு அருளும் உதவி, சிஷ்யன் ஸம்ஸாரத்திலே ஆழ்ந்து விடாமலிருப்பதற்காக அம்பிகையின் கடாக்ஷமாகிய ஊன்றுகோலை அவனும் பெறுமாறு, அம்பிகையிடம் பிரார்த்திப்பதே என்பது கருத்து.

कामाक्षि संततमसौ हरिनीलरत्न-
स्तम्भे कटाक्षरुचिपुञ्जमये भवत्याः ।
वद्धोऽपि भक्तिनिगलैर्मम चित्तहस्ती
स्तम्भं च बन्धमपि मुञ्चति हन्त चित्रम् ॥ ४१ ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

41. காமாக்ஷியே! என்னுடைய சித்தமாகிய இந்த யானையானது தங்களுடைய கடைக்கண்ணோக்குகளுடைய காந்திகளின் திரளாகிய இந்திரநீல ரத்னங்களாலான தூணிலே பக்தியாகிய சங்கிலியிலே கட்டுண்டு இருக்கும் போதே, (அஞ்ஞானமாகிய ஜடத்தனம் என்னும்) தூணை யும் (ஸம்ஸாரமாகிய) கட்டையுமே விட்டுவிலகுகின்றதே! அந்தோ! ஆச்சர்யம்!

அஞ்ஞானமாகிய தூணிலே ஸம்ஸார பந்தத்தால் கட்டப்பட்ட ஜீவன் விடுதலை பெறுவதற்குத் தன்னை பக்தியென்னும் கயிற்றால் தேவியின் கடாக்ஷமாகிய ஞானத் தூணிலே கட்டிக்கொள்ள வேண்டும் என்பது கருத்து.

कामाक्षि कार्ण्यमपि संततमञ्जनं च
विभ्रन्निसर्गतरलोऽपि भवत्कटाक्षः ।
वैमल्यमन्वहमनञ्जनतां च भूयः
स्थैर्यं च भक्तहृदयाय कथं ददाति ॥ ४२ ॥

42. காமாக்ஷியே! தங்களுடைய கடாக்ஷமானது, கருமையையும் (களங்கத்தையும்) கரிய மையையும் (அழுக்கை யும்) எப்பொழுதுமே மேற்கொண்டதாயினும், இயல் பாகவே (எப்பொழுதும்) ஒரு நிலை நில்லாது சலிப்பதாயி னும், பக்தர்களுடைய மனத்திற்கு மாசற்ற தன்மையையும் மைதீர்ந்த (பாபந்தவிர்ந்த) தூய நிலைமையையும் (அதற்கு மேலே) ஒருநிலையிலேயே நிலைத்துநிற்கும் திடத்தன்மையை யும் அதிகப்படியாகவே அளிக்கின்றது எவ்வாறு?

தன்னிடமில்லாதவற்றைப் பிறருக்கு அளிப்பது ஆச்சர்யம் என்று சிலேஷையாலே விளக்குகிறார்.

मन्दस्मितस्तबकितं मणिकुण्डलांशु-
स्तोमप्रवालरुचिरं शिशिरीकृताशम् ।
कामाक्षि राजति कटाक्षरुचेः कदम्ब-
मुद्यानमम्ब करुणाहरिणेक्षणायाः ॥ ४३ ॥

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

43. காமாக்ஷியே! அன்னையே! (உம்முடைய) புன் முறுவல்களாகிய பூங்கொத்துகளை யுடையதும், மணிகளாற் செய்த குண்டலங்களின் காந்தித் திரள்களாகிய தளிர் களால் ஒளியுடையதும், சூழ எங்கும் (எல்லாத் திசைகளை யும்) குளிர்ச்சியுடையதாகச் செய்கின்றதுமான (உம்மு டைய) கடாக்ஷங்களினுடைய காந்தியின் திரளானது கருணை யாகிய மான்விழியாளின் பூந்தோட்டமாக விளங்குகின்றது.

कामाक्षि तावककटाक्षमहेन्द्रनील-
सिंहासनं श्रितवतो मकरध्वजस्य ।
साम्राज्यमङ्गलविधौ मणिकुण्डलश्री-
नीराजनोत्सवतरङ्गितदीपमाला ॥ ४४ ॥

44. காமாக்ஷியே! உம்முடைய கடாக்ஷங்களாகிய சிறந்த இந்திர நீல ரத்னங்களாலான ஸிம்ஹாஸனத்தை மீனக் கொடியோனான மன்மதன் அடையுந் தருணத்திலே, ஸாம் ராஜ்ய பதவிக்குரிய மங்களகரமான (பட்டாபிஷேகச்) சடங்கிலே, (உமது காதுகளிலுள்ள) ரத்ன குண்டலங் களினின்று வீசுகின்ற அழகிய ஒளியானது தீப ஆலத்தி யாகிய சுபகாரியத்திலே சுழற்றப்பெற்ற தீபங்களின் வரிசையாக விளங்குகின்றது.

मातः क्षणं स्नपय मां तव वीक्षितेन
मन्दाक्षितेन सुजनैरपरोक्षितेन ।
कामाक्षि कर्मतिमिरोत्करभास्करेण
श्रेयस्करेण मधुपद्युतितस्करेण ॥ ४५ ॥

45. அன்னையே! காமாக்ஷியே! மென்மை பொருந்தி யதும் (நாணம் மிகுந்ததும்), ஸாது ஜனங்களாலேயே கண்கொண்டு காணப் பெறுவதும், இருவினைகளாகிய அஞ் ஞான இருட் பிழம்பிற்கு ஸூர்யனுவதும், மங்களங்களை யளிப்பதும், தேனுண்ணும் வண்டுகளின் காந்தியைக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கவர்ந்து கொள்வதுமான உம்முடைய கண்ணோக்கத்தாலே என்னை ஒருகணப் பொழுது குளிப்பாட்டுவாயாக.

प्रेमापगापयसि मज्जनमारचय्य
युक्तः स्मितांशुकृतभस्मविलेपनेन ।
कामाक्षि कुण्डलमणिद्युतिभिर्जटालः
श्रीकण्ठमेव भजते तव दृष्टिपातः ॥ ४६ ॥

46. காமாக்ஷியே! உம்முடைய கண்ணோக்கம் என்பவர் (காதுகளிலுள்ள) குண்டலங்களிலுள்ள ரத்னங்களின் காந்திகளாலேயே செஞ்சடைகளையுடையவராயும், பிரேமையாகிய நதியின் தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்துவிட்டு முறுவலின் ஒளியாலமைந்த விபூதிப் பூச்சோடு விளங்குபவராயும், ஸ்ரீ கண்டரான பரமசிவனையே பூஜிக்கின்றார் (அடைகின்றார்.)

காதளவும் செல்லும் கண்களினின்று பிரேமையோடும் முறுவலோடும் கலந்து பெருகும் கடாக்ஷமானது பரமசிவனிடத்திலேயே லயித்திருக்கின்றது என்கிறார்.

कैवल्यदाय करुणारसकिंकराय
कामाक्षि कन्दलितविभ्रमशंकराय ।
आलोकनाय तव भक्तशिवंकराय
मातर्नमोऽस्तु परतन्त्रितशंकराय ॥ ४७ ॥

47. காமாக்ஷியே! அன்னையே! கைவல்யத்தை (தனிப் பெருநிலையை) அளிப்பதும் கருணைப்பெருக்கு என்னும் ஏவலாளனையுடையதும் சங்கரருக்கு மையலைச் செழிக்கச் செய்வதும், (அதனால்) அந்த சங்கரரைத் தனக்கு ஆட்பட்டவராகச் செய்துகொண்டதும் (உம்முடைய) பக்தர்களுக்கு மங்களங்களை யருளுவதுமான உம்முடைய கண்ணோக்கத்திற்கு (என்னுடைய) வணக்கம் அமைவதாக.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

साम्राज्यमङ्गलविधौ मकरध्वजस्य
लोलालकालिकृततोरणमाल्यशोभे ।
कामेश्वरि प्रचलदुत्पलवैजयन्ती-
चातुर्यमेति तव चञ्चलदृष्टिपातः ॥ ४८ ॥

48. காமேசுவரியே! (மன்மதனுக்கு ஈசுவரியாக விளங்குபவளே)!, அங்குமிங்குமாய் அசைகின்ற அளகங்களின் வரிசையாலே செய்த தோரணமாலையாலே அழகாக விளங்குகின்றதாகி நடைபெறுவதான மீனக்கொடியோனுகிய மன்மதனுக்கு (சிருங்காரமாகிய) ஸாம்ராஜ்யத்திலே முடிசூட்டும் மங்களச் சடங்கிலே, உம்முடைய மிளிர்கின்ற கண்ணோக்கமானது அசைந்தொளிர்கின்ற நீலோத்பல மலர்களாலாகிய வெற்றிமாலையின் தன்மையை அடைகின்றது.

मार्गेण मञ्जुकचकान्तितमोवृतेन
मन्दायमानगमना मदनातुरासौ ।
कामाक्षि दृष्टिरयते तव शंकराय
संकेतभूमिमचिरादभिसारिकेव ॥ ४९ ॥

49. காமாக்ஷியே! அழகிய கூந்தல்களின் ஒளியாகிய இருளாலே சூழப்பெற்ற வழியிலே (தன் கரியமேனி அந்த இருளிலே மறையும்படியாக) உம்முடைய கண்ணோக்கம் என்னும் இவள், காமத்தால் வருந்துகின்றவளாய், மெல்ல மெல்ல நடந்துசென்றும் அதிசீக்கிரமாகவே, (உம்முடைய) சங்கரரின் பொருட்டு, காதலனை நாடிச்செல்லும் அபிஸாரிகையைப்போல (ஸந்திப்பதற்காக முன்னதாக குறிப்பிட்டுச் சொன்ன) ஸங்கேத ஸ்தலத்தை அடைகின்றாள்.

உம்முடைய நாயகரை நாடி உமது ஏவலாளான கடாக்ஷம் என்பவள் ரகசியமாகச் செல்கிறாள் என்று காமாக்ஷிதேவியிடம் முறையிடுவதுபோல வர்ணிக்கிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

व्रीडानुवृत्तिरमणीकृतसाहचर्या
शैवालितां गलरुचा शशिशेखरस्य ।
कामाक्षि कान्तिसरसीं त्वदपाङ्गलक्ष्मी-
र्मन्दं समाश्रयति मज्जनखेलनाय ॥ ५० ॥

50. காமாக்ஷியே! உம்முடைய கடைக்கண்ணேக்கின் காந்தி (என்னும் லக்ஷ்மி)யானவள், இணைபிரியாது தொடர்ந்துவருகின்ற நாணமாகிய பெண்மணி துணைசெய்ய, சந்திரனைத் திருமுடியிலே சூடியவரான பரமசிவனுடைய கழுத்தின் (கரிய) ஒளியாலேபாசியுடையதாகி ஒளிநீர் நிறைந்த ஏரியை, நீர்விளையாடலின்பொருட்டு, மெல்ல வந்து சேர்கின்றாள்.

பரமசிவனுடைய திருமேனியின் காந்தியிலே கடாக்ஷம் மூழ்கித் திளைக்கின்றது என்று கூறி, 'பொய்கை நீராடல்' என்னும் ஸங்கேதத்தாலே கடாக்ஷமாகிய நங்கையும் பரமசிவனோடு ரமிக்கிருள் என்று அம்பிகையிடம் தெரிவிக்கிறார். காந்தி மயமான ஏரியிலே கழுத்திலுள்ள கரு விஷம் ஒரு மூலையிலே பாசியைப்போல் ஒதுக்கப் பட்டிருக்கின்றது என்பது குறிப்பு.

काषायमंशुकमिव प्रकटं दधानो
माणिक्यकुण्डलरुचिं ममताविरोधी ।
श्रुत्यन्तसीमनि रतः सुतरां चकास्ति
कामाक्षि तावककटाक्षयतीश्वरोऽसौ ॥ ५१ ॥

51. காமாக்ஷியே! உம்முடையதான கடாக்ஷமாகிய இந்த யதிச்சிரேஷ்டர், (உமது காதுகளிலுள்ள) மாணிக்கங்கள் அமைந்த குண்டலங்களின் காந்தியை காஷாய வஸ்திரத்தைப்போல நன்முக விளங்கும்படி உடுத்திக்கொண்டு, தம்முடைய மமதையைப் பகைத்து அழித்தவராகி, (அண்டியவர்களின் மமதையையும் அழிப்பவராகி), (கண்கள் காதுகள் வரை நீண்டிருப்பதால்) காதுகளின் எல்லைப்புற

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாகிய வேதாந்தப் பிரதேசத்திலே (வேதாந்த விழுப்பொருளாகிய கடவுளிடத்திலே) இன்புறுவூராக. (வேதாந்த விசாரத்திலே ஈடுபட்டவராக மிகச் சிறந்து விளங்குவாராக.)

पाषाण एव हरिनीलमणिर्दिनेषु
प्रम्लानतां कुवलयं प्रकटीकरोति ।
नैमित्तिको जलदमेचकिमा ततस्ते
कामाक्षि शून्यमुपमानमपाङ्गलक्ष्म्याः ॥ ५२ ॥

52. காமாக்ஷியே! இந்திர நீலமணியானது வெறுங் கல்லேயாகும்; கருநீல மலரோ பகற்பொழுதுகளிலே வாட்ட முறுவதை நன்ருகக் காட்டுகின்றது. மேகத்தின் கருநிறமோ (நீருண்டபோது மட்டுமே அமைவதால்) நிமித்தத்தோடு பொருந்தியபோதுதான் ஏற்படுகின்றது; ஆகையால், (அழகிய கண்களையுடையவளே!) உம்முடைய கடைக்கண்ணேக் கத்தின் கரிய காந்திக்கு உவமானமாவது ஒன்றுமில்லை.

இயற்கையிலேயே மென்மையும் கருமையும் ஒளியும் ஒருங்கேயுடைய கடாக்ஷத்திற்கு உவமை கூறுவதென்ருல், இந்திரநீல மணிக்கு மென்மை இல்லை, குவலயத்திற்கு எப்பொழுதும் வாட்ட முருத ஒளி இல்லை, மேகத்திற்கு இம்மூன்று குணங்களும் பருவ காலத்திலே மட்டும் சேர்க்கையால் வந்தவை என்கிருர்.

शृङ्गारविभ्रमवती सुतरां सलज्जा
नासाग्रमौक्तिकरुचा कृतमन्दहासा ।
श्यामा कटाक्षसुषमा तव युक्तमेत-
त्कामाक्षि चुम्बति दिगम्बरवक्त्रबिम्बम् ॥ ५३ ॥

53. காமாக்ஷியே! உம்முடைய கடாக்ஷத்தின் காந்தியாகிய (கருநிறமுடையவளான) இளம்பெண் ('சியாமா' என்னும் இளம்பருவத்து நங்கை), சிருங்கார ரஸத்திற்குரிய செயல்களையுடையவளாயும், மிகவும் நாணமுற்றவ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ளாயும், (உமது) மூக்கின் முனையிலே விளங்கும் முத்தின் ஒளியால் புன்முறுவலையுடையவளாயும், திசைகளையே ஆடையாகவுடையவரான பரமசிவனுடைய முக பிம்பத்தை (கோவைக் கனிபோன்ற செவ்வாயை) முத்தமிடுகின்றாள்; இது பொருத்தமே.

காண்பதும் கேட்பதும் தொடுவதும் தீது என்று இகழப்பட்டவனும் சிருங்காரச் சுவையின் சுவடறியாத திகம்பர ஜைனனை அடைந்து சிருங்கார ரஸத்தை யெல்லாம் வீணாக்குவது சரியோ என்பது த்வனி.

नीलोत्पलेन मधुपेन च दृष्टिपातः
कामाक्षि तुल्य इति ते कथमामनन्ति ।
शैत्येन निन्दति यदन्वहमिन्दुपादा-
न्पाथोरुहेण यदसौ कलहायते च ॥ ५४ ॥

54. காமாக்ஷியே! உமது கடாக்ஷமானது கருநீல மலரோடும் வண்டோடும் சமானமானது என்று எவ்வாறு சொல்கிறார்கள்? (கடாக்ஷமாகிய) இது எந்நாளும் சந்திரனுடைய திருவடிகளை (கிரணங்களை) குளிர்மையாலே நிந்திக்கின்றது, தாமரையோடும் விரோதங் கொள்கின்றது.

கருநீல மலருக்கு நாயகனாகி கௌரவிக்கத் தக்க சந்திரனையும் வண்டுகளுக்குப் புகலிடமாகிய தாமரையையும் விடத் தன் குளிர்ச்சியாலும் காந்தியாலும் கடாக்ஷம் சிறப்புடையதாக விளங்குகின்றது என்பது கருத்து.

ओष्ठप्रभापटलविद्रुममुद्रिते ते
भ्रूवल्लिवीचिसुभगे मुखकान्तिसिन्धौ ।
कामाक्षि वारिभरपूरणलम्बमान-
कालाम्बुवाहसरणिं लभते कटाक्षः ॥ ५५ ॥

55. காமாக்ஷியே! உம்முடைய உதடுகளின் காந்தித் திரளாகிய பவழக்கொடிகளோடு விளங்குவதும் (உமது) புருவக் கொடியின் நெறிப்புகளாகிய அலைகளால் அழகுடை

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

யதுமான (உமது) முகத்தின் காந்தியாகிய கடலிலே தண்ணீரை அதிகமாய் நிரப்பிக்கொண்டு தாழ்ந்துள்ள கார் மேகத்தின் நிலையை (உமது) கடாக்ஷமானது பெறுகின்றது.

கரிய முககாந்தியை தன்னுள்ளே நிரப்பிக் கொண்டு, எல்லோருடைய தாபங்களையும் தீர்ப்பதற்காக தாழ வருகின்ற கார்மேகத்தைபொத்து, கடாக்ஷம் கருணை மழையைப் பொழிந்துகொண்டிருக்கின்றது என்பது கருத்து.

मन्दस्मितैर्धवलिता मणिकुण्डलांशु-
संपर्कलोहितरुचिस्त्वदपाङ्गधारा ।
कामाक्षि मल्लिकुसुमैर्नवपल्लवैश्च
नीलोत्पलैश्च रचितेव विभाति माला ॥ ५६ ॥

56. காமாக்ஷியே! (உமது) புன்முறுவல்களால் வெண்ணிறமுடையதாயும் (உமது காதுகளிலுள்ள) ரத்னகுண்டலங்களுடைய கிரணங்களின் சேர்த்தியால் செந்நிறமுடையதாயும் (இயற்கையிலே கருநிற முடையதாயும்) விளங்கும் உம்முடைய கடைக்கண்ணோக்கங்களின் பெருக்கானது, மல்லிப்பூக்களையும் இளந்தளிர்களையும் கருநீல மலர்களையும் கொண்டு தொடுக்கப்பெற்ற மாலையைப்போலச் சிறந்து விளங்குகின்றது.

कामाक्षि शीतलकृपारसनिर्झराम्भः-
संपर्कपक्ष्मलरुचिस्त्वदपाङ्गमाला ।
गोभिः सदा पुररिपोरभिलष्यमाणा
दूर्वाकदम्बकविडम्बनमातनोति ॥ ५७ ॥

57. காமாக்ஷியே! கருணை வெள்ளமாகிய குளிர்ந்த அருவிநீரின் சேர்த்தியாலே மிகவும் அதிகமாகிய ஒளியுடையதாயும், திரிபுரத்தை யழித்தவரான பரமசிவனுடைய கண்களால் எப்பொழுதும் விரும்பப்பெற்றதாயு முள்ளதான

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உம்முடைய கடைக்கண்ணேக்கங்களின் கோவையானது குளிர்ந்த கருணைப் பெருக்கைப்போன்ற அருவிநீர் பாய்வதாலே செழிப்புடையதும் (பசுபதியின்) பசுக்களால் விரும்பப்படுவதுமான அருகம்புல்லால் நிறைந்த காட்டை ஒத்ததாக விளங்குகின்றது.

हृत्पङ्कजं मम विकासयतु प्रमुष्ण-
न्नुल्लासमुत्पलरुचेस्तमसां निरोद्धा ।
दोषानुषङ्गजडतां जगतां धुनानः
कामाक्षि वीक्षणविलासदिनोदयस्ते ॥ ५८ ॥

58. காமாக்ஷியே! உமது கண்ணேக்கத்தின் கிளர்ந்த ஒளியாகிய ஸூர்யோதயமானது, கருநீல மலர்களின் காந்தியைக் கவர்ந்து கொண்டதாகியும், (தன்னுடைய கருநிறத்தால்) இருளை அடக்கி வெல்கின்றதாகியும் (அஞ்ஞானத்தைத் தடைசெய்வதாகியும்) உலகத்தவர்களுக்கு இராக்காலத்தின் ஸம்பந்தத்தால் உண்டான அயர்ச்சியை (தோஷங்களின் ஸம்பந்தத்தாலுண்டான அஞ்ஞானத்தை) நீக்குவதாகியும் விளங்கி, என்னுடைய உள்ளத்தாமரையை நன்றாக மலரும்படி செய்வதாகுக.

'திேஷைய :' என்பதற்கு ஸூர்யன் என்றும் பொருள் கொள்ளலாம். ஸூர்யன் தன் செவ்வொளியாலே செய்யுங் காரியங்களை கடாக்ஷம் தன் கரிய காந்தியாலேயே செய்து முடிக்கின்றது என்று அதிசயிக்கிறார்.

चक्षुर्विमोहयति चन्द्रविभूषणस्य
कामाक्षि तावककटाक्षतमःप्ररोहः ।
प्रत्यङ्मुखं तु नयनं स्तिमितं मुनीनां
प्राकाश्यमेव नयतीति परं विचित्रम् ॥ ५९ ॥

59. காமாக்ஷியே! இருளாகிய கிழங்கினின்று முளைத்துச் செழித்தோங்கிய தளிராகிய உம்முடைய கடாக்ஷ

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

மானது, சந்திரனைச் சிறந்த ஆபரணமாகச் சூட்டிக்கொண்ட பரமசிவனுடைய கண்ணை நன்றாக மயங்கும்படி செய்கின்றது; ஆனால், உள்ளே நோக்குவதும் (உபயோகியாததால்) மரத்துத் திமிர்கொண்டதுமான முனிவர்களின் (அகக்) கண்ணிற்கு விளக்கத்தைத் தருகின்றது என்னும் இது மிகப் பெரிய ஆச்சர்யம்.

முச்சுடர்களையும் முக்கண்ணாகக் கொண்டும், அதற்கு மேலே ஒளிர்கின்ற சந்திரனைத் தலைமேலே உயர்த்திக்கொண்டும் இருக்கின்ற பரமசிவனுடைய கண்களைத் தன்னுடைய கரிய ஒளியாலே இருண்டவை யாக்கி, உண்ணோக்கியும் சலிக்க வொட்டாது தடுத்தும் (வெளிப்) பார்வையை இழந்த முனிவர்களுக்கு பரம்பொருளைக் காணும் திறமையைக் கொடுத்தும் அற்புதஞ் செய்கின்றது தேவியினுடைய கடைக்கண்ணோக்கம்; விரும்பத்தக்க கண்களையுடைய காமாக்ஷியின் கண்ணில் ஒரு சிறு பாகமும் தன்னிச்சைப்படியே ஈசுவரனுடைய மூன்று கண்களையும் மயக்கிச் சிறுமைப் படுத்தியும் முனிவர்களின் கண்களைப் பெருமைப்படுத்தியும் களிக்கின்றது என்பது குறிப்பு.

कामाक्षि वीक्षणरुचा युधि निर्जितं ते
नीलोत्पलं निरवशेषगताभिमानम् ।
आगत्य तत्परिसरं श्रवणावतंस-
व्याजेन नूनमभयार्थनमातनोति ॥ ६० ॥

60. காமாக்ஷியே! உமது கண்ணோக்கத்தின் ஒளியாலே போரிலே வெல்லப்பட்ட கருநீல மலரானது, (தன்னுடைய) கர்வத்தை முற்றும் துறந்து காதணி என்னும் வேஷத்தோடு அந்தக் கண்ணோக்கத்தின் அருகாமையில் வந்தடைந்து, மெய்யாகவே, அபயம் தரவேண்டு மென்ற பிரார்த்தனையைச் செய்து கொண்டிருக்கின்றது.

தன்னை வென்றவனைச் சரணமடைந்தால் மட்டுமே வாழலாமென்று, கருநீல மலரானது கடாக்ஷத்தின் அருகாமையிலுள்ள செவிப்புறத்திலே காதணியாக வந்துள்ளது என்கிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

आश्चर्यमम्ब मदनाभ्युदयावलम्बः
कामाक्षि चञ्चलनिरीक्षणविभ्रमस्ते ।
धैर्यं विधूय तनुते हृदि रागबन्धं
शंभोस्तदेव विपरीततया मुनीनाम् ॥ ६१ ॥

61. தாயே! காமாக்ஷியே! உம்முடைய சஞ்சலமான கண்ணேக்கத்தின் காந்தியானது (சஞ்சலமுடையதாயினும்) மன்மதனுடைய பெரு நலத்திற்கு ஆதாரமான ஊன்றுகோலாகி, சம்புதேவருடைய மனதிலேயுள்ள தைரியத்தைப் போக்கிவிட்டு, ஆசையாகிய பந்தத்தை (அவருக்கு) உண்டாக்குகின்றது; அதுவே, நேர்மாருக, முனிவர்களுக்கு ஆசையாகிய பந்தத்தை நீக்கி மனதிலே தைரியத்தை உண்டாக்குகின்றது; இது ஆச்சர்யம்.

கடாக்ஷமானது தனக்கில்லாத திடத்தன்மையை மன்மதனின் செல்வத்திற்கும் முனிவர்களின் மனத்திற்கும் அளிப்பதும் பரமசிவனுடைய மனதின் திடத்தன்மையை அழிப்பதும் ஆச்சர்யம் என்கிருர்.

'வதநஶ்ரீயுதயாவலம்பீ' என்பது பாடமானல், "(உமது) முகம் நன்மையைப் பெறுவதற்குக் காரணமானது" என்று பொருள் கொள்வது.

जन्तोः सकृत्प्रणमतो जगदीड्यतां च
तेजस्वितां च निशितां च मतिं सभायाम् ।
कामाक्षि माक्षिकझरीमिव वैखरीं च
लक्ष्मीं च पक्ष्मलयति क्षणवीक्षणं ते ॥ ६२ ॥

62. காமாக்ஷியே! உம்முடையதான க்ஷணப்பொழுதுள்ள கண்ணேக்கமே, (உம்மை) ஒருமுறை அடிவணங்குகின்ற பிராணிக்கு, உலகோர் அனைவராலும் புகழ்வதற்குரிய நிலையையும், தேஜஸ்ஸின் மிகுதியையும், (ஞானிகளின்) ஸபைகளிலே (நன்குவிளங்கும்) கூரியபுத்தியையும், தேனின் அருவி பாய்வதுபோன்ற வாக்கையும், செல்வத்தையுமே செழிப்புற உதவுகின்றது.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

தம்மைப்போல காமாக்ஷிதேவியை ஒருமுறை அடிபணிந்ததாலே அவளுடைய கடாக்ஷத்தைப் பெற்றவன், மிருகப்பிராயனாயினும் மறுக்ஷணமே தம்மைப்போல், ஸர்வஜ்ஞ பீடத்திலமர்ந்து ஜகத்குருவாயும், தம்முடைய காவியத்திலேபோல தேன்மழை பொழிவது போன்ற சொல்வளத்தையுடையவனாயும், வேதங்களாகிய அழியாச் செல்வங்களையுடையவனாயும், ஞானிகளுக்குத் தலைவனாயும், குசாக்ர புத்தியும் தேஜஸ்ஸுமுடையவனாயும் விளங்குவான் என்று தேவியின் முன்னிலேயே பிரதிஜ்ஞை செய்துகொடுக்கிறார்.

कादम्बिनी किमयते न जलानुषङ्गं
भृङ्गावली किमुररीकुरुते न पद्मम् ।
किं वा कलिन्दतनया सहते न भङ्गं
कामाक्षि निश्चयपदं न तवाक्षिलक्ष्मीः ॥ ६३ ॥

63. காமாக்ஷியே! (எப்பொழுதும் சஞ்சரித்துக்கொண்டிருக்கின்ற) மேகங்களின் வரிசையானது (ஓரிடத்திலே நிலைத்து நின்று மழை பொழியும்போது) ஜலத்தோடு சேர்ந்திருக்கும் (ஜடத்தன்மை பொருந்திய) நிலையை அடைவதில்லையா? (பூக்களை நாடித்திரியும்) வண்டுகளின் வரிசையும் தாமரை மலரையடைந்து அதனோடு பொருந்தியிருப்பதில்லையா? (ஓயாது கடலை நோக்கிச்செல்லுகின்றவளாகிய களிந்தனுடைய மகளான) யமுனையும் (பலபத்திரதேவர் கலப்பையாலே தடுத்தபோது) தடைப்படுவதைப் பொறுத்துக்கொள்ள வில்லையா? உம்முடைய கண்ணாகிய ஸ்ரீதேவி மட்டும் (தன்னுடைய சலன ஸ்வபாவத்தை விட்டு) ஸ்திரமான நிலையை அடையவில்லையே!

यात्येव यमुना पूर्णा समुद्रं लवणार्णवम् (रामायणे अयोध्या॰ 105, 19) என்று சொல்லப்பட்ட யமுனையும் ஒருதடவை தடைப்பட்டு நின்றது. உமது கடாக்ஷமோ யாராலும் தடைப்படாததாகி அடியார்களின்மீது எப்பொழுதும் பாய்ந்துகொண்டிருக்கின்றது என்கிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

काकोलपावकतृणीकरणेऽपि दक्षः
कामाक्षि बालकसुधाकरशेखरस्य ।
अत्यन्तशीतलतमोऽप्यनुपारतं ते
चित्तं विमोहयति चित्रमयं कटाक्षः ॥ ६४ ॥

64. காமாக்ஷியே! எல்லாவற்றைக் காட்டிலும் மிகவும் குளிர்ந்த தன்மையை யுடையதான உம்முடைய இந்தக் கடாக்ஷமானது (காலகூடவிஷமாகிய) அக்கினியையும் புல்லாகக்கொள்வதிலே திறமையுடையதாகி, அமிர்தத்தைப் பொழிகின்ற சந்திரனுடைய இளம்பிறையைச் சூடியவரான பரமசிவனுடையதான மனதை, எப்பொழுதுமே இடைவிடாமல் வாடி மயங்கும்படி செய்கின்றதே! (இது) ஆச்சர்யம்!

விஷாக்கினியின் தாபத்தையும் இலக்ஷ்யஞ் செய்யாத பரமசிவனுடைய மனதிற்கு, அமிர்தத்தைப் பொழிந்தும் குளிர்ந்த கிரணங்களை வீசி வெப்பத்தை மாற்றி உஜ்ஜீவிக்கச் செய்யும் சந்திரனை வைத்துக்கொண்டாலும் எப்பொழுதும் தணியாத காமவெதுப்பை யளிக்கும் காமாக்ஷியின் கடாக்ஷத்தையே சீதளவஸ்துகளிலே மிகச் சிறந்தது என்பது எப்படி என்று ஆச்சர்யப்படுகிறார்.

कार्पण्यपूरपरिवर्धितमम्ब मोह-
कन्दोद्गतं भवमयं विषपादपं मे ।
तुङ्गं छिनत्तु तुहिनाद्रिसुते भवत्याः
काञ्चीपुरेश्वरि कटाक्षकुठारधारा ॥ ६५ ॥

65, அம்மையே! பனிமலை பெற்ற மகளே! காஞ்சீபுரத்திலே ஈசுவரியாக விளங்குபவளே! தங்களுடைய கடாக்ஷமாகிய கோடரியின் கூரிய முனையானது, என்னுடையதான வறுமையாகிய நிரம்பிய நீராலே போஷிக்கப் பெற்றதும், அஞ்ஞானமாகிய கிழங்கினின்றும் செழித்தோங்கி வளர்ந்ததும், மிக்கவுயர்ச்சியையுடையதுமான ஸம்ஸாரமாகிய விஷவிருக்ஷத்தை வெட்டி வீழ்த்துவதாக.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

कामाक्षि घोरभवरोगचिकित्सनार्थ-
मभ्यर्थ्य देशिककटाक्षभिषक्प्रसादात् ।
तत्रापि देवि लभते सुकृती कदाचि-
दन्यस्य दुर्लभमपाङ्गमहौषधं ते ॥ ६६ ॥

66. காமாக்ஷியே! தேவியே! ஸம்ஸாரமாகிய பயங்கரமான ரோயைப் போக்கிக்கொள்வதின் பொருட்டு அதிகமாக வேண்டிக்கொண்டு குருவினுடைய கடாக்ஷமாகிய வைத்தியனின் தயவினால், எப்படியோ எப்பொழுதோ ஒரு சமயத்தில், புண்ணியசாலியானவன் (பிறர்க்கு) கிடைப்பதற்கு மிகவும் அரிதாகியதான உம்முடைய கடைக்கண்ணோக்கமாகிய பெரு மருந்தைப் பெறுகிறான்.

குருவின் கடாக்ஷத்தைப் பெறாமலும், இடைவிடாது பிரார்த்தியாமலும் பூர்வபுண்ணியமில்லாமலும், ஸம்ஸாரத்திலே உழல்கின்றவனுக்கு தேவியின் கடாக்ஷத்தைப் பெறுவது அரிது என்றும், இவை மூன்றும் இருந்தாலும் தேவியின் இச்சைப்படி எப்பொழுதோதான் அவளுடைய கடாக்ஷத்தைப் பெறலாம் என்றும் விளக்குகிறார்.

कामाक्षि देशिककृपांकुरमाश्रयन्तो
नानातपोनियमनाशितपाशबन्धाः ।
वासालयं तव कटाक्षममुं महान्तो
लब्ध्वा सुखं समधियो विचरन्ति लोके ॥ ६७ ॥

67. காமாக்ஷியே! ஆசார்யனுடைய கிருபையாகிய முளையை (ஜலத்தை) அடைந்தவர்களாய், பலவகையான தவங்களாலும் நியமங்களாலும் பற்றுதலாகிய பந்தத்தை ஒழித்தவர்களாகி, உம்முடையதான இந்த கடாக்ஷமாகிய வாஸஸ்தானத்தைப் பெற்று, பெரியோர்கள் ஸமபுத்தியுடையவர்களாய் (ஒன்றாகிய பரம்பொருளிலே புத்தி செலுத்துகின்றவர்களாய்) உலகத்திலே இனிதாகத் திரிகின்றார்கள் (ஸஞ்சாரஞ் செய்கிறார்கள்).

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

साकूतसंलपितसंभृतमुग्धहासं
व्रीडानुरागसहचारि विलोकनं ते ।
कामाक्षि कामपरिपन्थिनि मारवीर-
साम्राज्यविभ्रमदशां सफलीकरोति ॥ ६८ ॥

68. காமாக்ஷியே! கருத்துடைய பேச்சை யுள்ளடக்கிக் கொண்டிருக்கும் இளமுறுவலோடு கூடியதும் நாணத்தோடும் காதலோடும் பொருந்தியதுமான உம்முடைய (காதலால் நிறைந்த) கண்ணோக்கமானது, மன்மதனை வென்றவரான பரமசிவனிடத்திலும், மன்மதனாகிய வீரனுடைய ஸாம்ராஜ்யத்தின் (பேரரசின்) பெருமையை விளக்கும் நிலையைப் பயனுள்ளதாகச் செய்கின்றது.

காமனுடைய அதிகாரமானது அம்பிகையின் காதல்ததும்பும் கண்ணோக்கத்தாலே காமனைவென்ற பரமசிவனிடம் செலுத்தப்படுகின்றது என்று, பரமசிவன் தேவியின் கடாக்ஷத்தில் ஈடுபட்டு காமபரவசராகின்றார் என்பதைக் குறிப்பிடுகிறார்.

कामाक्षि विभ्रमबलैकनिधिर्विधाय
भ्रूवल्लिचापकुटिलीकृतिमेव चित्रम् ।
स्वाधीनतां तव निनाय शशाङ्कमौले-
रङ्गार्धराज्यसुखलाभमपाङ्गवीरः ॥ ६९ ॥

69. காமாக்ஷியே! (உமது) கடைக்கண்ணோக்கமாகிய போர்வீரனானவன் தன் படையெழுச்சியின் பலத்தை முக்கியமான சேமப்படையாக அமைத்துக்கொண்டு, (அதனை உபயோகப்படுத்தாமல்), புருவக்கொடி யாகிய வில்லை வளைப்பதை மட்டும் செய்து, சந்திரனைத் திருமுடியிலே சூடியவரான பரமசிவனுடைய சரீரத்தின் பாதியாகிய ராஜ்ய போகத்தைப் பெறுவதை உம்முடைய வசமாகச் செய்துவிட்டான், என்ன ஆச்சர்யம்!

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

कामांकुरैकनिलयस्तव दृष्टिपातः
कामाक्षि भक्तमनसां प्रददातु कामान् ।
रागान्वितः स्वयमपि प्रकटीकरोति
वैराग्यमेव कथमेष महामुनीनाम् ॥ ७० ॥

70, காமங்கள் முளைத்தெழுவதற்குரிய தனியிடமாக அமைந்ததான உம்முடைய கண்ணோக்கமானது, காமாக்ஷியே! (உம்முடைய) பக்தர்களுடைய மனங்களுக்கு விரும்பியவற்றை அளிப்பதாகுக; (அது அதன் இயல்பே); (ஆனால்) தான் (கருநிறமாகிய) ராகத்தோடு (ஆசையோடு) கூடியதாயிருந்தும், இது (இந்தக் கடாக்ஷமானது) மகாமுனிவர்களுடைய வைராக்கியத்தையே (நிறமற்ற தன்மையையே) உறுதிப்படுத்துகின்றது எப்படி?

कालाम्बुवाहनिवहैः कलहायते ते
कामाक्षि कालिममदेन सदा कटाक्षः ।
चित्रं तथापि नितरामममुमेव दृष्ट्वा
सोत्कण्ठ एव रमते किल नीलकण्ठः ॥ ७१ ॥

71. காமாக்ஷியே! உமது கடாக்ஷமானது, தன்னுடைய கருநிறத்தின் செழுமையால் (செருக்கால்) நீருண்ட கார் மேகங்களின் தொகுதிகளோடு எப்பொழுதும் போர்புரிந்து கொண்டிருக்கின்றது; அப்படியிருந்தும், இதையே (இந்த கடாக்ஷத்தையே) கண்டு ஸ்ரீ நீலகண்டராகிய மயிலானது பேராவலுடன் மிகவும் அதிகமாக இன்புறுகின்றதே யொழிய (தான் கண்டு களிக்கின்ற மேகங்களுக்கு விரோதியானவனைக் கண்டு) துன்புறுவதில்லை; என்ன ஆச்சர்யம்!

कामाक्षि मन्मथरिपुं प्रति मारताप-
मोहान्धकारजलदागमनेन नृत्यन् ।
दुष्कर्मकञ्चुकिकुलं कबलीकरोतु
व्यामिश्रमेचकरुचिस्त्वदपाङ्गकेकी ॥ ७२ ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

72. காமாக்ஷியே! (பீலிக்கண்களை) கரிய காந்தியை மிகுதியாக வுடையதான உம்முடைய கடைக்கண்ணோக்க மாகிய மயிலானது, மன்மதனுடைய தாபத்தாலேயுண்டான அஞ்ஞானமாகிய இருண்ட கார்மேகத்தின் வருகையாலே (மனங்களித்து), மன்மதனை வென்றவரான பரமசிவனை நோக்கி நர்த்தனஞ் செய்துகொண்டே (எங்களுடைய) தீவினைகளாகிய பாம்புகளின் வமிசம் முழுவதையும் விழுங்கி விடுவதாகுக.

कामाक्षि मन्मथरिपोरवलोकनेषु
कान्तं पयोजमिव तावकमाक्षिपातम् ।
प्रेमागमो दिवसवद्विकचीकरोति
लज्जाभरो रजनिवन्मुकुलीकरोति ॥ ७३ ॥

73. காமாக்ஷியே! மன்மதனை (அழகாலும்) வென்றவரான பரமசிவனுடைய நோக்கங்களினிடையே, அழகான தாமரை மலரைப்போன்றதான உமது கண்ணோக்கத்தை, அன்பின் தோற்றமானது பகலைப்போல மலரும்படி செய்கின்றது, இரவைப்போல நாணத்தின் மிகுதியானது கூம்பும் படி செய்கின்றது.

பரமசிவன் அம்பிகையைத் திரும்பத் திரும்பப் பார்க்கின்றார்; அவர் பாராதபோது தேவியின் கண்கள் பிரேமையால் மலர்ந்து, பார்க்கும்போது நாணத்தால் மூடிக்கொள்கின்றன என்பதை தாமரைமலர் பகற்பொழுதிலே மலர்ந்து இராப்பொழுதிலே கூம்புவதோடு ஒப்பிடுகிறார்.

मूको विरिञ्चति परं पुरुषः कुरूपः
कंदर्पति त्रिदशराजति किंपचानः ।
कामाक्षि केवलमुपक्रमकाल एव
लीलातरङ्गितकटाक्षरुचः क्षणं ते ॥ ७४ ॥

74. காமாக்ஷியே! விளையாட்டாகவே அலைமோதி யெழுகின்றதான உமது கடாக்ஷங்களின், காந்தியினுடைய புறப்

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாட்டு வேளையின் தொடக்கத்திலேயே க்ஷணமாத்திரத்திலே ஊமையன் (நான்கு வேதங்களையும் ஓதவல்ல) பிரும்மாவாகின்றான், மிகவும் குரூபியாகிய மனிதனும் மன்மதனாகின்றான், பரம ஏழையும் தேவராஜனாகின்றான்.

नीलालका मधुकरन्ति मनोज्ञनासा-
मुक्तारुचः प्रकटकन्दबिसाङ्कुरन्ति ।
कारुण्यमम्ब मकरन्दति कामकोटि
मन्ये ततः कमलमेव विलोचनं ते ॥ ७५ ॥

75. அன்னையே! காமகோடியே! (உமது) கரிய அளகங்கள் (முன்னுச்சி மயிர்க் கற்றைகள்) (அலர்ந்த தாமரை மலரிலே மொய்த்துக் கிடக்கும்) வண்டுகளாகின்றன; (தாமரைத் தண்டுபோன்றதாய்) மனதிற்கு இன்பத்தைத் தருபவையான மூக்கிலுள்ள முத்தின் வெண்ணிற வொளிகள் செழித்து வளர்ந்த தாமரைத் தண்டின் முளைகளாகின்றன; (கண்களினின்று பெருகும்) கருணைப் பெருக்கானது (அம்மலர்களினின்று பெருகும் மகரந்தமாகிய) தேனாகின்றது; ஆதலால், உமது கண்ணானது தாமரை மலரே என்று நான் நினைக்கிறேன்.

आकांक्ष्यमाणफलदानविचक्षणायाः
कामाक्षि तावककटाक्षककामधेनोः ।
संपर्क एव कथमम्ब विमुक्तपाश-
बन्धाः स्फुटं तनुभृतः पशुतां त्यजन्ति ॥ ७६ ॥

76. காமாக்ஷியம்மையே! (அடியார்கள்) விரும்புகின்ற பயன்களை யெல்லாம் தருவதிலே திறமை வாய்ந்ததான உம்முடைய கடைக்கண்ணாகிய காமதேனுவின் சேர்க்கையாலே உடல்களைத் தாங்கும் உயிர்கள் எல்லாம் (ஸம்ஸார) பாசங்களினின்று விடுதலை பெற்றவர்களாகி பசுத்தன்மையாகிய ஜீவத்தன்மையை முழுவதும் விட்டொழிக்கின்றார்களே, அது எவ்வாறு?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காமதேனுவாகிய பசுவோடு பழகுகின்றவர்களுடைய பசுத் தன்மையும் பாசத்தாலே கட்டுப்படுதலும் அதிகமாக வேண்டியிருக்க, அந்தச் சேர்க்கையினலேயே பசுத்தன்மையும் பாசமும் நீங்கி, பதியின் தன்மையை அடைகின்றார்களே என்று வியக்கின்றார். கடாக்ஷத்தா லேயே ஜீவப்ரஹ்மைக்யமான மோக்ஷம் ஸித்திக்கும் என்பது கருத்து.

संसारघर्मपरितापजुषां नराणां
कामाक्षि शीतलतराणि तवेक्षितानि ।
चन्द्रातपन्ति घनचन्दनकर्दमन्ति
मुक्तागुणन्ति हिमवारिनिपेचनन्ति ॥ ७७ ॥

77. காமாக்ஷியே! ஸம்ஸாரமாகிய கோடை வெயிலிலே (மூவகைத்) தாபங்களை யடைகின்ற மனிதர்களுக்கு மிகக் குளிர்ச்சி யுடையவையான உமது கண்ணோக்கங்கள் நிலா வாகின்றன, செழுஞ் சந்தனக் குழம்புகளாகின்றன, முத் தின் (குளிர்ச்சியும் மகிழ்ச்சியும் தருகின்ற) குணங்களாகின் றன, பனி நீரைத் தெளிப்பதாகின்றன.

கடாக்ஷத்தின் குளிர்த்திக்குத் தனியாக ஓர் உவமைகூற இயலாத லால், இப்படி குளிர்ச்சிக்கு உவமையாகக் கூறக் கூடியவற்றையெல் லாம் ஒருசேர வைக்கிறார்.

प्रेमाम्बुराशिसततस्नपितानि चित्रं
कामाक्षि तावककटाक्षनिरीक्षणानि ।
संधुक्षयन्ति मुहुरिन्धनराशिरीत्या
मारद्रुहो मनसि मन्मथचित्रभानुम् ॥ ७८ ॥

78. காமாக்ஷியே! என்ன ஆச்சர்யம்! பிரேமையாகிய தண்ணீர்க் கடலிலே எப்பொழுதும் மூழ்கிக் கொண்டிருப் பவையான உம்முடைய கடைக்கண்ணோக்கங்கள், (காய்ந்த) விறகுக் குவியல்களின் தன்மைகொண்டு மன்மதனை வென்றவ ரான பரமசிவனுடைய மனதிலேயே மன்மதன் என்னும் அக்கினியை, நன்றாக கொழுந்துவிட்டெறியும்படி (இடை விடாது) அடிக்கடி போஷித்துக் கொண்டிருக்கின்றன.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

कालाञ्जनप्रतिभटं कमनीयकान्त्या
कंदर्पतन्त्रकलया कलितानुभावम् ।
काञ्चीविहाररसिके कलुषार्तिचोरं
कल्लोलयस्व मयि ते करुणाकटाक्षम् ॥ ७९ ॥

79. காஞ்சீபுரத்திலே திருவிளையாடல் புரிவதில் இன்புறுகின்றவளே! (காமாக்ஷியே!) கவர்ச்சி யுடையதான (தன்னுடைய) காந்தியாலே கரிய மையோடு போட்டிபோடுவதும், காம சாஸ்திர ஞானத்தாலே பெருமை பெற்றதும், பாபங்களின் பயனான துன்பத்தை அபஹரிக்கின்றதுமான உமது கருணை ததும்புகின்ற கடைக்கண்ணோக்கத்தை என் மீது அலைமோதிப் பாயும்படி அருளுவாயாக.

क्रान्तेन मन्मथमदेन विमोह्यमान-
स्वान्तेन चूततरुमूलगतस्य पुंसः ।
कान्तेन किंचिदवलोकय लोचनस्य
प्रान्तेन मां जननि काञ्चिपुरीविभूषे ॥ ८० ॥

80. காஞ்சீபுரத்திற்கு அலங்காரமாக இருப்பவளே! (காஞ்சீபுரத்தை அணியாகக்கொண்டவளே!) அன்னையே! அளவு மீறியதான (மன்மதனுடைய செருக்கினால்) காம மேலீட்டினால் மையலுற்ற மனதோடு மாமரத்தின் அடியிலே வந்துறைகின்ற ஆடவனாகிய பரமசிவனுக்கு (இன்பகரமான) விருப்பமான கண்ணின் கடைப்பாகத்தால் என்னைச் சிறிது நோக்குவாயாக.

कामाक्षि केऽपि सुजनास्त्वदपाङ्गसंगे
कण्ठेन कन्दलितकालिमसंप्रदायाः ।
उत्तंसकल्पितचकोरकुटुम्बपोषा
नक्तंदिवप्रसवभूनयना भवन्ति ॥ ८१ ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

81. காமாக்ஷியே! உமது கடாக்ஷத்தின் சேர்த்தியிலே ஏதோ சில நல்லோர்கள் (தங்கள்) கழுத்தினாலே கருமை யின் தன்மையை நன்றாக வெளிப்படுத்துகின்றவர்களாயும், சகோரங்களின் குடும்பங்களைப் போஷிக்கின்ற சந்திரனை தலைமாலையாக• அமைத்துக் கொண்டவர்களாயும், இரவை யும் பகலையும் பிறப்பிப்பவையான சந்திர ஸூர்யர்களைக் கண்களாக வுடையவர்களாயும் ஆகின்றார்கள்.

பரமசிவனையே பஹுவசனமாகக் கூறியதாகவும் அல்லது கடாக்ஷத்தைப் பெற்றவர்கள் பகவத் ஸாரூப்யத்தைப் பெறுவதைக் குறித்ததாகவும் கொள்ளலாம்.

नीलोत्पलप्रसवकान्तिनिदर्शनेन
कारुण्यविभ्रमजुषा तव वीक्षणेन ।
कामाक्षि कर्मजलधेः कलशीसुतेन
पाशत्रयाद्वयममी परिमोचनीयाः ॥ ८२ ॥

82. காமாக்ஷியே! கருநீல மலரின் காந்திக்கு உதாரண மாகவும் கருணையின் பேரழகு வாய்ந்ததாகவும் இருவினை யாகிய கடலுக்கு (கும்பத்திலே பிறந்தவரான) அகஸ்திய முனிவராகவும் விளங்குவதான உமது கண்ணோக்கத்தால் இதோ (உம்மைத் தொழுது அடிபணிந்து உம் முன்னே) நாங்கள் மூவகைப் பாசங்களினின்றும் விடுவிக்கத் தக்கவர் களாக நிற்கின்றோம்.

மண், பொன், பெண் என்றும், புத்ரேஷணை, வித்தேஷணை• தாரேஷணை அல்லது லோகேஷணை என்றும், ஆணவம், மாயை, கன்மம் ஆகிய மும்மலங்கள் என்றும் மும்மூன்றாகப் பிரிவுபடுகின்ற பாசத்தை முப்புரியாகத் திரித்த கயிறாகக் கூறி, அந்தக் கயிற்றின் கட்டினின்றும் எங்களை அவிழ்த்து, உம்மைவிட்டு விலகாதபடி உமது கடாக்ஷத்தாலே கட்டுண்ணப் பண்ணுவீராக என்கிறார்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

अत्यन्तचञ्चलमकृत्रिममञ्जनं किं
झंकारभङ्गिरहिता किमु भृङ्गमाला ।
धूमाङ्कुरः किमु हुताशनसंगहीनः
कामाक्षि नेत्ररुचिनीलिमकन्दली ते ॥ ८३ ॥

83. காமாக்ஷியே! உமது கண்களின் காந்தியினுடைய செழித்த கருமையானது, ஒருவராலும் செய்யப்படாததும் மிகவும் அலேகின்ற ஸ்வபாவத்தை யுடையதுமான மையோ? அல்லது, ஜங்கார ஒலிவரிசையின்றி அமைந்ததான வண்டு களின் மாலேயோ? அக்கினியின் ஸம்பந்தமின்றியே எழுந்த புகையின் கொழுந்தோ? (அறியேன்).

कामाक्षि नित्यमयमञ्जलिरस्तु मुक्ति-
बीजाय विभ्रममदोदयघूर्णिताय ।
कंदर्पदर्पपुनरुद्भवसिद्धिदाय
कल्याणदाय तव देवि दृगञ्चलाय ॥ ८४ ॥

84. காமாக்ஷியே! அன்னேயே! மோக்ஷத்திற்கு மூல வித்தாகின்றதும், அழகிய பெருமிதம் தோன்றச் சுழல்கின் றதும், மன்மதனுடைய செருக்கை (பரமசிவனுல் அழிக்கப் பட்ட பிறகு) மீண்டும் தோன்றும்படி செய்ததும், மங்களங் களே அளித்துக்கொண்டிருப்பதுமான உமது கடைக்கண் ணிற்கு, தேவியே! இந்த (கை கூப்பித் தொழுவதாகிய) அஞ்சலி எப்பொழுதும் அமைவதாகுக.

दर्पाङ्कुरो मकरकेतनविभ्रमाणां
निन्दाङ्कुरो विदलितोत्पलचातुरीणाम् ।
दीपाङ्कुरो भवतमिस्रकदम्बकानां
कामाक्षि पालयतु मां त्वदपाङ्गपातः ॥ ८५ ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

85. காமாக்ஷியே! மீனக் கொடியோனான மன்மதனுடைய பெருஞ் செயல்களுக்குக் காரணமாகிய செருக்கு என்னும் முளையாகவும், மலர்ந்த கருநீல மலர்களின் (கருநிறங்களாகிய) சிறப்புகளை (அவற்றினும் மிக்க கருநிறத்தை யுடையதாகையால்) நிந்திப்பதற்குக் காரணமாகவும், ஸம்ஸாரமாகிய இருளின் திரள்களுக்கு தீபத்தின் ஒளிக் கொழுந்தாகவும் விளங்குவதான உம்முடைய கடைக்கண்ணோக்கமானது என்னைக் காப்பதாகுக.

कैवल्यदिव्यमणिरोहणपर्वतेभ्यः
कारुण्यनिर्झरपयःकृतमज्जनेभ्यः ।
कामाक्षि किंकरितशङ्करमानसेभ्य-
स्तेभ्यो नमोऽस्तु तव वीक्षणविभ्रमेभ्यः ॥ ८६ ॥

86. காமாக்ஷியே! கைவல்யமாகிய சிறந்த ரத்னத்தை யுடைய (ரோஹணம் என்னும்) பெரு மலைகளாயும், கருணையாகிய அருவி நீரிலே மூழ்கித் திளைத்தவையாயும், மங்களங்களைத் தருகின்றவரான பரமசிவனுடைய மனதை ஏவிப் பணிகொள்கின்றவையாயும் விளங்குகின்றவையான உம்முடைய அந்த கண்ணோக்கத்து அழகுகளுக்கு (எங்கள்) நமஸ்காரம் அமைவதாகுக.

अल्पीय एव नवमुत्पलमम्ब हीना
मीनस्य वा सरणिरम्बुरुहां च किं वा ।
दूरे मृगीदृगसमञ्जसमञ्जनं च
कामाक्षि वीक्षणरुचौ तव तर्कयामः ॥ ८७ ॥

87. காமாக்ஷியே! உமது கண்ணோக்கத்தைப்பற்றி ஆராயும்போது, அப்பொழுதலர்ந்த கருநீல மலரை மிகச் சிறியதென்றும், மீன்களின் ஒழுங்காகச் செல்லும் கதியைத் தாழ்ந்ததென்றும், தாமரைமலர்களின் வரிசையை (இகழ்ந்து) 'இது என்ன' என்றும், பிணைமானை தூரத்திலேயே வைக்க

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேண்டும் என்றும்; கண்ணிற்கு இடும் மையை(தெளிவுடைய தன்று) பொருத்தமுடைய தன்று என்றும் உறுதி கூறு கின்றோம்.

மிகப் பெரியவையாகப் படருகின்ற கண்ணேக்கத்தோடு ஒப்பிட்டால் கருநீல மலர் மிகச் சிறிது என்று கூறி மற்றவைகளைச் சிலேஷையாலே "மீன் நீரிலே தாழ்ந்த கதியை யுடையது; தாமரை மலர்களும் அப்படியே; மான் தூரத்திலே காட்டிலே யுள்ளது; மை தெளிவற்றது" என்றும் நிந்திக்கிறார்.

मिश्रीभवद्गरलपङ्किलशङ्करोरस्-
सीमाङ्गणे किमपि रिङ्खणमादधानः ।
हेलावधूतललितश्रवणोत्पलोऽसौ
कामाक्षि बाल इव राजति ते कटाक्षः ॥ ८८ ॥

88. காமாக்ஷியே! உமது இந்தக் கடாக்ஷமானது, (காலகூட) விஷமாகிய சேற்றோடு கலந்ததான சங்கரருடைய மார்புப் பிரதேசமாகிய முற்றத்திலே (வர்ணிக்க வொண்ணுத படியாக) அற்புதமாகத் தவழ்ந்து செல்கின்றவனும் விளையாட்டாகவே (உமது) அழகிய காதிலுள்ள கருநீல மலரை கீழே தள்ளிவிடுகின்றவனுமான குழந்தைபோல விளங்குகின்றது.

தன்னுடைய கரிய காந்தியால் கருநீல மலரை இகழ்கின்ற கடாக்ஷமானது, தன்னருகிலே இருப்பதற்குத் தகுதியுடைய தன்று என்று அதைக் கீழே தள்ளிவிடுகின்றது என்பது த்வனி; தேவியின் கண்கள் எப்பொழுதும் பரமசிவனுடைய அகன்ற திருமார்பினையே பார்த்துக் கொண்டிருக்கின்றன என்கிறார்.

प्रौढीकरोति विदुषां नवसूक्तिधाटी-
चूताटवीषु बुधकोकिललाल्यमानम् ।
माध्वीरसं परिमलं च निरर्गलं ते
कामाक्षि वीक्षणविलासवसन्तलक्ष्मीः ॥ ८९ ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

89. காமாக்ஷியே! உமது கண்ணோக்கத்தின் பேரழகாகிய வஸந்த காலத்திய அழகானது, அறிவாளிகளின் புதிய பாசுரங்களுடைய பெருக்கத்தையுடைய மாந்தோப்புகளிலே புத்திசாலிகளாகிய குயில்களாலே கொண்டாடப் பெற்ற தேனையும் நறுமணத்தையும் இடையறாமல் பெருகும்படி செய்கின்றது.

வஸந்த காலத்திலே மாமரம் பூத்து இளந்தளிர்களோடு விளங்கும்; அப்பூக்களின் தேனையும் மணத்தையும் உண்ட குயில் இனிய குரலோடு கூவும்; அதைப்போல, கடாக்ஷத்தாலே தளிர்த்துப் பூத்த அறிவாளிகளின் பாசுரங்களின் இனிமையையும் நறு மணத்தையும் உட்கொண்டு, புத்திமான்கள் கொண்டாடுகிறார்கள் என்று தம்மை உலகோர் பாராட்டியதைக் குறிப்பிடுகிறார்.

कूलंकषं वितनुते करुणाम्बुवर्षी
सारस्वतं सुकृतिनः सुलभं प्रवाहम् ।
तुच्छीकरोति यमुनाम्बुतरङ्गभङ्गीं
कामाक्षि किं तव कटाक्षमहाम्बुवाहः ॥ ९० ॥

90. காமாக்ஷியே! உமது கடாக்ஷமாகிய நீருண்ட பெரு மேகமானது கருணையாகிய நீரைப் பொழிவதாகி எளிதாகவே (தன்னைப்பெற்ற) புண்ணியசாலிகளுடைய ஸரஸ்வதி நதியாகிய வாக்கின் வெள்ளத்தைக் கரைபுரண்டு பாயும்படி பெருகச் செய்கின்றது; (ஆனால்) அலைமேலலையாகப் பெருகும் யமுனையாற்று நீரை அது கீழ்ப்பட்டதாக இகழ்கின்றது ஏன்?

பெரிய உருவிலே தோன்றும் கார்மேகமானது கரிய காந்தி பெருகுகின்ற கடாக்ஷத்திற்கு ஒப்பாகும்; யமுனையாற்று வெள்ளமும் ஒப்பாகும் என்னலாம்; ஆயினும் மேகம் ஆகாசத்திலே விளங்குகின்றது, யமுனையோ பூமியிலே பள்ளத்தாக்கிலே பாய்கின்றது என்பதால் கடாக்ஷத்தை மேகமென்று கூறி யமுனையை அது இகழ்வதாகக் கூறுகிறார். ஸரஸ்வதி நதிக்குப் பெருமை யளித்தும் அதனையொத்த யமுனைநதியைப் பழித்தும் கடாக்ஷமானது சுயேச்சையாக விளையாடுகின்றது என்பது சொன்னயம்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

जागर्ति देवि करुणाशुकसुन्दरी ते
ताटङ्करत्नरुचिदाडिमखण्डशोणे ।
कामाक्षि निर्भरकटाक्षमरीचिपुञ्ज-
माहेन्द्रनीलमणिपञ्जरमध्यभागे ॥ ९१ ॥

91. தேவியே! காமாக்ஷியே! அடர்ந்த கடைக்கண் ணோக்கங்களின் ஒளித்திரளாகிய இந்திரநீல ரத்னங்களாலான கூண்டிலே (காதுகளிலுள்ள) தாடங்கங்களாகிய காதோலைகளிலுள்ள ரத்னங்களின் ஒளிமயமான மாதுளம் பழத்தின் துண்டத்தாலே சிவந்துள்ள மத்திய பாகத்திலே உமது கருணையாகிய பெண் கிளி (அதைக் கொத்துவதற்கோ) விழித்துக் கொண்டிருக்கின்றது.

கடாக்ஷத்தின் காந்தி காதுகளின் எல்லையைத் தாண்டியும் பரவியிருப்பதால், கடாக்ஷ காந்தியாகிய மணிக்கூண்டின் மத்தியிலே தாடங்கத்தின் செவ்வொளியாகிய மாதுளங்கனியின் பகுதி வைக்கப்பட்டிருக்கின்றது என்றும், கருணை எப்பொழுதும் விழித்த வண்ணமாய் நம்மைக் காக்கக் காத்திருக்கின்றது என்றும் கூறுகிறார்.

कामाक्षि सत्कुवलयस्य सगोत्रभावा-
दाक्रामति श्रुतिमसौ तव दृष्टिपातः ।
किंच स्फुटं कुटिलतां प्रकटीकरोति
भ्रूवल्लरीपरिचितस्य फलं किमेतत् ॥ ९२ ॥

92. காமாக்ஷியே! நல்ல கருநீல மலரின் குலத்திலே பிறந்ததாலே, உம்முடையதான இந்த கடைக்கண்ணோக்கம் என்பவன் சுருதியை (காதை) அனுசரித்துச் செல்கிறான்; ஆனாலும், அவன் தன்னுடைய கோணலை நன்றாக வெளிப்படுத்துகின்றானே, இது (கோணலையுடைய) புருவக்கொடியோடு பழகுவதின் பயனேயோ?

நற்குலத்திலே பிறந்தவர்களும் ஸஹவாஸ தோஷத்தாலே கெட்டுப் போவார்கள் என்னும் உண்மையை சிலேஷையாலே நிரூபிக்கிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

एषा तवाक्षिसुषमा विषमायुधस्य
नाराचवर्षलहरी नगराजकन्ये ।
शंके करोति शतधा हृदि धैर्यमुद्रां
श्रीकामकोटि यदसौ शिशिरांशुमौलेः ॥ ९३ ॥

93. மலையரசன் பெற்ற மகளே! ஸ்ரீ காமகோடியே! உம்முடைய இந்தக் கண்ணழகானது, குளிர்ந்த கிரணங்களை யுடைய சந்திரனைத் திருமுடியிலே சூடிய பரமசிவனுடைய (மார்பிலேயுள்ள) மனதிலேயுள்ள (கேடயமாகிய) தைரியத்தை சுக்கு நூறாக (இதோ) தகர்த்து விடுவதாலே, இது ஒற்றைப்பட்ட ஆயுதங்களை யுடையவனான மன்மதனுடைய சரமழையின் பிரவாஹமே என்று கருதுகிறேன்.

கடாக்ஷம் நீலோத்பலமாகி, முறுவலாகிய மல்லிகையோடும் மாம்பூவோடும் குண்டல சோபையாகிய அசோக மலரோடும் அரவிந்தத்தோடும் சேர்ந்து, பஞ்ச பாண மழையாகப் பொழிகின்றது என்பது பொருள்.

बाणेन पुष्पधनुषः परिकल्प्यमान-
त्राणेन भक्तमनसां करुणाकरेण ।
कोणेन कोमलदृशस्तव कामकोटि
शोणेन शोषय शिवे मम शोकसिन्धुम् ॥ ९४ ॥

94. காமகோடியே! மங்கள வடிவு கொண்டவளே! (மங்கள வடிவான சிவனுடைய பத்தினியே!) மலர்களை வில்லிலே பாணங்களாகத் தொடுக்கின்றவனான மன்மதனுடைய பாணமானதும், பக்தர்களுடைய மனங்களைப் பாது காக்குந் தொழிலையுடையதும், கருணைக்குப் பிறப்பிடமாகியதும் சிவந்துள்ளதுமான உம்முடைய அழகிய (கண்ணின் முனைப்பாகத்தாலே) கடைக்கண்ணாலே என்னுடைய துன்பக் கடலை வற்றச் செய்வாயாக.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீராமன் ஒரு பாணத்தாலே கடலை வற்றச் செய்ததுபோல நீயும் கடல்போன்ற என் துன்பங்களையெல்லாம் உன் கடாக்ஷத்தைக் கொண்டு போக்குவாயாக என்று பிரார்த்திக்கிறார்.

मारद्रुहा मुकुटसीमनि लाल्यमाने
मन्दाकिनीपयसि ते कुटिलं चरिष्णुः ।
कामाक्षि कोपरभसाद्वलमानमीन-
संदेहमङ्कुरयति क्षणमक्षिपातः ॥ ९५ ॥

95. காமாக்ஷியே! மன்மதனை வென்றவரான பரமசிவனாலே தம் திருமுடியின்மீது வைத்துக் கொண்டாடப்பெற்ற கங்கையின் நீரிலே (உமது) கோபத்தின் வேகத்தாலே கோணலாகச் செல்ல விரும்புகின்றதான (உமது) கண்ணோக்கமானது (அந்த கங்கையாற்றிலே) வளைந்து செல்கின்ற மீனோ என்னும் சந்தேகத்தை க்ஷணநேரம் தோன்றச் செய்கின்றது.

அம்பிகைக்குக் கங்கை சக்களத்தியென்றும், அவளைத் தலையிலே பரமசிவன் தாங்கிக்கொண்டிருப்பதால் அம்பிகை ஊடுகின்றாள் என்றும் அப்பொழுது அவளுடைய காலிலே தம் திருமுடியோடு கங்கையும் படும்படி பரமசிவன் வணங்குகிறார் என்றும் அப்பொழுதும் கோபம் முற்றும் தணியாததால் அம்பிகையின் கடாக்ஷமானது கோணலாக அங்குமிங்கும் பாய்ந்து, அந்த கங்கைநீரிலே வளைந்தோடுகின்ற மீனைப்போல ஒளிர்கின்றது என்றும் வர்ணிக்கிறார்.

कामाक्षि संवलितमौक्तिककुण्डलांशु-
चञ्चत्सितश्रवणचामरचातुरीकः ।
स्तम्भे निरन्तरमपाङ्गमये भवत्या
बद्धश्चकास्ति मकरध्वजमत्तहस्ती ॥ ९६ ॥

96. காமாக்ஷியே! எப்பொழுதுமுள்ளதான உம்முடைய கடைக்கண்ணாகிய தூணிலே கட்டப் பெற்றதான மீனக்கொடியோனாகிய (மன்மதனாகிய) மதயானையானது, ஓரங்களிலே கட்டிய முத்துக்களாலே வெண்மை யொளி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருந்தியவையான ரத்ன குண்டலத்தின் கிரணங்கள் என்னும் வெண் சாமரங்களாகிய காதுகள் இரண்டையும் அசைப்பதிலே வல்லமையுடையதாக விளங்குகின்றது.

நீண்டதாயும் கரிய நிறமுடையதாயும் இருப்பதால் கடாக்ஷம் கருங்கல்லாற் செய்த தூண்; அதோடு பிணைத்துக் கட்டப்பெற்ற யானையே மன்மதன்; முத்துமாலைபூண்டவையான அந்த யானையின் காதுகளே வெண் சாமரங்கள்; அவை அம்பிகையின் இருபுறமும் வீசப்படுகின்றன.

यावत्कटाक्षरजनीसमयागमस्ते
कामाक्षि तावदचिरान्नमतां नराणाम् ।
आविर्भवत्यमृतदीधितिबिम्बमम्ब
संविन्मयं हृदयपूर्वगिरीन्द्रशृङ्गे ॥ ९७ ॥

97. காமாக்ஷியே! அன்னையே! உமது கடாக்ஷமாகிய மாலைப் பொழுதின் வரவு எப்பொழுது நேர்கின்றதோ, அப்பொழுதே சிறிதும் தாமதமின்றியே, (உம்மை வணங்குகின்ற மனிதர்களுக்கு (அவர்களுடைய) மனமாகிய சிறந்த உதய பர்வதத்தின் (கிழக்கு மலையின்) கொடுமுடியிலே ஸம்வித்ஞானமாகிய (அமிர்தகிரணங்களை யுடையோனின் பிம்பமானது) சந்திரமண்டலமானது (உதயமாகி) நன்கு விளங்குகின்றது.

कामाक्षि कल्पविटपीव भवत्कटाक्षो
दित्सुः समस्तविभवं नमतां नराणाम् ।
भृङ्गस्य नीलनलिनस्य च कान्तिसंप-
त्सर्वस्वमेव हरतीति परं विचित्रम् ॥ ९८ ॥

98. காமாக்ஷியே! (தன்னை) வணங்கும் மனிதர்களுக்குக் கற்பக விருக்ஷமானது எல்லா வைபவங்களையும் அளிப்பதைப்போலவே, (தங்களை) வணங்குகின்றவர்களுக்கு எல்

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

லாச் செல்வங்களையும் அளிக்கின்றதான தங்களுடைய கடாக்ஷமே, வண்டினுடையதும் கருநீல மலரினுடையதுமான (கரிய) காந்திகளாகிய செல்வம் முழுவதையுமே அபஹரிக்கின்றது என்பது அதிக ஆச்சர்யம்.

अत्यन्तशीतलमनर्गलकर्मपाक-
काकोलहारि सुलभं सुमनोभिरेतत् ।
पीयूषमेव तव वीक्षणमम्ब किंतु
कामाक्षि नीलमिदमित्ययमेव भेदः ॥ ९९ ॥

99. அன்னையே! காமாக்ஷியே! மிகவும் அதிகமான குளிர்ச்சியையுடையதும், தடைப்படாததான இருவினைப் பயனாகிய விஷத்தைப் போக்குவதும், (தேவர்களுக்கு) தூய மனதையுடைய நல்லோர்களுக்கு எளிதிலே கிடைக்கக் கூடியதுமான உமது இந்தக் கண்ணோக்கமானது (குளிர்ச்சி, விஷத்திற்கு மாற்று, தேவர்களுக்கு உரியது என்னும் குணங்களாலே) அமிர்தமே யாகும்; ஆனால் இது கருநீல நிறமுடையது என்னும் இது தான் (அமிர்தத்திற்கும் இதற்குமுள்ள) வித்தியாசம்.

अज्ञातभक्तिरसमप्रसरद्विवेक-
मत्यन्तगर्वमनधीतसमस्तशास्त्रम् ।
अप्राप्तसत्यमसमीपगतं च मुक्तेः
कामाक्षि नैव तव स्पृहयति दृष्टिपातः ॥ १०० ॥

(कामाक्षि मामवतु ते करुणाकटाक्षः)

100. காமாக்ஷியே! பக்தியின் சுவையை அறியாதவனும் பகுத்தறிவின் சுவடே இல்லாதவனும், சாஸ்திரங்களை (வேதங்களை) யெல்லாம் ஓதியுணராதவனும் ஸத்யப் பொருளைப் பெறாதவனும் மோக்ஷத்திற்கு அருகே செல்லாதவனுமாக இருப்பவனை உமது கண்ணோக்கமானது ஒரு பொழுதுமே விரும்புவதில்லை. ("அப்படியிருக்கின்ற என்னை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உமது கருணை ததும்புகின்ற கடைக்கண்ணோக்கமானது காத்தருள்வதாகுக" என்பது படாந்தரத்தின் பொருள்).

கடாக்ஷமானது ஒருவனையும் மேற்குறித்த துர்க்குணங்களை யுடையவனாக இருக்க விடுவதில்லை; அவன் பக்தியின் சுவையை யறிந்து கர்வத்தை யொழித்து பகுத்தறிவோடு சாஸ்திரங்களைப் பயின்று உண்மையறிந்து மோக்ஷத்தை யடையும்படி செய்யும் என்பது கருத்து.

पातेन लोचनरुचेस्तव कामकोटि
पोतेन पातकपयोधिभयातुराणाम् ।
पूतेन तेन नवकाञ्चनकुण्डलांशु-
वीतेन शीतलय भूधरकन्यके माम् ॥ १०१ ॥

101. காமகோடியே! மலைமகளே! பாபங்களால் நிறைந்த கடலிலே (விழுந்து) பயத்தாலே வருந்துகின்றவர்களுக்குப் புணையாயும், பரிசுத்தமானதாயும், பொன்னாற் செய்த குண்டலங்களின் புதிய ஒளியாலே சூழப்பெற்றதாயுமுள்ள (உமது) அந்தக் கண்ணொளியின் வீழ்ச்சியாலே என்னை (தாபத்திரயங்களும் நீங்கி உள்ளும் புறமும்) குளிரும்படி செய்தருளுவாயாக.

कटाक्षशतकं संपूर्णम् ॥

கடாக்ஷ சதகம் முற்றிற்று.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

॥ मूकपञ्चशती ॥

॥ मन्दस्मितशतकम् ॥

மந்தஸ்மித சதகம்

बध्नीमो वयमञ्जलिं प्रतिदिनं बन्धच्छिदे देहिनां
कंदर्पागमतन्त्रमूलगुरवे कल्याणकेलीभुवे ।
कामाक्ष्या घनसारपुञ्जरजसे कामद्रुहश्चक्षुषां
मन्दारस्तवकप्रभामदमुषे मन्दस्मितज्योतिषे ॥ १ ॥

1. மாந்தர்களின் சம்சார பந்தத்தை அகற்றுவதும், மதன சாஸ்திரத்தின் உட்கருத்தை விளக்கும் ஆதி குருவும், மங்களங்கள் களியாடும் மேடையும், காமனை எரித்த பரமனின் கண்களுக்கு பச்சைக் கர்ப்பூரப் பொடியின் குவியலும், மந்தார மலர்களுடைய ஒளியின் செருக்கைக் கவர்வதும் ஆகிய காமாக்ஷியின் புன்முறுவலாகும் சோதிக்கு நாம் தினமும் கைகூப்புகிறோம்.

सध्रीचे नवमल्लिकासुमनसां नासाग्रमुक्तामणे-
राचार्याय मृणालकाण्डमहसां नैसर्गिकाय द्विषे ।
स्वर्धुन्या सह युध्वने हिमरुचेरर्धासनाध्यासिने
कामाक्ष्याः स्मितमञ्जरीधवलिमाद्वैताय तस्मै नमः ॥ २ ॥

2. மலர்ந்த மல்லிகை மலர்களுக்கு உற்ற நண்பனும், மூக்கின் நுனியில் ஒளிரும் நல் முத்திற்கு ஆசிரியனும், தாமரைத் தண்டின் ஒளிகளுக்கு இயற்கையிலே பகைவனும், தேவ கங்கையோடு போர்புரிவதும், மதியோடு ஒரே ஆசனத்தில் வீற்றிருப்பதுமான காமாக்ஷியுடைய புன்முறுவலாகிய பூங்கொத்தின் ஒப்பற்ற அவ்வெண்மைக்கு வணக்கம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



पुञ्जितकरुणमुदञ्चित - शिञ्जितमणिकाञ्चि किमपि काञ्चिपुरे ।
मञ्जरितमृदुलहासं पिञ्जरतनुरुचि पिनाकिमूलधनम् ॥

आर्या. ३७.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

कर्पूरद्युतिचातुरीमतितरामल्पीयसीं कुर्वती
दौर्भाग्योदयमेव संविदधती दौषाकरीणां त्विषाम् ।
क्षुल्लानेव मनोज्ञमल्लिनिकरान्फुल्लानपि व्यञ्जती
कामाक्ष्या मृदुलस्मितांशुलहरी कामप्रसूरस्तु मे ॥ ३ ॥

3. கர்ப்பூரக் காந்தியின் வெண்மையை மிக சிறுமைப் படுத்துவதும், வெண்ணிலவின் ஒளிகளுக்கு துரதிருஷ்ட தசையையே உண்டாக்குவதும், மலர்ந்து அழகிய மல்லிகைக் குவியலையும் அற்பமாகத் தோன்றச் செய்வதும் ஆன காமாக்ஷியின் மெல்லிய புன்னகையின் பெருக்கு என் விருப்பங்களை நிறைவேற்றுவதாக வேண்டும்.

या पीनस्तनमण्डलोपरि लसत्कर्पूरलेपायते
या नीलेक्षणरात्रिकान्तिततिषु ज्योत्स्नाप्ररोहायते ।
या सौन्दर्यधुनीतरङ्गततिषु व्यालोलहंसायते
कामाक्ष्याः शिशिरीकरोतु हृदयं सा मे स्मितप्राचुरी ॥ ४ ॥

4. எந்த புன்சிரிப்பு தேவியின் பெருத்த கொங்கைகளின்மேல் பச்சைக் கர்ப்பூரப் பூச்சை ஒத்திருக்கிறதோ, கடைக்கண் பார்வையாகிய காரிருள் சூழ்ந்த இரவுகளில் நிலவின் முளைபோல் தோற்றுகிறதோ, அழகென்னும் அருவியின் அலைகளின் இடையே அன்னங்களுக்கு ஒப்பாய் விளங்குகிறதோ, அத்தகைய காமாக்ஷியின் இளநகையின் தொடர்பு எனதுள்ளத்தை குளிரச் செய்யவேண்டும்.

येषां गच्छति पूर्वपक्षसरणिं कौमुद्वतः श्वेतिमा
येषां संततमारुरुक्षति तुलाकक्ष्यां शरच्चन्द्रमाः ।
येषामिच्छति कम्बुरप्यसुलभामन्तेवसत्प्रक्रियां
कामाक्ष्या ममतां हरन्तु मम ते हासत्विषामङ्कुराः ॥ ५ ॥

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

5. எவைகளுக்கு எதிரில் அல்லியின் வெண்மையும் தோல்வி அடைகின்றதோ, சரத்கால சந்திரனும் எவைகளோடு ஸமநிலை எய்த எப்பொழுதும் விரும்புகிருனே, எவைகளுக்கு அடைய இயலாத சிஷ்ய நிலையை அடைய சங்கும் வேண்டி நிற்கிறதோ, காமாக்ஷியின் அந்த மந்தஹாஸத்தின் முளைகள் எனது மமதையை அகற்றவேண்டும்.

आशासीमसु संततं विदधती नैशाकरीं व्याक्रियां
काशानामभिमानभङ्गकलनाकौशल्यमाबिभ्रती ।
ईशानेन विलोकिता सकुतुकं कामाक्षि ते कल्मष-
क्लेशापायकरी चकास्ति लहरी मन्दस्मितज्योतिषाम् ॥ ६ ॥

6. காமாக்ஷி, உனது இள நகையின் ஒளிப்பெருக்கு, எப்பொழுதும் திசைகளின் எல்லைப்புறங்களில் நிலவின் செயலைச் செய்வதும், நாணற்பூக்களின் கர்வத்தை அடங்கச் செய்வதிலே திறனுடையதும், பரமசிவனுல் ஆவலோடு பார்க்கப் பட்டதும், பாபத்தின் விளைவாகிய கஷ்டங்களை அழிப்பதும் ஆகத் துலங்குகிறது.

आरूढस्य समुन्नतस्तनतटीसाम्राज्यसिंहासनं
कंदर्पस्य विभोर्जगत्त्रयजयप्राकट्यमुद्रानिधेः ।
यस्याश्चामरचातुरीं कलयते रश्मिच्छटा चञ्चला
सा मन्दस्मितमञ्जरी भवतु नः कामाय कामाक्षि ते ॥७॥

7. காமாக்ஷியே! மூவுலகையும் ஜயித்ததால் உண்டான புகழுடைய முத்திரைக்கு நிதியானவனும், உயர்ந்த ஸ்தனமென்னும் ஸாம்ராஜ்ய சிங்காசனத்தில் ஏறியவனும் ஆன மன்மத மகாராஜனுக்கு, எந்த புன்னகையின் சஞ்சலமான கிரணக் கூட்டங்கள் சாமரத்தின் திறமையை வெளிக்காட்டுகின்றனவோ, உன்னுடைய அந்த புன்னகைப் பூங்கொத்து என் விருப்பத்தை நிறைவேற்றவேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

शंभोर्या परिरम्भसंभ्रमविधौ नैर्मल्यसीमानिधि-
गैर्वाणीव तरङ्गिणी कृतमृदुस्यन्दां कलिन्दात्मजाम् ।
कल्माषीकुरुते कलङ्कसुषमां कण्ठस्थलीचुम्बिनीं
कामाक्ष्याः स्मितकन्दली भवतु नः कल्याणसंदोहिनी ॥८॥

8. வெண்மைக்கோர் எல்லை போன்ற காமாக்ஷியின் எந்த புன்னகை முளையானது, பரமசிவன் பரபரப்போடு தழுவும் தருணத்தில், அவர் கழுத்தில் இருக்கும் கறுத்த ஒளியை, விண்ணோர் நதியானது மெதுவாய் பெருகும் யமுனையோடு கலந்ததுபோல பலநிறமுடையதாக்குகிறதோ, அது எங்களுக்கு கல்யாணங்களைக் கொடுப்பதாக இருக்கட்டும்.

जेतुं हारलतामिव स्तनतटीं संजग्मुषी सन्ततं
गन्तुं निर्मलतामिव द्विगुणितां मग्ना कृपास्रोतसि ।
लब्धुं विस्मयनीयतामिव हरं रागाकुलं कुर्वती
मञ्जुस्ते स्मितमञ्जरी भवभयं मथ्नातु कामाक्षि मे ॥९॥

9. காமாக்ஷியே! முத்துமாலையை வெல்வதற்கேபோல் எப்பொழுதும் ஸ்தனங்களின் மேற்பக்கத்தை அடைந்ததும், வெண்மையை இரண்டுமடங்காக ஏற்பதற்குப்போல கருணை அருவியிலே மூழ்கியதும், வியப்புறும் நிலையை அடைவதற்கே போல், உலகை அழிக்கும் சிவனை உவகை நிறைந்தவனாய்ச் செய்வதும் ஆன உன்னுடைய அழகிய புன்முறுவற் பூங்கொத்து எனது சம்சார பயத்தைப் போக்குவதாக.

श्वेतापि प्रकटं निशाकररुचां मालिन्यमातन्वती
शीतापि स्मरपावकं पशुपतेः संधुक्षयन्ती सदा ।
स्वाभाव्यादधराश्रितापि नमतामुच्चैर्दिशन्ती गतिं
कामाक्षि स्फुटमन्तरा स्फुरतु नस्त्वन्मन्दहासप्रभा ॥ १० ॥

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

10. காமாக்ஷியே! வெண்மையாயிருப்பினும் நிலவின் ஒளிகளுக்கு வெளிப்படையாகவே கருமையை ஊட்டுவதும், (அபகீர்த்தியை செய்வதும்), குளிர்மையாய் இருப்பினும் பசுபதிக்கு எப்பொழுதும் மதனாக்னியை வளரச்செய்வதும், தான் இயற்கையிலே கீழ்நிலையில் (கீழ் இதழில்) இருந்த போதிலும் தன்னை வணங்குகிறவர்களுக்கு உயர்ந்த நிலையை அளிப்பதும் ஆன உனது மந்தஹாஸத்தின் ஒளி எமது உள்ளத்திலே தெளிவோடு விளங்கவேண்டும்.

वक्त्रश्रीसरसीजले तरलितभ्रूवल्लिकल्लोलिते
कालिम्ना दधती कटाक्षजनुषा माधुव्रतीं व्यापृतिम् ।
निर्निद्रामलपुण्डरीककुहनापाण्डित्यमाबिभ्रती
कामाक्ष्याः स्मितचातुरी मम मनःकातर्यमुन्मूलयेत् ॥ ११॥

11. சஞ்சலமான புருவக்கொடிகளே அலைகளாயமைந்த முக காந்தி என்னும் தடாக ஜலத்தில், கடைக்கண்ணினின்றெழுந்த கருமையினால் வண்டுகள் நிறைந்ததாகச் செய்வதும், மாசற்று மலர்ந்த வெள்ளைத் தாமரையை வஞ்சிக்குந் திறமை வாய்ந்த காந்தியை யுடையதுமான காமாக்ஷியின் சிரிப்பின் திறமை எனது பயத்தை வேரறுத்து அருளவேண்டும்.

नित्यं बाधितबन्धुजीवमधरं मैत्रीजुषं पल्लवैः
शुद्धस्य द्विजमण्डलस्य च तिरस्कर्तारमप्याश्रिता ।
या वैमल्यवती सदैव नमतां चेतः पुनीतेतरां
कामाक्ष्या हृदयं प्रसादयतु मे सा मन्दहासप्रभा ॥ १२ ॥

12. என்றுமே பந்துக்களின் உயிர்களை துன்புறுத்துவதும், (செம்பருத்திப் பூவை ஜயித்ததும்), துஷ்டர்களோடு நட்பு கொண்டதும் (தளிர்களுக்கு ஒப்பானதும்), தூய்மையான அந்தணர்களின் கூட்டத்தை அவமதிப்பதும் (தூய்மையான பற்களை மூடுவதும்) ஆன இதழை அடைந்திருந்தும், என்றும் மாசற்ற தன்மையோடு எது வணங்குவோர் மனதை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பரிசுத்தம் செய்கிறதோ, காமாக்ஷியின் அந்த மந்தஹாஸத்தின் ஒளி என் உள்ளத்தைத் தெளிவுசெய்ய வேண்டும்.

द्रुह्यन्ती तमसे मुहुः कुमुदिनीसाहाय्यमाबिभ्रती
यान्ती चन्द्रकिशोरशेखरवपुःसौधाङ्गणे प्रेङ्खणम् ।
ज्ञानाम्भोनिधिवीचिकां सुमनसां कूलंकषां कुर्वती
कामाक्ष्याः स्मितकौमुदी हरतु मे संसारतापोदयम् ॥ १३ ॥

13. இருளோடு (அஞ்ஞானத்தோடு) பகை கொண்டதும், ஆம்பலுக்கு உதவி புரிவதும், இளம்பிறை சூடிய பரமசிவனின் சரீரமாகும் உப்பரிகையில் உலாவுவதும், தூய மனம் உள்ளவர்களின் அறிவென்னும் கடலின் அலைகளைக் கரை மோதச் செய்வதும் ஆன காமாக்ஷியின் புன்னகை என்னும் வெண்ணிலவு எனது ஸம்ஸார தாபத்தின் எழுச்சியை அப்போதைக்கப்போது அழித்தருள வேண்டும்.

काश्मीरद्रवधातुकर्दमरुचा कल्माषतां बिभ्रती
हंसौघैरिव कुर्वती परिचितिं हारीकृतैर्मौक्तिकैः ।
वक्षोजन्मतुषारशैलकटके संचारमातन्वती
कामाक्ष्या मृदुलस्मितद्युतिमयी भागीरथी भासते ॥ १४ ॥

14. காமாக்ஷியினுடைய புன்சிரிப்பின் ஒளி என்னும் கங்கை, குங்குமப்பூக்கலந்த சந்தனம் என்னும் நற்செங்கற்பொடியின் காந்தியால் பல நிறம் கொண்டதும், மாலைகளில் இருக்கும் முத்துக்களாகிய அன்னங்களோடு நட்பை உடையதும் கொங்கைகளாகிய இமயமலைச் சரிவிலே பெருகுவதுமாகத் துலங்குகிறது.

कम्बोर्वंशपरम्परा इव कृपासंतानवल्लीभुवः
संफुल्लस्तबका इव प्रसृमरा मूर्ताः प्रसादा इव ।
वाक्पीयूषकणा इव त्रिपथगापर्यायभेदा इव
भ्राजन्ते तव मन्दहासकिरणाः काञ्चीपुरीनायिके ॥ १५ ॥

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

15. காஞ்சிபுரத்தின் நாயகியாகிய அன்னையே! உன் மந்தஹாச கிரணங்கள், சங்கின் வம்சாவளி போலவும், கருணை என்னும் கற்பகக் கொடியினின்றெழுந்து மலர்ந்த மலர் கொத்துகள் போலவும், உருவெடுத்த அருள்போலவும் வாக்கென்னும் அமுதத்தின் துளிகள் போலவும், தேவ கங்கையின் வேற்றுருவங்கள் போலவும் பிரகாசிக்கின்றன.

वक्षोजे घनसारपत्ररचनाभङ्गीसपत्नायिता
कण्ठे मौक्तिकहारयष्टिकिरणव्यापारमुद्रायिता ।
ओष्ठश्रीनिकुरुम्बपल्लवपुटे प्रेङ्खत्प्रसूनायिता
कामाक्षि स्फुरतां मदीयहृदये त्वन्मन्दहासप्रभा ॥ १६ ॥

16. காமாக்ஷியே! ஸ்தனங்களில் பச்சைக் கர்ப்பூரத்தாலிழைத்த மகரிகாதி பத்திரங்களின் அழகிற்குச் சக்களத்தி போன்றதும், கழுத்தில் முத்தாலான மாலையின் கிரணங்களின் செய்கைக்கு முத்திரை போன்றதும், இதழின் வனப்பென்னும் தளிர்ச்செண்டிற்கு இடையில் திகழும் மலர் போன்றதுமான நின் புன்னகையின் ஒளி என் உள்ளத்தில் விளங்க வேண்டும்.

येषां बिन्दुरिवोपरि प्रचलितो नासाग्रमुक्तामणि-
र्येषां दीन इवाधिकण्ठमयते हारः करालम्बनम् ।
येषां बन्धुरिवोष्ठयोररुणिमा धत्ते स्वयं रञ्जनं
कामाक्ष्याः प्रभवन्तु ते मम शिवोल्लासाय हासाङ्कुराः ॥ १७

17. எவைகளுக்குமேல் அசைந்தாடும் புல்லாக்கின் முத்து பிந்துவைப்போல் துலங்குகின்றதோ, கழுத்திலே கிடக்கும் முத்துமாலை களைத்தவனைபோல் எவைகளின் கைலாகுவை அடைகின்றதோ, இதழ்களின் சிவப்பு உற்றுரைப்போல் தானகவே எவைகளின் (ராகத்தை) ப்ரீதியை அடைகின்றதோ காமாக்ஷியின் அந்த புன்முறுவலின் கொழுந்துகள் எனக்கு மங்களங்களை வளரச்செய்ய வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

या जाड्याम्बुनिधिं क्षिणोति भजतां वैरीयते कैरवै-
र्नित्यं या नियमेन या च यतते कर्तुं त्रिणेत्रोत्सवम् ।
बिम्बं चान्द्रमसं च वञ्चयति या गर्वेण सा तादृशी
कामाक्षि स्मितमञ्जरी तव कथं ज्योत्स्नेत्यसौ कीर्त्यते ॥

18. காமாக்ஷியே! எது, தன்னை வழிபடுபவர்களின் ஆணவக் கடலை வரட்டுகின்றதோ, அல்லி மலர்களோடு எந்நாளும் பகை புரிகின்றதோ, முக்கண்ணனுக்கு வழுவாமல் இன்பத்தை ஊட்ட முயலுகின்றதோ, சந்திர பிம்பத்தைக் கர்வத்தினால் பழிக்கின்றதோ, அத் தகைய உனது மந்த ஹாஸ மலர்க் கொத்தானது வெண்ணிலவு என்று எவ்விதம் கூற இயலும்?

आरूढा रभसात्पुरः पुररिपोराश्लेषणोपक्रमे
या ते मातरुपैति दिव्यतटिनीशङ्काकरी तत्क्षणम् ।
ओष्ठौ वेपयति भ्रुवौ कुटिलयत्यानम्रयत्याननं
तां वन्दे मृदुहासपूरसुषमामेकाम्रनाथप्रिये ॥ १९ ॥

19. ஏகாம்பர நாதரின் நாயகியாகிய அன்னையே! பரம சிவன் உன்னை அணைய ஆரம்பித்தவுடன், உன் முன்னே எந்த புன்னகை, உடனேயே வானுலக கங்கை என்னும் சந்தேகத்தை ஊட்டி உதட்டை நடுங்கச் செய்கின்றதோ, புருவங்களை வளைக்கின்றதோ, முகத்தை குனியச் செய்கின்றதோ, அந்த இளஞ் சிரிப்பின் பெருக்கினுடைய ஒளியை நான் வணங்குகிறேன்.

वक्त्रेन्दोस्तव चन्द्रिका स्मितततिर्वल्गु स्फुरन्ती सतां
स्याच्चेद्युक्तमिदं चकोरमनसां कामाक्षि कौतूहलम् ।
एतच्चित्रमहर्निशं यदधिकामेषा रुचिं गाहते
बिम्बोष्ठद्युमणिप्रभास्वपि च यद्बिब्बोकमालम्बते ॥ २० ॥

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

20. காமாக்ஷியே! உனது முக சந்திரனின் புன்முறுவல் என்னும் நிலவு, அழகாய் விளங்கிக்கொண்டு, நல்லோர் என்னும் சகோரப் புள்ளினங்களின் உள்ளத்திற்கு களிப்பூட்டுவதாயிருப்பின், இது தகுந்ததே; ஆனால், இது அல்லும் பகலும் அதிக ஒளியோடு திகழ்வது என்பதும், கோவைப் பழம்போல் ஒளிரும் இதழ்கள் ஆகிய கதிரவனின் ஒளியிலும் தன் விலாஸங்களைப் பெறுகிறது என்பதும் விந்தையே.

सादृश्यं कलशाम्बुधेर्वहति यत्कामाक्षि मन्दस्मितं
शोभामोष्ठरुचाम्ब विद्रुमभवामेतद्भिदां ब्रूमहे ।
एकस्मादुदितं पुरा किल पपौ शर्वः पुराणः पुमा-
नेतन्मध्यसमुद्भवं रसयते माधुर्यरूपं रसम् ॥ २१ ॥

21. அன்னையே! காமாக்ஷி! உன் புன்னகை உதட்டின் ஒளியால் பவழத்தினின்று உதிக்கும் காந்தியை அடைகிறது; ஆதலால், திருப்பாற்கடலின் ஒற்றுமையையும் ஏற்கிறது. ஆகிலும், இவ்விரண்டிற்கும் உள்ள வேற்றுமையை கூறுகிறேன்; இவைகளில் ஒன்றிலிருந்து தோன்றிய ரஸத்தை (விஷத்தை) ஆதிபுருஷனாகிய பரமசிவன் வெகுநாள் முன்பு அருந்தினார்; இப்புன்னகைக்கு இடையில் தோன்றும் இனிமையின் உருவான ரஸத்தை இன்றும் அவர் பருகிக்கொண்டே இருக்கிறார்.

उत्तुङ्गस्तनकुम्भशैलकटके विस्तारिकस्तूरिका-
पत्रश्रीजुषि चञ्चलाः स्मितरुचः कामाक्षि ते कोमलाः ।
संध्यादीधितिरञ्जिता इव मुहुः सान्द्राधरज्योतिषा
व्यालोलामलशारदाभ्रशकलव्यापारमातन्वते ॥ २२ ॥

22. காமாக்ஷி! கஸ்தூரிகொண்டு விஸ்தாரமாய் எழுதிய பத்திரரசனையின் வனப்புப் பொருந்திய கும்பங்கள் போன்ற உயர்வான ஸ்தனங்கள் என்னும் மலையடிவாரங்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

களில் அலேந்தோடும் அழகிய உன் புன்சிரிப்பின் ஒளிகள், இதழ்களின் நெருக்கமான காந்தியாகிய அந்தியின் கிரணங்களாலே சிவந்து, காற்றில் அசையும் நிர்மலமான சரத்காலத்திய மேகத்துணுக்குகளின் செயலைச் செய்கின்றன.

क्षीरं दूरत एव तिष्ठतु कथं वैमल्यमात्रादिदं
मातस्ते सहपाठवीथिमयतां मन्दस्मितैर्मञ्जुलैः ।
किं चेयं तु भिदास्ति दोहनवशादेकं तु संजायते
कामाक्षि स्वयमर्थितं प्रणमतामन्यत्तु दोदुह्यते ॥ २३ ॥

23. அன்னையே! காமாக்ஷியே! பால் தூரத்திலேயே நிற்கட்டும்; வெண்மையாய் இருப்பதினுல் மட்டுமே அது உன் அழகிய மந்தஹாஸங்களோடு ஒற்றுமையை அடைந்து விடுமா? மேலும், இவ்வேற்றுமையும் இருக்கிறது. ஒன்று (பால்) பிறர் கறப்பதால் உண்டாகிறது. மற்ருென்று (மந்தஹாஸம்) தானே வணங்குவோர்களுக்கு வேண்டுவதைக் கறக்கின்றது.

कर्पूरैरमृतैर्जगज्जननि ते कामाक्षि चन्द्रातपै-
र्मुक्ताहारगुणैर्मृणालवलयैर्मुग्धस्मितश्रीरियम् ।
श्रीकाञ्चीपुरनायिके समतया संस्तूयते सज्जनै-
स्तत्तादृङ्मम तापशान्तिविधये किं देवि मन्दायते ॥ २४ ॥

24, காஞ்சிபுரத்திற்கு அரசியாயும் உலகிற்கே தாயுமாகிய தேவி காமாக்ஷியே! உன்னுடைய இந்த அழகிய புன்சிரிப்பின் வனப்பு பச்சைக்கர்ப்பூரங்களோடும், அமிருத்தோடும், வெண்ணிலவோடும், முத்துமாலைகளோடும், தாமரைத்தண்டுகளோடும் ஒற்றுமையாக ஸாதுக்களாலே புகழப்படுகின்றது. அத்தகைய உனது மந்தஹாஸம் எனது தாபத்தைத் தணிக்க ஏன் தாமதம் செய்கின்றது?

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

मध्येगर्भितमञ्जुवाक्यलहरीमाध्वीझरीशीतला
मन्दारस्तवकायते जननि ते मन्दस्मितांशुच्छटा ।
यस्या वर्धयितुं मुहुर्विकसनं कामाक्षि कामद्रुहो
वल्गुर्वीक्षणविभ्रमव्यतिकरो वासन्तमासायते ॥ २५ ॥

25. தாயே! காமாக்ஷி! எதன் மலர்ச்சியை வளர்க்க, காமனைக்கொன்ற பரமனின் அழகிய பார்வையின் சேர்க்கை வஸந்தருதுவின் மாதமாகிறதோ, அந்த உனது இளநகையின் கிரணக்கூட்டம், நடுவில் அமைந்த அழகிய சொற்பெருக்கென்னும் தேனருவியாலே குளிர்ந்து மந்தார மலர்க்கொத்தாய் விளங்குகிறது.

बिम्बोष्ठद्युतिपुञ्जरञ्जितरुचिस्त्वन्मन्दहासच्छटा
कल्याणं गिरिसार्वभौमतनये कल्लोलयत्वाशु मे ।
फुल्लन्मल्लिपिनद्धहल्लकमयी मालेव या पेशला
श्रीकाञ्चीश्वरि मारमर्दितुरुरोमध्ये मुहुर्लम्बते ॥ २६ ॥

26. மலை மகாராஜனின் புதல்வியே! திருக்காஞ்சீபுரத்தின் ஈச்வரியே! மாரனை வென்ற பரமசிவனின் மார்பினிடையே, மலர்ந்த மல்லிகைகளோடு கலந்து கட்டிய செங்கழுநீர் பூக்களால் ஆன மெல்லிய மாலைபோல் உன்னுடைய எந்த மந்தஹாஸக் கொத்து அடிக்கடி தொங்குகின்றதோ, கோவைப் பழத்தோடு ஒத்த இதழ்களின் ஒளிக்குவியலாலே சிவந்த காந்தியுடைய உன்னுடைய அந்தப் புன்முறுவலின் கொத்து தாமதமின்றி எனக்கு மங்களங்களை அலைமோதச் செய்யவேண்டும்.

बिभ्राणा शरदभ्रविभ्रमदशां विद्योतमानाप्यसौ
कामाक्षि स्मितमञ्जरी किरति ते कारुण्यधारारसम् ।
आश्चर्यं शिशिरीकरोति जगतीश्चालोक्य चैनामहो
कामं खेलति नीलकण्ठहृदयं कौतूहलान्दोलितम् ॥ २७ ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

27. காமாக்ஷியே! உன்னுடைய இப் புன்னகைப் பூங்கொத்தானது, சரத்காலத்து மேகத்தின் நிலையை வகித்து விளங்கிக் கொண்டிருப்பினும், கருணை ரசத்தை தாரையாகப் பொழிகின்றது; உலகங்களையும் குளிரச் செய்கின்றது. இதைக் காண்பதாலேயே, மயிலின் (பரமசிவனின்) இதயம் களிப்புற்று ஆடல்புரிகின்றது. மிகவும் ஆச்சரியம்!

प्रेङ्खत्प्रौढकटाक्षकुञ्जकुहरेष्वत्यच्छगुच्छायितं
वक्त्रेन्दुच्छविसिन्धुवीचिनिचये फेनप्रतानायितम् ।
नैरन्तर्यविजृम्भितस्तनतटे नैचोलपट्टायितं
कालुष्यं कवलीकरोतु मम ते कामाक्षि मन्दस्मितम् ॥२८॥

28. காமாக்ஷி, ஒளிருகின்ற கம்பீரமான கடைக்கண் பார்வை என்ற செடிப் புதருக்குள் வெள்ளைப் பூங்கொத்தாய் விளங்குவதும், முகமென்னும் சந்திரனின் நிலவென்னும் கடலின் அலைகளின் குவியலிலே பரவிய நுரைபோன்றதும், இடையின்றிப் பெருத்தெழுந்த கொங்கைகளில் வெண்பட்டாலமைந்த ரவிக்கை போன்றதுமான உனது புன்முறுவல் எனது பாபங்களை உட்கொள்ள வேண்டும்.

पीयूषं तव मन्थरस्मितमिति व्यर्थैव सापप्रथा
कामाक्षि ध्रुवमीदृशं यदि भवेदेतत्कथं वा शिवे ।
मन्दारस्य कथालवं न सहते मथ्नाति मन्दाकिनी-
मिन्दुं निन्दति कीर्तितेऽपि कलशीपाथोधिमीर्ष्यायते ॥ २९ ॥

29. சிவபெருமானின் மனைவியான காமாக்ஷியே! உனது இள நகைப்பு அமுதமேதான் என்ற அக் கெட்ட பெயர் வீணே எழுந்தது, நிச்சயம்; உண்மையாக இருக்குமாகில், இது (இளநகை) மந்தாரத்தின் பேச்சைக்கூட பொறுப்பதில்லை, கங்கையையும் கலங்கச் செய்கிறது; மதியைத் தூற்றுகிறது; பாற்கடலைப்பற்றி பேச்செடுத்தாலும்கூட கோபம் கொள்கிறது; இது எவ்விதம் நேரும்?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

विश्वेषां नयनोत्सवं वितनुतां विद्योततां चन्द्रमा
विख्यातो मदनान्तकेन मुकुटीमध्ये च संमान्यताम् ।
आः किं जातमनेन हाससुषमामालोक्य कामाक्षि ते
कालङ्कीमवलम्बते खलु दशां कल्माषहीनोऽप्यसौ ॥ ३० ॥

30. காமாக்ஷி! சந்திரன் அனைவர் கண்ணிற்கும் ஆனந்தம் அளிக்கட்டும்; அதனால் புகழ்பெற்று விளங்கட்டும்; மதனனை வென்ற பரமசிவன் தன் மகுடத்தின் நடுவில் வைத்து அவனை வெகுமதிக்கட்டும்; ஆம்! இதனால் என்ன ஏற்பட்டு விட்டது? அச் சந்திரன் களங்கமற்றவனாய் (பாபமற்றவனாய்) இருந்த போதிலும், உன் புன்சிரிப்பின் காந்தியைக் கண்டு களங்கமுற்ற நிலையை அடைகிறானல்லவா?

चेतः शीतलयन्तु नः पशुपतेरानन्दजीवातवो
नम्राणां नयनाध्वसीमसु शरच्चन्द्रातपोपक्रमाः ।
संसाराख्यसरोरुहाकरखलीकारे तुषारोत्कराः
कामाक्षि स्मरकीर्तिबीजनिकरास्त्वन्मन्दहासाङ्कुराः ॥ ३१ ॥

31. காமாக்ஷியே, பசுபதியின் இன்பத்திற்கு உயிரளிக்கும் மருந்துகளும், வணங்குவோர்களுக்கு கண் செல்லும் வழிகளில் சரத்கால சந்திரனின் செய்கைகளை உடையதும், சம்சாரம் என்னும் தாமரை ஓடையை அழிப்பதில் பனிப்பொழிதல்களும், மதனனின் புகழ்விதைகளின் கூட்டங்களும் ஆகிய உனது இனிய நகைகளின் முளைகள் எங்கள் மனதைக் குளிரச் செய்யுக.

कर्मौघाख्यतमःकचाकचिकरान्कामाक्षि संचिन्तये
त्वन्मन्दस्मितरोचिषां त्रिभुवनक्षेमंकरानङ्कुरान् ।
ये वक्त्रं शिशिरश्रियो विकसितं चन्द्रातपाम्भोरुह-
द्वेषोद्घोषणचातुरीमिव तिरस्कर्तुं परिष्कुर्वते ॥ ३२ ॥

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

32. காமாக்ஷியே! குளிர்ந்த கிரணங்களையுடைய எந்த புன்னகையின் முளைகள், வெண்ணிலவின்மீதும், தாமரைகளின்மீதும் உள்ள த்வேஷத்தை பறைசாற்றும் முறையை மறைப்பதற்காகப்போல முகத்தை மலரச் செய்து சீர்ப்படுத்துகின்றனவோ, கர்மக்கூட்டமென்ற இருளோடு போர் புரிகின்றவைகளும், மூன்று உலகிற்கும் க்ஷேமம் விளைவிக்கின்றவைகளும் ஆன, உன்னுடைய அந்த மந்தஸ்மிதங்களின் காந்தியின் முளைகளை நான் தியானம் செய்கின்றேன்.

कुर्युर्नः कुलशैलराजतनये कूलंकषं मङ्गलं
कुन्दस्पर्धनचुञ्चवस्तव शिवे मन्दस्मितप्रक्रमाः ।
ये कामाक्षि समस्तसाक्षिनयनं संतोषयन्तीश्वरं
कर्पूरप्रकरा इव प्रसृमराः पुंसामसाधारणाः ॥ ३३ ॥

33. குலாசலங்களின் அரசனாகிய இமவானின் பெண்ணும், பரமசிவனின் பத்னியாயுமுள்ள காமாக்ஷி! புருஷர்களால் அடைய இயலாததும், பரவுகின்றதும் ஆன உன்னுடைய எந்த புன்னகைகள், எல்லாவற்றிற்கும் சாக்ஷியான ஆதித்தனை கண்ணாகக்கொண்ட பரமசிவனை, கர்ப்பூரப் பொடிகளைப்போல் இன்புறச் செய்கின்றனவோ, குந்த மலரோடு போட்டி இடுவதில் கைதேர்ந்த அந்த உனது புன்சிரிப்பின் ரீதிகள் எங்களுக்கு கரைபுரண்டோடும் மங்களத்தைச் செய்வனவாக.

कम्रेण स्नपयस्व कर्मकुहनाचोरेण मारागम-
व्याख्याशिक्षणदीक्षितेन विदुषामक्षीणलक्ष्मीपुषा ।
कामाक्षि स्मितकन्दलेन कलुषस्फोटक्रियाचुञ्चुना
कारुण्यामृतवीचिकाविहरणप्राचुर्यधुर्येण माम् ॥ ३४ ॥

34. காமாக்ஷியே, சொல்லொணா வனப்பு வாய்ந்ததும், கர்மங்களின் கபடத்தைக் கவர்வதும், மதன சாஸ்திரத்தை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விவரித்துக் கற்பிப்பதில் தீக்ஷை பூண்டதும், அறிவாளி களுக்கு அளவற்ற சம்பத்தை வளர்ப்பதும், பாபங்களைக் கைதட்டி விரட்டும் செய்கையிலே திறமை வாய்ந்ததும், கருணைக் கடலின் அலைகளில் அதிகமாய் மிதந்து விளையாடுவதில் முதன்மையானதும் ஆன உனது புன்னகைக் கூட்டத்தால் என்னை நனைப்பாயாக.

त्वन्मन्दस्मितकन्दलस्य नियतं कामाक्षि शङ्कामहे
बिम्बः कश्चन नूतनः प्रचलितो नैशाकरः शीकरः ।
किंच क्षीरपयोनिधिः प्रतिनिधिः स्वर्वाहिनीवीचिका-
बिब्बोकोऽपि विडम्ब एव कुहना मल्लीमतल्लीरुचः ॥ ३५ ॥

35. காமாக்ஷி! உனது மந்தஹாஸக் குவியலினின்று தெறித்த துளியே சந்திரனுடைய புதியதோர் பிம்பமாய் ஏற்பட்டுவிட்டது, நிச்சயம்; மேலும், (உன்) புன்சிரிப்பிற்கு, பாலாழியானது பிரதிநிதியாக இருக்கிறது; வானுலகநதியின் அலைகளுடைய விலாஸமும் பரிஹாஸமே; சிறந்த மல்லிகை மலர்களின் காந்திகளும் கபடம் தான் (ஏமாற்றமே).

दुष्कर्मार्कनिसर्गकर्कशमहस्संपर्कतप्तं मिल-
त्पङ्कं शङ्करवल्लभे मम मनः काञ्चीपुरालंक्रिये ।
अम्ब त्वन्मृदुलस्मितामृतरसे मङ्क्त्वा विधूय व्यथा-
मानन्दोदयसौधशृङ्गपदवीमारोढुमाकाङ्क्षति ॥ ३६ ॥

36. சங்கரரின் மனையாளும், காஞ்சீபுரத்திற்கு அமைந்த அணியும் ஆன அன்னையே! கொடிய கர்மங்களென்னும் கதிரவனின், இயற்கையில் கடுமையான கிரணங்களின் சேர்க்கையாலே தாபமுற்றதும், சேறு படிந்ததும் (பாபத்தோடு சேர்ந்ததும்) ஆன என் மனது உன்னுடைய இளம் நகை யான அமுத ரசத்தில் முழுகி, களைப்பை அகற்றிக்கொண்டு இன்ப எழுச்சி என்னும் மாடியின் உச்சியில் ஏறி உலாவ விரும்புகிறது.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

नम्राणां नगराजशेखरसुते नाकालयानां पुरः
कामाक्षि त्वरया विपत्प्रशमने कारुण्यधाराः किरन् ।
आगच्छन्तमनुग्रहं प्रकटयन्नानन्दबीजानि ते
नासीरे मृदुहास एव तनुते नाथे सुधाशीतलः ॥ ३७ ॥

37. மலைச் சக்கிரவர்த்தியின் மகளாயும், உலகைக் காப்பவளாயும் இருக்கும் காமாக்ஷியே! சேனையின் முன்னணியில் எதிரில் வணங்கி நிற்கும் தேவர்களின் கஷ்டங்களை அகற்றுவதில் கருணை மாரியை வேகமாய்ச் சொரிந்து கொண்டும், வரப்போகும் அனுக்கிரகத்தை வெளிப்படுத்திக்கொண்டும் இருக்கிற உனது அமிருதம்போலக் குளிர்மையான இளம் நகைப்பே ஆனந்த விதைகளை விதைக்கின்றது.

कामाक्षि प्रथमानविभ्रमनिधिः कन्दर्पदर्पप्रसू-
र्मुग्धस्ते मृदुहास एव गिरिजे मुष्णातु मे किल्बिषम् ।
यं द्रष्टुं विहिते करग्रह उमे शंभुस्त्रपामीलितं
स्वैरं कारयति स्म ताण्डवविनोदानन्दिना तण्डुना ॥ ३८ ॥

38. பர்வதேந்திரன் புதல்வியும், உமையும் ஆகிய காமாக்ஷியே! பாணிக்ரஹணம் (மணம்) ஏற்பாடு செய்யப்பட்டபொழுது, வெட்கத்தால் மறைந்த உன்னுடைய எந்தப் புன்சிரிப்பைக் காண்பதற்கு, பரமசிவன் தாண்டவத்தால் இன்புறும் இயற்கையை உடைய தண்டுவினால் (அந்த புன்சிரிப்பை) தானாகவே வெளிவரச் செய்தாரோ, புகழ் பெற்ற விலாஸப் பொக்கிஷமாயும், மதனனின் கர்வத்திற்குத் தாயாயும் இருக்கிற அந்தச் சிறுநகையே எனது பாபத்தைக் கவரட்டும்.

क्षुण्णं केनचिदेव धीरमनसा कुत्रापि नानाजनैः
कर्मग्रन्थिनियन्त्रितैरसुगमं कामाक्षि सामान्यतः ।
मुग्धैर्द्रष्टुमशक्यमेव मनसा मूढस्य मे मौक्तिकं
मार्गं दर्शयतु प्रदीप इव ते मन्दस्मितश्रीरियम् ॥ ३९ ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

39. காமாக்ஷியே, உனது இப் புன்னகை யொளி, விளக்குப்போல், எங்கோ ஓரிடத்தில் மனதைக் கட்டி அடக்கிய யாரோ ஒருவனுல் மட்டும் போய்ப் பழகியதும், கர்ம பந்தத்தில் கட்டுண்ட பல ஜனங்களால் எளிதில் போக இயலாததும், அறிவற்றவர்களால் மனதாலும் காணக் கூடாததும் ஆன முக்தி மார்க்கத்தை அறிவில்லாத எனக்குக் காட்டி அருளட்டும்.

ज्योत्स्नाकान्तिभिरेव निर्मलतरं नैशाकरं मण्डलं
हंसैरेव शरद्विलाससमये व्याकोचमम्भोरुहम् ।
स्वच्छैरेव विकस्वरैरुडुगणैः कामाक्षि विम्बं दिवः
पुण्यैरेव मृदुस्मितैस्तव मुखं पुष्णाति शोभाभरम् ॥ ४० ॥

40. காமாக்ஷி! தூய மதியின் மண்டலம் நிலவின் ஒளியினுல் மட்டுமே அழகை அடைகிறது. மலர்ந்த தாமரையும் சரத்ருது விலாஸிக்கும் காலத்தில் அன்னங்களாலேயே வனப்பைப் பெறுகிறது. ஆகாயமும் மாசற்று விளங்கும் நக்ஷத்திரக் கூட்டங்களாலேயே ஒளிருகிறது. பாவனங்களான உன் புன்சிரிப்புகளாலேயே உன் முகமும் அதிக சோபையை அடைகிறது.

मानग्रन्थिविधुंतुदेन रभसादास्वाद्यमाने नव-
प्रेमाडम्बरपूर्णिमाहिमकरे कामाक्षि ते तत्क्षणम् ।
आलोक्य स्मितचन्द्रिकां पुनरिमामुन्मीलनं जग्मुषीं
चेतः शीलयते चकोरचरितं चन्द्रार्धचूडामणेः ॥ ४१ ॥

41. காமாக்ஷியே! புதிய காதலின் பூரிப்பென்னும் பூர்ண சந்திரன், கோபம் என்னும் இராகுவால் வேகமாய் விழுங்கப் படும்பொழுது, சந்திரகலையை சூடாமணியாகக் கொண்ட பரமசிவனின் மனது, உடனே மலர்ச்சி யடைய விரும்புகின்ற உனது இப் புன்முறுவலாகிய வெண்ணிலவை

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

மறுபடியும் கண்டு சகோரப் பறவையின் செய்கையைத் தழுவுகின்றது.

